# I இராஜாக்கள் - முன்னுரை

## காலமும் இடமும்

1இராஜாக்கள், 2இராஜாக்கள் ஆகிய இரண்டு புஸ்தகங்களும் பாலஸ்தீன தேசத்தில் சுமார் கி.மு. 1046 - 606 ஆகிய வருஷக் காலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ராஜாக்களின் ஆட்சிக் காலத்திலும் ஊழியம் செய்து வந்த தீர்க்கதரிசிகள் அல்லது சம்பிரதிகள் அந்தந்தக் காலங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எழுதினார்கள். இந்த ஆவணங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து, பிற்காலத்து ஆசிரியர்கள் அதை "ராஜாக்கள்" என்னும் ஒரே புஸ்தகமாகத் தொகுத்தார்கள். கி.மு. 294 - 289 ஆகிய வருஷங்களில் எபிரெய மொழியின் பழைய ஏற்பாடு கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, செப்துவஜிந்த் பதிப்பு வெளிவந்தது. செப்துவஜிந்தில் ராஜாக்கள் புஸ்தகம் 1இராஜாக்கள், 2இராஜாக்கள் என இரண்டு புஸ்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ராஜாக்கள் புஸ்தகங்களைத் தொகுத்து எழுதியவர்கள் ஏசாயா, எரேமியா ஆகியோர் தீர்க்கதரிசிகளாக இருக்க வேண்டும். கி.மு. 743 - 683, கி.மு. 782 - 606 ஆகிய வருஷக்காலத்தில் ராஜாக்கள் புஸ்தகம் தொகுத்து நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## ஆசிரியர்

ஏசாயாவும், எரேமியாவும் இஸ்ரவேலுடைய ராஜாக்களின் நடபடிகளைத் தொகுத்தார்கள். நாத்தான், காத், இத்தோ, அகியா, யெகூ ஆகியோர் ராஜாக்களின் நடபடிகளை அந்தந்த காலத்தில் எழுதி வைத்திருந்தார்கள். (2நாளா 9:29; 2நாளா 12:15; 2நாளா 20:34; 2நாளா 26:22; 2நாளா 32:22).

யூதருடைய பாரம்பரிய வரலாற்றின் பிரகாரம், எரேமியாவே ராஜாக்கள் புஸ்தகத்தின் தொகுப்பாசிரியர் என்பது தெரிய வருகிறது. ஆனால் 2நாளா 32:32 ஆவது வசனத்தில் ஏசாயா இதை எழுதியதாகக் குறிப்பு உள்ளது. எசேக்கியாவின் காலம் வரையிலும் ஏசாயா ராஜாக்களின் புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும். அதற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து காலத்திலிருந்து சிறையிருப்புக்காலம் வரையிலுமுள்ள வரலாற்றை எரேமியா எழுதி இந்தப் புஸ்தகத்தை நிறைவு செய்திருக்க வேண்டும்.

## மையக்கருத்து

1. சாலொமோனின் காலத்திலிருந்து பாபிலோனின் சிறையிருப்புக் காலம் வரையிலுமுள்ள இஸ்ரவேல், யூதா, ஆகிய ராஜாக்களின் வரலாறு. இதில் 413 வருஷங்களில் நடைபெற்ற வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

2. 1இராஜாக்கள், 2இராஜாக்கள் ஆகிய புஸ்தகங்கள் தாவீது ராஜாவைப் பற்றிய சம்பவங்களை விளக்கி ஆரம்பிக்கிறது. பாபிலோனின் ராஜாவைப் பற்றிய சம்பவங்களை விளக்கி முடிவு பெறுகிறது.

3. தேவாலயம் கட்டும் பணி இந்தப் புஸ்தகங்களில் ஆரம்பிக்கப்படுகிறது. தேவாலயம் அழிக்கப்படுவதைப் பற்றிய செய்தியுடன் இந்தப் புஸ்தகம் முடிவு பெறுகிறது.

4. தாவீதின் முதலாவது பின்னடியாரான சாலொமோனைப் பற்றி விளக்கி ராஜாக்கள் புஸ்தகம் ஆரம்பிக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் முடிவில் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரரைப் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது.

5. இஸ்ரவேலின் ராஜாக்கள், யூதாவின் ராஜாக்கள் ஆகியோர் அனைவருமே தாவீதோடு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கிறார்கள்.

6. தாவீதின் ராஜ்யம் தொடர்ந்து நிலைத்து நிற்காமல் போனதற்குக் காரணமும், இஸ்ரவேல் தேசம் அந்நியருடைய சிறையிருப்புக்குப் போனதற்குக் காரணமும் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

## புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 22

வசனங்கள் - 816

கேள்விகள் - 66

# I இராஜாக்கள் – முன்னுரை

புதிய தீர்க்கதரிசனங்கள் - 29

கட்டளைகள் - 92

வாக்குத்தத்தங்கள் - 6

முன்னறிவிப்புக்கள் - 73

1இராஜாக்கள் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (1இராஜா 3:5,11; 1இராஜா 9:2; 1இராஜா 11:11,30; 1இராஜா 12:22; 1இராஜா 13:1,9,20; 1இராஜா 14:5,7; 1இராஜா 16:1; 1இராஜா 17:1,2,8,13; 1இராஜா 18:1; 1இராஜா 19:5,7,9,11,13,15; 1இராஜா 20:13,14,22,28,36; 1இராஜா 21:17,21,28; 1இராஜா 22:17,19,25,28)

**பொருளடக்கம்**

**I.** தாவீதின் கடைசி நாட்கள்

1. தாவீது வயது சென்ற விர்த்தாப்பியனானான் (1:1-4)
2. அதோனியா தாவீதின் ராஜ்யபாரத்தைக் கைப்பற்ற சதி பண்ணுகிறான் (1:5-9)
3. நாத்தான், பத்சேபாள் ஆகியோரின் திட்டம் (1:10-14)
4. தாவீதின் வாக்கைப் பத்சேபாள் நினைவுபடுத்துகிறாள் (1:15-21)
5. பத்சேபாளின் விண்ணப்பத்தை நாத்தான் ஆதரித்துப் பேசுகிறான் (1:22-27)
6. தாவீது சாலொமோனை ராஜாவாக்குகிறான் (1:28-35)
7. சாலொமோனை ஆசாரியனாகிய சாதோக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறான் (1:36-40)
8. அதோனியா சாலொமோனுக்குக் கீழ்ப்படிகிறான் (1:41-53)
9. சாலொமோனுக்குத் தாவீது கொடுத்த கட்டளை (2:1-9)
10. தாவீதின் மரணம் (2:10-11)

**II.** சாலொமோனின் ஆட்சிக் காலம் - நாற்பது வருஷ அரசாட்சி

1. சாலொமோனின் ராஜ்யபாரம் ஸ்திரப்படுகிறது (2:12)
2. அதோனியாவின் மரணம் (2:13-25)
3. அபியத்தார் ஆசாரிய ஊழியத்திலிருந்து விலக்கப்படுகிறான் (2:26-27)
4. யோவாபின் மரணம் (2:28-34)
5. புதிய ராணுவத் தலைவனும் புதிய பிரதான ஆசாரியனும் (2:35)
6. சீமேயின் மரணம் (2:36-46)
7. சாலொமோனின் திருமணமும் எகிப்தோடு அவனுக்கிருந்த தொடர்பும் (3:1-3)
8. சாலொமோன் செலுத்திய பலிகள் (3:4)
9. சாலொமோன் ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளுமாறு ஜெபிக்கிறான் (3:5-9)
10. சாலொமோனுக்கு ஞானமுள்ள இருதயத்தையும், அவன் கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் கர்த்தர் தருகிறார் (3:10-15)
11. சாலொமோன் நீதி வழங்குகிறான் (3:16-28)
12. சாலொமோனின் பிரபுக்கள் (4:1-6)
13. சாலொமோனின் பன்னிரண்டு மணியகாரர் (4:7-19)
14. சாலொமோனின் விஸ்தாரமான இராஜ்யம் (4:20-21)
15. நாள் ஒன்றிற்கு சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு (4:22-23)

# I இராஜாக்கள் - முன்னுரை

16. சாலொமோனின் அமைதியான ஆட்சிக்காலமும் செழுமையும் (4:24-28)

17. சாலொமோனின் ஞானமும் புத்தியும் மனோவிருத்தியும் (4:29-34)

18. சாலொமோனின் ஆராதனை முறைமைகள்

(1) தேவாலயம் கட்ட ஆயத்த வேலைகள்

(அ) சாலொமோன் தீருவின் ராஜாவாகிய ஈராமிடம் ஆலயம் கட்ட கேதுரு மரங்ளையும் தேவதாரி மரங்களையும் கேட்கிறான் (5:1-6)

(ஆ) தேவாலயம் கட்டும் வேலையில் ஈராம் சாலொமோனுக்கு உதவி புரிகிறான் (5:7-10)

(இ) ஈராமின் ஒரு வருஷ சம்பளம் (5:11)

(ஈ) தீருவோடு சாலொமோனின் உடன்படிக்கை (5:12)

(உ) தேவாலயம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த வேலையாட்கள் (5:13-18)

(2) தேவாலயக் கட்டுமானப் பணிகள்

(அ) தேவாலயம் கட்ட ஆரம்பித்த நாள் (6:1)

(ஆ) தேவாலயத்தின் விஸ்தீரணம் (6:2)

(இ) தேவாலயத்தின் முகப்பும் மண்டபமும் (6:3-6)

(ஈ) ஆலயம் கட்டுவதற்குப் பயன்படுத்தப் பட்ட பொருட்கள் (6:7)

(உ) வாசற்படி, சுழற்படிகள், சுற்றுக்கட்டுகள் (6:8-10)

(ஊ) தாவீதோடு சொன்ன வார்த்தையைக் கர்த்தர் சாலொமோனிடம் நிறைவேற்றுகிறார் (6:11-14)

(எ) கேதுரு பலகைகளால் உட்சுவர் (6:15)

(ஏ) மகா பரிசுத்தமான சந்நிதி ஸ்தானம் (6:16-22)

(ஐ) இரண்டு கேருபீன்கள் (6:23-28)

(ஒ) ஆலயத்தின் சுவர்களும் தளவரிசையும் (6:29-30)

(ஓ) இரட்டைக் கதவுகள் (6:31-35)

(ஔ) உட்பிரகாரம் (6:36)

(ஃ) ஆலயம் கட்டித் தீர்ந்தது (6:37-38)

(3) சாலொமோனின் அரமனை (7:1-7)

(4) இராணியின் மாளிகை (7:8)

(5) அரமனையும் மாளிகையும் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் (7:9-12)

(6) தேவாலயத்தில் வெண்கல வேலை

(அ) ஈராமின் வேலை (7:13-14)

(ஆ) இரண்டு வெண்கலத் தூண்கள் (7:15)

(இ) இரண்டு கும்பங்கள் (7:16)

(ஈ) பின்னல்களும் தொங்கல்களும் (7:17-22)

(உ) வெண்கலக் கடல் என்னும் தொட்டி (7:23-24)

(ஊ) பன்னிரண்டு ரிஷபங்கள் (7:25-26)

# I இராஜாக்கள் - முன்னுரை

(எ) பத்து வெண்கல ஆதாரங்கள் (7:27-37)

(ஏ) பத்து வெண்கலக் கொப்பரைகள் (7:38-39)

(ஐ) வெண்கல வேலைப்பாடுகளின் விபரம் (7:40-45)

(ஒ) வார்ப்பிப்பட்டரை (7:46-47)

(7) தேவாலயத்தின் பொன் வேலை (7:48-51)

(8) தேவாலயப் பிரதிஷ்டை

(அ) கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி (8:1-11)

(ஆ) சாலொமோனின் பிரசங்கம் (8:12-21)

(இ) சாலொமோனின் பிரதிஷ்டை ஜெபம்

- **(i)** கடந்த காலத்தில் கர்த்தர் உண்மையுள்ளவராயிருந்தார் (8:22-24)
- **(ii)** இஸ்ரவேலைத் தொடர்ந்து ஆசீர்வதியும் (8:25-26)
- **(iii)** தேவன் சர்வ வியாபகர் (8:27)
- **(iv)** தேவாலயத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்பீராக (8:28-30)
- **(v)** நீதிக்குத்தக்கதாய் நியாயந் தீர்ப்பீராக (8:31-32)
- **(vi)** பாவங்களை மன்னித்து அடிமைத் தனத்தை நீக்குவீராக (8:33-35)
- **(vii)** தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக (8:36)
- **(viii)** வாதையையும் வியாதியையும் நீக்குவீராக (8:37-40)
- **(ix)** அந்நிய ஜாதியாரையும் ஆசீர்வதிப்பீராக (8:41-43)
- **(x)** யுத்தத்தில் இஸ்ரவேலைப் பாதுகாப்பீராக (8:44-45)
- **(xi)** பாவங்களை மன்னித்து அடிமைத்தனத்தை நீக்குவீராக (8:46-53)

(ஈ) சாலொமோன் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறான் (8:54-61)

(உ) சாலொமோனும் ஜனங்களும் செலுத்திய காணிக்கைகளும் பலிகளும் (8:62-64)

(ஊ) பதினான்கு நாள் பண்டிகை (8:65-66)

(எ) தேவன் சாலொமோனுக்கு இரண்டாம் விசை தரிசனமாகிறார் (9:1-9)

19. சாலொமோனுடைய ஆட்சியின் விபரம்

(1) இருபது வருஷம் - கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜாவின் அரமனையையும் கட்டினான் (9:10)

(2) சாலொமோனும் ஈராமும் செய்து கொண்ட உடன்படிக்கை (9:11-14)

(3) சாலொமோனின் கட்டுமானப் பணிகளும் அமஞ்சி ஆட்களும் (9:15-22)

(4) சாலொமோனின் வேலையாட்களும் அவன் செலுத்திய பலிகளும் (9:23-25)

## I இராஜாக்கள் - முன்னுரை

(9) சாலொமோனின் சிட்சைகள்

(அ) நியாயத்தீர்ப்பின் தீர்க்கதரிசனம் (11:9-13)

(ஆ) கர்த்தர் சாலொமோனுக்கு எதிராக எழுப்பிய விரோதிகள் (11:14-22)

(இ) இரண்டாம் விரோதி (11:23-25)

(ஈ) மூன்றாம் விரோதி (11:26-39)

(10) சாலொமோனின் பொறாமைக் குணம் (11:40)

(11) சாலொமோனின் மரணம் (11:41-43)

### III. ரெகொபெயாமின் ஆட்சி

1. ரெகொபெயாமின் மதிகேடான செய்கை (12:1-15)
2. உள்நாட்டுக் குழப்பம் (12:16-20)
3. தீர்க்கதரிசனம் யுத்தத்தைத் தவிர்த்தது (12:21-24)

### IV. யெரொபெயாமின் ஆட்சி

1. யெரொபெயாமின் பாவங்கள்

(அ) பொறாமை, அவிசுவாசம் (12:25-27)

(ஆ) விக்கிரகாராதனை (12:28-30)

(இ) மேடைகளும் ஈனமான ஆசாரியர்களும் (12:31-33)

2. யெரொபெயாமும் தீர்க்கதரிசியும்

(1) பலிபீடத்திற்கு எதிரான தீர்க்கதரிசனம் (13:1-2)

(2) மூன்று அற்புதங்கள் (13:3-6)

(3) தீர்க்கதரிசியின் கீழ்ப்படிதல் (13:7-10)

(4) தீர்க்கதரிசியின் கீழ்ப்படியாமை (13:11-19)

(5) தீர்க்கதரிசியின்மீது நியாயத்தீர்ப்பு (13:20-26)

(6) தீர்க்கதரிசி அடக்கம் பண்ணப் படுகிறான் (13:27-32)

(7) யெரொபெயாம் தொடர்ந்து பொல்லாப்பு செய்கிறான் (13:33-34)

3. யெரொபெயாமின்மீது நியாயத்தீர்ப்பு

(1) குமாரனின் வியாதி (14:1-4)

(2) அறிவை உணர்த்தும் வசனம் (14:5-6)

(3) யெரொபெயாமிற்கு எதிரான தீர்க்கதரிசனம் (14:7-11)

(4) தீர்க்கதரிசனம் நிறைவேறுதற்கு அடையாளம் (14:12-13)

(5) இஸ்ரவேலில் சிறையிருப்பு பற்றிய தீர்க்கதரிசனம் (14:14-16)

(6) யெரொபெயாமின் மகனுடைய மரணம் (14:17-18)

4. யெரொபெயாமின் மரணம் (14:19-20)

### V. ரெகொபெயாமின் ஆட்சியின் தொடர்ச்சி

1. ஆட்சிக்காலம் (14:21)
2. தேவதூஷணம் (14:22-24)
3. யூதாவின்மீது எகிப்தியரின் படையெடுப்பு (14:25-28)
4. ரெகொபெயாமின் மரணம் (14:29-31)

### VI. யூதாவின் இராஜாக்கள்

1. அபியாமின் ஆட்சி (15:1-8)
2. ஆசாவின் ஆட்சி

# I இராஜாக்கள் - முன்னுரை

(1) நல்ல ராஜா (15:9-15)

(2) உள்நாட்டுக் குழப்பம் (15:16-17)

(3) சீரியரோடு உடன்படிக்கை (15:18-19)

(4) இஸ்ரவேல்மீது சீரியப்படையெடுப்பு (15:20-21)

(5) ஆசாவின் கட்டுமானப் பணி (15:22)

(6) ஆசாவின் வியாதியும் மரணமும் (15:23-24)

## VII. இஸ்ரவேலின் ராஜாக்கள்

1. நாதாபின் ஆட்சி (15:25-26)

2. பாஷாவின் ஆட்சி

(1) உள்நாட்டுக் கலவரம் (15:27-28)

(2) யெரொபெயாமின் வீட்டாரெல்லாம் அழிந்தார்கள் (15:29-31)

(3) பாஷாவின் ஆட்சிக்காலம் (15:32-34)

(4) பாஷாவுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (16:1-7)

3. ஏலாவின் ஆட்சி (16:8)

4. சிம்ரியின் ஆட்சி

(1) உள்நாட்டுக் குழப்பம் (16:9-10)

(2) பாஷாவின் வீட்டாரெல்லாம் அழிந்தார்கள் (16:11-14)

(3) உள்நாட்டுக் குழப்பம் (16:15-17)

(4) சிம்ரியின் மரணம்(16:18-20)

5. உம்ரியின் ஆட்சி

(1) உள்நாட்டுக் குழப்பம் (16:21-22)

(2) சமாரியவை உம்ரி கட்டுகிறான் (16:23-24)

(3) உம்ரியின் பொல்லாப்பும் மரணமும் (16:25-28)

## VIII. ஆகாபின் ஆட்சி

1. ஆகாபின் பொல்லாப்பு (16:29-33)

2. எரிகோவைக் கட்டியோர்மீது சாபம் (16:34)

3. மூன்றரை வருஷம் பஞ்சம் (17:1)

4. எலியாவைக் காகம் போஷிக்கிறது (17:2-7)

5. பானையின் மாவும் கலசத்தின் எண்ணெயும் குறையவில்லை (17:8-16)

6. விதவையின் மகனை எலியா உயிருடன் எழுப்புகிறான் (17:17-24)

7. எலியா ஆகாபைச் சந்திக்கச் செல்கிறான் (18:1-2)

8. ஆகாப் தண்ணீரைத் தேடுகிறான் (18:3-6)

9. எலியா ஒபதியாவைச் சந்திக்கிறான் (18:7-16)

10. ஆகாபும் அவனுடைய கள்ளத் தீர்க்கதரிசிகளும் (18:17-24)

11. பாகால் தீர்க்கதரிசிகளின் முயற்சிகள் (18:25-29)

12. கர்த்தரிடத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி (18:30-40)

13. மழை (18:41-46)

14. எலியா யேசபேலுக்கு பயந்து ஓடுகிறான் (19:1-3)

15. தெய்வீக வல்லமை (19:4-8)

16. புதிய வெளிப்பாடும் புதிய கட்டளையும் (19:9-18)

# I இராஜாக்கள் - முன்னுரை

17. எலிசாவின் அழைப்பு (19:19-21)

18. ஆகாப் சீரியரோடு பண்ணிய முதலாவது யுத்தம்

(1) பெனாதாத்தின் முதலாவது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுகிறது (20:1-4)

(2) பெனாதாத்தின் இரண்டாவது கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது (20:5-9)

(3) பெனாதாத்தின் பெருமை (20:10)

(4) ஆகாப் பெனாதாத்திற்குக் கூறிய பதிலுரை (20:11-12)

(5) ஆகாபுக்கு தேவன் தந்த ஜெய வாக்குத்தத்தம் (20:13-14)

(6) சீரியர்மீது வெற்றி (20:15-21)

19. யுத்தத்தைப் பற்றிய தீர்க்கதரிசன எச்சரிப்பு (20:22)

20. ஆகாப் சீரியரோடு பண்ணிய இரண்டாவது யுத்தம்

(1) சீரியரின் திட்டம் (20:23-25)

(2) தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் (20:26-27)

(3) ஆகாபுக்கு மறுபடியும் தேவனுடைய ஜெய வாக்குத்தத்தம் (20:28)

(4) சீரியர்மீது இரண்டாவது முறையாக வெற்றி (20:29-30)

(5) ஆகாபின் பாவம் (20:31-34)

(6) தீர்க்கதரிசி மூலமாக எச்சரிப்பு (20:35-43)

21. ஆகாப் நாபோத்துக்கு எதிராகச் செய்த பாவம்

(1) அவனுடைய திராட்சத்தோட்டத்தை இச்சிக்கிறான் (21:1-4)

(2) யேசபேலின் சதித்திட்டம் (21:5-10)

(3) யேசபேலின் சதித்திட்டம் வெற்றி பெறுகிறது (21:11-14)

(4) ஆகாபிடம் நாபோத்தின் திராட்சத் தோட்டம் (21:15-16)

(5) ஆகாப், யேசபேலுக்கு எதிராக எலியாவின் தீர்க்கதரிசனம் (21:17-24)

(6) ஆகாபின் பொல்லாப்பும் தன்னைத் தாழ்த்தியதும் (21:25-27)

(7) ஆகாப் பொல்லாப்பிலிருந்து தப்புகிறான் (21:28-29)

22. ஆகாப் சீரியரோடு பண்ணிய மூன்றாவது யுத்தம்

(1) யோசபாத்தோடு ஒப்பந்தம் (22:1-4)

(2) யோசபாத் தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான் (22:5)

(3) கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜெயங் கிடைக்கும் என்றனர் (22:6)

(4) யோசபாத் உண்மையான தீர்க்கதரிசியிடம் ஆலோசனை கேட்கிறான் (22:7)

(5) மிகாயாவை அழைக்கிறார்கள் (22:8-9)

(6) கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜெயங் கிடைக்கும் என்றனர் (22:10-12)

(7) ஆகாபுக்கு நல்ல வார்த்தை கூறுமாறு மிகாயாவை ஒருவன் எச்சரிக்கிறான் (22:13-14)

# I இராஜாக்கள் - முன்னுரை

(8) மிகாயாவின் முதலாவது தீர்க்கதரிசனம் (22:15-16)

(9) இஸ்ரவேலின் தோல்வியைப் பற்றி மிகாயாவின் தீர்க்கதரிசனம் (22:17-18)

(10) பொய்யின் ஆவியைப்பற்றி மிகாயாவின் தீர்க்கதரிசனம் (22:19-23)

(11) உண்மையான தீர்க்கதரிசியின் பரீட்சை (22:24-28)

(12) கீலேயாத்திலுள்ள ராமோத்திலே யுத்தம் (22:29-36)

(13) ஆகாபின் மரணம் (22:37-40)

IX. யோசபாத்தின் ஆட்சி

1. ஆட்சிக்காலம் (22:41-42)
2. நல்ல ராஜா (22:43-47)
3. யூதாவின் இரண்டாவது கப்பற்படை (22:48-49)
4. யோசபாத்தின் மரணம் (22:50)

X. அகசியாவின் ஆட்சி (22:51-53)

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

### I. தாவீதின் கடைசி நாட்கள் - (1:1-2:11; 2சாமு 23:1; 1நாளா 28:1)

### 1. தாவீது வயது சென்ற விர்த்தாப்பியனானான்

1இராஜா 1:1 தாவீதுராஜா வயதுசென்ற விர்த்தாப்பியனான போது, வஸ்திரங்களினால் அவனை மூடினாலும், அவனுக்கு அனல் உண்டாகவில்லை.

1இராஜா 1:2 அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி: ராஜசமுகத்தில் நின்று, அவருக்குப் பணிவிடை செய்யவும், ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு அனல் உண்டாகும்படி உம்முடைய மடியிலே படுத்துக்கொள்ளவும் கன்னியாகிய ஒரு சிறு பெண்ணை ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்குத் தேடுவோம் என்று சொல்லி,

1இராஜா 1:3 இஸ்ரவேலின் எல்லையிலெல்லாம் அழகான ஒரு பெண்ணைத் தேடி, சூனேம் ஊராளாகிய அபிஷாகைக் கண்டு, அவளை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள்.

1இராஜா 1:4 அந்தப் பெண் வெகு அழகாயிருந்தாள்; அவள் ராஜாவுக்கு உதவியாயிருந்து அவனுக்குப் பணிவிடைசெய்தாள்; ஆனாலும் ராஜா அவளை அறியவில்லை.

"וְהַמֶּלֶךְ Wehamelek (Now)" - "இப்பொழுது" என்று பொருள்படும். எபிரெய வார்த்தையோடு இந்தப் புஸ்தகம் ஆரம்பமாகிறது. ஆகையினால் 2சாமுவேல் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் வரலாற்றுத் தொடர்ச்சியாக 1ராஜாக்கள் புஸ்தகமும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

"தாவீதுராஜா" - இந்த வாக்கியம் 2சாமுவேல் புஸ்தகத்தில் 17 தடவைகளும், 1இராஜா புஸ்தகத்தில் 9 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சவுல் இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாக இருந்தவர். ஆனால் 1இராஜா, 2இராஜா ஆகிய புஸ்தகங்களில் சவுலின் பெயர் ஒருமுறை கூட பயன்படுத்தப் படவில்லை. சவுல் என்ற பெயரில் ஒரு ராஜா இருந்ததுபோல இவ்விரு புஸ்தகங்களிலும் காணப்படவேயில்லை. இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிவதற்கு முன்பு சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யமாக இருந்தது. அந்தக் காலத்தில் இஸ்ரவேலை ஆட்சி புரிந்த தாவீது, சாலொமோன் ஆகிய இரண்டு ராஜாக்களைப் பற்றி 1ராஜாக்களின் புஸ்தகத்தில் 96 தடவைகளும், 2இராஜாக்களின் புஸ்தகத்தில் 163 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசம் பிளவுபட்ட பின்பு, யூதாவை 20 ராஜாக்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

**இஸ்ரவேலின் 19 ராஜாக்கள்**

1. ரெகொபெயாம் **(Jeroboam)** *(1இராஜா 12:20)*
2. நாதாப் **(Nadab)** *(1இராஜா 14:20)*
3. பாஷா **(Baasha)** *(1இராஜா 15:16)*
4. ஏலா **(Elah)** *(1இராஜா 16:6)*
5. சிம்ரி **(Zimri)** *(1இராஜா 16:10)*
6. உம்ரி **(Omri)** *(1இராஜா 16:16)*
7. ஆகாப் **(Ahab)** *(1இராஜா 16:28)*
8. அகசியா **(Ahaziah)***(1இராஜா 22:40)*
9. யோராம் **(Jehoram or Joram** *(2இராஜா 3:1)*
10. யெகூ **(Jehu)** *(2இராஜா 9:6)*
11. யோவாகாஸ் **(Jehoahaz)** *(2இராஜா 13:1)*

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

12. யோவாஸ்(Jehoash) (2இராஜா 13:10)

13. இரண்டாம் யெரொபெயாம் (Jeroboam II) (2இராஜா 14:22)

14. சகரியா(Zachariah) (2இராஜா 15:8)

15. சல்லூம் (Shallum) (2இராஜா 15:13)

16. மெனாகேம் (Menahem) (2இராஜா 15:17)

17. பெக்காகியா (Pekahiah) (2இராஜா 15:23)

18. பெக்கா (Pekah) (2இராஜா 15:27)

19. ஓசெயா (Hoshea) (2இராஜா 17:1)

**பிறதேசங்களின் 15 புறஜாதி ராஜாக்கள்**

1. சீகோன் (Sihon) - எமோரியரின் ராஜா (1இராஜா 4:19)

2. ஓக் (Og) - பாசானின் ராஜா

3. ஈராம் (Hiram) - தீருவின் ராஜா (1இராஜா 5:1)

4. ஆதாதேசர் (Hadadezer) - சோபாவின் ராஜா (1இராஜா 11:23)

5. சீஷாக் (Shishak) - எகிப்தின் ராஜா (1இராஜா 11:40; 1இராஜா 14:25)

6. பெனாதாத் (Benhadad) - சீரியாவின் ராஜா (1இராஜா 15:18)

7. ஏத்பாகால் (Ethbaal) - சீதோனியரின் ராஜா (1இராஜா 16:31)

8. ஆசகேல் (Hazael) - சீரியாவின் ராஜா (1இராஜா 19:15)

9. திகிலாத்பிலேசர் (Tiglath-pilezer) - அசீரியாவின் ராஜா (2இராஜா 15:29)

10. ரேத்சீன் (Rezin) - சீரியாவின் ராஜா (2இராஜா 15:37)

11. சல்மனாசார் (Shalmenezer) - அசீரியாவின் ராஜா (2இராஜா 17:3)

12. சனகெரிப் (Sennacherib) - அசீரியாவின் ராஜா (2இராஜா 18:13)

13. தீராக்கா (Tirhakah) - எத்தியோப்பியாவின் ராஜா (2இராஜா 19:9)

14. பார்வோன்நேகோ (Pharaoh-nechoh) - எகிப்தின் ராஜா (2இராஜா 23:29)

15. நேபுகாத் நேச்சார் (Nebuchadnezzar) - பாபிலோனின் ராஜா (2இராஜா 24:10-20; 1இராஜா 25:1-30)

இந்த ராஜாக்கள் தவிர, சீரியா, மோவாப், ஏதோம், ஆகிய தேசங்களிலும், மேலும் பல தேசங்களிலும் பல புறஜாதி ராஜாக்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். சேபாவின் ராஜஸ்திரீயைப் பற்றி இந்தப் புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"தாவீது வயதுசென்ற விர்த்தாப்பியனான போது" - தாவீதிற்கு சுமார் 70 வயதாயிற்று. அவன் முப்பதாவது வயதில் ராஜாவானான். (2சாமு 5:4) இஸ்ரவேலை 40 வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணினான்.(2சாமு 2:11; 2சாமு 5:5; 1நாளா 3:4). "விர்த்தாப்பியனாதல்" (stricken in years) என்னும் வாக்கியம் 80 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களைக் குறிக்கும். (ஆதி 18:11; ஆதி 24:1; யோசு 13:1; யோசு 23:1) ஆனால் இக்காலத்தில் யூதர்கள் நீண்ட ஆயுசுக்கு உயிரோடு இல்லை. தாவீதிற்குப் பின்பு, யூதருடைய எந்த ராஜாவும் 60 வயதிற்குமேல் உயிரோடு ஜீவித்ததில்லை.

"வஸ்திரங்கள்" - தாவீது இப்போது படுத்தப் படுக்கையாக இருக்கிறார். இந்த வாக்கியத்தில் வஸ்திரங்கள் என்பது படுக்கையில் அவரை மூடுவதற்குப் பயன்படுத்தப்படும் வஸ்திரமாக இருக்கலாம். (1இராஜா 1:47).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

"ஊழியக்காரர்" - இவர்கள் தாவீதின் மருத்துவ ஆலோசகராக இருக்கலாம். ராஜாவுக்கு அனல் உண்டாகும்படி அவருடைய மடியிலே படுத்துக்கொள்ள கன்னியாகிய ஒரு சிறு பெண்ணைத் தேடவேண்டுமென்று தாவீதின் ஊழியக்காரர் ஆலோசனை கூறுகிறார்கள். அந்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

"அவனுக்குப் பணிவிடைசெய்தாள்; ஆனாலும் ராஜா அவளை அறியவில்லை" - அபிஷாக் என்னும் ஸ்திரீயை ராஜாவிடத்தில் கொண்டு வந்தார்கள். அவள் ராஜாவுக்கு உதவியாயிருந்து, எல்லாப் பணிவிடைகளையும் செய்கிறாள். ஆனால் ராஜா அவளோடு சயனிக்கவில்லை.

### 2. அதோனியா தாவீதின் ராஜ்ய பாரத்தைக் கைப்பற்ற சதி பண்ணுகிறான்

1இராஜா 1:5 ஆகீத்திற்குப் பிறந்த அதோனியா என்பவன்: நான் ராஜா ஆவேன் என்று சொல்லி, தன்னைத்தான் உயர்த்தி, தனக்கு இரதங்களையும், குதிரைவீரரையும், தனக்குமுன் ஓடும் ஐம்பது காலாட்களையும் சம்பாதித்தான்.

1இராஜா 1:6 அவனுடைய தகப்பன்: நீ இப்படிச் செய்வானேன் என்று அவனை ஒருக்காலும் கடிந்துகொள்ளவில்லை; அவன் மிகவும் அழகுள்ளவனாயிருந்தான்; அப்சலோமுக்குப்பின் அவனுடைய தாய் அவனைப் பெற்றாள்.

1இராஜா 1:7 அவன் செருயாவின் குமாரனாகிய யோவாபோடும், ஆசாரியனாகிய அபியத்தாரோடும் ஆலோசனை பண்ணிவந்தான்; அவர்கள் அவனிடத்திலிருந்து அவனுக்கு உதவிசெய்துவந்தார்கள்.

1இராஜா 1:8 ஆசாரியனாகிய சாதோக்கும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், சீமேயியும், ரேயியும், தாவீதோடிருக்கிற பராக்கிரமசாலிகளும், அதோனியாவுக்கு உடந்தையாயிருக்கவில்லை.

1இராஜா 1:9 அதோனியா இன்ரோகேலுக்குச் சமீபமான சோகெலெத் என்னும் கல்லின் அருகே ஆடுமாடுகளையும் கொழுத்த ஐந்துக்களையும் அடித்து, ராஜாவின் குமாரராகிய தன் சகோதரரெல்லாரையும், ராஜாவின் ஊழியக்காரரான யூதாவின் மனுஷர் அனைவரையும் அழைத்தான்.

"ஆகீத்திற்குப் பிறந்த அதோனியா" - அதோனியா தாவீதின் குமாரர்களில் ஒருவன். தாவீதுக்கு முதிர்வயதாயிற்று. (1இராஜா 1:1-4,47) அதோனியா ராஜாங்கத்தில் தன்னைத் தானே உயர்த்துகிறான். தனக்கு இரதங்களையும் குதிரைவீரரையும் சம்பாதித்தான். அதுமட்டுமல்லாமல் அதோனியா தனக்குமுன் ஓடும் ஐம்பது காலாட்களையும் சம்பாதித்தான். தாவீது அதோனியாவைக் கடிந்து கொள்ளவில்லை. இதனால் தன்னுடைய செய்கைகளைத் தாவீது ராஜா அங்கிகாரம் பண்ணுவதாக அதோனியா நினைத்தான். (1இராஜா 1:5-6). யோவாப் தாவீதின் படைத்தளபதியாகவும், அபியத்தார் ஆசாரியனாகவும் இருக்கிறார்கள். அதோனியா இவ்விருவருடைய ஆலோசனையைக் கேட்கிறான். அவர்கள் இருவரும் அதோனியாவிற்கு உதவி புரிகிறார்கள். (1இராஜா 1:7-8).

"நான் ராஜா ஆவேன்" - அதோனியா தாவீதின் நான்காவது குமாரன். இப்போது உயிரோடிருக்கும் தாவீதின் குமாரில் இவனே மூத்தவன். அம்னோனும், அப்சலோமும் ஏற்கெனவே மரித்துப்போனார்கள். (2சாமு 13-18). தாவீதின் இரண்டாவது குமாரனாகிய கிலேயாபும் இப்போது மரித்துப் போயிருக்க வேண்டும். (2சாமு 3:2-4). தாவீதுக்கும் வயதாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் தாவீதுக்குப் பின்பு, தான் ராஜாவாக வேண்டுமென்றுஅதோனியா திட்டமிடுகிறான். இதை அவன் முறைப்படி தாவீதிடம் வெளிப்படுத்தியிருந்திருக்கலாம். தாவீது அதோனியாவுக்காக ஏதாவது நன்மை செய்ய முன்வந்திருப்பான்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

ஆனால் தாவீதோ சாலொமோனின் தாயாகிய பத்சேபாளுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறான். தன்னுடைய குமாரன் சாலொமோன் தாவீதுக்குப் பின்பு ராஜாவாக வேண்டுமென்று பத்சேபாள் தாவீதைச் சம்மதிக்க வைக்கிறாள். (1இராஜா 1:11-13,17,28-30).

### 3. நாத்தான், பத்சேபாள் ஆகியோரின் திட்டம்

1இராஜா 1:10 தீர்க்கதரிசியாகிய நாத்தானையும், பெனாயாவையும், பராக்கிரமசாலிகளையும், தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை.

1இராஜா 1:11 அப்பொழுது நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளை நோக்கி: நம்முடைய ஆண்டவனாகிய தாவீதுக்குத் தெரியாமல், ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா ராஜாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையா?

1இராஜா 1:12 இப்போதும் உன் பிராணனையும், உன் குமாரனாகிய சாலொமோனின் பிராணனையும் தப்புவிக்கும்படிக்கு நீ வா, உனக்கு நான் ஆலோசனை சொல்லுவேன்.

1இராஜா 1:13 நீ தாவீது ராஜாவினிடத்தில் போய்: ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? அப்படியிருக்க, அதோனியா ராஜாவாகிறது என்ன? என்று அவரிடத்தில் கேள்.

1இராஜா 1:14 நீ அங்கே ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில், நானும் உனக்குப் பின்வந்து, உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன் என்றான்.

"பெனாயா" (Benaiah) - (2சாமு 8:18)

"தன் சகோதரனாகிய சாலொமோனையும் அழைக்கவில்லை" - தாவீது பத்சேபாளுக்கு வாக்குப்பண்ணியிருந்தது அதோனியாவுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஆகையினால் அதோனியா சாலொமோனை விருந்துக்கு அழைக்கவில்லை. (1இராஜா 1:10= 1இராஜா 1:13,17,28-30).

"நாத்தான் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளை நோக்கி" - சாலொமோனை ராஜாவாக ஆக்குவதற்கு நாத்தான் தீர்க்கதரிசி ஆரம்ப வேலைகளைச் செய்கிறான். அதோனியா நாத்தானை விருந்துக்கு அழைக்கவில்லை. ஆகையினால், அவனுடைய உயிருக்கு அதோனியா மூலமாக ஆபத்து வரலாம். (1இராஜா 1:11-12). அதோனியா ராஜாவானால், நாத்தானின் உயிருக்கும், அவனால் விருந்துக்கு அழைக்கப்படாத மற்றவர்களின் உயிருக்கும் ஆபத்து வரலாம். அதேவேளையில் சாலொமோன் ராஜாவானால் அதோனியாவின் உயிருக்கும், அவனோடு சேர்ந்து சதிசெய்த மற்றவர்களின் உயிருக்கும் ஆபத்து வரலாம். (1இராஜா 2:12-46).

"தாவீதுக்குத் தெரியாமல்" - அதோனியாவின் திட்டம் தாவீதுக்கு ஒருவேளை தெரியாமற்போயிருக்கலாம். அல்லது இந்த விஷயம் தாவீதுக்குத் தெரிந்திருக்கலாம். தாவீதுக்குத் தெரிந்திருப்பது நாத்தானுக்குத் தெரியாமற்போயிருக்கலாம். (1இராஜா 1:6).

"உனக்கு நான் ஆலோசனை சொல்லுவேன்" - நாத்தான் பத்சேபாளுக்கு ஆலோசனை சொல்லுகிறான். சாலொமோனை ராஜாவாக ஆக்கும் திட்டம் இங்கு தயாரிக்கப்படுகிறது. (1இராஜா 1:12-53).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

"நீ தாவீது ராஜாவினிடத்தில் போய்" - நாத்தானுடைய திட்டத்தின் பிரகாரம், பத்சேபாள் தாவீதினிடத்திற்குப் போகவேண்டும். பல வருஷங்களுக்கு முன்பு தாவீது அவளுக்கு வாக்குப்பண்ணியதை நிறைவேற்றுமாறு அவனிடம் கேட்கவேண்டும். அவர்களுடைய சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும் போது, நாத்தான் ஏற்ற வேளையில் அங்கு வந்து, தாவீதின் ஆணையை உறுதிபண்ண வேண்டுமென்பது நாத்தானும், பத்சேபாளும் தயாரித்த திட்டமாகும். அவர்கள் இருவரும் தாவீதிடம் அதோனியாவின் திட்டத்தை வெளிப்படுத்தி, சாலொமோனை ராஜாவாக ஆக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். (1இராஜா 1:13-35).

"எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான்" - இவ்வாறு தாவீது பத்சேபாளிடம் ஆணையிட்டிருக்கிறான். இந்த ஆணை எப்பொழுது இடப்பட்டது என்று தெரியவில்லை. ஒருவேளை பத்சேபாளின் முதல் குழந்தை மரித்த பின்போ, (2சாமு 12:1-25), அல்லது சாலொமோன் பிறந்த பின்போ தாவீது இந்த ஆணையைப் பத்சேபாளுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

"உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன்" - பத்சேபாள் கூறும் வார்த்தைகளை நாத்தான் அங்கு வந்து, உறுதிப்படுத்துவதாக வாக்குப் பண்ணுகிறான். இவர்கள் இருவரும் ஒவ்வொரு காரியத்தையும் நேர்த்தியாகச் செய்து, சாலொமோனை ராஜாவாக ஆக்க தாவீதைச் சம்மதிக்க வைக்கிறார்கள். (1இராஜா 1:14,22).

**4. தாவீதின் வாக்கைப் பத்சேபாள் நினைவுபடுத்துகிறாள்** - (2சாமு 12:24-25)

1இராஜா 1:15 அப்படியே பத்சேபாள் பள்ளியறைக்குள் ராஜாவிடத்தில் போனாள்; ராஜா மிகவும் வயது சென்றவனாயிருந்தான்; சூனேம் ஊராளாகிய அபிஷாக் ராஜாவுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள்.

1இராஜா 1:16 பத்சேபாள் குனிந்து, ராஜாவை வணங்கினாள்; அப்பொழுது ராஜா: உனக்கு என்னவேண்டும் என்று கேட்டான்.

1இராஜா 1:17 அதற்கு அவள்: என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைக் கொண்டு, உமது அடியாளுக்கு ஆணையிட்டீரே.

1இராஜா 1:18 இப்பொழுது, இதோ, அதோனியா ராஜாவாகிறான்; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் அதை அறியவில்லை.

1இராஜா 1:19 அவன் மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து, ராஜாவின் குமாரர் அனைவரையும் ஆசாரியனாகிய அபியத்தாரையும், யோவாப் என்னும் படைத்தலைவனையும் அழைத்தான்; ஆனாலும் உமது அடியானாகிய சாலொமோனை அழைக்கவில்லை.

1இராஜா 1:20 ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பிறகு அவருடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவன் இன்னான் என்று தங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று இஸ்ரவேலர் அனைவரின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது.

1இராஜா 1:21 அறிவியாமற்போனால் ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய பிதாக்களோடே படுத்துக்கொண்டபின்பு, நானும் என் குமாரனாகிய சாலொமோனும் குற்றவாளிகளாய் எண்ணப்படுவோம் என்றாள்.

### 1 அதிகாரம்

"பத்சேபாள் பள்ளியறைக்குள் ராஜாவிடத்தில் போனாள்" - ஏற்கெனவே திட்டமிட்ட பிரகாரம் பத்சேபாள் தாவீது ராஜாவைச் சந்திக்கிறாள். சாலொமோனை ராஜாவாக ஆக்குவேன் என்று தாவீது இட்ட ஆணையை அவனுக்கு நினைவு படுத்துகிறாள். அத்துடன் அதோனியாவின் திட்டத்தையும் வெளிப்படுத்துகிறாள். (1இராஜா 1:15-21).

#### 5. பத்சேபாளின் விண்ணப்பத்தை நாத்தான் ஆதரித்துப் பேசுகிறான்

1இராஜா 1:22 அவள் ராஜாவோடே பேசிக் கொண்டிருக்கையில், தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்தான்.

1இராஜா 1:23 தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்திருக்கிறார் என்று ராஜாவுக்குத் தெரிவித்தார்கள்; அவன் ராஜாவுக்கு முன்பாகப் பிரவேசித்து முகங்குப்புற விழுந்து ராஜாவை வணங்கினான்.

1இராஜா 1:24 நாத்தான்: ராஜாவாகிய என் ஆண்டவனே, அதோனியா எனக்குப்பின் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பான் என்று நீர் சொன்னதுண்டோ?

1இராஜா 1:25 அவன் இன்றையதினம் போய், மாடுகளையும் கொழுத்த ஜந்துக்களையும் ஆடுகளையும் திரளாக அடித்து, ராஜாவின் குமாரர் அனைவரையும் இராணுவத்தலைவரையும், ஆசாரியனாகிய அபியத்தாரையும் அழைத்தான்; அவர்கள் அவனுக்கு முன்பாகப் புசித்துக் குடித்து, ராஜாவாகிய அதோனியா வாழ்க என்று சொல்லுகிறார்கள்.

1இராஜா 1:26 ஆனாலும் உமது அடியானாகிய என்னையும், ஆசாரியனாகிய சாதோக்கையும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவையும், உமது அடியானாகிய சாலொமோனையும் அவன் அழைக்கவில்லை.

1இராஜா 1:27 ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப்பின் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்பவன் இவன் தான் என்று நீர் உமது அடியானுக்குத் தெரிவிக்காதிருக்கையில், இந்தக் காரியம் ராஜாவாகிய என் ஆண்டவன் கட்டளையால் நடந்திருக்குமோ என்றான்.

"தீர்க்கதரிசியாகிய நாத்தான் வந்தான்" - பத்சேபாள் தாவீதோடு பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் நாத்தான் அங்கு வருகிறான். தாவீதுக்கு அடுத்த ஸ்தானத்தில் அவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருப்பவனை உறுதிபண்ண வேண்டுமென்று அறிவிக்கிறான். அதோனியாவின் சதித்திட்டத்தைப் பற்றியும், அவனுடைய விருந்துக்கு தன்னையும், மேலும் பலரையும் அழைக்கவில்லை என்றும் தெரியப்படுத்துகிறான். அதோனியா தாவீதின் வார்த்தையின் பிரகாரமாகவே செயல்படுகிறானா என்னும் கேள்வியை நாத்தான் தாவீதினிடமே கேட்கிறான். (1இராஜா 1:22-27).

"அடியானாகிய சாலொமோன்" - தாவீதுக்கும், பத்சேபாளுக்கும் முதலாவது பிறந்த குழந்தை இறந்த பின்பு, சாலொமோன் தாமதமில்லாமல் பிறந்தான். (2சாமு 12:24). இந்தச் சம்பவத்தின்போது, சாலொமோனுக்குச் சுமார் 20 வயதாக இருக்க வேண்டும்.

#### 6. தாவீது சாலொமோனை ராஜாவாக்குகிறான்

1இராஜா 1:28 அப்பொழுது தாவீதுராஜா பிரதியுத்தரமாக: பத்சேபாளை என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான்; அவள் ராஜா சமுகத்தில் பிரவேசித்து ராஜாவுக்கு முன்னே நின்றாள்.

1இராஜா 1:29 அப்பொழுது ராஜா: உன் குமாரனாகிய சாலொமோன் எனக்குப்பின் அரசாண்டு, அவனே என் ஸ்தானத்தில் என் சிங்காசானத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நான் உனக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மேல் ஆணையிட்ட படியே, இன்றைக்குச் செய்து தீர்ப்பேன் என்பதை,

## 1 அதிகாரம்

1இராஜா 1:30 என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று ஆணையிட்டான்.

1இராஜா 1:31 அப்பொழுது பத்சேபாள் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி, என் ஆண்டவனாகிய தாவீதுராஜா என்றைக்கும் வாழ்க என்றாள்.

1இராஜா 1:32 பின்பு தாவீதுராஜா, ஆசாரியனாகிய சாதோக்கையும் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் யோய்தாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான்.

1இராஜா 1:33 அவர்கள் ராஜாவுக்கு முன்பாகப் பிரவேசித்தபோது, ராஜா அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக் கொண்டு, என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறு கழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக்கொண்டு போங்கள்.

1இராஜா 1:34 அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக் கடவர்கள்; பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள்.

1இராஜா 1:35 அதின்பின்பு அவன் நகர்வலம் வந்து, என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி, அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள்; அவனே என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான்; அவன் இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் தலைவனாயிருக்கும்படி அவனை ஏற்படுத்தினேன் என்றான்.

"தாவீதுராஜா பிரதியுத்தரமாக" - நாத்தானும், பத்சேபாளும் அதோனியாவின் திட்டத்தைத் தாவீதுக்கு வெளிப்படுத்துகிறார்கள். அதன் பின்பு, தாவீது பத்சேபாளை மறுபடியும் அழைக்கிறான். ஒருவேளை நாத்தான் தாவீதின் அறைக்குள் வந்தவுடன், பத்சேபாள் அந்த அறையைவிட்டு வெளியே போயிருந்திருக்க வேண்டும். நாத்தான் பேசும் சம்பவத்தைப் பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்பதைக் காண்பிப்பதற்காகப் பத்சேபாள் அந்த அறையை விட்டு வெளியே போயிருந்திருக்கலாம்.

"கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" - இஸ்ரவேல் புத்திரர் ஆணையிடும்போது, இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துவது வழக்கம். (2சாமு 4:9) பத்சேபாளுக்குத் தான் ஆணையிட்டுக் கொடுத்ததைத் தாவீது அங்கிகரித்து, அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஆவன செய்கிறான்.

**தாவீது ராஜா சாலொமோனை ராஜாவாக்கின சம்பவம்**

1. பத்சேபாளுக்கு தான் ஆணையிட்டபடியே, இன்றைக்குச் செய்து தீர்ப்பேன் என்று தாவீது வாக்குப் பண்ணுகிறான். (1இராஜா 1:29-30)
2. ஆசாரியனாகிய சாதோக்கையும் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் யோய்தாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் வரவழையுங்கள் என்றான். (1இராஜா 1:32)
3. நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறுகழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக் கொண்டு போங்கள் என்றான். (1இராஜா 1:33)
4. அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள் என்று கூறினான். (1இராஜா 1:34)

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

5. பின்பு எக்காளம் ஊதி, ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்துங்கள் என்று கூறினான்.

6. அதின்பின்பு அவன் நகர்வலம் வந்து, என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி, அவனைக் கீகோனிலிருந்து கூட்டிக் கொண்டு வாருங்கள். அவனே என் ஸ்தானத்தில் ராஜாவாயிருப்பான் என்றான். (1இராஜா 1:35)

"என் கோவேறுகழுதை" - இது தாவீது ராஜாவுக்கே உரிய குதிரை. ராஜாவின் அனுமதியில்லாமல் இதன்மேல் ஏறுகிறவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். சாலொமோனை ராஜாவின் கோவேறு கழுதையின் மேல் ஏற்றுமாறு தாவீது கட்டளையிடுவது தான் அவனை ராஜாவாக அங்கிகரிப்பதற்கு அடையாளம்.

"கீகோன்" (Gihon) - இது ஒரு பள்ளத்தாக்கு. கீதரோன் பள்ளத்தாக்கின் அருகில் அமைந்துள்ளது. மேலும் இது ஒரு மேடான பகுதியாகும். எசேக்கியா ராஜா தன் நாட்களில் கீகோனின் தண்ணீர்களைத் தடுத்து அணை கட்டினான்.

"இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள்" - சாலொமோனை ராஜாவாக அபிஷேகம் பண்ணும்போது, அங்கே ஆசாரியரும், தீர்க்கதரிசியும், ராஜாவாகப்போகும் சாலொமோனும் இருக்கிறார்கள்.

**7. சாலொமோனை ஆசாரியனாகிய சாதோக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறான்** - (1நாளா 23:1; 29:22; 2நாளா 1)

1இராஜா 1:36 அப்பொழுது யோய்தாவின் குமாரன் பெனாயா ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ஆமென், ராஜாவாகிய என் ஆண்டவனுடைய தேவனாகிய கர்த்தரும் இப்படியே சொல்வாராக.

1இராஜா 1:37 கர்த்தர் ராஜாவாகிய என் ஆண்டவனோடே எப்படி இருந்தாரோ, அப்படியே அவர் சாலொமோனோடும் இருந்து, தாவீதுராஜாவாகிய என் ஆண்டவனுடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக என்றான்.

1இராஜா 1:38 அப்படியே ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும், யோய்தாவின் குமாரன் பெனாயாவும், கிரேத்தியரும் பிலேத்தியரும் போய், சாலொமோனைத் தாவீது ராஜாவினுடைய கோவேறு கழுதையின் மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு நடத்திக்கொண்டு போனார்கள்.

1இராஜா 1:39 ஆசாரியனாகிய சாதோக்கு தைலக்கொம்பைக் கூடாரத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய், சாலொமோனை அபிஷேகம்பண்ணினான்; அப்பொழுது எக்காளம் ஊதி, ஜனங்களெல்லாரும் ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தினார்கள்.

1இராஜா 1:40 பிற்பாடு ஜனங்களெல்லாரும் அவன் பிறகாலே போனார்கள்; ஜனங்கள் நாகசுரங்களை ஊதி, பூமி அவர்கள் சத்தத்தினால் அதிரத்தக்கதாக மகா பூரிப்புமாய்ச் சந்தோஷித்தார்கள்.

"அவருடைய சிங்காசனத்தைப் பெரிதாக்குவாராக" - பெனாயா சாலொமோனுக்கு உண்மையுள்ளவனாக இருக்கிறான். சாலொமோனின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் வரப்போகிற பெரிய ஆசீர்வாதங்களைத் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கிறான்.

"கிரேத்தியரும் பிலேத்தியரும்" - 1இராஜா 1:33 ஆவது வசனத்தில் "ஆண்டவனுடைய சேவகர்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறவர்கள் இவர்களே யாவர்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

"கூடாரம்" (tabernacle) - உடன்படிக்கைப் பெட்டியின் ஆசரிப்புக் கூடாரத்தைத் தாவீது எருசலேமுக்குக் கொண்டு வந்திருக்கிறான். (2சாமு 6:17). ஆசரிப்புக் கூடாரத்து பணிமுட்டுகளில் தைலக்கொம்பும் உள்ளது. (யாத் 31:11; யாத் 39:38).

"நாகசுரங்கள்" - இது ஆதிகாலம் முதல் பயன்படுத்தப்பட்டு வரும் இசைக்கருவியாகும். பண்டிகை நாட்களில் நாகசுரங்களை ஊதினார்கள். (1சாமு 10:5; ஏசா 5:12; லூக்கா 7:32) பண்டிகைகளுக்குப் பிரயாணம் பண்ணும்போதும், (ஏசா 30:29), மரித்தவர்களின் கடைசிச் சடங்குகளின்போதும் (எரே 48:36; மத் 9:23) நாகசுரங்களை ஊதும் வழக்கம் இருந்தது.

**8. அதோனியா சாலொமோனுக்குக் கீழ்ப்படிகிறான்** - (1இராஜா 2:13-25)

1இராஜா 1:41 அதோனியாவும் அவனோடிருந்த எல்லா விருந்தாளிகளும் போஜனம் பண்ணி முடித்தபோது அதைக் கேட்டார்கள்; யோவாப் எக்காள சத்தத்தைக் கேட்டபோது, நகரத்தில் உண்டாயிருக்கிற ஆரவாரம் என்ன என்று விசாரித்தான்.

1இராஜா 1:42 அவன் பேசிக் கொண்டிருக்கையில், ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான் வந்தான்; அப்பொழுது அதோனியா, உள்ளே வா, நீ கெட்டிக்காரன், நீ நற்செய்தி கொண்டுவருகிறவன் என்றான்.

1இராஜா 1:43 யோனத்தான் அதோனியாவுக்குப் பிரதியுத்தரமாக: ஏது, தாவீதுராஜாவாகிய நம்முடைய ஆண்டவன் சாலொமோனை ராஜாவாக்கினாரே.

1இராஜா 1:44 ராஜா ஆசாரியனாகிய சாதோக்கையும், தீர்க்கதரிசியாகிய நாத்தனையும், யோய்தாவின் குமாரன் பெனாயாவையும், கிரேத்தியரையும் பிலேத்தியரையும் அவனோடே அனுப்பினார்; அவர்கள் அவனை ராஜாவுடைய கோவேறு கழுதையின்மேல் ஏற்றினார்கள்.

1இராஜா 1:45 ஆசாரியனாகிய சாதோக்கும், தீர்க்கதரிசியாகிய நாத்தனும், அவனைக் கீகோனிலே ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்; நகரமெல்லாம் முழங்கத்தக்கதாக அங்கேயிருந்து பூரிப்போடே புறப்பட்டுப் போனார்கள்; நீங்கள் கேட்ட இரைச்சல் அதுதான்.

1இராஜா 1:46 அல்லாமலும் சாலொமோன் ராஜாங்கத்துக்குரிய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறான்.

1இராஜா 1:47 ராஜாவின் ஊழியக்காரரும் தாவீது ராஜாவாகிய நம்முடைய ஆண்டவனை வாழ்த்துதல் செய்யவந்து: தேவன் சாலொமோனின் நாமத்தை உம்முடைய நாமத்தைப் பார்க்கிலும் பிரபலப்படுத்தி, அவருடைய சிங்காசனத்தை உம்முடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் பெரிதாக்குவாராக என்றார்கள்; ராஜா தம்முடைய கட்டிலின்மேல் குனிந்து பணிந்துகொண்டார்.

1இராஜா 1:48 பின்னும் ராஜா: என்னுடைய கண்கள் காண இன்றையதினம் என் சிங்காசனத்தின்மேல் ஒருவனை வீற்றிருக்கச் செய்த இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார் என்றான்.

1இராஜா 1:49 அப்பொழுது அதோனியாவின் விருந்தாளிகளெல்லாரும் அதிர்ந்து எழுந்திருந்து, அவரவர் தங்கள் வழியே போய்விட்டார்கள்.

1இராஜா 1:50 அதோனியா, சாலொமோனுக்குப் பயந்ததினால் எழுந்து போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 1 அதிகாரம்

1இராஜா 1:51 இதோ, அதோனியா ராஜாவாகிய சாலொமோனுக்குப் பயப்படுகிறான் என்றும், இதோ, அவன் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு, ராஜாவாகிய சாலொமோன் தமது அடியானைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று இன்று எனக்கு ஆணையிடுவாராக என்கிறான் என்றும், சாலொமோனுக்கு அறிவிக்கப் பட்டது.

1இராஜா 1:52 அப்பொழுது சாலொமோன்: அவன் யோக்கியன் என்று விளங்க நடந்துகொண்டால் அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே விழப்போகிறதில்லை; அவனிடத்தில் பொல்லாப்புக் காணப் படுமேயாகில், அவன் சாகவேண்டும் என்றான்.

1இராஜா 1:53 அவனைப் பலிபீடத்திலிருந்து கொண்டுவர, ராஜாவாகிய சாலொமோன் ஆட்களை அனுப்பினான்; அவன்வந்து, ராஜாவாகிய சாலொமோனை வணங்கினான்; சாலொமோன் அவனைப் பார்த்து: உன் வீட்டிற்குப் போ என்றான்.

"அதோனியாவும் அவனோடிருந்த எல்லா விருந்தாளிகளும்" - சாலொமோன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறான். அதோனியாவோ தான் ராஜாவானேன் என்று சொல்லி, விருந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறான். சாலொமோன் ராஜாவான செய்தி, அதோனியோ, யோவாப் மேலும் அவனோடு விருந்தில் பங்குபெற்ற அனைவருக்கும் மிகுந்த அதிர்ச்சியாக இருக்கிறது. அதோனியா ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுவான் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் எருசலேமில் சாலொமோன் அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறான். எக்காளசத்தம் கேட்கிறது. நகரத்தில் ஆரவாரம் உண்டாயிருக்கிறது. இவையெல்லாமே சாலொமோன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதின் நிமித்தம் நடைபெறுகிறது.

"ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரன் யோனத்தான்" - அதோனியாவை ராஜாவாக ஆக்க வேண்டுமென்று யோனத்தான் திட்டம் பண்ணினான். தாவீது ஏற்கெனவே சாலொமோனை ராஜாவாக்கியிருக்கிறான். சாலொமோன் ராஜாவானதையும், ராஜாவுடைய கோவேறுகழுதையின்மேல் சாலொமோன் ஏறி வந்ததையும் ராஜாவின் சிங்காசனத்தில் சாலொமோன் அமர்ந்திருப்பதையும் யோனத்தான் அதோனியாவுக்கு எடுத்துரைக்கிறான். (1இராஜா 1:42-45). யோனத்தான் தாவீதின் நம்பிக்கைக்குரிய சேவகனாக இருந்தவன். (2சாமு 15:36; 2சாமு 17:17)

"அவருடைய சிங்காசனத்தை உம்முடைய சிங்காசனத்தைப் பார்க்கிலும் பெரிதாக்குவாராக" - ராஜாவின் ஊழியக்காரர் தாவீதுக்கு முன்பாக வந்து, தாவீதையும், சாலொமோனையும் வாழ்த்துகிறார்கள். தாவீதின் சிங்காசனத்தைவிட சாலொமோனின் சிங்காசனத்தைக் கர்த்தர் பெரிதாக்குவாராக என்று வாழ்த்துகிறார்கள். இது தாவீதுக்கு பொறாமைப்படக்கூடிய செய்தியல்ல. நல்ல செய்திதான். ஆகையினால் தாவீது ராஜா தம்முடைய கட்டிலின்மேல் குனிந்து பணிந்து கொண்டார். தன்னுடைய ஊழியக்காரரின் வாழ்த்துதல் செய்தி தாவீதுக்குப் பிரியமாக இருக்கிறது. இதற்காகத் தாவீது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறார். (1இராஜா 1:48).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 1 அதிகாரம்

"அதோனியாவின் விருந்தாளிகளெல்லாரும் அதிர்ந்து எழுந்திருந்து" - அதோனியாவின் விருந்தாளிகளுக்கு சாலொமோன் ராஜாவான செய்தி மிகப்பெரிய அதிர்ச்சியாயிற்று. விருந்தாளிகளெல்லாரும் அதிர்ந்து எழுந்திருந்து, அவரவர் தங்கள் வழியே போய்விட்டார்கள். அதோனியாவோடு சேர்ந்து கொண்டதினால் தங்களுடைய உயிருக்கு புதிய ராஜாவினால் ஆபத்து வருமோ என்று பயப்படுகிறார்கள். அதோனியாவும், சாலொமோனுக்குப் பயந்ததினால் எழுந்துபோய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான். (1இராஜா1:50-51). மோசேயின் பிரமாணத்தில் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொள்வதைப் பற்றி விவரமாகக் கூறப்படாவிட்டாலும், அக்காலத்தில் இந்தப் பழக்கம் நிலவி வந்தது. (யாத் 21:14) பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டாலும், சில குற்றங்களுக்குதண்டனைகொடுக்கப்படலாம். (1இராஜா 2:28) அடைக்கலப் பட்டணங்களும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதற்காக நியமிக்கப் பட்டிருக்கிறது. (எண் 35:15-32).

"அவன் யோக்கியன் என்று விளங்க நடந்துகொண்டால்" - அதோனியா தன்னை யோக்கியன் என்று விளங்க நடந்துகொள்ள வேண்டும். இல்லையெனில், சாலொமோன் அவனைக் கொன்றுபோடுவான். சாலொமோன் அதோனியாவைப் பலிபீடத்திலிருந்து கொண்டுவர ஆட்களை அனுப்பினான். சாலொமோன் தன்னுடைய இரக்கக் குணத்தினால் அவனைக் கொன்றுபோடாமல் அதோனியாவை அவனுடைய வீட்டிற்கு அனுப்பினான். (1இராஜா 1:53).

## 2 அதிகாரம்

**9. சாலொமோனுக்குத் தாவீது கொடுத்த கட்டளை** - (1நாளா 22:6; 28:9,20)

1இராஜா 2:1 தாவீது மரணமடையும் காலம் சமீபித்தபோது, அவன் தன் குமாரனாகிய சாலொமோனுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது:

1இராஜா 2:2 நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்; நீ திடன் கொண்டு புருஷனாயிரு.

1இராஜா 2:3 நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப் படுத்துகிறதற்கும்,

1இராஜா 2:4 மோசேயின் நியாயப் பிரமாணத்தில் எழுதியிருக்கும்படி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் நியாயங்களையும் சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக.

1இராஜா 2:5 செருயாவின் குமாரனாகிய யோவாப், இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும், ஏத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் செய்த காரியத்தினால் எனக்குச் செய்த குற்றத்தை நீ அறிந்திருக்கிறாயே; அவன் அவர்களைக் கொன்று, சமாதான காலத்திலே யுத்த காலத்து இரத்தத்தைச் சிந்தி, யுத்த காலத்து இரத்தத்தைத் தன் அரையிலுள்ள கச்சையிலும் தன் கால்களில் இருந்த பாதரட்சையிலும் வடியவிட்டானே.

1இராஜா 2:6 ஆகையால் உன் யுக்தியின்படியே நீ செய்து, அவனுடைய நரைமயிர் சமாதானமாய்ப் பாதாளத்தில் இறங்கவொட்டாதிரு.

1இராஜா 2:7 கீலேயாத்தியனான பர்சிலாயின் குமாரருக்குத் தயை செய்வாயாக; அவர்கள் உன் பந்தியிலே சாப்பிடுகிறவர்களுடன் இருப்பார்களாக; உன் சகோதரனாகிய அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில், அவர்கள் என்னை ஆதரித்தார்கள்.

1இராஜா 2:8 மேலும் பகூரிம் ஊரானான பென்யமீனனாகிய கேராவின் மகன் சீமேயி உன்னிடத்தில் இருக்கிறான்; நான் மக்னாயீமுக்குப் போகிற நாளிலே, அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷித்தான்; ஆனாலும் அவன் யோர்தானிலே எனக்கு எதிர்கொண்டு வந்தபடியினால்: நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தர்மேல் அவனுக்கு ஆணையிட்டுக்கொடுத்தேன்.

1இராஜா 2:9 ஆகிலும் நீ அவனைக் குற்றமற்றவன் என்று எண்ணாதே; நீ புத்திமான்; அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் இறங்கப் பண்ண, நீ அவனுக்குச் செய்ய வேண்டியதை அறிவாய் என்றான்.

"தாவீது மரணமடையும் காலம் சமீபித்த போது" - சாலொமோனை ராஜாவாக ஆக்கின பின்பு தாவீது எத்தனை வருஷம் உயிரோடு இருந்தார் என்பது தெரியவில்லை. இப்போது அவர் மரணமடையும் காலம் சமீபித்து விட்டது. சாலொமோனுக்குத் தன்னுடைய கடைசி கட்டளையைத் தாவீது கூறுகிறார். (1இராஜா 2:1-9; யோசு 1:6-9).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 2 அதிகாரம்

### தாவீது சாலொமோனுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது

1. நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்; நீ திடன்கொண்டு புருஷனாயிரு. (1இராஜா 2:2).

2. கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்.

    (1) அவருடைய வழிகளில் நட (1இராஜா 2:3)

    (2) அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்.

    (3) அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்.

    (4) அவருடைய நியாயங்களைக் கைக்கொள்.

    (5) அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்.

3. செருயாவின் குமாரனாகிய யோவாப், இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும், ஏத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் செய்த காரியத்தினால் எனக்குச் செய்த குற்றத்தை நீ அறிந்திருக்கிறாயே. ஆகையால் உன் யுக்தியின்படியே நீ செய்து, அவனுடைய நரைமயிர் சமாதானமாய்ப் பாதாளத்தில் இறங்கவொட்டாதிரு. (1இராஜா 2:5-6).

4. கீலேயாத்தியனான பர்சிலாயின் குமாரருக்குத் தயைசெய்வாயாக; அவர்கள் உன் பந்தியிலே சாப்பிடுகிறவர்களுடன் இருப்பார்களாக; உன் சகோதரனாகிய அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில், அவர்கள் என்னை ஆதரித்தார்கள். (1இராஜா 2:7).

5. பகூரிம் ஊரானான பென்யமீனனாகிய கேராவின் மகன் சீமேயி உன்னிடத்தில் இருக்கிறான்; நான் மக்னாயீமுக்குப் போகிற நாளிலே, அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷித்தான்; ஆனாலும் அவன் யோர்தானிலே எனக்கு எதிர்கொண்டு வந்தபடியினால்: நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தர்மேல் அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்தேன். ஆகிலும் நீ அவனைக் குற்றமற்றவன் என்று எண்ணாதே; நீ புத்திமான்; அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் இறங்கப்பண்ண, நீ அவனுக்குச் செய்ய வேண்டியதை அறிவாய் (1இராஜா 2:8-9).

### கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்வதினால் ஏற்படும் ஆசீர்வாதங்கள்

1. நீ என்ன செய்தாலும் நன்மை உண்டாகும்.

2. நீ எங்கே போனாலும் நன்மை உண்டாகும்.

3. தேவனுடைய வாக்குத்தத்தம் உனக்கு நிறைவேறும்.

### தீர்க்கதரிசன எண் - 1

"உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும் படிக்குத் தங்கள் வழியைக் காத்துக் கொண்டால்...." (1இராஜா 2:3) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டுமானால், கர்த்தர் கூறியிருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தாவீதின் வம்சத்தார் பாவம் செய்தால் அவர்கள் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் நிலைத்திருக்க மாட்டார்கள். தாவீதின் வித்தாகிய மேசியா கர்த்தருக்குப் பூரணமாகக் கீழ்ப்படிந்து, தாவீதின் சிங்காசனத்தையும், அவருடைய ராஜரீகத்தையும் இந்தப் பூமியில் மறுபடியும் ஸ்தாபிப்பார். (1இராஜா 2:4; ஏசா 9:6-7; மத் 25:31-46; லூக்கா 1:32-33; அப் 15:13-18; வெளி 11:15; வெளி 20:1-10).

## 2 அதிகாரம்

"தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கும்" - கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுவார் என்பது தாவீதுக்குத் தெரியும். கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு விரோதமாகப் பாவம் செய்தால், கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்க முடியாது. இஸ்ரவேல் தேசம் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக உள்ளது. கர்த்தர் அவர்களுக்கு பல வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். ஆனால் அவர்களோ கர்த்தருக்குக் கீழ்ப்படியாமற்போனார்கள். இதனால் கர்த்தர் அவர்களுடைய ஜீவியத்தில் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவில்லை. கிருபையின் காலத்தில் ஜீவிக்கும் நமக்கும் இது ஓர் எச்சரிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 23:37-39; ரோமர் 11).

"தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும்" - இதுவே இயேசு கிறிஸ்துவின் பிரதான கற்பனையாகவும் உள்ளது. (மத் 22:37).

**ஆசீர்வாதத்தின் நிபந்தனைகள்**

கர்த்தர் தாவீதின் வீட்டாரைத் தம்முடைய நிபந்தனையின் பிரகாரம் ஆசீர்வதித்தார். அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது ஆசீர்வாதத்தையும், அவருக்குக் கீழ்ப்படியாமல் கலகம் பண்ணியபோது சாபத்தையும் அனுபவித்தார்கள். தாவீதும் பாவம் செய்து அதற்குரிய தண்டனையை அனுபவித்தான். (2சாமு 11-18).

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த வரையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான். அவன் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்தபோதோ அவன்மீதும், அவன் ராஜ்யத்தின்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. (1இராஜா 11:1-40).

இஸ்ரவேலின் மூன்றாவது ராஜாவாக ரெகொபெயாம் ராஜா ஆனான். இவன் சாலொமோனின் குமாரன். இவனுடைய காலத்தில் இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்தது. பத்துக் கோத்திரத்தாரின்மீது இவன் தன்னுடைய ஆளுகையை ஒரே நாளில் இழந்தான். இதற்கு இவனுடைய பாவமும், பெருமையுமே காரணம். (1இராஜா 12:1-24).

தாவீதுக்குப் பின்பு 433 வருஷக்காலத்தில் இஸ்ரவேல் ராஜாக்களுக்கு இதுபோலவே சம்பவித்தது. ஒவ்வொரு ராஜாவாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் அழிக்கப்பட்டார்கள். இறுதியாக இஸ்ரவேல் தேசமே அழிக்கப்பட்டது. (2இராஜா 23-25). இஸ்ரவேல் தேசம் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் தொடர்ந்து பாவம் செய்ததினால் கிபி 70 ஆம் ஆண்டில் இஸ்ரவேல் தேசம் மறுபடியும் அழிக்கப்பட்டது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராகச் செய்த பாவங்களுக்காக மனப்பூர்வமாக மனந்திருந்தி, கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக் கொண்டால், அவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள். (சக 12:10-13:1; மத் 23:37-39; அப் 15:13-18; ரோமர் 11:25-29).

"இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகள்" - (2சாமு 3:27-39; 2சாமு 20:4-12; 1நாளா 2:17)

**மூன்றுபேரைப் பற்றி தாவீது சாலொமோனுக்குக் கூறிய கட்டளை**

1. யோவாப் - தாவீதின் படைத்தளபதி. தாவீது இவனைத் தண்டிக்கவில்லை. தாவீதின் பாவத்தில் யோவாப் அவனுக்கு உதவி புரிந்திருக்கிறான். உரியாவைக் கொன்றுபோடும் சதித்திட்டத்தை யோவாப் நிறைவேற்றினான். அப்னேர், அமாசா ஆகிய இருவரையும் யோவாப் கொன்றுபோட்டான். இவர்கள் இருவரும் தனக்குப் போட்டியாக வருவார்களோ என்று நினைத்து, குற்றமில்லாத அவர்கள் இருவரையும் யோவாப் கொன்று போட்டான். (2சாமு 3:27-39; 2சாமு 20:4-12). யோவாபின் இந்தப் பாவங்களுக்காகச் சாலொமோன் அவனைத் தண்டிக்க வேண்டும். (1இராஜா 2:5-6).

## 2 அதிகாரம்

2. பர்சிலா - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடிய போது, பர்சில்லா அவனுக்குத் தயவு செய்தான். அவன் செய்த நன்மைக்காக சாலொமோன் அவனுடைய குமாரருக்கு நன்மை செய்ய வேண்டும். (1இராஜா 2:7).

3. சீமேயி - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பித்துப் போனபோது, சீமேயி அவனைத் தூஷித்தான். இதற்காக தாவீது அவனை மன்னித்து, அவனைத் தப்ப விட்டிருந்தாலும், சாலொமோன் அவனைத் தண்டிக்க வேண்டும். (1இராஜா 2:8-9).

"அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில்" - (2சாமு 17:27-29; 2சாமு 19:31-32)

"நான் மக்னாயீமுக்குப் போகிற நாளிலே, அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷித்தான்" - (2சாமு 16:5-14; 2சாமு 19:18-23)

**10. தாவீதின் மரணம்** - (1நாளா 29:26)

1இராஜா 2:10 பின்பு தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணப்பட்டான்.

1இராஜா 2:11 தாவீது இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்; அவன் எப்ரோனில் ஏழு வருஷமும், எருசலேமில் முப்பத்துமூன்று வருஷமும் அரசாண்டான்.

"தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப் பட்டான்" - பொதுவாக மரித்தவர்களைப் பட்டணங்களுக்குப் புறம்பே அடக்கம் பண்ணுவது வழக்கம். இங்கு தாவீது நகரத்தில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறான். இது இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதுக்குக் கொடுத்திருக்கும் விசேஷித்த மரியாதையை வெளிப்படுத்துகிறது. அவனை அடக்கம் பண்ணிய நகரத்திற்கும், அவனுடைய பெயரையே கொடுத்து அதை "தாவீதின் நகரம்" என்று அழைத்தார்கள். தாவீதின் வம்சத்தில் வந்த மற்ற ராஜாக்களையும் இந்த நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள். (1இராஜா 11:43; 2நாளா 32:33). மேலும் சிலரையும் நகரத்தில் அடக்கம் பண்ணினாலும் வெவ்வேறு இடங்களில் அடக்கம் பண்ணியிருக்கிறார்கள். (2இராஜா 21:18,26). தாவீதின் கல்லறையை அப்போஸ்தலருடைய காலங்களில் அறிந்து வைத்திருந்தார்கள். (அப் 2:29).

**II. சாலொமோனின் ஆட்சிக் காலம் - நாற்பது வருஷ அரசாட்சி -** (2:12-11:43; 2நாளா 1:1-9:31)

**1. சாலொமோனின் ராஜ்யபாரம் ஸ்திரப்படுகிறது**

1இராஜா 2:12 சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான்; அவன் ராஜ்யபாரம் மிகவும் ஸ்திரப்பட்டது.

**2. அதோனியாவின் மரணம்** - (1:5-10)

1இராஜா 2:13 ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடத்தில் வந்தான். நீ சமாதானமாய் வருகிறாயா என்று அவள் கேட்டதற்கு: சமாதானமாய்த்தான் வருகிறேன் என்றான்.

1இராஜா 2:14 பின்பு அவன்: உம்மோடே நான் பேசவேண்டிய ஒரு காரியம் இருக்கிறது என்றான். அதற்கு அவள்: சொல் என்றாள்.

1இராஜா 2:15 அப்பொழுது அவன்: ராஜ்யம் என்னுடையதாயிருந்தது என்றும், நான் அரசாளுகிறதற்கு இஸ்ரவேலரெல்லாரும் என்மேல் நோக்கமாய் இருந்தார்கள் என்றும் நீர் அறிவீர்; ஆனாலும் ராஜ்யபாரம் என்னைவிட்டுத் தாண்டி, என் சகோதரனுக்கு ஆயிற்று; கர்த்தரால் அது அவருக்குக் கிடைத்தது.

1இராஜா 2:16 இப்பொழுது நான் உம்மிடத்தில் ஒரு மன்றாட்டைக் கேட்கிறேன்; அதை எனக்கு மறுக்கவேண்டாம் என்றான். அவள்: சொல் என்றாள்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 2 அதிகாரம்

1இராஜா 2:17 அப்பொழுது அவன்: ராஜாவாகிய சாலொமோன் உம்முடைய சொல்லை மறுப்பதில்லை; சூனேம் ஊராளாகிய அபிஷாகை எனக்கு அவர் விவாகம்பண்ணிக் கொடுக்க, அவரோடே பேசும்படி வேண்டுகிறேன் என்றான்.

1இராஜா 2:18 அதற்கு பத்சேபாள்: நல்லது, நான் உனக்காக ராஜாவிடத்தில் பேசுவேன் என்றாள்.

1இராஜா 2:19 பத்சேபாள் அதோனியாவுக்காக ராஜாவாகிய சாலொமோனிடத்தில் பேசும்படி போனாள்; அப்பொழுது ராஜா எழுந்திருந்து, அவளுக்கு எதிர்கொண்டு வந்து அவளை வணங்கி, தன் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, ராஜாவின் தாயார் தன் வலதுபுறமாக உட்கார, அவளுக்கு ஒரு ஆசனத்தை வைத்தான்.

1இராஜா 2:20 அப்பொழுது அவள்: நான் உம்மை ஒரு சிறிய மன்றாட்டைக் கேட்க விரும்புகிறேன்; எனக்கு அதை மறுக்க வேண்டாம் என்றாள். அதற்கு ராஜா: என் தாயாரே, கேளும்; நான் உமக்கு மறுப்பதில்லை என்றான்.

1இராஜா 2:21 அப்பொழுது அவள்: சூனேம் ஊராளாகிய அபிஷாகை உம்முடைய சகோதரனாகிய அதோனியாவுக்கு விவாகம்பண்ணிக் கொடுக்கவேண்டும் என்றாள்.

1இராஜா 2:22 ராஜாவாகிய சாலொமோன் தன் தாயாருக்குப் பிரதியுத்தரமாக: நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதோனியாவுக்குக் கேட்பானேன்? அப்படியானால் ராஜ்யபாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும் என்றான்.

1இராஜா 2:23 பின்பு சாலொமோன் ராஜா: அதோனியா இந்த வார்த்தையைத் தன் பிராணனுக்குச் சேதமாகச் சொல்லாதிருந்தால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று கர்த்தர்மேல் ஆணையிட்டு,

1இராஜா 2:24 இப்போதும் இன்றைக்கு அதோனியா கொலையுண்பான் என்று என்னைத் திடப்படுத்தினவரும், என்னை என் தகப்பனாகிய தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப்பண்ணி, தாம் சொன்னபடி எனக்கு வீட்டைக் கட்டுவித்தவருமாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று சொல்லி,

1இராஜா 2:25 ராஜாவாகிய சாலொமோன் யோய்தாவின் குமாரன் பெனாயாவுக்குக் கட்டளைகொடுத்து அவனை அனுப்பினான்; இவன் அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான்.

"ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா" - தாவீதின் குமாரனாகிய அதோனியாவைப் பற்றி இங்கு மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. சாலொமோன் இவனைக் கொன்றுபோடாமல், மன்னித்து அனுப்பிவிட்டான். இப்பொழுது மறுபடியும் ராஜாங்க விவகாரத்தில் தலையிடுகிறான். சூனேம் ஊராளாகிய அபிஷாகைத் தனக்கு விவாகம் பண்ணிக் கொடுப்பதைப் பற்றிச் சாலொமோனிடம் பேசுமாறு பத்சேபாளிடம் கேட்கிறான். பத்சேபாளும் சாலொமோனிடத்தில் அதோனியாவின் விருப்பத்தை அறிவிக்கிறாள். (1இராஜா 2:13-18). இதனால் கோபமடைந்த சாலொமோன் அதோனியாவைக் கொன்று போடுகிறான். (1இராஜா 2:19-25).

"கர்த்தரால் அது அவருக்குக் கிடைத்தது" - நான் அரசாளுகிறதற்கு இஸ்ரவேலரெல்லாரும் என்மேல் நோக்கமாய் இருந்தார்கள் என்று அதோனியா தன்னைப் பற்றி பத்சேபாளிடம் கூறுகிறான். ஆனால் சாலொமோன் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ராஜாவாகி விட்டான் என்று கூறுகிறான். ஜனங்கள் தன்னை விரும்புகிறார்கள். கர்த்தர் சாலொமோனை விரும்புகிறார் என்பது அதோனியாவின் குற்றச்சாட்டு.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 2 அதிகாரம்

"சாலொமோன் உம்முடைய சொல்லை மறுப்பதில்லை" - சாலொமோன் தன் தாயாராகிய பத்சேபாளின் சொல்லை மதிக்கிறவன். ஆனால் அதோனியாவின் வேண்டுகோள் விபரீதமானது. அவன் தன் தகப்பனுடைய மனைவியையே கேட்கிறான். அதோனியாவின் விண்ணப்பம் தாவீதுக்கு விரோதமாகச் செய்யும் மிகப்பெரிய துரோகமாகக் கருதி, சாலொமோன் அதோனியாவைக் கொன்றுபோடுகிறான் (1இராஜா 2:23-25). அக்காலத்தில் ராஜாக்களின் மனைவிகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் விதவைகளாகவே இருக்க வேண்டும். அல்லது அந்த ராஜாக்களுக்கு அடுத்து, சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ராஜாவுக்கு மனைவியாகலாம். *(2சாமு 12:8; 2சாமு 16:22).*

**அதோனியாவின் பாவமான விண்ணப்பம்**

சாலொமோன் ராஜாவாக இருக்கிறான். ஜனங்கள் அதோனியாவையும் விரும்புகிறார்கள். தாவீதின் விதவையான அபிஷாக்கை விவாகம் பண்ணினால் தானும் ராஜாவின் அந்தஸ்துக்கு வந்துவிடலாம் என்பது அதோனியாவின் திட்டம். அதோனியாவின் திட்டம் சாலொமோனுக்கும் மறைவாக இல்லை. அபியத்தாரும் யோவாபும் அதோனியாவுக்கு இந்த ஆலோசனையைக் கூறியிருந்திருக்கலாம். இஸ்ரவேலில் தன்னுடைய சிங்காசனத்திற்கு எதிராக ஒரு புதிய கலகம் ஆரம்பமாவதைச் சாலொமோன் காண்கிறான். அதை ஆரம்பத்திலேயே அழித்துப்போட வேண்டுமென்பதற்காகச் சாலொமோன் அதோனியாவைக் கொன்றுபோட்டான். இந்தச் சதித்திட்டத்தைப் புரிந்து கொண்டதினால் சாலொமோன் பத்சேபாளிடம் "நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதோனியாவுக்குக் கேட்பானேன்? அப்படியானால் ராஜ்ய பாரத்தையும் அவனுக்குக் கேளும்; அவன் எனக்கு மூத்த சகோதரன்; அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும்" என்றான். *(1இராஜா 2:22).*

அக்காலத்தின் வழக்கத்தின்படி அதோனியாவின் விண்ணப்பம் பாவமானது. ராஜாவின் சொத்துக்கள் எல்லாம் அந்தத் தேசத்தில் புனிதமாகவே கருதப்பட்டது. ராஜாவுக்குஉரியதெல்லாம் வேறுபிரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டது. தாவீதின் விதவைகளில் ஒருத்தியை அதோனியா தனக்குக் கேட்டது, சாலொமோனின் மனைவிகளில் ஒருத்தியை அவன் தனக்குக் கேட்பதற்குச் சமம். இதனால் கோபமடைந்த சாலொமோன் அதோனியாவைக் கொன்றுபோடுமாறு பெனாயாவிற்குக் கட்டளையிட்டான். ஆசாரியனாகியஅபியத்தாரும் மரணத்திற்கும் பாத்திரவான். ஆனாலும் அவன் தாவீதுக்கு முன்பாக கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியைச் சுமந்தவன். தாவீது அநுபவித்த உபத்திரவத்தையெல்லாம் அபியத்தார்கூட அநுபவித்தான். ஆகையினால் சாலொமோன் அவனை "இன்றைய தினம் நான் உன்னைக் கொலைசெய்யமாட்டேன்" என்று கூறி, "நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு" என்று அனுப்பிவிடுகிறான். *(1இராஜா 2:26-27).* அபியத்தாரைத் தப்ப விட்டாலும், ஆசாரிய ஊழியம் அவனிடமிருந்து பறிக்கப்படுகிறது. இந்தச் சதியில் பங்குபெற்றிருந்த யோவாபைச் சாலொமோன் கொன்றுபோட்டான். *(1இராஜா 2:28-34).*

சாலொமோனிடமிருந்து ராஜ்யத்தைப் பறிப்பதற்கு அதோனியா செய்த சதியில் அபியத்தாருக்கும், யோவாபிற்கும் பங்குள்ளது. ஆகையினால், அவர்கள் இருவருமே நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். சாலொமோனுக்கு 20 வயதே ஆயிற்று. அவனை எளிதாக ஏமாற்றி விடலாம் என்று இவர்கள் நினைத்தார்கள். ஆனால் சாலொமோன் கர்த்தரிடமிருந்து ஞானத்தைப் பெற்றிருக்கிறான்.கர்த்தருடைய ஞானத்திற்கு முன்பாக இவர்களுடைய சதித்திட்டம் வெற்றி பெறவில்லை. *(1இராஜா 2:22)*

"ராஜாவின் தாயார் தன் வலதுபுறமாக உட்கார" - ராஜாவின் தாயாருக்கு அரசாங்கத்தில் உயர்ந்த அந்தஸ்தும், உயர்ந்த ஸ்தானமும் கொடுக்கப்படுவது வழக்கம். *(1இராஜா 15:13; 2இராஜா 11:1-3).*

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 2 அதிகாரம்

"நான் உமக்கு மறுப்பதில்லை" - பத்சேபாள் தன்னுடைய விண்ணப்பத்தை இன்னும் முழுமையாக வெளிப்படுத்தவில்லை. ஆகையினால் அதை மறுக்காமல் நிறைவேற்றுவதாக சாலொமோன் வாக்குப் பண்ணுகிறான். ஆனால் அந்த விண்ணப்பத்தின் விபரீதம் தெரிந்தவுடன், சாலொமோன் தன் தாயாருக்கு எதிர்த்துப் பேசுகிறான். அவளுடைய விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டான்.

**சூனேம் ஊர் ஸ்திரீகள்**

1. தாவீதின் மனைவி (1இராஜா 1:3,15; 1இராஜா 2:17-22)
2. எலிசா ஆசீர்வதித்த ஸ்திரீ (2இராஜா 4:12-36)
3. சாலொமோன் தன்னுடைய ராணியாகிய ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பிய கன்னிப்பெண் (உன் 6:13)

"கர்த்தர்மேல் ஆணையிட்டு" - அதோனியாவின் விண்ணப்பத்திற்குப் பின்னால் இருக்கும் ஆபத்தைச் சாலொமோன் உடனடியாகப் புரிந்து கொண்டான். ஆகையினால், சாலொமோன் விரைந்து நடவடிக்கை எடுக்கிறான். தன்னையும், தன் ராஜ்யத்தையும் சதிகாரர்களின் கைகளிலிருந்து மீட்பதற்காகச் சாலொமோன் கர்த்தர்மேல் ஆணையிட்டான். (1இராஜா 2:23-36).

"என்னைத் திடப்படுத்தினவர்" - சாலொமோனின் ராஜ்யத்தை ஸ்தாபித்தவர். (1இராஜா 2:12) சமஸ்த இஸ்ரவேலரும், சாலொமோனை ராஜாவாக அங்கிகரித்திருக்கிறார்கள். இந்த அங்கிகரிப்பிற்குக் கர்த்தரே காரணம் என்று சாலொமோன் நினைவுகூருகிறான்.

3. **அபியத்தார் ஆசாரிய ஊழியத்திலிருந்து விலக்கப் படுகிறான்** - (1சாமு 2:31-36; 1சாமு 4:11)

1இராஜா 2:26 ராஜா: ஆசாரியனாகிய அபியத்தாரை நோக்கி: நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு; நீ மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தும், நீ என் தகப்பனாகிய தாவீதுக்கு முன்பாகக் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியைச் சுமந்தபடியினாலும், என் தகப்பன் அநுபவித்த உபத்திரவத்தையெல்லாம் நீ கூட அநுபவித்தபடியினாலும், இன்றைய தினம் நான் உன்னைக் கொலைசெய்யமாட்டேன் என்றான்.

1இராஜா 2:27 அப்படியே கர்த்தர் சீலோவிலே ஏலியின் வீட்டாரைக் குறித்துச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாக, சாலொமோன் அபியத்தாரைக் கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப் போட்டான்.

"நீ உன் நிலங்கள் இருக்கிற ஆனதோத்திற்குப் போய்விடு" - அபியத்தார் ஆசாரிய ஊழியத்திலிருந்து அகற்றப்படுகிறான். ஏலியின் வீட்டாரில் ஆசாரிய ஊழியம் நித்தியமாக அகற்றப்படும் என்னும் தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. (1இராஜா 2:27; 1சாமு 2:31-36). இத்தாமாரின் வீட்டாரைக் கர்த்தர் புறக்கணிக்கிறார். ஏலி அந்த வீட்டைச் சேர்ந்தவன். (1நாளா 24:3) எலெயாசாரின் வம்சத்தில் பிரதான ஆசாரியரின் ஊழியம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுகிறது.

"ஆனதோத்" (Anathoth) - எரேமியா இந்த ஊரிலிருந்து வந்தவன். (எரே 1:1; யோசு 21:18).

4. **யோவாபின் மரணம்** - (2:5-6)

1இராஜா 2:28 நடந்த இந்தச் செய்தி யோவாபுக்கு வந்தபோது, அவன் கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டான்; யோவாப் அப்சலோமின் பட்சம் சாயாதவனாயிருந்தும் அதோனியாவின் பட்சம் சாய்ந்திருந்தான்.

## 2 அதிகாரம்

1இராஜா 2:29 யோவாப் கர்த்தரின் கூடாரத்திற்கு ஓடிப்போனான் என்றும், இதோ, பலிபீடத்தண்டையில் நிற்கிறான் என்றும், ராஜாவாகிய சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்ட போது, சாலொமோன் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவை அனுப்பி, நீ போய் அவன்மேல் விழு என்றான்.

1இராஜா 2:30 பெனாயா கர்த்தரின் கூடாரத்திற்குப் போய், அவனைப் பார்த்து: வெளியே வா என்று ராஜா சொல்லுகிறார் என்றான். அதற்கு அவன்: நான் வரமாட்டேன்; இங்கேயே சாவேன் என்றான்; ஆகையால் பெனாயா ராஜாவினிடத்தில் போய், யோவாப் இன்னபடி சொல்லி, இன்னபடி எனக்கு மறுஉத்தரவு கொடுத்தான் என்று மறுசெய்தி சொன்னான்.

1இராஜா 2:31 அப்பொழுது ராஜா அவனை நோக்கி: அவன் சொன்னபடியே நீ செய்து, அவனைக் கொன்று, அடக்கம்பண்ணி, இவ்விதமாய் யோவாப் முகாந்தரமில்லாமல் சிந்தின இரத்தத்தை என்னைவிட்டும் என் பிதாவின் வீட்டைவிட்டும் விலக்கிப்போடு.

1இராஜா 2:32 அவன் தன்னைப் பார்க்கிலும் நீதியும் நற்குணமுமுள்ள இரண்டுபேராகிய நேரின் குமாரன் அப்னேர் என்னும் இஸ்ரவேலின் படைத்தலைவன்மேலும், ஏதேரின் குமாரன் அமாசா என்னும் யூதாவின் படைத்தலைவன்மேலும் விழுந்து, என் தகப்பனாகிய தாவீதுக்குத் தெரியாமல் அவர்களைப் பட்டயத்தால் கொன்ற அவனுடைய இரத்தப்பழியைக் கர்த்தர் அவனுடைய தலையின்மேல் திரும்பப் பண்ணுவாராக.

1இராஜா 2:33 இப்படியே அவர்களுடைய இரத்தப்பழி என்றும் யோவாபுடைய தலையின் மேலும், அவன் சந்ததியாரின் தலையின்மேலும் திரும்பவும், தாவீதுக்கும் அவர் சந்ததியாருக்கும் அவர் வீட்டாருக்கும் அவர் சிங்காசனத்திற்கும் என்றென்றைக்கும் கர்த்தராலே சமாதானம் உண்டாயிருக்கவும்கடவது என்றான்.

1இராஜா 2:34 அப்படியே யோய்தாவின் குமாரன் பெனாயா போய், அவன்மேல் விழுந்து அவனைக் கொன்றுபோட்டான்; அவன் வனாந்தரத்திலிருக்கிற தன்னுடைய வீட்டிலே அடக்கம்பண்ணப் பட்டான்.

"இந்தச் செய்தி யோவாபுக்கு வந்தபோது" - சாலொமோன் அபியத்தாரைக் கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப்போட்டான் என்னும் செய்தி யோவாபுக்குத் தெரிய வருகிறது. அடுத்தது தனக்குத் தண்டனை கிடைக்கும் என்று யோவாப் எதிர்பார்த்து பயப்படுகிறான். ஆகையினால் யோவாப் கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான். அதோனியாவும் சாலொமோன் ராஜாவானவுடன் இதுபோல பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டவன்தான். சாலொமோன் அப்போது அதோனியாவைத் தப்பவிட்டான். (1இராஜா 1:50). ஆனால் இப்போதோ சாலொமோன் பலிபீடத்தின் கொம்பைப் பிடித்துக் கொண்டிருக்கும் யோவாபைத் தப்பவிட வில்லை. சாலொமோன் பெனாயாவை அனுப்பி, யோவாபைக் கொன்றுபோட்டான். (1இராஜா 2:29-31).

"பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டான்" - (1இராஜா 1:49)

## 2 அதிகாரம்

“இங்கேயே சாவேன்” - வேதாகம வரலாற்றில் ஒருசில நபர்களுக்கு மரணம் வரும்போது அவர்கள் எந்தவித எதிர்ப்பும் காண்பிக்காமல் மரித்துப்போவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். தங்களுடைய ஜீவன் தப்பிக்க யோவாப் ஓடிப்போயிருந்திருக்கலாம். ஆனால் யோவாபோ சாவதற்கு ஆயத்தமாக இருக்கிறான். எங்குதான் தப்பித்துப் போனாலும், ராஜாவின் கையினால் கொல்லப்படுவது நிச்சயம் என்று யோவாப் நினைத்திருக்க வேண்டும். பயந்து, ஓடுவதற்குப் பதிலாக தனக்குச் சாதகமான இடத்தில் மரித்துப்போவது நலம் என்று யோவாப் நினைத்து, தான் பலிபீடத்தின் கொம்புகளுக்கு அருகிலேயே சாகப்போவதாகக் கூறுகிறான்.

“அவன் சொன்னபடியே நீ செய்து, அவனைக் கொன்றுபோடு” - பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்திருக்கிறவனை யாரும் கொல்லக்கூடாது. ஆனால் அவன் கொலைகாரனாக இருந்தால் அவனைக் கொன்றுபோடுவதற்குத் தடை ஒன்றும் இல்லை. தேவனுடைய ஆலயத்தில்கூட அவனைக் கொன்றுபோடுவதற்கு பிரமாணத்தில் இடம் உள்ளது. (1இராஜா 2:31-32).

“நேரின் குமாரன் அப்னேர்” - *(2சாமு 3:27-39; 2சாமு 20:4-12; 1நாளா 2:17)*

**5. புதிய ராணுவத் தலைவனும் புதிய பிரதான ஆசாரியனும்** - *(4:1-6)*

1இராஜா 2:35 அவனுக்குப் பதிலாக ராஜா யோய்தாவின் குமாரன் பெனாயாவை இராணுவத்தின்மேலும், ஆசாரியனாகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்திலும் வைத்தான்.

“யோய்தா” **(Jehoiada)** - இவன் ஒரு ஆசாரியன். லேவியின் கோத்திரத்தில் வருகிறவன் ராணுவத்தின்மேலும் அதிகாரியாகஇருக்கிறான். ஆசாரியனாகவும் இருக்கிறான்.

“சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்திலும் வைத்தான்” - அபியத்தார் பிரதான ஆசாரியனாக இருந்தான். சாதோக்கு அவனுக்கு உதவி ஆசாரியனாக இருந்தான். இங்கு பிரதான ஆசாரியரின் ஊழியம்சாதோக்குக்குக் கொடுக்கப்படுகிறது. மறுபடியும் இத்தாமாரின் வம்சத்திலிருந்து எலெயாசாரின் வம்சத்திற்குப் பிரதான ஆசாரியனின் ஊழியம் மாற்றப்படுகிறது. (1இராஜா 2:35; 1நாளா 4:3) இது 1சாமு 2:27-34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளசெய்தியின் நிறைவேற்றமாகும்.

**6. சீமேயின் மரணம்** - *(வசனங்கள் 8-9; 2சாமு 16:5-13; 19:16-23)*

1இராஜா 2:36 பின்பு ராஜா சீமேயியை அழைப்பித்து, அவனை நோக்கி: நீ எருசலேமிலே உனக்கு ஒரு வீட்டைக் கட்டி, அங்கேயிருந்து எங்கேயாவது வெளியே போகாமல், அங்கேதானே குடியிரு.

1இராஜா 2:37 நீ வெளியே போய்க் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில், நீ சாகவே சாவாய்; அப்பொழுது உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருக்கும் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள் என்றான்.

1இராஜா 2:38 சீமேயி ராஜாவைப் பார்த்து: அது நல்ல வார்த்தை; ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்ன படியே, உமது அடியானாகிய நான் செய்வேன் என்று சொல்லி, சீமேயி அநேகநாள் எருசலேமிலே குடியிருந்தான்.

1இராஜா 2:39 மூன்று வருஷம் சென்றபோது, சீமேயியின் வேலைக்காரர் இரண்டுபேர் மாக்காவின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்துக்கு ஓடிப்போனார்கள்; உன் வேலைக்காரர் காத் ஊரில் இருக்கிறார்கள் என்று சீமேயிக்கு அறிவித்தார்கள்.

1இராஜா 2:40 அப்பொழுது சீமேயி எழுந்து, தன் கழுதையின்மேல் சேணம் வைத்து, தன் வேலைக்காரரைத் தேட, காத் ஊரிலிருக்கிற ஆகீசிடத்துக்குப் புறப்பட்டுப் போனான்; இப்படிச் சீமேயி போய், தன் வேலைக்காரரைக் காத் ஊரிலிருந்து கொண்டுவந்தான்.

## 2 அதிகாரம்

1இராஜா 2:41 சீமேயி எருசலேமிலிருந்து காத் ஊருக்குப் போய், திரும்பிவந்தான் என்று சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டபோது,

1இராஜா 2:42 ராஜா சீமேயியை அழைப்பித்து: நீ வெளியே புறப்பட்டு எங்கேயாவது போகிறநாளிலே சாகவே சாவாய் என்பதை நீ நிச்சயமாய் அறிந்துகொள் என்று நான் உன்னைக் கர்த்தர்மேல் ஆணையிடச் செய்து, உனக்குத் திடச்சாட்சியாகச் சொல்லியிருக்க, அதற்கு நீ: நான் கேட்ட வார்த்தை நல்லதென்று சொல்ல வில்லையா?

1இராஜா 2:43 நீ கர்த்தரின் ஆணையையும், நான் உனக்குக் கற்பித்த கட்டளையையும் கைக்கொள்ளாதே போனதென்ன? என்று சொல்லி,

1இராஜா 2:44 பின்னும் ராஜா சீமேயியைப் பார்த்து: நீ என் தகப்பனாகிய தாவீதுக்குச் செய்ததும் உன் மனதுக்குத் தெரிந்திருக்கிறதுமான எல்லாப் பொல்லாப்பையும் அறிந்திருக்கிறாய்; ஆகையால் கர்த்தர் உன் பொல்லாப்பை உன் தலையின் மேல் திரும்பப்பண்ணுவார்.

1இராஜா 2:45 ராஜாவாகிய சாலொமோனோ ஆசீர்வதிக்கப் பட்டவனாயிருப்பான்; தாவீதின் சிங்காசனம் என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக உறுதியாயிருக்கும் என்று சொல்லி,

1இராஜா 2:46 ராஜா யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவுக்குக் கட்டளை கொடுத்தான்; அவன் வெளியே போய், அவன்மேல் விழுந்து அவனைக் கொன்று போட்டான். ராஜ்யபாரம் சாலொமோனின் கையிலே ஸ்திரப்பட்டது.

"ராஜா சீமேயியை அழைப்பித்து" - தாவீது ராஜா சாலொமோனுக்குச் சீமேயியைப் பற்றியும் கட்டளை கொடுத்திருக்கிறார். (1இராஜா 2:1-9) சாலொமோன் சீமேயியிடம் "நீ எருசலேமிலே உனக்கு ஒரு வீட்டைக் கட்டி, அங்கேயிருந்து எங்கேயாவது வெளியே போகாமல், அங்கேதானே குடியிரு. நீ வெளியே போய்க் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில், நீ சாகவே சாவாய்" என்று கூறிவிடுகிறான். (1இராஜா 2:37). சீமேயியும் சாலொமோனின் உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறான். ராஜாவின் வார்த்தை நல்ல வார்த்தை என்று சொல்லி, அவன் அநேக நாள் எருசலேமிலே குடியிருந்தான். மூன்று வருஷம் சென்றபோது, சீமேயியின் வேலைக்காரர் இரண்டுபேர் அவனைவிட்டு ஓடிப்போனார்கள். சீமேயி தன் வேலைக்காரரைத் தேடிக் கண்டுபிடித்து, காத் ஊரிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுவந்தான். இதனால் சீமேயிக்கு வேலைக்காரர்கள் கிடைத்தார்கள். ஆனால் அவனுடைய உயிர் பறிக்கப்பட்டது. அவன் எருசலேமைவிட்டு வெளியில் எங்கும் போகக்கூடாது என்பது சாலொமோனின் கட்டளை. ராஜாவின் கட்டளையை மீறியதற்காகச் சீமேயி கொல்லப்பட்டான். (1இராஜா 2:39-46).

"பெனாயா" **(Benaiah)** - பெனாயா சாலொமோன் ராஜா சொன்ன பிரகாரம் மூன்றாம் முறையாகக் கொலைபண்ணுகிறான். (1இராஜா 2:25,34,46). தாவீது ராஜா சாலொமோனுக்குக் கூறிய கட்டளைகள் நிறைவேறிற்று. (1இராஜா 2:1-9). பர்சிலாவின் குமாரரைத் தாவீதின் ஆணைப்படியே சாலொமோன் ஆதரித்தான். (1இராஜா 2:7). இவைதவிர, கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும், தாவீது சாலொமோனுக்குக் கட்டளையிட்டிருந்தான். சாலொமோனால் தாவீதின் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் சாலொமோன் பாவம் செய்தான். (1இராஜா 11:1-40).

## 3 அதிகாரம்

### 7. சாலொமோனின் திருமணமும் எகிப்தோடு அவனுக்கிருந்த தொடர்பும்

1இராஜா 3:1 சாலொமோன் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடே சம்பந்தங் கலந்து, பார்வோனின் குமாரத்தியை விவாகம்பண்ணி, தன்னுடைய அரமனையையும் கர்த்தருடைய ஆலயத்தையும் எருசலேமின் சுற்று மதிலையும் கட்டித் தீருமட்டும் அவன் அவளைத் தாவீதின் நகரத்தில் கொண்டுவந்து வைத்தான்.

1இராஜா 3:2 அந்நாட்கள்மட்டும் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்படாதிருந்ததினால், ஜனங்கள் மேடைகளிலே பலி யிட்டுவந்தார்கள்.

1இராஜா 3:3 சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, தன் தகப்பனாகிய தாவீதின் கட்டளைகளில் நடந்தான்; ஆனாலும் அவன் மேடைகளிலே பலியிட்டுத் தூபங்காட்டி வந்தான்.

"பார்வோனோடே சம்பந்தங்கலந்து" - சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணி, அவனோடு சம்பந்தங் கலந்தான். தன்னுடைய ராஜ்யத்தை வலிமைப் படுத்துவதற்காக அல்லது வேறு ஏதாவது அரசியல் காரணங்களுக்காக சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணியிருந்திருக்க வேண்டும். இந்தக் காரணத்திற்காகவே அவன் தீருவின் ராஜாவோடும் சம்பந்தங்கலந்தான். சாலொமோனின் காலத்தில் எகிப்தும், தீருவும் இஸ்ரவேல் தேசத்தின் அருகிலுள்ள பலம்பொருந்திய தேசமாக விளங்கிற்று. அந்நிய ஜாதியாரோடு இஸ்ரவேல் புத்திரர் சம்பந்தங் கலக்கக்கூடாது என்பது கர்த்தருடைய கட்டளை. அவர்களோடு சம்பந்தம் பண்ணினால் அந்நிய ஜாதி ஸ்திரீகள் இஸ்ரவேல் புத்திரரின் இருதயங்களைக் கர்த்தரிடமிருந்து அந்நிய தெய்வங்களுக்கு நேராகத் திருப்பிப் போடுவார்கள். (யாத் 34:16; உபா 7:3-4) சாலொமோனின் இந்தப் பாவத்தைக் கர்த்தர் உடனடியாக இந்த அதிகாரத்தில் நியாயம் விசாரிக்கவில்லை. ஆனாலும் சாலொமோன் அந்நிய ஜாதி ஸ்திரீயை விவாகம் பண்ணியது கர்த்தருடைய பார்வையில் பாவமான காரியமாகவே இருக்கிறது. (1இராஜா 11:1-13; நெகே 13:26).

"பார்வோன்" (Pharaoh) - எந்தப் பார்வோன் என்று தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. 40 வருஷங்களுக்குப் பின்பு, எகிப்தின் பார்வோனாகிய சீஷாக் என்பவன் யூதாவின்மீது யுத்தம் பண்ணினான். (1இராஜா 14:25). இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பார்வோன் சீஷாக்கிற்கு முன்பாக இருந்த எகிப்தின் பார்வோனாக இருந்திருக்க வேண்டும்.

"கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்படாதிருந்ததினால்" - கர்த்தருக்கு இன்னும் ஆலயம் கட்டப்படவில்லை. தேசம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் மேடைகளிலே பலியிட்டுவந்தார்கள். மேடைகளைப் பற்றி பிரமாணம் தவறாக எதுவும் கூறவில்லை. ஆனால் மேடைகளை விக்கிரகாராதனைக்குப் பயன்படுத்தக்கூடாது. விக்கிரகாராதனைக்காகப் பயன்படுத்தப்படும் உயர்ந்த மேடைகள் எல்லாவற்றையும் அழித்துப் போடவேண்டும். (உபா 12:2). ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் மட்டுமே இஸ்ரவேல் புத்திரர் பலிகளைச் செலுத்த வேண்டும். (லேவி 17:3-5). ஆனாலும், நியாயாதிபதிகளின் காலத்திலிருந்து சாலொமோனின் காலம் வரையிலும் ஜனங்கள் மேடைகளிலே பலியிட்டு வந்தார்கள். (நியா 6:25; நியா 13:16; 1சாமு 7:10; 1சாமு 13:9; 1சாமு 14:35; 1சாமு 16:5;1நாளா 21:26) இதுபோன்ற மேடைகள் இஸ்ரவேல் ஜனங்களுக்குள் பிரிவினையை உண்டாக்கிற்று. சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு, சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிந்ததற்கு ஜனங்களின் பிரிவினை உணர்வே காரணமாகும். (1இராஜா 12).

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 3 அதிகாரம்

"கிபியோன்" (Gibeon) - கிபியோன் எருசலேமிலிருந்து 4மைல் தூரத்திலுள்ளது. மோசேயின் ஆசரிப்புக் கூடாரம் இக்காலத்தில் இங்கு இருந்தது. (2நாளா 1:3-4). எருசலேமில் வேறொரு ஆசரிப்புக் கூடாரமும் இருந்தது. சாலொமோன் "எருசலேமுக்கு வந்து கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்றான்" என்று கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 3:15).

"பெரிய மேடை" - இக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பலியிடுவதற்கு இந்த மேடையே பிரதான மேடையாக இருந்திருக்க வேண்டும்.

**9. சாலொமோன் ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளுமாறு ஜெபிக்கிறான்** - (2நாளா 1:7-12)

1இராஜா 3:5 கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார்.

1இராஜா 3:6 அதற்குச் சாலொமோன்: என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர்.

1இராஜா 3:7 இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்.

1இராஜா 3:8 நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்.

1இராஜா 3:9 ஆகையால் உமது ஜனங்களை நியாயம்விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்.

**சாலொமோனுக்கு கர்த்தருடைய வாக்குத்தத்தம்**

கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று சொன்னார். வேதாகமத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைப் பல வசனங்கள் விளக்கிக் கூறுகின்றன. அவையாவன:

1. "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத் 7:7-11).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 3 அதிகாரம்

2. "கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". (மத் 17:20).

3. "நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்கு செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" (மத் 21:21-22).

4. "நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" (மாற்கு 9:23).

5. "தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிருங்கள். எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்ன படியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" (மாற்கு 11:22-24).

6. "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்". (யோவான் 15:7).

7. "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ள வில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் 15:16).

### கர்த்தர் தாவீதுக்குச் செய்த காரியங்கள்

1. தாவீதுக்குப் பெரிய கிருபைசெய்தார்.
2. தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவனுக்குத் தந்தார்.

### தாவீது கர்த்தருக்காகச் செய்த காரியங்கள்

1. தாவீது கர்த்தரைப் பின்பற்றி உண்மையாய் நடந்தான்.
2. நீதியும் மன நேர்மையுமாய் கர்த்தருக்கு முன்பாக நடந்தான்.

"சிறுபிள்ளை" - சாலொமோன் தன் கண்களுக்குச் சிறுபிள்ளையாகத் தெரிகிறான். ஆனால் தாவீதின் கண்களுக்கோ அவன் ஞானியாகத் தெரிகிறான். (1இராஜா 2:6,9). சாலொமோன் தாழ்மையுடையவன். கர்த்தரைச் சார்ந்திருக்கிறான். இதனால் கர்த்தர் அவனை நேசித்து, அவனுக்கு வேண்டியதைக் கேட்குமாறு கூறுகிறார். ஒருகாலத்தில் சவுலும் அவன் கண்களுக்கு சிறியவனாகத் தெரிந்தான். (1சாமு 15:17) ஆனால் சவுலோ தன்னைத்தான் உயர்த்தி, தன் சுய பெருமையினால் தன்னுடைய ஆத்துமாவையே இழந்துபோனான். (1நாளா 10:13-14).

### இஸ்ரவேலரைப் பற்றிய விளக்கம்

1. கர்த்தர் தெரிந்துகொண்டவர்கள்.
2. ஏராளமானவர்கள்.
3. எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 3 அதிகாரம்

### சாலொமோனின் விண்ணப்பம்

சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணியது அவரைப் பிரியப்படுத்திற்று. இதனால் கர்த்தர் சாலொமோனை ஆசீர்வதித்தார். (1இராஜா 3:10-14). கர்த்தருடைய பிள்ளைகள் அவரிடம் வரங்களைக் கேட்கிறார்கள். மற்றவர்களுடைய பார்வையில் இதனால் தங்களுக்கு மேன்மையும், பெருமையும் உண்டாகும் என்று நினைக்கிறார்கள். ஒருசிலர் மற்ற பிரசித்தி பெற்றவர்களைப் போல தாங்களும் ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டு, கர்த்தரிடத்தில் எதையாவது கேட்கிறார்கள். அவர்களுடைய விண்ணப்பம் சுயநலமுடையது. ஆனால் சாலொமோனோ கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்தைத் தருமாறு கேட்கிறான். இந்த இருதயத்தைக் கர்த்தருடைய ஜனங்களை நியாயம்விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும் பயன் படுத்துவதற்காகக் கேட்கிறான். சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது.

**10. சாலொமோனுக்கு ஞானமுள்ள இருதயத்தையும், அவன் கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் கர்த்தர் தருகிறார்**

1இராஜா 3:10 சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது.

1இராஜா 3:11 ஆகையினால் தேவன் அவனை நோக்கி: நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால்,

1இராஜா 3:12 உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை.

1இராஜா 3:13 இதுவுமின்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை.

1இராஜா 3:14 உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப் பண்ணுவேன் என்றார்.

1இராஜா 3:15 சாலொமோனுக்கு நித்திரை தெளிந்தபோது, அது சொப்பனம் என்று அறிந்தான்; அவன் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, சர்வாங்க தகனபலி களையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துசெய்தான்.

### கர்த்தருக்குப் பிரியமான காரியங்கள்

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது. (எண் 24:1)
2. இஸ்ரவேல் தமது ஜனமாக இருப்பது. (1சாமு 12:22)
3. சுயநலமில்லாமல் ஜெபிப்பது. (1இராஜா 3:10)
4. கிறிஸ்து ஜனங்களுக்காகப் பாடுபடுவது. (ஏசா 53:10)

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 3 அதிகாரம்

5. கிறிஸ்து தமது ஊழியக்காரராக இருப்பது. (மத் 3:17; மத் 12:18)

6. பிரசங்கத்தினால் ஜனங்களை இரட்சிப்பது. (2கொரி 1:18-24)

7. கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாக்குவது.(2கொரி 12:18)

8. தேவனுடைய உயிர்த்தெழுதலின் திட்டம். (2கொரி 15:38)

9. கர்த்தத்துவத்தில் கிறிஸ்து சரீரத்தில் பரிபூரணராக இருப்பது. (கொலோ 1:19)

10. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக ஊழியக்காரர்களை வேறுபிரிப்பது. (கலா 1:15)

11. ஜனங்கள் விசுவாசத்தோடு இருப்பது. (எபி 11:5-6)

12. ஜனங்கள் துதியின் பலிகளைத் தொடர்ந்து செலுத்துவது. (எபி 13:15-16)

"இந்தக் காரியம்" - சாலொமோன் கர்த்தரிடத்தில் கேட்ட ஞானமுள்ள இருதயம். கர்த்தர் சாலொமோனின் வார்த்தைகளின்படியே செய்தார். ஞானமும், உணர்வுமுள்ள இருதயத்தை அவனுக்குத் தந்தார். இதுவுமன்றி, சாலொமோன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும், அவனுக்குத் தந்தார். (1இராஜா 3:10-11,13).

**தீர்க்கதரிசன எண் - 2**

"ஆகையினால் தேவன் அவனை நோக்கி: நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும்,..........." (1இராஜா 3:11-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. (1இராஜா 3:11-12)

2. இதுவுமின்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை. (1இராஜா 3:13)

**சாலொமோன் கேட்காத காரியங்கள்**

1. தனக்கு நீடித்த நாட்கள்
2. ஐசுவரியம்
3. சத்துருக்களின் பிராணன்
4. சுயமகிமை (1இராஜா 3:13)

"உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை" - இந்த வாக்கியத்திற்கு ஒரு வரையறையோடு வியாக்கியானம் பண்ண வேண்டும். ஏனெனில் இயேசு கிறிஸ்து சாலொமோனைவிட மேலானவர். சாலொமோனிடம் இல்லாத பல வரங்களை இயேசு கிறிஸ்து பெற்றிருந்தார். இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறியபோது, "சாலொமோனிலும் பெரியவர் இங்கிருக்கிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார். (மத் 12:42; லூக்கா 11:31).

"உன் நாட்களில்" - இந்த வாக்கியம் சாலொமோனின் நாட்களையும், அவனுக்குப் பின்பு வந்த ராஜாக்களின் நாட்களையும் குறிக்கும். சாலொமோனின் ஐசுவரியங்களும், ஞானமும் 1இராஜா 10 ஆவது அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 3 அதிகாரம்

"உன் நாட்களையும் நீடித்திருக்கப் பண்ணுவேன்" - கர்த்தர் சாலொமோனுக்கு மேலும் ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். ஆனால் இது ஒரு நிபந்தனையுடன் கொடுக்கப் படுகிறது. இந்த ஆசீர்வாதத்தைச் சாலொமோன் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், அவன் தன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, அவனும், கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியமங்களையும் கைக்கொண்டு, கர்த்தரிடன் வழிகளில் நடக்க வேண்டும். ஆனால் சாலொமோனோ இதற்குக் கீழ்ப்படியவில்லை. ஆகையினால் கர்த்தர் அவனுடைய நாட்களை நீடித்திருக்கப் பண்ணவில்லை. தன்னுடைய 60 ஆவது வயதில் சாலொமோன் மரித்தான்.

"அவன் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று" - உடன்படிக்கைப் பெட்டி உள்ள ஆசரிப்புக் கூடாரம் எருசலேமில் இருக்கிறது. கிபியோனில் இல்லை. சாலொமோன் பலியிட்ட உயர்ந்த மேடைகளே கிபியோனில் இருந்தது. (2நாளா 1:3-4). எருசலேமில் சாலொமோன் எத்தனை பலிகளைச் செலுத்தினான் என்று தெரியவில்லை. கிபியோனில் அவன் 1000 சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான். (1இராஜா 3:4). எருசலேமிலும், அவன் திரளான பலிகளைச் செலுத்தியிருக்க வேண்டும். ஏனெனில் அவன் சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துசெய்தானென்று கூறப்பட்டிருக்கிறது. (உபா 14:29; 2சாமு 6:19; 1நாளா 16:3).

### 11. சாலொமோன் நீதி வழங்குகிறான்
- (1கொரி 12:8)

1இராஜா 3:16 அப்பொழுது வேசிகளான இரண்டு ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் வந்து, அவனுக்கு முன்பாக நின்றார்கள்.

1இராஜா 3:17 அவர்களில் ஒருத்தி: என் ஆண்டவனே, நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம்; நான் இவளோடே வீட்டிலிருக்கையில் ஆண்பிள்ளை பெற்றேன்.

1இராஜா 3:18 நான் பிள்ளைபெற்ற மூன்றாம் நாளிலே, இந்த ஸ்திரீயும் ஆண்பிள்ளை பெற்றாள்; நாங்கள் ஒருமித்திருந்தோம், எங்கள் இருவரையும் தவிர, வீட்டுக்குள்ளே வேறொருவரும் இல்லை.

1இராஜா 3:19 இராத்திரி தூக்கத்திலே இந்த ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டுபடுத்ததினால் அது செத்துப் போயிற்று.

1இராஜா 3:20 அப்பொழுது, உமது அடியாள் நித்திரைபண்ணுகையில், இவள் நடுஜாமத்தில் எழுந்து, என் பக்கத்திலே கிடக்கிற என் பிள்ளையை எடுத்து, தன் மார்பிலே கிடத்திக்கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து, என் மார்பிலே கிடத்திவிட்டாள்.

1இராஜா 3:21 என் பிள்ளைக்குப் பால்கொடுக்கக் காலமே நான் எழுந்திருந்தபோது, அது செத்துக் கிடந்தது; பொழுது விடிந்தபின் நான் அதை உற்றுப்பார்க்கும்போது, அது நான் பெற்ற பிள்ளை அல்லவென்று கண்டேன் என்றாள்.

1இராஜா 3:22 அதற்கு மற்ற ஸ்திரீ: அப்படியல்ல, உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ: இல்லை, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்றாள்; இப்படி ராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்.

1இராஜா 3:23 அப்பொழுது ராஜா: உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று இவள் சொல்லுகிறாள்; அப்படியல்ல, செத்தது உன் பிள்ளை, உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்று அவள் சொல்லுகிறாள் என்று சொல்லி,

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 3 அதிகாரம்

1இராஜா 3:24 ஒரு பட்டயத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்; அவர்கள் ஒரு பட்டயத்தை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள்.

1இராஜா 3:25 ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான்.

1இராஜா 3:26 அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்து போடுங்கள் என்றாள்.

1இராஜா 3:27 அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்து விடுங்கள்; அவளே அதின் தாய் என்றான்.

1இராஜா 3:28 ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.

"வேசிகளான இரண்டு ஸ்திரீகள்" - சாலொமோன் ராஜாவினிடத்தில் இரண்டு ஸ்திரீகள் தங்களுடைய வழக்குகளைக் கூறுகிறார்கள். சாலொமோன் அவர்களுடைய வழக்கை நியாயமாய் விசாரித்து, தீர்ப்பு வழங்குகிறான். (1இராஜா 3:16-28).

"தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால்" - பிள்ளையின் மெய்யான தாய் யாரென்று கண்டுபிடித்து, பிள்ளையை அவளிடத்தில் ஒப்படைக்க வேண்டும். மெய்யான தாய்க்கு தன் பிள்ளைக்காக அவளுடைய குடல் துடிக்கிறது. தன்னுடைய பிள்ளைக்காகப் பரிதாபப்படுகிறாள். அது யாரிடத்தில் இருந்தாலும் பரவாயில்லை. அது உயிரோடிருந்தால் போதும் என்று விரும்புகிறாள். இதுவே மெய்யான தாயின் அன்பு. சாலொமோன் அந்த அன்பைப் புரிந்து கொண்டு, சரியான தீர்ப்பு வழங்குகிறான்.

"ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு" - கர்த்தர் கொடுத்த ஞானத்தினால் சாலொமோன் நியாயமாகத் தீர்ப்பு வழங்குகிறான். இந்தத் தீர்ப்பையும், சாலொமோனின் ஞானத்தையும் இஸ்ரவேலர் எல்லோரும் கேள்விப்படுகிறார்கள். நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள். சாலொமோன் இளைஞனாக இருந்தபோதிலும், கர்த்தருடைய கிருபையினால் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் அவன் மரியாதைக்குரியவனாக இருக்கிறான். கர்த்தர் சாலொமோனை உயர்த்தினார். அதுபோலவே கர்த்தர் மோசே, யோசுவா, மேலும் பலரையும் தம்முடைய ஜனங்களுக்கு முன்பாக உயர்த்தியிருக்கிறார். (யாத் 4:29-15:21; யோசு 4:14; 2நாளா 32:23; மத் 4:24; மத் 9:26,31).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 4 அதிகாரம்

**12. சாலொமோனின் பிரபுக்கள்** - (2:35)

1இராஜா 4:1 ராஜாவாகிய சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாயிருந்தான்.

1இராஜா 4:2 அவனுக்கு இருந்த பிரபுக்கள்: சாதோக்கின் குமாரனாகிய அசரியாபிரதான மந்திரியாயிருந்தான்.

1இராஜா 4:3 சீசாவின் குமாரராகிய ஏலிகோரேப்பும் அகியாவும் சம்பிரதிகளாயிருந்தார்கள்; அகிலூதின் குமாரன் யோசபாத் மந்திரியாயிருந்தான்.

1இராஜா 4:4 யோய்தாவின் குமாரன் பெனாயா படைத்தலைவனும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியர்களுமாயிருந்தார்கள்.

1இராஜா 4:5 நாத்தானின் குமாரன் அசரியா மணியகாரரின் தலைவனாயிருந்தான்; நாத்தானின் குமாரன் சாபூத் ராஜாவின் பிரதானியும் இஷ்டனுமாயிருந்தான்.

1இராஜா 4:6 அகீஷார் அரமனை விசாரிப்புக்காரனும், அப்தாவின் குமாரன் அதோனீராம் பகுதி விசாரிப்புக்காரனுமாய் இருந்தான்.

"சமஸ்த இஸ்ரவேல்" - சவுல், இஸ்போசேத், தாவீது ஆகியோரின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் பிளவுபடாமல் சமஸ்த இஸ்ரவேலாக இருந்தது. (1சாமு 10:27; 1சாமு 23:1-30:31; 2சாமு 2:1-5:12) சாலொமோனின் காலத்திலும் இஸ்ரவேல் தேசம் பிளவுபடாமலேயே இருக்கிறது. (1இராஜா 12).

**சாலொமோனின் பிரபுக்கள்**

1. அசரியா (Azariah) - சாதோக்கின் குமாரன் - பிரதான மந்திரி (1இராஜா 4:2)
2. ஏலிகோரேப் (Elihoreph) - சம்பிரதி (1இராஜா 4:3)
3. அகியா (Ahiah) - சம்பிரதி
4. யோசபாத் (Jehoshaphat) - மந்திரி (1நாளா 18:15)
5. பெனாயா (Benaiah) - படைத்தலைவன் (1இராஜா 4:4)
6. சாதோக் (Zadok) - ஆசாரியன் (1இராஜா 2:26-27)
7. அபியத்தார் (Abiathar) - ஆசாரியன் (1இராஜா 2:26-27)
8. அசரியா (Azariah) - மணியகாரரின் தலைவன் (1இராஜா 4:5)
9. சாபூத் (Zabud) - சாலொமோனின் பிரதானியும் இஷ்டனும்.
10. அகீஷார் (Ahishar) - அரமனை விசாரிப்புக்காரன். (1இராஜா 4:6)
11. அதோனீராம் (Adoniram) - பகுதி விசாரிப்புக்காரன் (1இராஜா 4:6)

பிரதானமந்திரி (priest) - כֹּהֵן - ko-hane' - 3548

ஆ.பெ.சொ. - ஆசாரியன், மந்திரி, பிரதானி, ஆசாரியர், பூஜாசாரி, பூசாரி, பிரதானமந்திரி - "கோஹேன்" **kohen** என்னும் எபிரெய வார்த்தை ஆசாரியரையும், அரசாங்க அதிகாரிகளையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அசரியா சாதோக்கின் குமாரன் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டிருந்தாலும், அவன் சாதோக்கின் பௌத்திரன் ஆவான். (1நாளா 6:10).

"சம்பிரதிகள்" (scribes) - இவர்கள் ராஜாவின் நிருபங்களை எழுதுகிறவர்கள். மேலும் ராஜாவைப் பற்றிய செய்திகளையும் தொகுத்து எழுதுவார்கள். ராஜாவின் முக்கியமான ஆலோசனைக்காரர்களாக இருந்தார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 4 அதிகாரம்

"மந்திரி" (recorder) - ராஜா வழக்குகளை விசாரிக்கும்போது இவர்கள் ராஜாவுக்கு உதவி புரிவார்கள்.

"அபியத்தார்" (Abiathar) - அபியத்தார் ஆசாரிய ஊழியத்திலிருந்து அகற்றப்பட்டான். (1இராஜா 2:26-27,35) ஆனாலும் சாலொமோனின் பிரபுக்களில் இவனுடைய பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை இந்த வரலாற்றை எழுதிய ஆசிரியர் சாலொமோனின் ஆட்சிக்காலம் முழுவதிலும் அவனோடுகூட இருந்தவர்கள் எல்லோரையும் இங்கு அட்டவணையில் சேர்த்திருக்கலாம்.

"நாத்தானின் குமாரன் அசரியா மணியகாரரின் தலைவனாயிருந்தான்" - இது எந்த நாத்தான் என்று தெரியவில்லை. ஒருவேளை இவன் தாவீதின் குமாரனாக இருக்கலாம். இவனுடைய சந்ததியில் இயேசுவின் தாயாகிய மரியாள் வருகிறாள். (லூக்கா 3:23-38). இவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானாகவும் இருக்கலாம்.

"ராஜாவின் பிரதானியும் இஷ்டனுமாயிருந்தான்" - இவனும் ராஜாவுக்கு ஆலோசனைக்காரன். தாவீதுக்கு ஊசாய் இருந்ததுபோல சாலொமோனுக்கு சாபூத் இருக்கிறான். (2சாமு 15:37).

### 13. சாலொமோனின் பன்னிரண்டு மணியக்காரர்

1இராஜா 4:7 ராஜாவுக்கும் அவன் அரமனைக்கும் வேண்டிய உணவுப் பொருள்களைச் சேகரிக்கிற பன்னிரண்டு மணியகாரர் சாலொமோனுக்கு இஸ்ரவேல் தேசமெங்கும் வைக்கப்பட்டிருந்தார்கள்; அவர்கள் மாதத்துக்கு ஒவ்வொருவராக வருஷ முழுவதும் பராமரித்துவந்தார்கள்.

1இராஜா 4:8 அவர்கள் நாமங்களாவன: ஊரின் குமாரன், இவன் எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருந்தான்.

1இராஜா 4:9 தேக்கேரின் குமாரன், இவன் மாக்காத்சிலும், சால்பீமிலும், பெத்ஷிமேசிலும், ஏலோன் பெத்தானானிலும் இருந்தான்.

1இராஜா 4:10 ஏசேதின் குமாரன், இவன் அறுபோத்தில் இருந்தான்; சோகோவும் எப்பேர் சீமையனைத்தும் இவன் விசாரிப்பில் இருந்தது.

1இராஜா 4:11 அபினதாபின் குமாரன், இவன் தோரின் நாட்டுப் புறமனைத்திற்கும் விசாரிப்புக் காரனாயிருந்தான்; சாலொமோனின் குமாரத்தியாகிய தாபாத் இவனுக்கு மனைவியாயிருந்தாள்.

1இராஜா 4:12 அகிலூதின் குமாரனாகிய பானா இவன் விசாரிப்பில், தானாகும், மெகிதோவும், சர்த்தனாவுக்குப் பக்கமாகவும் யெஸ்ரயேலுக்குக் கீழாகவும் பெத்செயான் தொடங்கி ஆபேல் மெகொல்லாமட்டும் யக்மெயாமுக்கு அப்புறத்துமட்டும் இருக்கிற பெத்செயான் அனைத்தும் இருந்தது.

1இராஜா 4:13 கேபேரின் குமாரன், இவன் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் இருந்தான்; கீலேயாத்திலுள்ள மனாசேயின் குமாரனாகிய யாவீரின் கிராமங்களும் மதில்களும் வெண்கலத் தாழ்ப்பாள்களுமுள்ள பாசான் தேசத்தினுடைய அறுபது பெரிய பட்டணங்களுள்ள அர்கோப் சீமையும் இவன் விசாரிப்பில் இருந்தது.

1இராஜா 4:14 இத்தோவின் குமாரன் அகினதாப், இவன் மக்னாயீமில் இருந்தான்.

1இராஜா 4:15 அகிமாஸ், இவன் நப்தலியில் இருந்தான்; இவன் சாலொமோனுக்கு இருந்த ஒரு குமாரத்தியாகிய பஸ்மாத் என்பவளை விவாகம்பண்ணினான்.

1இராஜா 4:16 ஊசாயின் குமாரன் பானா, இவன் ஆசேரிலும் ஆலோத்திலும் இருந்தான்.

1இராஜா 4:17 பருவாவின் குமாரன் யோசபாத், இவன் இசக்காரில் இருந்தான்.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 4 அதிகாரம்

1இராஜா 4:18 ஏலாவின் குமாரன் சீமேயி இவன் பென்யமீனில் இருந்தான்.

1இராஜா 4:19 ஊரியின் குமாரன் கேபேர், இவன் எமோரியின் ராஜாவாகிய சீகோனுக்கும் பாசானின் ராஜாவாகிய ஓகுக்கும் இருந்த தேசமாகிய கீலேயாத் தேசத்தில் இருந்தான்; இவன்மாத்திரம் அத்தேசத்தில் அதிபதியாய் இருந்தான்.

**சாலொமோனின் மணியகாரர்**

1. ஊரின் குமாரன் (1இராஜா 4:7-8)
2. தேக்கேரின் குமாரன் (1இராஜா 4:9)
3. ஏசேதின் குமாரன் (1இராஜா 4:10)
4. அபினதாபின் குமாரன் (1இராஜா 4:11)
5. பானா (Baana) - அகிலூதின் குமாரன் (1இராஜா 4:12)
6. கேபேரின் குமாரன் (1இராஜா 4:13)
7. அகினதாப் (Ahinadab) - இத்தோவின் குமாரன் (1இராஜா 4:14)
8. அகிமாஸ் (Ahimaaz) (1இராஜா 4:15)
9. பானா (Baanah) - ஊசாயின் குமாரன் (1இராஜா 4:16)
10. யோசபாத் (Jehoshaphat) - பருவாவின் குமாரன் (1இராஜா 4:17)
11. சீமேயி (Shimei) - ஏலாவின் குமாரன் (1இராஜா 4:18)
12. கேபேர் (Geber) - ஊரியின் குமாரன் (1இராஜா 4:19)

சாலொமோனின் ராஜ்யத்தில் பன்னிரண்டு பிரிவுகள் இருந்தது. ஒவ்வொரு மணியகாரரும் ஒவ்வொரு பிரிவிற்கு தலைவராக இருக்கிறார்கள். தங்களுடைய பிரிவிலுள்ள ஜனங்களிடம் வரிவசூல் செய்து, ராஜாவின் அரண்மனையில் சேர்ப்பது இவர்களுடைய பொறுப்பு. ராஜாங்க காரியம் ஜனங்களிடமிருந்து வரிகளைப் பெற்றே நடைபெறுகிறது. ராஜாவுக்கு ஒவ்வொரு மாதமும் தேவையான பொருட்களை ஒவ்வொரு மணியகாரரும் பொறுப்பாகக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். (1இராஜா 4:7-19)

“எப்பேர் சீமை” - ஒவ்வொரு மணியகாரருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் சீமையைப் பற்றி 1இராஜா 4:7-19 ஆகிய வசனங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த மணியக்காரர்கள் தங்களுடைய சீமையில் வரிவசூல் செய்து, அவர்களுக்கு நியமித்து இருக்கும் மாதத்தின் பிரகாரம் வருஷத்திற்கு ஒருதடவை ராஜாவிடம் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

“ஊசாய்” (Hushai) - தாவீதின் சிநேகிதனாகவும், ஆலோசனைக்காரனாகவும் இருந்தவன். (2சாமு 15:27) ஊசாயின் குமாரன் பானாவைச் சாலொமோன் கனப்படுத்தி அவனைப் பன்னிரண்டு மணியகாரர்களில் ஒருவனாக நியமித்திருக்கிறான்.

“இவன்மாத்திரம் அத்தேசத்தில் அதிபதியாய் இருந்தான்” - யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள சீகோன், ஓக் ஆகியவை பெரிய சீமையாகும். மற்ற மணியகாரருக்குப் பொறுப்பாக ஒப்படைக்கப் பட்டிருந்த சீமைகளைவிட இந்தச் சீமை பெரியது. இதற்கு கேபேர் மணியகாரனாக நியமிக்கப்பட்டிருக்கிறான்.

### 14. சாலொமோனின் விஸ்தாரமான இராஜ்யம்

1இராஜா 4:20 யூதாவும் இஸ்ரவேலும் கடற்கரை மணலத்தனை ஏராளமாயிருந்து, புசித்துக் குடித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

## 4. அதிகாரம்

1இராஜா 4:21 நதிதொடங்கி, பெலிஸ்தர் தேசவழியாய் எகிப்தின் எல்லைமட்டும் இருக்கிற சகல ராஜ்யங்களையும் சாலொமோன் ஆண்டுகொண்டிருந்தான்; அவர்கள் சாலொமோனுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனைச் சேவித்தார்கள்.

"யூதா" (Judah) - யூதா ஆட்சி செய்யும் கோத்திரம். ஆகையினால் மற்றக் கோத்திரங்களிலிருந்து வேறுபிரித்துக் காண்பிப்பதற்காக யூதா கோத்திரத்தின் பெயர் இங்கு விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது.

"கடற்கரை மணலத்தனை ஏராளமாயிருந்து" - ஆதி 13:16; ஆதி 22:17 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

"புசித்துக் குடித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்" - தேசத்தில் செழிப்பும், சந்தோஷமும், சமாதானமும், கர்த்தருடைய ஆசீர்வாதமும் இருந்ததை இந்த வாக்கியம் தெளிவுபடுத்துகிறது.

"சகல ராஜ்யங்களையும் சாலொமோன் ஆண்டுகொண்டிருந்தான்" - சாலொமோன் யோர்தான் நதிதொடங்கி, பெலிஸ்தர் தேசவழியாய் எகிப்தின் எல்லைமட்டும் இருக்கிற சகல ராஜ்யங்களையும் ஆண்டு கொண்டிருந்தான். (ஆதி 15:18-21; யோசு 1:4).

"அவர்கள் சாலொமோனுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து" - பெரிய ராஜாக்களுக்குக்கீழ் கட்டுப்பட்டிருக்கும் சிறிய ராஜாக்கள் அவர்களுக்குக் காணிக்கைகளைக் கப்பமாகச் செலுத்துவது வழக்கம். (சங் 72:10-11).

"அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனைச் சேவித்தார்கள்" - சாலொமோன் 40 வருஷங்கள் ராஜாவாக இருந்தான். (1இராஜா 11:42).

### 15. நாள் ஒன்றிற்கு சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு

1இராஜா 4:22 நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு முப்பது மரக்கால் மெல்லிய மாவும், அறுபது மரக்கால் மாவும்,

1இராஜா 4:23 கலைமான்களையும் வெளிமான்களையும் வரையாடுகளையும் கொழுமையான பறவைகளையும் தவிர, கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாம்.

**நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு**

1. முப்பது மரக்கால் மெல்லிய மாவு
2. அறுபது மரக்கால் மாவு
3. கலைமான்கள்
4. வெளிமான்கள்
5. வரையாடுகள்
6. கொழுமையான பறவைகள்
7. கொழுக்கப்பட்ட பத்து மாடுகள்
8. மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகள்
9. நூறு ஆடுகள்

### 16. சாலொமோனின் அமைதியான ஆட்சிக்காலமும் செழுமையும் - (3:13)

1இராஜா 4:24 நதிக்கு இப்புறத்தில் இருக்கிற திப்சாமுதற்கொண்டு ஆசாமட்டு முள்ளவை யெல்லாவற்றையும், நதிக்கு இப்புறத்திலுள்ள சகல ராஜாக்களையும் ஆண்டுவந்தான்; அவனைச் சுற்றி எங்கும் சமாதானமாயிருந்தது.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 4 அதிகாரம்

1இராஜா 4:25 சாலொமோனுடைய நாளெல்லாம் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டும், யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சச்செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள்.

1இராஜா 4:26 சாலொமோனுக்கு நாலாயிரம் இரதக் குதிரைலாயங்களும், பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்.

1இராஜா 4:27 மேற்சொல்லிய மணியகாரரில் ஒவ்வொருவரும் தன்தன் மாதத்திலே சாலொமோன் ராஜாவுக்கும், ராஜாவின் பந்திக்கு வரும்யாவருக்கும் வேண்டியவைகளை ஒரு குறைவுமின்றி பராமரித்து,

1இராஜா 4:28 குதிரைகளுக்கும் ஒட்டகங்களுக்கும் வேண்டிய வாற்கோதுமையையும், வைக் கோலையும், அவரவர் தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்படி அவைகள் இருக்கும் ஸ்தலத்திற்குக் கொண்டுவருவார்கள்.

"நதி" - ஐபிராத்து நதி. நதிக்குப் இப்புறத்தில் என்பது ஐபிராத்து நதிக்கு மேற்குப்பகுதியிலுள்ள தேசத்தைக் குறிக்கும்.

"திப்சா" (Tiphsah) - இந்தப் பெயருக்கு "கணவாய்" "ford, passage" என்று பொருள்.

"ஆசா" (Azzah) - இது பெலிஸ்தியாவில் உள்ள காசாவாக (Gaza) இருக்கலாம்.

"தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டும்" - சாலொமோனின் ராஜ்யத்தில் வடக்கு எல்லையும், தெற்கு எல்லையும். (நியா 20:1; 1சாமு 3:20).

"அவரவர் தங்கள் தங்கள் திராட்சச்செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள்" - செழிப்பு, சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் எபிரெய வழக்குச் சொல். (மீகா 4:4; சக 3:10).

"நாலாயிரம் இரதக் குதிரைலாயங்கள்" - 2நாளா. 9:25 ஆவது வசனத்தில் "நாலாயிரம் குதிரைலாயங்களும்" என்று வித்தியாசமாக உள்ளது. இது ஒருவேளை பிரதியெடுத்தவர்களின் பிழையாக இருக்கலாம். குதிரைகளைத் திரளாகச் சேர்ப்பது பிரமாணத்திற்கு எதிரானது. (உபா 17:16) இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீதே நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். குதிரைகள்மீதும், இரதங்கள்மீதும் நம்பிக்கை வைக்கக்கூடாது. (சங் 20:7; ஏசா 31:1-3).

"ஒரு குறைவுமின்றி பராமரித்து" - சாலொமோன் கர்த்தருக்கு உண்மையாக இருந்தான். ஆகையினால் கர்த்தர் அவனையும், அவன் குடும்பத்தாரையும் ஆசீர்வதித்தார். ஆதாமும், ஏவாளும் பாவம் செய்திருக்கவில்லை என்றால், இன்றைய தினம் கர்த்தர் நம்மையும் ஒரு குறைவுமின்றி பராமரிப்பார். கர்த்தருடைய பூரணமான ஆசீர்வாதத்தைக் கர்த்தருடைய பிள்ளைகள் ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியில் நித்திய காலமாகவும் அனுபவிப்பார்கள். (ஏசா 35:1-8; ஏசா 65:20-25; வெளி 22:3).

### 17. சாலொமோனின் ஞானமும் புத்தியும் மனோ விருத்தியும்

1இராஜா 4:29 தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோ விருத்தியையும் கொடுத்தார்.

1இராஜா 4:30 சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 4 அதிகாரம்

1இராஜா 4:31 அவன் எஸ்ராகியனாகிய ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்னும் மாகோலின் குமாரரிலும், மற்ற எல்லா மனுஷரிலும் ஞானவானாயிருந்தான்; சுற்றிலும் இருந்த சகல ஜாதிகளிலும் அவன் கீர்த்தி பிரபலமாயிருந்தது.

1இராஜா 4:32 அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்; அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து.

1இராஜா 4:33 லீபனோனில் இருக்கிற கேதுருமரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்புப் பூண்டு வரைக்குமுள்ள மரமுதலிய தாபரங்களைக் குறித்தும், மிருகங்கள் பறவைகள்ஊரும்பிராணிகள்மச்சங்கள் ஆகிய இவைகளைக்குறித்தும் வாக்கியங்களைச் சொன்னான்.

1இராஜா 4:34 சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின்சகலராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள்.

"தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும்......கொடுத்தார்" - சாலொமோனிடம் இருந்த ஞானமும், புத்தியும், மனோவிருத்தியும் கர்த்தர் கொடுத்தது. மோசே, எலியா, இயேசு கிறிஸ்து, தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியோருக்கும் கர்த்தர் ஞானத்தையும், புத்தியையும், வல்லமையையும் கொடுத்தார். அவர்கள் தேவைப்பட்ட சமயத்தில் இவற்றைப் பயன்படுத்தினார்கள். ஆவியானவரின் வரங்களைப் பெற்றுக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பது கர்த்தரைப் பரியாசம் பண்ணும் செயலாகும். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வல்லமையைக் கொடுப்பதற்கு முன்பாக அவர்களால் அற்புதங்களைச் செய்ய முடியவில்லை. (மத் 10:1-2) கிறிஸ்து அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்த பின்போ, அவர்கள் மூலமாக பல அற்புதங்கள் நடைபெற்றது. (மத் 10:7-8; லூக்கா 10; லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 2:1-11; அப் 3:6; அப் 5:1-16)

ஆதித்திருச்சபையில் அப்போஸ்தலர் களுக்குக் கொடுக்கப்பட்ட அதே வல்லமை இக்காலத்திலுள்ள நமக்கும் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. வாஞ்சையோடு கர்த்தரிடத்தில் அவற்றைக் கேட்கும்போது கர்த்தர் தம்முடைய ஞானத்தையும், புத்தியையும் கொடுத்து நம்மை ஆசீர்வதிப்பார். (மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; 2கொரி 12).

**கர்த்தர் சாலொமோனுக்குக் கொடுத்தவைகள்**

1. மிகுதியான ஞானம்(1இராஜா 4:29-32)
2. மிகுதியான புத்தி (1இராஜா 4:29-34)
3. மனோவிருத்தி (1இராஜா 4:29)
4. ஐசுவரியங்கள் (1இராஜா 3:13; 1இராஜா 10:1-29)
5. கீர்த்தி (1இராஜா 3:13; 1இராஜா 4:31; 1இராஜா 10:1-9)

**சாலொமோனின் சிறந்த ஞானம்**

1. சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது. (ஆதி 41:8; யாத் 7:11. யோபு 1:3; எண் 23:7; எரே 49:28-29)
2. அவன் எஸ்ராகியனாகிய ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்னும் மாகோலின் குமாரரிலும், மற்ற எல்லா மனுஷரிலும் ஞானவானாயிருந்தான்; சுற்றிலும் இருந்த சகல ஜாதிகளிலும் அவன் கீர்த்தி பிரபலமாயிருந்தது (1இராஜா 3:12-13).
3. ஞானத்தில் சாலொமோனுக்குச் சரியானவன் அவனுக்கு முன்பு இருந்ததுமில்லை, அவனுக்குப் பின்பு எழும்புவதுமில்லை.
4. அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்; அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து. (1இராஜா 4:32).

## 4 அதிகாரம்

5. இயற்கையிலுள்ள எல்லாக் காரியங்களைக் குறித்தும் வாக்கியங்களைச் சொன்னான். (1இராஜா 4:33).

6. சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள். (1இராஜா 4:34; 1இராஜா 10:1-9).

## 5 அதிகாரம்

**18. சாலொமோனின் ஆராதனை முறைமைகள்** - *(5:1-9:9; 2சாமு 6)*

**(1) தேவாலயம் கட்ட ஆயத்த வேலைகள்** - *(2நாளா 2)*

**(அ) சாலொமோன் தீருவின் ராஜாவாகிய ஈராமிடம் ஆலயம் கட்ட கேதுரு மரங்களையும் தேவதாரி மரங்களையும் கேட்கிறான்**

1இராஜா 5:1 சாலொமோனை அவனுடைய பிதாவின் ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் என்று தீருவின் ராஜாவாகிய ஈராம் கேள்விப்பட்டு, தன் ஊழியக்காரரை அவனிடத்தில் அனுப்பினான்; ஈராம் தாவீதுக்குச் சகலநாளும் சிநேகிதனாயிருந்தான்.

1இராஜா 5:2 அப்பொழுது சாலொமோன் ஈராமினிடத்தில் ஆட்களை அனுப்பி:

1இராஜா 5:3 என் தகப்பனாகிய தாவீதின் சத்துருக்களைக் கர்த்தர் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திவிடுமளவும், அவர்கள் தம்மைச் சுற்றிலும் செய்கிற யுத்தத்தினால், அவர் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட, அவருக்குக் கூடாதிருந்தது என்று நீர் அறிந்திருக்கிறீர்.

1இராஜா 5:4 ஆனாலும் இப்பொழுதோ என் தேவனாகிய கர்த்தர் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார்; விரோதியும் இல்லை, இடையூறும் இல்லை.

1இராஜா 5:5 ஆகையால்: நான் உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின் மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னபடியே, என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக்கிறேன்.

1இராஜா 5:6 ஆதலால் லீபனோனில் எனக்காக கேதுருமரங்களை வெட்டக் கட்டளையிடும்; சீதோனியரைப்போல மரவெட்டு வேலை அறிந்தவர்கள் எங்களுக்குள்ளே ஒருவருமில்லை என்பது உமக்குத் தெரியும்; அதற்காக என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடே இருப்பார்கள்; நீர் சொல்வதின்படியெல்லாம் உம்முடைய வேலைக்காரரின் சம்பளத்தை உமக்குக் கொடுப்பேன் என்று சொல்லச் சொன்னான்.

"தீருவின் ராஜாவாகிய ஈராம்" - இவன் தாவீதின் காலத்திலிருந்த ஈராம் அல்ல. 2சாமு 5:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஈராமின் குமாரன். தீருவின் வரலாற்றைப் பற்றி எபேசுவின் மியாண்டர் (Meander of Ephesus) கி.மு. 300 ஆவது வருஷத்தில் கிரேக்க மொழியில் எழுதியிருக்கிறார். இதில் ஈராம் தீருவின் ராஜாவான அபிபாலுடைய (Abibaal) குமாரன் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஈராம் தன்னுடைய 19 ஆவது வயதில் ராஜாவானான். 34 வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணினான். தன்னுடைய 53 ஆவது வயதில் மரித்தான். இவனுக்குப் பின்பு இவனுடைய குமாரன் பலேயாசேர் (Baleazar) ராஜாவானான்.

"ஈராம் தாவீதுக்குச் சகலநாளும் சிநேகிதனாயிருந்தான்" - இவர்கள் இருவரும் சமாதான உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். எபிரெயர்கள் பொனீசியர்களோடு (Phoenicians) எப்போதுமே சமாதானமாக இருந்தார்கள். ஆனால் கானானியரோடு அவர்கள் சமாதானமாக இல்லை.

"தேவனாகிய கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட, அவருக்குக் கூடாதிருந்தது" - *(2சாமு 5:11; 1நாளா 14:1; 1நாளா 22:4)*

## 5 அதிகாரம்

**தாவீதால் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டக் கூடாதிருந்ததற்குக் காரணம்**

1. ஏற்ற வேளை வரவில்லை. (2சாமு 7)
2. தாவீது யுத்த மனுஷனும், இரத்தம் சிந்துகிறவனுமாயிருந்தான். (1நாளா 22:8; 1நாளா 28:3)

**தீர்க்கதரிசன எண் - 3**

"உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின் மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்" (1இராஜா 5:5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறியுள்ள முன்னறிவிப்புக்கள்**

1. உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின் மேல் உன் குமாரனை வைப்பேன். (1இராஜா 5:5)
2. உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்.

"லீபனோனில் எனக்காக கேதுருமரங்களை வெட்டக் கட்டளையிடும்" - ஈராமிற்கும், சாலொமோனிற்கும் இடையில் நடைபெற்ற தகவல் பரிமாற்றங்கள் 2நாளா 2:2-16 ஆகிய வசனங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தாவீதின் திட்டத்தைப் பற்றி ஈராமிற்குத் தெரிந்திருக்கும் என்று சாலொமோன் நினைத்தான். (1நாளா 22:4) லீபனோனில் கேதுருமரங்கள் இன்னும் உள்ளன. ஆயினும் பழங்காலத்தில் இருந்ததுபோன்று, மிகவும் அதிகமாக இல்லை. கேதுரு மரங்களால் தீருவின் ஜனங்கள் கப்பல்களைச் செய்தார்கள். (எசே 27:5).

"சீதோனியரைப்போல மரவெட்டு வேலை அறிந்தவர்கள் எங்களுக்குள்ளே ஒருவருமில்லை" - சீதோனியர் மரவெட்டு வேலைகளிலும், கப்பல்களைக் கடலில் செலுத்துவதிலும் மிகவும் சிறந்தவர்களாக இருந்தார்கள். சீதோனில் அவர்களுக்கென்று ஒரு ராஜா இருந்தார். ஆனாலும் ஈராமின் ஆட்சிக்காலத்தில் சீதோனியர் தீருவிற்குப் பணிந்து இருந்தார்கள்.

**(ஆ) தேவாலயம் கட்டும் வேலையில் ஈராம் சாலொமோனுக்கு உதவி புரிகிறான்**

1இராஜா 5:7 ஈராம் சாலொமோனின் வார்த்தைகளைக் கேட்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு; அந்த ஏராளமான ஜனங்களை ஆளும்படி, தாவீதுக்கு ஒரு ஞானமுள்ள குமாரனைக் கொடுத்த கர்த்தர் இன்று ஸ்தோத்திரிக்கப்படுவாராக என்று சொல்லி;

1இராஜா 5:8 ஈராம் சாலொமோனிடத்தில் மனுஷரை அனுப்பி: நீர் எனக்குச் சொல்லி யனுப்பின காரியத்தை நான் கேட்டேன்; கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன்.

1இராஜா 5:9 என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவார்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும் என்று சொல்லச்சொன்னான்.

1இராஜா 5:10 அப்படியே ஈராம் சாலொமோனுக்கு வேண்டியமட்டும் கேதுருமரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் கொடுத்துக் கொண்டு வந்தான்.

## 5 அதிகாரம்

"லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவார்கள்" - லீபனோனின் வனப்பகுதியிலிருந்து அருகிலுள்ள கடற்கரைப் பகுதிக்கு வெட்டிய கேதுரு மரங்களை எடுத்து வரவேண்டும். அங்கே ஈராம் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி சாலொமோன் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்புவிப்பான். இவர்கள் யோப்பாவிலிருந்து எருசலேமிற்கு மரங்களை அனுப்பினார்கள். இவற்றிற்கு இடையிலுள்ள தூரம் 40மைல்களாகும். இரண்டாம் முறையாக ஆலயம் கட்டப்பட்டபோது, இதே முறையே பின்பற்றப்பட்டது. (எஸ்றா 3:7).

"என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து" - தீருவின் ஜனங்கள் செய்யும் வேலைகளுக்குச் சாலொமோன் ஆகாரம் கொடுக்க வேண்டும். பொனீசியரின் பட்டணங்களில் விளைச்சல் நிலங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. அவர்கள் தங்கள் ஆகாரத்திற்கு வெளிநாட்டு உணவு பதார்த்தங்களையே நம்பியிருந்தார்கள்.

### (இ) ஈராமின் ஒரு வருஷ சம்பளம்

1இராஜா 5:11 சாலொமோன் ஈராமின் அரமனைக்குப் போஜனத்திற்காக இருபதினாயிரக் கலம் கோதுமையையும், இடித்துப்பிழிந்த ஒலிவமரங்களின் இருபதுகல எண்ணெயையும் கொடுத்தான்; இப்படிச்சாலொமோன் ஈராமுக்கு வருஷாந்தரம் கொடுத்து வந்தான்.

### (ஈ) தீருவோடு சாலொமோனின் உடன்படிக்கை

1இராஜா 5:12 கர்த்தர் சாலொமோனுக்குச் சொல்லியிருந்தபடியே அவனுக்கு ஞானத்தைத் தந்தருளினார்; ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானம் உண்டாயிருந்து, இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

"ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானம் உண்டாயிருந்து" - இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். ஆனால் இந்த உடன்படிக்கையைத் தீரு முறித்துப்போட்டது. இதற்காக அவர்கள் நியாயம் விசாரிக்கப் பட்டார்கள். (ஆமோ 1:9).

### (உ) தேவாலயம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த வேலையாட்கள்

1இராஜா 5:13 ராஜாவாகிய சாலொமோன் இஸ்ரவேலரெல்லாரிலும் ஊழியத்துக்கு முப்பதினாயிரம் அமஞ்சி ஆட்களைப் பிடித்தான்.

1இராஜா 5:14 அவர்களில் ஒவ்வொரு மாதத்திற்குப் பதினாயிரம்பேரை மாற்றி மாற்றி, லீபனோனுக்கு அனுப்பினான்; அவர்கள் ஒரு மாதம் லீபனோனிலும், இரண்டு மாதம் தங்கள் வீடுகளிலும் இருப்பார்கள்; அதோனீராம் அந்த அமஞ்சி ஆட்களின்மேல் விசாரிப்புக் காரனாயிருந்தான்.

1இராஜா 5:15 சாலொமோனிடத்தில் சுமை சுமக்கிறவர்கள் எழுபதினாயிரம்பேரும், மலைகளில் மரம் வெட்டுகிறவர்கள் எண்பதினாயிரம்பேரும்,

1இராஜா 5:16 இவர்களைத்தவிர வேலையை விசாரித்து வேலையாட்களைக் கண்காணிக்கிறதற்கு தலைமையான விசாரிப்புக்காரர் மூவாயிரத்து முந்நூறுபேரும் இருந்தார்கள்.

1இராஜா 5:17 வெட்டின கல்லால் ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட, பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைக் கொண்டுவர ராஜா கட்டளையிட்டான்.

1இராஜா 5:18 ஆலயத்தைக் கட்ட, சாலொமோனின் சிற்பாசாரிகளும், ஈராமின் சிற்பாசாரிகளும், கிபலி ஊராரும், அந்த மரங்களையும் கற்களையும் வெட்டி ஆயத்தப் படுத்தினார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 5 அதிகாரம்

"இஸ்ரவேலரெல்லாரிலும்" - சாலொமோன் கட்டும் ஆலயம் மிகப் பெரிய வேலையாகும். முதன் முறையாக இஸ்ரவேல் ஜனங்கள் கட்டாய வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு அமஞ்சி ஆட்கள் என்று பெயர். இவர்கள் அடிமைகளல்ல. ஆனாலும் அவர்கள் கட்டாயம் வேலை செய்ய வேண்டும். இஸ்ரவேல் தேசத்தில் நல்ல சரீர ஆரோக்கியத்தோடு 13 இலட்சம் புருஷர்கள் இருந்தார்கள். (2சாமு 24:9) இவர்களில் சாலொமோன் 30,000பேரை அமஞ்சி ஆட்களாகத் தெரிந்தெடுத்தான். அவர்களில் ஒவ்வொரு மாதத்திற்குப் பதினாயிரம்பேரை மாற்றி மாற்றி, லீபனோனுக்கு அனுப்பினான்; அவர்கள் ஒரு மாதம் லீபனோனிலும், இரண்டு மாதம் தங்கள் வீடுகளிலும் இருப்பார்கள்; அதோனீராம் அந்த அமஞ்சி ஆட்களின்மேல் விசாரிப்புக் காரனாயிருந்தான். (1இராஜா 5:14). சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு அமஞ்சி ஆட்களால் ஏற்பட்ட பிரச்சனை இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிளவுபடுவதற்குக் காரணமாயிற்று. (1இராஜா 12:4).

"அமஞ்சி ஆட்கள்" (levy) - இவர்கள் 1இராஜா 9:21-22 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடிமைகள் அல்ல. இஸ்ரவேல் தேசத்தார் ராஜாவுக்காகச் செலுத்த வேண்டிய வரியைக் கட்டாய வேலையாக வாங்கினார்கள். (1சாமு 8:16). தாவீதும் பக்கத்து தேசத்திலுள்ள ஜனங்களிடத்தில் கட்டாய வேலை வாங்கினான். (1நாளா 22:2; 2சாமு 12:31).

**சாலொமோனிடத்தில் பணிபுரிந்தவர்கள்**

1. அமஞ்சி ஆட்கள் - 30,000பேர்
2. சுமை சுமக்கிறவர்கள் - 70,000பேர்
3. மரம் வெட்டுகிறவர்கள் - 80,000பேர்

"தலைமையான விசாரிப்புக்காரர்" - இவர்களின் எண்ணிக்கை 3,300பேர். (1இராஜா 5:15-16) இவர்கள் தவிர, 1இராஜா 9:23 ஆவது வசனத்தில் மேலும் 550 விசாரிப்புக்காரரைப் பற்றி குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகையினால் விசாரிப்புக்காரரின் மொத்த எண்ணிக்கை 3,850 பேராகும். (2நாளா 8:10).

சிற்பாசாரிகள் (stonesquarers) - גִּבְלִי - ghib-lee' - 1382

ஆ.பெ.சொ.-சிற்பாசாரிகள், கிப்லியர், கிப்லி ஊரார் (1இராஜா 5:18, யோசு 13:5, எசே 27:9; சங் 83:7)

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 6 அதிகாரம்

**(2) தேவாலயக் கட்டுமானப் பணிகள்** - (6:1-7:51; 2நாளா 3:1-4:22)

**(அ) தேவாலயம் கட்ட ஆரம்பித்த நாள்**

1இராஜா 6:1 இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்திலும், சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப்மாதமாகிய இரண்டாம் மாதத்திலும், அவன் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத்தொடங்கினான்.

"இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்திலும்,.........." - எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிய வருஷத்திலிருந்து சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் வரையிலும் உள்ள மொத்தக் காலத்தையும் இது குறிப்பிடவில்லை. இஸ்ரவேல் ஒரு பாதுகாப்பான தேசமாக ஆனதிலிருந்து இப்போது 480 வருஷமாயிற்று. சீனாயில் இஸ்ரவேல் புத்திரர் இருந்தது, வனாந்தரத்தில் சுற்றி அலைந்தது ஆகிய 41 வருஷம் இதில் சேர்க்கப்படவில்லை. மேலும் கானான் தேசத்தை ஜெயிப்பதற்கும், அதைப் பங்குபிரித்துக் கொடுப்பதற்கும் சுமார் 10 வருஷங்களாயிற்று. அபிமெலேக்கின் காலத்தில் சுமார் 3 வருஷம் குழப்பம் நிலவிற்று. இது தவிர, நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் 111 வருஷங்களுக்கு அந்நிய ஜாதியாரிடம் அடிமைகளாக இருந்தார்கள். இந்த வருஷங்கள் இதில் சேர்க்கப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிய காலத்திலிருந்து சாலொமோனின் நாலாம்வருஷ ஆட்சிக் காலம் வரையிலும் இடைப்பட்ட காலம் 645 வருஷங்களாகும்.

இஸ்ரவேலின் வரலாற்றுக் காலத்தைப் பற்றி பலவிதமான கருத்துக்கள் கூறப்படுகிறது. இந்தக் காலத்தில் 330 வருஷத்திலிருந்து 680 வருஷங்கள் வரையிலும் வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு விதமாக விளக்கிக் கூறுகிறார்கள்.

**(ஆ) தேவாலயத்தின் விஸ்தீரணம்**

1இராஜா 6:2 சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது.

**சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயத்தின் அளவு**

1. நீளம் - 90 அடி
2. அகலம் - 30 அடி
3. உயரம் 45 அடி

**(இ) தேவாலயத்தின் முகப்பும் மண்டபமும்**

1இராஜா 6:3 ஆலயமாகிய அந்த மாளிகையின் முகப்பிலே அவன் கட்டின மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாய் இருபதுமுழ நீளமும், ஆலயத்துக்கு முன்னே பத்துமுழ அகலமுமாயிருந்தது.

1இராஜா 6:4 பார்வைக்குக் குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னல்களை ஆலயத்திற்குச் செய்வித்தான்.

1இராஜா 6:5 அவன் தேவாலயத்தின் சுவரும் சந்நிதி ஸ்தானச்சுவருமாகிய ஆலயத்தின் சுவர்களுக்கு அடுத்ததாய்ச் சுற்றுக்கட்டுகளைக் கட்டி, அவைகளில் அறைகளைச் சுற்றிலும் உண்டாக்கினான்.

1இராஜா 6:6 கீழே இருக்கிற சுற்றுக்கட்டு ஐந்து முழ அகலமும், நடுவே இருக்கிறது ஆறு முழ அகலமும், மூன்றாவதாயிருக்கிறது ஏழுமுழ அகலமுமாயிருந்தது; அவைகள் ஆலயத்தினுடைய சுவர்களிலே தாங்காதபடிக்கு ஆலயத்தைச் சுற்றிலும் புறம்பே ஒட்டுச்சுவர்களைக் கட்டுவித்தான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 6 அதிகாரம்

**அந்த மாளிகையின் முகப்பிலே சாலொமோன் கட்டின மண்டபத்தின் அளவு**

1. நீளம் - 30 அடி
2. அகலம் - 15 அடி

"அவைகளில் அறைகளைச் சுற்றிலும் உண்டாக்கினான்" - ஆலயத்தின் வெளிச் சுவர்களில் சுற்றிலும் அறைகள் கட்டப் பட்டிருக்கிறது. இவை ஏழரை அடி உயரமுள்ளவை. (1இராஜா 6:10).

**(ஈ) ஆலயம் கட்டுவதற்குப் பயன்படுத்தப் பட்ட பொருட்கள்**

1இராஜா 6:7 ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை.

"அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை." - தேவாலயம் கட்டப்படும் இடத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்பாகவே அவை நேர்த்தியாகப் பணிதீர்ந்து முடிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த அளவுகள் வேண்டுமோ அந்தெந்த அளவுகளுக்குத் தகுந்தபடி கட்டுமான இடத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்பாகவே அவற்றின் பணிகள் முடிவு பெற்றிருந்தன.

**(உ) வாசற்படி, சுழற்படிகள், சுற்றுக்கட்டுகள்**

1இராஜா 6:8 நடு அறைகளுக்குப் போகிற வாசற்படி ஆலயத்தின் வலதுபுறத்தில் இருந்தது; சுழற்படிகளால் நடு அறைகளுக்கும், நடு அறைகளிலிருந்து மூன்றாவது அறைகளுக்கும் ஏறுவார்கள்.

1இராஜா 6:9 இவ்விதமாய் அவன் ஆலயத்தைக் கட்டி, கேதுருமர உத்திரங்களாலும் பலகைகளாலும் ஆலயத்தை மச்சுப்பாவி முடித்தான்.

1இராஜா 6:10 அவன் ஐந்துமுழ உயரமான சுற்றுக் கட்டுகளை ஆலயத்தின் மேலெங்கும் கட்டுவித்தான்; அவைகள் கேதுருமரங்களால் ஆலயத்தோடே இணைக்கப்பட்டிருந்தது.

**(ஊ) தாவீதோடு சொன்ன வார்த்தையைக் கர்த்தர் சாலொமோனிடம் நிறைவேற்றுகிறார்** - (2சாமு 7:7-17)

1இராஜா 6:11 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாலொமோனுக்கு உண்டாயிற்று; அவர்:

1இராஜா 6:12 நீ என் கட்டளைகளின்படி நடந்து, என் நீதி நியாயங்களை நிறைவேற்றி, என் கற்பனைகளின் படியெல்லாம் நடந்து கொள்ளும்படிக்கு, அவைகளைக் கைக்கொண்டால், நீ கட்டுகிற இந்த ஆலயத்தைக்குறித்து நான் உன் தகப்பனாகிய தாவீதோடே சொன்ன என் வார்த்தையை உன்னிடத்தில் நிறைவேற்றி,

1இராஜா 6:13 இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணி, என் ஜனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்பேன் என்றார்.

1இராஜா 6:14 அப்படியே சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடித்தான்.

"நீ என் கட்டளைகளின்படி நடந்து" - சாலொமோனுக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. சாலொமோன் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்தால் அவனுக்கு ஆசீர்வாதம் உண்டாகும். இல்லையென்றால் அவனுக்கு ஆசீர்வாதம் இல்லை.

### 6 அதிகாரம்

**கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு நிபந்தனைகள்**

1. கர்த்தருடைய கட்டளைகளின்படி நடக்க வேண்டும்.
2. கர்த்தருடைய நீதி நியாயங்களை நிறைவேற்ற வேண்டும்.
3. கர்த்தருடைய கற்பனைகளின்படியெல்லாம் நடந்து கொள்ளும்படிக்கு, அவைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

"இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணி" - தாம் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் வாசம் பண்ணுவதற்கும், அவர்களைக் கைவிடாமல் இருப்பதற்கும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளைக் கர்த்தர் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறி, அவருக்கு எதிராகக் கலகம் பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையை அவர்களுக்கு மறைத்து, அவர்களைத் தண்டிப்பார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (மாற்கு 7:19-21; ரோமர் 1:18-32; ரோமர் 6:1-23; ரோமர் 8:12-13; 2கொரி 3:16-17; 2கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 3:5-10).

"சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடித்தான்" - சாலொமோன் ஆலயத்தைக் கட்டி முடித்ததைப் பற்றி இரண்டு வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 6:9,14). சாலொமோன் ஆலயத்தின் வெளிப்பகுதியைக் கட்டி முடித்தது 1இராஜா 6:9 ஆவது வசனத்திலும், உட்பகுதியைக் கட்டி முடித்தது 1இராஜா 6:14 ஆவது வசனத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

**(எ) கேதுரு பலகைகளால் உட்சுவர்**

1இராஜா 6:15 ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, தளம்தொடங்கிச் சுவர்களின் மேல்மச்சுமட்டும், கேதுருப்பலகைகளால் மூடி, இப்படி உட்புறத்தை மரவேலையாக்கி, ஆலயத்தின் தளத்தை தேவதாரி விருட்சங்களின் பலகைகளால் தளவரிசைப்படுத்தினான்.

**(ஏ) மகா பரிசுத்தமான சந்நிதி ஸ்தானம்** - *(வசனம் 2:20)*

1இராஜா 6:16 தளவரிசை தொடங்கிச் சுவர்களின் உயரமட்டும் ஆலயத்தின் பக்கங்களைத் தொடர்ந்திருக்கிற இருபதுமுழ நீளமான மறைப்பையும் கேதுருப்பலகைகளால் உண்டாக்கி, உட்புறத்தை மகா பரிசுத்தமான சந்நிதி ஸ்தானமாகக் கட்டினான்.

1இராஜா 6:17 அதின் முன்னிருக்கிற தேவாலயமாகிய மாளிகை நாற்பதுமுழ நீளமாயிருந்தது.

1இராஜா 6:18 ஆலயத்திற்குள் இருக்கிற கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருந்தது; பார்வைக்கு ஒரு கல்லாகிலும் காணப்படாமல் எல்லாம் கேதுருமரமாயிருந்தது.

1இராஜா 6:19 கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே சந்நிதி ஸ்தானத்தை ஆயத்தப்படுத்தினான்.

1இராஜா 6:20 சந்நிதி ஸ்தானம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமும், இருபதுமுழ உயரமுமாயிருந்தது; அதைப் பசும்பொன்தகட்டால் மூடினான்; கேதுருமரப் பலிபீடத்தையும் அப்படியே மூடினான்.

## 6 அதிகாரம்

1இராஜா 6:21 ஆலயத்தின் உட்புறத்தைச் சாலொமோன் பசும்பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்தின் மறைப்புக்கு பொன் சங்கிலிகளைக் குறுக்கே போட்டு, அதைப் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:22 இப்படி ஆலயம் முழுவதும் கட்டித் தீருமட்டும், அவன் ஆலயம் முழுவதையும் பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக இருக்கிற பலிபீடத்தை முழுவதும் பொன்தகட்டால் மூடினான்.

"ஆலயத்திற்குள் இருக்கிற கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருந்தது" - ஆலயத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தின் சுவர்கள் கேதுரு மரங்களால் செய்யப்பட்டிருந்தது. அவற்றில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருந்தது. சுவற்றில் கேதுரு மரம் பாவப்பட்டிருப்பதினால், சுவற்றில் கல்லைக் காணமுடியாது. கேதுருமரத்தின்மீது பசும்பொன் பூசப்பட்டிருக்கிறது. பலிபீடமும், பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையிலுள்ள இடமும், பசும்பொன்னால் மூடப்பட்டிருக்கிறது. (1இராஜா 6:18-22).

### (ஐ) இரண்டு கேருபீன்கள்

1இராஜா 6:23 சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருந்தது.

1இராஜா 6:24 கேருபீனுக்கு இருக்கிற ஒரு செட்டை ஐந்து முழமும் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாய், இப்படி ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசி முனைமட்டும் பத்து முழமாயிருந்தது.

1இராஜா 6:25 மற்றக் கேருபீனும் பத்து முழமாயிருந்தது; இரண்டு கேருபீன்களும் ஒரே அளவும் ஒரே திட்டமுமாயிருந்தது.

1இராஜா 6:26 ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது; மற்றக் கேருபீனும் அப்படியே இருந்தது.

1இராஜா 6:27 அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத் தக்கதாயிருந்தது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்க தாயிருந்தது.

1இராஜா 6:28 அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடினான்.

"சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான்" - கேருபீன்களின் உயரம் 15 அடி. ஒவ்வொரு செட்டையின் நீளம் ஏழரை அடி. செட்டைகளுக்கு இடையிலுள்ள அகலம் 15 அடி. கேருபீன்களும் பொன்தகட்டால் மூடப் பட்டிருந்தது. (1இராஜா 6:23-28).

### (ஒ) ஆலயத்தின் சுவர்களும் தளவரிசையும்

1இராஜா 6:29 ஆலயத்தின் சுவர்களையெல்லாம் அவன் சுற்றிலும் உள்ளும் புறம்புமாகக் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களும் கொத்து வேலைகளுமாக்கினான்.

1இராஜா 6:30 உள்ளும் புறம்புமாயிருக்கிற ஆலயத்துத் தளவரிசையையும் பொன்தகட்டால் மூடினான்.

"ஆலயத்தின் சுவர்களையெல்லாம்" - ஆலயத்தின் உட்புறச்சுவர்களும், வெளிப்புறச் சுவர்களும் உள்ளறைகளின் சுவர்களும், வெளியறையின் சுவர்களும், பரிசுத்த ஸ்தலத்தின் சுவர்களும், மகா பரிசுத்த ஸ்தலத்தின் சுவர்களும் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களும் கொத்து வேலைகளுமாகச் செய்யப்பட்டிருக்கிறது. (1இராஜா 6:29-30).

## 6 அதிகாரம்

### (ஓ) இரட்டைக் கதவுகள்

1இராஜா 6:31 சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்தான்; மேல்சட்டமும் நிலைகளும் மறைப்பின் அளவில் ஐந்தில் ஒரு பங்காயிருந்தது.

1இராஜா 6:32 ஒலிவமரமான அந்த இரட்டைக் கதவுகளில் அவன் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களைச் செய்து, அந்தக் கேருபீன்களிலும் பேரீந்துகளிலும் பொன்பதியத்தக்கதாய்ப் பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 6:33 இப்படி தேவாலயத்தின் வாசலுக்கும் ஒலிவமர நிலைகளைச் செய்தான்; அது சுவர் அளவில் நாலத்தொரு பங்காயிருந்தது.

1இராஜா 6:34 அதின் இரண்டு கதவுகளும் தேவதாரிப் பலகைகளால் செய்யப்பட்டிருந்தது; ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும், மற்றக் கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும் இருந்தது.

1இராஜா 6:35 அவைகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திர வேலையைச் செய்து, சித்திரங்களுக்குச் சரியாக செய்யப்பட்ட பொன்தகட்டால் அவைகளை மூடினான்.

"சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்தான்" - மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகும் சந்நிதி ஸ்தானத்தின் வாசலில் இரட்டைக் கதவுகள் உள்ளன. இவை ஒலிவமரங்களால் செய்யப்பட்டவை. அந்த இரட்டைக் கதவுகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்கள் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கேருபீன்களிலும் பேரீந்துகளிலும் பொன்பதியத்தக்கதாய்ப் பொன்தகட்டால் மூடப்பட்டிருக்கிறது. (1இராஜா 6:31-32).

### (ஔ) உட்பிரகாரம்

1இராஜா 6:36 அவன் உட்பிராகாரத்தை மூன்று வரிசை வெட்டின கற்களாலும், ஒரு வரிசை கேதுருப் பலகைகளாலும் கட்டினான்.

"உட்பிராகாரம்" - தேவாலயத்தின் வெளிப் பிராகாரம் 2நாளா 4:9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. உட்பிராகாரம் என்பது எரே 36:10 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் "மேற்பிராகாரமாக" இருக்கலாம். வெளிப் பிராகாரத்தைவிட உட்பிராகாரம் ஒருசில அடிகள் உயர்ந்து காணப்படுகிறது.

### (ஃ) ஆலயம் கட்டித் தீர்ந்தது

1இராஜா 6:37 நாலாம் வருஷம் சீப்மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டு,

1இராஜா 6:38 பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயமுழுதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித் தீர்ந்தது; அவன் அதைக் கட்டிமுடிக்க ஏழுவருஷம் சென்றது.

"சீப்மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டு" - ஆலயத்திற்கு அஸ்திபாரம் இரண்டாம் மாதமாகிய சீப் மாதத்தில் போடப்பட்டது. (1இராஜா 6:1,37) ஆலயம் ஏழரை வருஷங்களுக்குப் பின்பு எட்டாம் மாதமாகிய பூல் மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டது. (1இராஜா 6:38). ஏழாவது மாதத்தில் ஆலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. (1இராஜா 8:2) சாலொமோன் தன்னுடைய வீட்டைக் கட்டுவதற்கு 13 வருஷங்கள் ஆயிற்று. (1இராஜா 7:1).

## 7 அதிகாரம்

### (3) சாலொமோனின் அரமனை

1இராஜா 7:1 சாலொமோன் தன் அரமனை முழுதையும் கட்டிமுடிக்க பதின்மூன்று வருஷம் சென்றது.

1இராஜா 7:2 அவன் லீபனோன் வனம் என்னும் மாளிகையையும் கட்டினான்; அது நூறு முழ நீளமும், ஐம்பதுமுழ அகலமும், முப்பதுமுழ உயரமுமாயிருந்தது; அதைக் கேதுருமர உத்திரங்கள் பாவப்பட்ட கேதுருமரத்தூண்களின் நாலு வரிசைகளின்மேல் கட்டினான்.

1இராஜா 7:3 ஒவ்வொரு வரிசைக்குப் பதினைந்து தூண்களாக நாற்பத்தைந்து தூண்களின் மேல் வைக்கப்பட்ட உத்திரங்களின் மேல் கேதுருக்களால் மச்சுப்பாவியிருந்தது.

1இராஜா 7:4 மூன்று வரிசை ஜன்னல்கள் இருந்தது; மூன்று வரிசையிலும் ஜன்னல்கள், ஒன்றுக்கொன்று எதிராயிருந்தது.

1இராஜா 7:5 ஜன்னல்களின் வாசல்களும் சட்டங்களும் எல்லாம் சதுருமாயிருந்தது; மூன்று வரிசையிலும் ஜன்னல்கள் ஒன்றுக்கொன்று எதிராயிருந்தது.

1இராஜா 7:6 ஐம்பதுமுழ நீளமும் முப்பதுமுழ அகலமுமான மண்டபத்தையும் தூண்கள் நிறுத்திக் கட்டினான்; அந்த மண்டபமும், அதின் தூண்களும், உத்திரங்களும், மாளிகையின் தூண்களுக்கும் உத்திரங்களுக்கும் எதிராயிருந்தது.

1இராஜா 7:7 தான் இருந்து நியாயம் தீர்க்கிறதற்கு நியாயாசனம் போட்டிருக்கும் ஒரு நியாயவிசாரணை மண்டபத்தையும் கட்டி, அதின் ஒருபக்கம் துவக்கி மறுபக்கமட்டும் கேதுருப் பலகைகளால் தளவரிசைப்படுத்தினான்.

"அரமனை முழுதையும் கட்டிமுடிக்க பதின்மூன்று வருஷம் சென்றது" - கர்த்தருடைய தேவாலயத்தைச் சாலொமோன் ஏழு வருஷத்தில் கட்டி முடித்துவிட்டான். ஆனால் தன்னுடைய அரமனையைக் கட்ட அவனுக்கு 13 வருஷமாயிற்று. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் வேதாகமத்தில் எழுதி வைக்குமாறு ஏவியிருக்கிறார். தேவாலயத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய பொருட்களைப் போலவே சாலொமோன் தன் அரமனையைக் கட்டவும் பயன்படுத்தினான். தேவாலயத்தைப் போல சாலொமோனின் அரமனையும் நேர்த்தியாய் இருந்தது.

"லீபனோன் வனம்" - இந்த வாக்கியத்தில் "மாளிகைகையையும் கட்டினான்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் லீபனோன் வனம் என்பது அவனுடைய அரமனை அல்ல. அது வேறொரு கட்டிடம் என்று தெளிவாகிறது. (1இராஜா 7:1) இது தவிர, சாலொமோன் தன் மனைவிக்கும் ஒரு மாளிகையைக் கட்டினான். (1இராஜா 7:8) ஒருவேளை சாலொமோனின் அரமனையில் பல மாளிகைகள் இருந்திருக்க வேண்டும்.

"மண்டபத்தையும் தூண்கள் நிறுத்திக் கட்டினான்" - இந்த மண்டபம் சாலொமோன் நியாயந்தீர்க்கிறதற்குப் பயன்படுத்திய நியாய விசாரணை மண்டபமாகும். (1இராஜா 7:7). அவன் வாசம்பண்ணும் அவனுடைய அரமனை மண்டபத்திற்குள்ளே அதேமாதிரியாகச் செய்யப்பட்ட வேறொரு மண்டபமும் இருந்தது. ராணிக்கும் அந்த மண்டபத்தைப்போல ஒரு மாளிகையை இருந்தது. (1இராஜா 7:8)

**அரமனையில் கட்டப்பட்டிருந்த மாளிகைகளும், மண்டபங்களும்**

1. லீபனோன் வனம் - இது மூன்று அடுக்கு மாளிகை. நீளம் 150 அடி. அகலம் 75 அடி. (1இராஜா 7:2-5)
2. மாளிகையின் கடைசியிலுள்ள மண்டபம். இதன் நீளம் 75 அடி. அகலம் 45 அடி. (1இராஜா 7:6)
3. நியாய விசாரணை மண்டபம் (1இராஜா 7:7)
4. சாலொமோன் வாசம்பண்ணும் அவனுடைய அரமனை மண்டபம். (1இராஜா 7:8)
5. ராணியின் மாளிகை (1இராஜா 7:8)

## 7 அதிகாரம்

### (4) இராணியின் மாளிகை

1இராஜா 7:8 அவன் வாசம்பண்ணும் அவனுடைய அரமனை மண்டபத்திற்குள்ளே அதேமாதிரியாகச் செய்யப்பட்ட வேறொரு மண்டபமும் இருந்தது. சாலொமோன் விவாகம்பண்ணின பார்வோனின் குமாரத்திக்கும் அந்த மண்டபத்தைப்போல ஒரு மாளிகையைக் கட்டுவித்தான்.

### (5) அரமனையும் மாளிகையும் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

1இராஜா 7:9 இவைகளெல்லாம், உள்ளும் புறம்பும், அஸ்திபாரமுதல் மேல்திரணைகள் மட்டும் வெளியே இருக்கும் பெரிய முற்றம்வரைக்கும், அளவுபடி வெட்டி வாளால் அறுக்கப்பட்ட விலையேறப்பெற்ற கற்களால் செய்யப்பட்டது.

1இராஜா 7:10 அஸ்திபாரம் பத்துமுழக் கற்களும், எட்டுமுழக் கற்களுமான விலையேறப் பெற்ற பெரிய கற்களாயிருந்தது.

1இராஜா 7:11 அதின்மேல் உயர அளவுபடி பணிப்படுத்தின விலையேறப்பெற்ற கற்களும், கேதுருமரங்களும் வைக்கப் பட்டிருந்தது.

1இராஜா 7:12 பெரிய முற்றத்திற்குச் சுற்றிலும் மூன்று வரிசைக் கேதுருமர உத்திரங்களாலும் ஒரு வரிசை பணிப்படுத்தின கற்களாலும் செய்யப் பட்டிருந்தது; கர்த்தருடைய ஆலயத்தின் உட்பிராகாரத்திற்கும், அதின் முன்மண்டபத்திற்கும் அப்படியே செய்யப்பட்டிருந்தது.

"வாளால் அறுக்கப்பட்ட விலையேறப்பெற்ற கற்களால் செய்யப்பட்டது" - சாலொமோனின் மண்டபங்களும், மாளிகைகளும் விலையேறப் பெற்ற கற்களால் செய்யப்பட்டது. கற்களின் நீளம் 15 அடி. அகலம் 12 அடி. (1இராஜா 7:9-10). உத்திரங்கள் கேதுரு மரத்தால் செய்யப்பட்டிருந்தன. (1இராஜா 7:11-12). மரங்களையும், கற்களையும் அறுக்கும் வேலையை கி.மு. 1100 - 1000 ஆகிய வருஷங்களிலேயே செய்திருக்கிறார்கள்.

### (6) தேவாலயத்தில் வெண்கல வேலை

### (அ) ஈராமின் வேலை

1இராஜா 7:13 ராஜாவாகிய சாலொமோன் ஈராம் என்னும் ஒருவனைத் தீருவிலிருந்து அழைப்பித்தான்.

1இராஜா 7:14 இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம்பெண்ணின் மகன்; இவன் தகப்பன் தீருநகரத்தானான கன்னான்; இவன் சகலவித வெண்கலவேலையையும் செய்யத் தக்க யுக்தியும் புத்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான்; இவன் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் வந்து, அவன் வேலையெல்லாம் செய்தான்.

"ஈராம்" - இவன் தீருவின் ராஜா அல்ல. இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம்பெண்ணின் மகன்; இவன் தகப்பன் தீருநகரத்தானான கன்னான்; இவன் சகலவித வெண்கலவேலையையும் செய்யத் தக்க யுக்தியும் புத்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான்; இவன் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் வந்து, அவன் வேலையையெல்லாம் செய்தான். (1இராஜா 7:13-14; 2நாளா 2:13; 2நாளா 4:16).

### (ஆ) இரண்டு வெண்கலத் தூண்கள்

1இராஜா 7:15 இவன் இரண்டு வெண்கலத் தூண்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு தூண் பதினெட்டு முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருந்தது.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 7 அதிகாரம்

"வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கினான்" - கி.மு. 1100 - 1000 ஆவது வருஷங்களிலேயே வெண்கல வேலைகளும், உருக்கு வேலைகளும் இருந்தன.

### (இ) இரண்டு கும்பங்கள்

1இராஜா 7:16 அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க, வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருந்தது.

### (ஈ) பின்னல்களும் தொங்கல்களும்

1இராஜா 7:17 தூண்களுடைய முனையின்மேலுள்ள கும்பங்களுக்கு வலைபோன்ற பின்னல்களும் சங்கிலி போன்ற தொங்கல்களும், ஒவ்வொரு கும்பத்திற்கும் எவ்வேழாக இருந்தது.

1இராஜா 7:18 தூண்களைப் பண்ணின விதமாவது: தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்கு, கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதளம் பழங்களைச் செய்வித்தான்.

1இராஜா 7:19 மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின்மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருந்தது.

1இராஜா 7:20 இரண்டு தூண்களின் மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்பிய இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருந்தது; மற்றக் கும்பத்திலும் அப்படியே இருந்தது.

1இராஜா 7:21 அந்தத் தூண்களை தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தினான்; அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீன் என்றும், இடதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு போவாஸ் என்றும் பேரிட்டான்.

1இராஜா 7:22 தூண்களுடைய சிகரத்தில் லீலி புஷ்பவேலை செய்யப்பட்டிருந்தது; இவ்விதமாய்த் தூண்களின் வேலை முடிந்தது.

"யாகீன்" (Jachin) - இந்தப் பெயருக்கு "அவர் (தேவன்) ஸ்தாபிப்பார்" **"He (God) will establish"** என்று பொருள்.

"போவாஸ்" (Boaz) - இந்தப் பெயருக்கு "அவருக்குள் (தேவனுக்குள்) பெலனிருக்கிறது" **"In Him (God) is strength"** என்று பொருள்.

### (உ) வெண்கலக் கடல் என்னும் தொட்டி

- (2நாளா 4:2-5)

1இராஜா 7:23 வெண்கலக் கடல் என்னும் தொட்டியையும் வார்ப்பித்தான்; சுற்றிலும் சக்கராகாரமான அதினுடைய ஒரு விளிம்பு தொடங்கி மறுவிளிம்புமட்டும், அகலம் பத்துமுழமும், உயரம் ஐந்துமுழமும், சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருந்தது.

1இராஜா 7:24 அந்தக் கடல்தொட்டியைச் சுற்றி விளிம்புக்குக் கீழே அதைச் சுற்றிலும் மொக்குகள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து பத்தாகச் செய்யப்பட்டிருந்தது; வார்க்கப்பட்ட அந்த மொக்குகளின் வரிசைகள் இரண்டும் தொட்டியோடு ஒன்றாய் வார்க்கப்பட்டிருந்தது.

"வெண்கலக் கடல்" (brazen sea) - இதன் ஆழம் ஏழரை அடி. விட்டம் 15 அடி. சுற்றளவு 45 அடி. இந்த வெண்கலக் கடலின் எடை 30 டன்களாகும். தூண்களைப்போல வெண்கலக் கடலும் வார்ப்பிக்கப்பட்டிருக்கிறது. (1இராஜா 7:16) அந்தக் கடல்தொட்டியைச் சுற்றி விளிம்புக்குக் கீழே அதைச்சுற்றிலும்மொக்குகள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து பத்தாகச் செய்யப்பட்டிருந்தது; வார்க்கப்பட்ட அந்த மொக்குகளின் வரிசைகள் இரண்டும் தொட்டியோடு ஒன்றாய் வார்க்கப்பட்டிருந்தது. (1இராஜா 7:24). அது பன்னிரண்டு ரிஷபங்களின் மேல் நின்றது (1இராஜா 7:25-26). இந்த வெண்கலக் கடல் தொட்டி 72,000 லிட்டர் தண்ணீர் பிடிக்கக் கூடியது. 2நாளா 4:5 ஆவது வசனத்தில் உள்ள அளவின்படி இந்தத் தொட்டியில் 108,000லிட்டர் தண்ணீர் பிடிக்கும். இந்தத் தொட்டியிலுள்ள தண்ணீர் தினமும் மாற்றப்படும். சுத்திகரிப்பிற்காக இந்தத் தண்ணீர் எப்போதுமே சுத்தமாக இருக்கும்.

## 7 அதிகாரம்

### (ஊ) பன்னிரண்டு ரிஷபங்கள்

1இராஜா 7:25 அது பன்னிரண்டு ரிஷபங்களின் மேல் நின்றது; அவைகளில் மூன்று வடக்கேயும், மூன்று மேற்கேயும், மூன்று தெற்கேயும், மூன்று கிழக்கேயும் நோக்கியிருந்தது; கடல்தொட்டி ரிஷபங்களின் மேலாகவும், அவைகளின் பின்புறங்களெல்லாம் உள்ளாகவும் இருந்தது.

1இராஜா 7:26 அதின் கனம் நாலு விரற்கடையும், அதின் விளிம்பு பானபாத்திரத்தின் விளிம்புபோலும், லீலிபுஷ்பம்போலும் இருந்தது; அது இரண்டாயிரம் குடம் தண்ணீர் பிடிக்கும்.

### (எ) பத்து வெண்கல ஆதாரங்கள்

1இராஜா 7:27 பத்து வெண்கல ஆதாரங்களையும் செய்தான்; ஒவ்வொரு ஆதாரமும் நாலுமுழ நீளமும், நாலுமுழ அகலமும், மூன்று முழ உயரமுமாயிருந்தது.

1இராஜா 7:28 அந்த ஆதாரங்களின் வேலைப்பாடு என்னவெனில், அவைகளுக்குச் சவுக்கைகள் உண்டாயிருந்தது; சவுக்கைகளோ சட்டங்களின் நடுவில் இருந்தது.

1இராஜா 7:29 சட்டங்களுக்கு நடுவே இருக்கிற அந்தச் சவுக்கைகளில் சிங்கங்களும், காளைகளும், கேருபீன்களும், சட்டங்களுக்கு மேலாக ஒரு திரணையும், சிங்கங்களுக்கும் காளைகளுக்கும் கீழாக சாய்வான வேலைப்பாடுள்ள ஜலதாரைகளும் அதனோடே இருந்தது.

1இராஜா 7:30 ஒவ்வொரு ஆதாரத்திற்கு நாலு வெண்கல உருளைகளும், வெண்கலத் தட்டுகளும், அதின் நாலு கோடிகளுக்கு அச்சுகளும் இருந்தது; கொப்பரையின் கீழிருக்க, அந்தக் கொம்மைகள் ஒவ்வொன்றும் வார்ப்பு வேலையாக ஜலதாரைகளுக்கு நேராயிருந்தது.

1இராஜா 7:31 திரணைகளுக்குள்ளான அதின் வாய் மேலாக ஒருமுழம் உயர்ந்திருந்தது; அதின் வாய் ஒன்றரைமுழ சக்கராகாரமும் தட்டையுமாய், அதின் வாய்மேல் சித்திரங்களும் செய்யப்பட்டிருந்தது; அவைகளின் சவுக்கைகள் விருத்தமாயிராமல் சதுரமாயிருந்தது.

1இராஜா 7:32 அந்த நாலு உருளைகள் சவுக்கைகளின் கீழும், உருளைகளின் அச்சுகள் ஆதாரத்திலும் இருந்தது; ஒவ்வொரு உருளை ஒன்றரைமுழ உயரமாயிருந்தது.

1இராஜா 7:33 உருளைகளின் வேலை இரதத்து உருளைகளின் வேலைக்கு ஒத்திருந்தது; அவைகளின் அச்சுகளும், சக்கரங்களும், வட்டங்களும், கம்பிகளும் எல்லாம் வார்ப்புவேலையாயிருந்தது.

1இராஜா 7:34 ஒவ்வொரு ஆதாரத்தினுடைய நாலு கோடிகளிலும், ஆதாரத்திலிருந்து புறப்படுகிற நாலு கொம்மைகள் இருந்தது.

1இராஜா 7:35 ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமான சக்கராகாரமும், ஒவ்வொரு ஆதாரத்தினுடைய தலைப்பின்மேலும் அதிலிருந்து புறப்படுகிற அதின் கைப்பிடிகளும் சவுக்கைகளும் இருந்தது.

1இராஜா 7:36 அவைகளிலிருக்கிற கைப்பிடிகளுக்கும் சவுக்கைகளுக்கும் இருக்கிற சந்துகளிலே, கேருபீன்கள் சிங்கங்கள் பேரீந்துகளுடைய சித்திரங்களைத் தீர்த்திருந்தான்; சுற்றிலும் ஒவ்வொன்றிலும், ஜலதாரைகளிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கதாய்ச் செய்தான்.

1இராஜா 7:37 இந்தப்பிரகாரமாக அந்தப் பத்து ஆதாரங்களையும் செய்தான்; அவைகளெல்லாம் ஒரே வார்ப்பும், ஒரே அளவும், ஒரேவித கொத்து வேலையுமாயிருந்தது.

## 7 அதிகாரம்

"சவுக்கைகள்" (borders) - ஆகாஸ் இவற்றை அகற்றினான். (2இராஜா 16:17) எசேக்கியா இவற்றை மறுபடியும் வைத்தான். (2நாளா 29:19) நேபுகாத்நேச்சார் இவற்றை எடுத்துக் கொண்டபோது, இந்த சவுக்கைகள் தேவாலயத்தில் இருந்தன. (எரே 52:17,20).

**(ஏ) பத்து வெண்கலக் கொப்பரைகள் -** (வசனம் 45; 2நாளா 4:11)

1இராஜா 7:38 பத்து வெண்கலக் கொப்பரைகளையும் உண்டாக்கினான்; ஒவ்வொரு கொப்பரை நாற்பது குடம் பிடிக்கும்; நாலு முழ அகலமான ஒவ்வொரு கொப்பரையும் அந்தப் பத்து ஆதாரங்களில் ஒவ்வொன்றின்மேலும் வைக்கப்பட்டது.

1இராஜா 7:39 ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் வலதுபுறத்திலும், ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் இடது புறத்திலும் வைத்தான்; கடல்தொட்டியைக் கிழக்கில் ஆலயத்தின் வலதுபுறத்திலே தெற்குக்கு நேராக வைத்தான்.

**(ஐ) வெண்கல வேலைப்பாடுகளின் விபரம்**

1இராஜா 7:40 பின்பு ஈராம் கொப்பரைகளையும் சாம்பல் எடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்தான். இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்ய வேண்டிய எல்லா வேலையையும் செய்து முடித்தான்.

1இராஜா 7:41 அவைகள் என்னவெனில்: இரண்டு தூண்களும், இரண்டு தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களும், தூண்களுடைய முனையின் மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும் இரண்டு வலைப் பின்னல்களும்,

1இராஜா 7:42 தூண்களின்மேலுள்ள இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும்படி ஒவ்வொரு வலைப் பின்னலுக்கும் பண்ணின இரண்டு வரிசை மாதளம்பழங்களும், ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்பழங்களும்,

1இராஜா 7:43 பத்து ஆதாரங்களும், ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பரைகளும்,

1இராஜா 7:44 ஒரு கடல்தொட்டியும், கடல் தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு ரிஷபங்களும்,

1இராஜா 7:45 செப்புச்சட்டிகளும், சாம்பல் கரண்டிகளும், கலங்களும் செய்தான்; கர்த்தரின் ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு ஈராம் செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளும் சுத்தமான வெண்கலமாயிருநதது.

**வெண்கல வார்ப்பு வேலைகள்**

1. கொப்பரைகள் (1இராஜா 7:40)
2. சாம்பல் எடுக்கிற கரண்டிகள்
3. கலங்கள்
4. இரண்டு தூண்கள் (1இராஜா 7:41)
5. இரண்டு தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்கள்
6. இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும் இரண்டு வலைப் பின்னல்கள்
7. நானூறு மாதளம்பழங்கள் (1இராஜா 7:42)
8. பத்து ஆதாரங்கள்
9. பத்துக் கொப்பரைகள் (1இராஜா 7:43)
10. ஒரு கடல்தொட்டி
11. கடல் தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு ரிஷபங்கள் (1இராஜா 7:44)

**7 அதிகாரம்**

12. செப்புச்சட்டிகளும், சாம்பல் கரண்டிகளும், கலங்களும் (1இராஜா7:45)

சுத்தமான வெண்கலம் (bright brass) - מָרַט - mo-rawt' - 4803

வினைச்சொல் - விட்டுப்பிரி, விட்டுப்போ, நீங்கு, பிடுங்கப்படு, விட்டு விலகு, ஒழிந்து போ, விலகிப்போ, பின்வாங்கு, அசை, தப்பு, நீக்கு, துலக்கு, பிடுங்கு, பிய்த்திரு, பாழாக்கு, உரி, உதிர், சுத்தமாயிரு **(to polish; make bright; furbish)**

### (ஓ) வார்ப்புப்பட்டரை

1இராஜா 7:46 யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே, சுக்கோத்துக்கும் சர்தானுக்கும் நடுவே களிமண்தரையிலே ராஜா இவைகளை வார்ப்பித்தான்.

1இராஜா 7:47 இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை.

"களிமண்தரையிலே ராஜா இவைகளை வார்ப்பித்தான்" - யோர்தானின் சமவெளியில் வெண்கலம் வார்ப்பிக்கப்பட்டது. சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை. (1இராஜா 7:47).

### (7) தேவாலயத்தின் பொன் வேலை

1இராஜா 7:48 பின்னும் கர்த்தருடைய ஆலயத்துக்குத் தேவையான பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் உண்டாக்கினான்; அவையானவன, பொன் பலிபீடத்தையும் சமுகத்தப்பங்களை வைக்கும் பொன் மேஜையையும்,

1இராஜா 7:49 சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக வைக்கும் பசும்பொன் விளக்குத்தண்டுகள், வலதுபுறமாக ஐந்தையும் இடதுபுறமாக ஐந்தையும், பொன்னான அதின் பூக்களோடும் விளக்குகளோடும் கத்தரிகளோடுங்கூட உண்டாக்கினான்.

1இராஜா 7:50 பசும்பொன் கிண்ணங்களையும், வெட்டுக் கத்திகளையும், கலங்களையும், கலயங்களையும், தூபகலசங்களையும், மகா பரிசுத்தமான உள் ஆலயத்தினுடைய கதவுகளின் பொன்னான முளைகளையும், தேவாலயமாகிய மாளிகைக் கதவுகளின் பொன்னான முளைகளையும் செய்தான்.

1இராஜா 7:51 இவ்விதமாய் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிந்தது; அப்பொழுது சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம் பண்ணும் படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் கொண்டுவந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைத்தான்.

### பொன்வேலைகள்

1. பொன் பலிபீடம்
2. சமுகத்தப்பங்களை வைக்கும் பொன் மேஜை
3. பசும்பொன் விளக்குத்தண்டுகள் - 10 (1இராஜா 7:49)
4. கத்தரி
5. பசும்பொன் கிண்ணங்கள் (1இராஜா 7:50)
6. வெட்டுக்கத்திகள்
7. கலங்கள்
8. கலயங்கள்
9. தூபகலசங்கள்
10. மகா பரிசுத்தமான உள் ஆலயத்தினுடைய கதவுகளின் பொன்னான முளைகள்

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

**(8) தேவாலயப் பிரதிஷ்டை** - *(8:1-9:9; 2நாளா 5:2-7:22)*

**(அ) கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி** - *(2நாளா 5:2-14)*

1இராஜா 8:1 அப்பொழுது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டு வரும்படி சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரையும், எருசலேமில் ராஜாவாகிய சாலொமோன் தன்னிடத்திலே கூடிவரச்செய்தான்.

1இராஜா 8:2 இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானீம்மாதத்துப் பண்டிகையிலே, ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவந்தார்கள்.

1இராஜா 8:3 இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் வந்திருக்கையில், ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்து,

1இராஜா 8:4 பெட்டியையும், ஆசரிப்புக் கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்து கொண்டுவந்தார்கள்; ஆசாரியரும், லேவியரும், அவைகளைச் சுமந்தார்கள்.

1இராஜா 8:5 ராஜாவாகிய சாலொமோனும் அவனோடேகூடின இஸ்ரவேல் சபையனைத்தும் பெட்டிக்கு முன்பாக நடந்து, எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டார்கள்.

1இராஜா 8:6 அப்படியே ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்து வைத்தார்கள்.

1இராஜா 8:7 கேருபீன்கள் பெட்டியிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் இரண்டு செட்டைகளையும் விரித்து, உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருந்தது.

1இராஜா 8:8 தண்டுகளின் முனைகள் சந்நிதி ஸ்தானத்திற்கு முன்னான பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை முன்னுக்கு இழுத்தார்கள்; ஆகிலும் வெளியே அவைகள் காணப்பட வில்லை; அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேதான் இருக்கிறது.

1இராஜா 8:9 இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபின் கர்த்தர் அவர்களோடே உடன்படிக்கை பண்ணுகிறபோது, மோசே ஓரேபிலே அந்தப் பெட்டியில் வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை.

1இராஜா 8:10 அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில், மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

1இராஜா 8:11 மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாமற் போயிற்று; கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

"சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரை...... தன்னிடத்திலே கூடிவரச்செய்தான்" - தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள பணிமுட்டுகளெல்லாம் செய்யப்பட்டு விட்டன. அதன் பின்பு சாலொமோன் இஸ்ரவேலின் கோத்திரப்பிதாக்களையும், குடும்பத்தின் தலைவர்களையும், மூப்பர்களையும் சீயோனிலிருந்து உடன்படிக்கைப் பெட்டியை எடுத்து வருவதற்காகத் தன்னிடத்தில் கூடிவரச்செய்தான்.

"ஏழாம் மாதமாகிய ஏத்தானீம்மாதத்துப் பண்டிகை" - இஸ்ரவேலின் புருஷர் எல்லோரும் கூடாரங்களின் பண்டிகையின்போது கூடிவருவது வழக்கம். இது அவர்களுடைய ஏழாம் மாதத்தில் நடைபெறும். தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு 11 மாதங்களுக்குப் பின்பு இந்தப் பண்டிகை வருகிறது. (1இராஜா 6:38).

## 8 அதிகாரம்

"ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்து" - உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கு ஆசாரியர் மட்டுமே சுத்திகரிக்கப் பட்டிருக்கிறார்கள். தாவீது உடன்படிக்கைப் பெட்டியை எடுத்து வந்தபோது, ஆசாரியர்கள் அதைச் சுமப்பதற்குப் பதிலாக அதை ஒரு மாட்டு வண்டியில் தூக்கி வந்தான். இது ஒரு தவறு. சாலொமோன் தாவீது செய்த தவறைச் செய்யாமல், மிகுந்த கவனத்தோடு செயல்படுகிறான். (2சாமு 6; எண் 3:39-41; எண் 4:4,15; உபா 10:8; 1நாளா 15:2,15).

"ஆசரிப்புக்கூடாரம்" - மோசேயின் ஆசரிப்புக் கூடாரம் கிபியோனில் இருந்தது. (2நாளா 1:3-4).

"மகாபரிசுத்த ஸ்தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்து வைத்தார்கள்" - சாலொமோன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்திருக்கிறான். அவற்றின் செட்டைகளின்கீழ் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள் கொண்டு வந்து வைக்கிறார்கள். (1இராஜா 8:7-11; 1இராஜா 6:23-28).

"தங்கள் இரண்டு செட்டைகளையும் விரித்து" - சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருந்தது. கேருபீனுக்கு இருக்கிற ஒரு செட்டை ஐந்து முழமும் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாய், இப்படி ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசிமுனைமட்டும் பத்து முழமாயிருந்தது. மற்றக் கேருபீனும் பத்து முழமாயிருந்தது; இரண்டு கேருபீன்களும் ஒரே அளவும் ஒரே திட்டமுமாயிருந்தது. ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது; மற்றக் கேருபீனும் அப்படியே இருந்தது. சாலொமோன் அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத் தக்கதாயிருந்தது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருந்தது. சாலொமோன் அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால்மூடினான். (1இராஜா 6:23-28).

"அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேதான் இருக்கிறது" - 1இராஜாக்கள் புஸ்தகம் எழுதப் பட்ட காலத்தில் சாலொமோன் கட்டிய தேவாலயம் அழிக்கப்படாமல் நன்றாக இருந்திருக்கிறது. நேபுகாத்நேச்சார் தேவாலயத்தை இடித்துப்போட்டான். இஸ்ரவேல் புத்திரரின் சிறையிருப்புக்கு முன்பாக ராஜாக்கள் புஸ்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆகையினால்தான், இந்த வசனத்தில் "அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேதான் இருக்கிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. (2நாளா 5:9; 2இராஜா 8:22; 2இராஜா 10:27).

"இரண்டு கற்பலகைகள்" - சாலொமோனின் காலத்தில் உடன்படிக்கைப் பெட்டிக்குள் மோசே ஓரேபிலே அந்தப் பெட்டியில் வைத்த இரண்டு கற்பலகைகள் மட்டுமே இருந்தன. எபி 9:4 ஆவது வசனத்தில் அந்தப் பெட்டியில் மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்தகோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளோடு இருந்ததாகப் பவுல் எழுதியிருக்கிறார். பவுல் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றிதான் எழுதியிருக்கிறார். தேவாலயத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றி பவுல் எழுதவில்லை. இந்தப் பெட்டியிலிருந்து மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்தகோலும் எப்போது வெளியே எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஒருவேளை பெலிஸ்தர் இந்தப் பெட்டியை எடுத்துச் சென்றபோதோ அல்லது உடன்படிக்கைப் பெட்டிக்குள் நோக்கிப் பார்த்து, பலர் மரித்துப்போனபோதோ இவ்விரண்டு பொருட்களும் வெளியே எடுக்கப்பட்டிருக்கலாம். (1சாமு 5-6). பத்து கற்பனைகள் எழுதப்பட்டிருந்த அதே கற்பலகைகள் உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருந்தன.

"மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று" - ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வைக்கிறார்கள். அங்குள்ள பரிசுத்த பணிமுட்டுகளையெல்லாம் ஒழுங்கு செய்கிறார்கள். அதன் பின்பு, அவர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு, வெளியேறி விடுகிறார்கள். வெளியேறியவர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் மறுபடியும் பிரவேசிக்கக் கூடாது. பிரதான ஆசாரியன் மட்டுமே வருஷத்திற்கு ஒருமுறை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியேறிய பின்பு, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்கிறதற்கு நிற்கக்கூடாமற் போயிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. (1இராஜா 8:10-11).

"கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று" - கர்த்தருடைய பிரசன்னத்திற்கு கர்த்தருடைய மகிமை ஓர் அடையாளமாகும். உடன்படிக்கைப் பெட்டியைச் செய்வதற்கு முன்பாகக் கர்த்தர் தமது மகிமையைப் பற்றி வாக்குப்பண்ணியிருக்கிறார். (யாத் 29:43) ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபனம் பண்ணி முடித்தவுடன், கர்த்தருடைய மகிமை அங்கு வந்து இறங்கிற்று. (யாத் 40:34) இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணுகையில், அவர்கள் கர்த்தருடைய மகிமையைக் கண்டார்கள். (யாத் 13:21-22; யாத் 14:24; யாத் 19:18; யாத் 40:38; எண் 14:14).

**(ஆ) சாலொமோனின் பிரசங்கம்** - (2நாளா 6:1-11; பிர 1:1)

1இராஜா 8:12 அப்பொழுது சாலொமோன்: காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார் என்றும்,

1இராஜா 8:13 தேவரீர் வாசம்பண்ணத் தக்க வீடும், நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன் என்றும் சொல்லி,

1இராஜா 8:14 ராஜா முகம் திரும்பி, இஸ்ரவேல் சபையெல்லாம் ஆசீர்வதித்தான்; இஸ்ரவேல் சபையாரெல்லாரும் நின்றார்கள்.

1இராஜா 8:15 அவன் சொன்னது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்.

1இராஜா 8:16 அவர் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள ஒரு பட்டணத்தையும் தெரிந்துகொள்ளாமல் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிகாரியாயிருக்கும்படி தாவீதையே தெரிந்துகொண்டேன் என்றார்.

1இராஜா 8:17 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தில் இருந்தது.

1இராஜா 8:18 ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்லகாரியந்தான்.

1இராஜா 8:19 ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றார்.

1இராஜா 8:20 இப்போதும் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்ன படியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன்.

1இராஜா 8:21 கர்த்தர் நம்முடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கை இருக்கிற பெட்டிக்காக அதிலே ஒரு ஸ்தானத்தை உண்டாக்கினேன் என்றான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

"அப்பொழுது சாலொமோன்" - மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து ஆசாரியர்கள் வெளியேறிய பின்பு, கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிய சமயத்தில் சாலொமோன் ஒரு சிறிய பிரசங்கம் பண்ணுகிறான். (1இராஜா 8:12-21) மேலும் ஆலயத்தைக் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்து, சாலொமோன் நீண்டதொரு ஜெபமும் ஏறெடுக்கிறான். (1இராஜா 8:22-54).

"காரிருளிலே வாசம்பண்ணுவேன்" - கர்த்தர் இந்த வாக்கியத்தை எங்கே சொல்லியிருக்கிறார் என்று தெரியவில்லை. சீனாய் மலையில் கர்த்தர் கார்மேகத்தில் இருந்தார். (யாத் 20:21) தேவனுடைய இந்தத் தரிசனத்தை வைத்து, சாலொமோன் இந்த வாக்கியத்தைக் கூறியிருக்கலாம். தாவீது கர்த்தருடைய பிரசன்னத்தை இவ்வாறு விவரித்திருக்கிறார். "அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது" (சங் 18:9), "இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார்" (சங் 18:11), "உமக்கு இருளும், வெளிச்சமும் சரி" (சங் 139:12). சாலொமோன் தாவீதின் வர்ணனையைப் படித்துப் பார்த்து, இந்த வாக்கியத்தைக் கூறியிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. அப்போஸ்தலர் பவுல் கர்த்தர் வாசம்பண்ணுவதைப் பற்றிக் குறிப்பிடும்போது "சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர்" என்று எழுதியிருக்கிறார். (1தீமோ 6:16). மோசே கர்த்தரை அவருடைய மகிமையில் தரிசிக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் கர்த்தர் மோசேக்கு அதை அனுமதிக்கவில்லை. கர்த்தருடைய மகிமையின் ஒரு பகுதியை மட்டுமே மனுஷரால் தரிசிக்க முடியும். (யாத் 33:18-23).

"நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானம்" - கர்த்தர் இனிமேல் ஓரிடத்திலிருந்து அடுத்த இடத்திற்குத் தூக்கிச் சுமக்கப்படும் கூடாரத்தில் தங்குவதில்லை என்பது இதன் வியாக்கியானமாகும்.

"தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னது" - சாலொமோன் நல்ல பிரசங்கியார். தன்னுடைய பிரசங்கச் செய்திக்கு ஒரு சிறிய முன்னுரையைக் கொடுக்கிறார். கர்த்தருடைய வார்த்தையை ஆதாரமாக வைத்தே பிரசங்கம் பண்ணுகிறார். தனக்கும், தன்னுடைய ஜனங்களுக்கும் தேவனுடைய வார்த்தை சம்மந்தப்பட்டிருப்பதைச் சாலொமோன் விளக்கிக் கூறுகிறார். (1இராஜா 8:15-21).

"என் ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு" - தம்முடைய ஆலயம் எங்கு கட்டப்பட வேண்டுமென்று கடந்த 600 வருஷக்காலமாகக் கர்த்தர் எந்த முடிவும் பண்ணவில்லை. தாவீதின் காலத்தில்தான், கர்த்தருடைய சித்தம் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாவீதைச் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகத் தெரிந்தெடுத்தார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் தாவீதின் இருதயத்தில் இருந்தது. கர்த்தர் அந்த விருப்பத்தை அங்கிகரித்தார். (1இராஜா 8:17-18; 2சாமு 7) ஆனாலும் கர்த்தர் தாவீதிடம் "நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்" என்று கூறிவிடுகிறார். (1இராஜா 8:19). இப்போது சாலொமோனின் ஆட்சிக் காலத்தில் கர்த்தருடைய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு, பிரதிஷ்டை பண்ணப்படுகிறது. (1இராஜா 8:20-21, 2நாளா 6:5).

**தீர்க்கதரிசன எண் - 4**

"நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்" (1இராஜா 8:19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

**(இ) சாலொமோனின் பிரதிஷ்டை ஜெபம்** - (2நாளா 6:12-42)

**(i) கடந்த காலத்தில் கர்த்தர் உண்மையுள்ளவராயிருந்தார்**

1இராஜா 8:22 பின்பு சாலொமோன்: கர்த்தருடைய பலிபீடத்திற்குமுன்னே இஸ்ரவேல் சபை யாரெல்லாருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராய்த் தன் கைகளை விரித்து:

1இராஜா 8:23 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்.

1இராஜா 8:24 தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்.

"கர்த்தருடைய பலிபீடம்" - சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே நிற்கிறான். இது தேவாலயத்தின் வெளிப் பிராகாரத்தில் இருக்கும் வெண்கலப் பலிபீடமாகும். (1இராஜா 8:54; 2நாளா 6:13).

**சாலொமோன் தன் ஜெபத்தில் கர்த்தரை அழைக்கிற விதம்**

1. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே (1இராஜா 8:2325)
2. இஸ்ரவேலின் தேவனே (1இராஜா 8:26)
3. என் தேவனாகிய கர்த்தாவே (1இராஜா 8:28)
4. கர்த்தராகிய ஆண்டவரே (1இராஜா 8:53)

**சாலொமோனின் ஜெபமும், ஆசீர்வாதமும்**

1. கடந்தகால ஆசீர்வாதங்களின் அங்கீகாரம். (1இராஜா 8:22-24)
2. கர்த்தர் இஸ்ரவேலைத் தொடர்ந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்னும் விண்ணப்பம். (1இராஜா 2:25-26)
3. கர்த்தருடைய சர்வ வியாபகம். (1இராஜா 8:27)
4. தேவாலயத்தை நோக்கி ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்க வேண்டுமென்னும் விண்ணப்பம். (1இராஜா 8:28-30)
5. நீதியான நியாயத்தீர்ப்பிற்கான விண்ணப்பம். (1இராஜா 8:31-32)
6. மன்னிப்பு, சிறையிருப்பிலிருந்து மீட்கப்படுதல் பற்றிய விண்ணப்பம். (1இராஜா 8:33-34)
7. மன்னிப்பு, வானத்திலிருந்து மழை பெய்வது ஆகியவை பற்றிய விண்ணப்பம். (1இராஜா 8:35-36)
8. மன்னிப்பு பற்றிய விண்ணப்பமும், பஞ்சம், சத்துருக்கள், வியாதி ஆகியவற்றிலிருந்து மீட்கப்படுவது பற்றிய விண்ணப்பமும். (1இராஜா 8:37-40)
9. தேவாலயத்தை நோக்கி ஜெபித்து, இஸ்ரவேலின் தேவனைத் தேடும் புறஜாதியாரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டுமென்னும் விண்ணப்பம். (1இராஜா 8:41-43)
10. யுத்தக்காலத்தில் கர்த்தர் இஸ்ரவேலைப் பாதுகாக்க வேண்டும் என்னும் விண்ணப்பம். (1இராஜா 8:44-45)
11. மன்னித்து சிறையிருப்பிலிருந்து மீட்க வேண்டுமென்னும் விண்ணப்பம். (1இராஜா 8:46-53)

**8 அதிகாரம்**

12. இஸ்ரவேல்மீது ஆசீர்வாதம். (1இராஜா 8:54-61)

**முழு இருதயத்தோடு செய்ய வேண்டிய காரியங்கள்**

1. கர்த்தரிடத்தில் திரும்பி வருவது. (1இராஜா 8:48; உபா 30:2)
2. கர்த்தருக்கு முன்பாக நடப்பது. (1இராஜா 2:4; 1இராஜா 8:23)
3. கர்த்தரைச் சேவிப்பது. (உபா 11:13; யோசு 22:5)
4. கர்த்தரிடத்தில் அன்புகூருவது. (உபா 30:6; மத் 22:37)
5. கர்த்தருடைய வார்த்தையைக் காத்துக் கொள்வது. (உபா 26:16)
6. கர்த்தரைப் பின்பற்றுவது. (1இராஜா 14:8)
7. கர்த்தரைத் தேடுவது (2நாளா 15:12-15; 2நாளா 22:9)
8. கர்த்தரைத் துதிப்பது. (சங் 86:12)
9. கர்த்தரை நம்புவது (நீதி 3:5)
10. கர்த்தரிடத்தில் விசுவாசம் வைப்பது. (அப் 8:37; ரோமர் 10:9-10)

“வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்” - கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களையும், உடன்படிக்கைகளையும் காத்துக் கொள்ளவில்லை என்று யாராலும் அவர்மீது குற்றம் சுமத்த முடியாது. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது. (2கொரி 1:20).

(ii) **இஸ்ரவேலைத் தொடர்ந்து ஆசீர்வதியும்** - (2நாளா 6:16-17)

1இராஜா 8:25 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும்.

1இராஜா 8:26 இஸ்ரவேலின் தேவனே, என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்யென்று விளங்குவதாக.

**தீர்க்கதரிசன எண் - 5**

“இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை” (1இராஜா 8:25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்த வாக்கியம் ஏற்கெனவே கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனமாகும். (1இராஜா 2:4; 2சாமு 7:12; சங் 132:12; எரே 33:20-33; லூக்கா 1:32-33).

(iii) **தேவன் சர்வ வியாபகர்** - (2நாளா 6:18)

1இராஜா 8:27 தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

"தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ?" - ஆம். தேவன் மெய்யாகவே பூமியிலே வாசம் பண்ணுவார். கர்த்தர் பரலோகத்தில் வாசம் பண்ணுவதுபோலவே பூமியிலும் பிரத்தியட்சமாக, நித்தியமாக வாசம்பண்ணுவார். (ஏசா 66:22-24; தீத்து 2:13; வெளி 21:1-27; வெளி 22:4-5). இப்போது கர்த்தர் வானத்தில் மட்டுமே வாசம் பண்ணுகிறார். அதுபோல இனிமேல் அவர் பூமியில் மட்டுமே வாசம்பண்ணுவார் என்று பொருள்கூறக்கூடாது. ஏனெனில் கர்த்தர் சர்வ வியாபகர். கர்த்தருடைய சரீரம் ஒருவேளையில் ஒரு இடத்தில் மட்டுமே இருந்தாலும், அவருடைய பிரசன்னம் எல்லா வேளையிலும் எல்லா இடத்திலும் இருக்கும்.

**(iv) தேவாலயத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்பீராக** - (2நாளா 6:19)

1இராஜா 8:28 என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் இன்று உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு, உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்.

1இராஜா 8:29 உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக.

1இராஜா 8:30 உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப் போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்; பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக.

**சாலொமோனின் பிரதான விண்ணப்பம்**

1. இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக..
2. உமது அடியானுடைய ஜெபத்தைக் கேட்டருளும்.
3. இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேல் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்.
4. எங்கள் ஜெபத்தைக் கேட்டு எங்களை மன்னிப்பீராக.

**(v) நீதிக்குத்தக்கதாய் நியாயந்தீர்ப்பீராக** - (2நாளா 6:22-23)

1இராஜா 8:31 ஒருவன் தன் அயலானுக்குக் குற்றஞ்செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச்சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன் வந்தால்,

1இராஜா 8:32 அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனைக் குற்றவாளியாகத் தீர்க்கவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவும் தக்கதாய் உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக.

**சாலொமோனின் விண்ணப்பத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் "ஆல்" "If's", "அப்பொழுது" "When's", என்னும் நிபந்தனைகள்**

1. ஒருவன் தன் அயலானுக்குக் குற்றஞ் செய்திருக்கையில்.... (1இராஜா 8:31-32)

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

2. இந்த ஆலயத்துக்கு நேராக உம்மை நோக்கி விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால்.... (1இராஜா 8:33-34)

3. தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால், .... (1இராஜா 8:35-36)

4. தேசத்திலே பஞ்சம் உண்டாகிற போதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும்.... (1இராஜா 8:37-40)

5. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உமது மகத்துவமான நாமத்தையும்.... (1இராஜா 8:41-43)

6. நீர் உம்முடைய ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும் போது..... (1இராஜா 8:44-45)

7. அவர்கள் சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி...... (1இராஜா 8:47-53)

(vi) **பாவங்களை மன்னித்து அடிமைத்தனத்தை நீக்குவீராக** - (2நாளா 6:24)

1இராஜா 8:33 உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கை பண்ணி, இந்த ஆலயத்துக்கு நேராக உம்மை நோக்கி விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால்,

1இராஜா 8:34 பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்கள் பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவீராக.

1இராஜா 8:35 அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும் போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால்,

**சாலொமோனுடைய ஜெபத்தில் தீர்க்கதரிசன அம்சங்கள்**

1. உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய்..... (1இராஜா 8:33)

2. அவர்கள் பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவீராக. (1இராஜா 8:34)

3. அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழை பெய்யாதிருக்கும் போது...... (1இராஜா 8:35)

4. தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில்..... (1இராஜா 8:35)

5. தேசத்திலே பஞ்சம் உண்டாகிற போதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிறபோதும்...... (1இராஜா 8:37)

6. அவர்கள் சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை முற்றிக்கைபோடுகிற போதும்..... (1இராஜா 8:37)

7. யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வருகிறபோதும், (1இராஜா 8:37)

8. அவர்கள் சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அந்தச் சத்துருக்கள் அவர்களைத் தூரத்திலாகிலும் சமீபத்திலாகிலும் இருக்கிற தங்கள் தேசத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டு போகும்போது..... (1இராஜா 8:46-53)

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 8 அதிகாரம்

### பாவத்தை விட்டு விலகி வரும் வழிகள்

1. கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். (1இராஜா 8:33)
2. கர்த்தருடைய நாமத்தை அறிக்கை பண்ண வேண்டும். (1இராஜா 8:33,35)
3. கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும். (1இராஜா 8:33)
4. தங்கள் பாவங்களைவிட்டு திரும்ப வேண்டும். (1இராஜா 8:35)
5. கர்த்தருக்குப் பயப்படவேண்டும். (1இராஜா 8:43)
6. மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்ய வேண்டும். (1இராஜா 8:47)
7. தாங்கள் செய்த பாவங்களை அங்கிகரிக்க வேண்டும்.
8. தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். (1இராஜா 8:48)

### கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதங்கள்

1. பரலோகத்திலிருக்கிற கர்த்தர் அவர்கள் ஜெபங்களைக் கேட்டு அவர்கள் அறிக்கையிட்ட எல்லாப் பாவங்களையும் மன்னிப்பார். (1இராஜா 8:34,36,38)
2. அவர்கள் நடக்க வேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதிப்பார். (1இராஜா 8:36)
3. உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைக் கொடுப்பார்.
4. அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதில் தருவார். (1இராஜா 8:38,52)
5. அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்க பலனளிப்பார். (1இராஜா 8:40)
6. கர்த்தருக்குப் பயப்படும் பயத்தைக் கற்றுக் கொள்வார்கள். கர்த்தருடைய மகத்துவமான நாமத்தைக் கேள்விப் படுவார்கள். (1இராஜா 8:40,43)
7. அவர்களுடைய நியாயத்தைக் கர்த்தர் விசாரிப்பார். (1இராஜா 8:45,49)
8. மனுஷருடைய இரக்கம் அவர்களுக்குக் கிடைக்கும். (1இராஜா 8:50)

"அவர்கள் பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவீராக" - எஸ்றா, நெகேமியா ஆகியோரின் காலத்தில் இந்த வாக்கியம் நிறைவேறிற்று. ஏசாயாவும், இதை முன்னறிவித்திருக்கிறார். (ஏசா 11:10-12) இந்த வாக்கியத்தில் "அவர்கள்" என்பது சமஸ்த இஸ்ரவேலையும் குறிக்கும். இஸ்ரவேல் புத்திரர் அனைவருமே கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். மேசியா அவர்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார். (ஏசா 11:10-12; எரே 30-31; எசே 36-37,47-48; சக 12-14; மத் 24:29-31; ரோமர் 11:25-29).

"வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும் போது" - கர்த்தருக்குக் கீழ்ப்படியவில்லை யென்றால், சாபம் வரும். இது மோசேயின் பிரமாணம். இதைச் சாலொமோன் நன்கு அறிந்து வைத்திருக்கிறான். (லேவி 26; உபா 28). மழை பெய்யாமல் இருப்பது கர்த்தருடைய சாபமாகும். பூமியின் வம்சங்களில் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை. இது ஆயிரம் வருஷ ஆட்சிக் காலத்தில் நடைபெறும் சம்பவம். (சக 14:16-21).

"இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ் செய்து" - சாலொமோன் தன்னுடைய ஜெபத்தில் தேவாலயத்திற்கு நேராக விண்ணப்பம் பண்ணுவதைக் குறித்து எட்டு இடங்களில் கூறியிருக்கிறார். (1இராஜா 8:29-30,35, 38,42,44) எருசலேமிற்கும், பாலஸ்தீனத்திற்கும் நேராக ஜெபம் பண்ணுவதைப் பற்றி 2 தடவை கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 8:44,48).

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

**(vii தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக** - (2நாளா 6:26)

1இராஜா 8:36 பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக.

**(viii) வாதையையும் வியாதியையும் நீக்குவீராக**

1இராஜா 8:37 தேசத்திலே பஞ்சம் உண்டாகிற போதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிற போதும், அவர்கள் சத்துருக்கள் தேசத்திலுள்ள பட்டணங்களை முற்றிக்கை போடுகிறபோதும், யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வருகிறபோதும்,

1இராஜா 8:38 உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் அனைவரிலும் எந்த மனுஷனானாலும் தன் இருதயத்தின் வாதையை உணர்ந்து, இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும்,

1இராஜா 8:39 உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து,

1இராஜா 8:40 தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படிக்கு தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக.

"தேசத்திலே பஞ்சம் உண்டாகிற போதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும்" - மனுஷருடைய பாவத்தின் நிமித்தம் இவையெல்லாம் அவர்கள்மீது வரும் சாபமாகும். (லேவி 26, உபா 28)

"இந்த ஆலயத்துக்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும்" - ஜெபம் பண்ணும்போது நாம் இருக்க வேண்டிய விதத்தில் இதுவும் ஒன்று. (1இராஜா 8:22,38).

"உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகம்" - இப்போது பரலோகம் கர்த்தருடைய வாசஸ்தலமாக இருக்கிறது. புதிய பூமியில் அவர் பூமியின்மீது வாசம்பண்ணுவார். (ஏசா 66:22-24; வெளி 21-22).

"தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால்" - கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. அவர் மட்டுமே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்திருக்கிறார். (சங் 139:4; அப் 1:24).

**(ix) அந்நிய ஜாதியாரையும் ஆசீர்வதிப்பீராக** - (2நாளா 6:32)

1இராஜா 8:41 உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உமது மகத்துவமான நாமத்தையும், உமது பலத்த கரத்தையும், உமது ஓங்கிய புயத்தையும் கேள்விப்படுவார்களே.

1இராஜா 8:42 அப்படிக்கொத்த அந்நிய ஜாதியானும், உமது நாமத்தினிமித்தம் தூர தேசத்திலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம் பண்ணினால்,

## 8 அதிகாரம்

1இராஜா 8:43 உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும் படிக்கும், உம்முடைய நாமத்தை அறியத் தக்கதாக, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின் படியெல்லாம் தேவரீர் செய்வீராக.

"அந்நிய ஜாதியார்" - சாலொமோன் தன்னுடைய ஞானத்தில் புறஜாதியாரையும் நினைத்துப் பார்க்கிறான். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைக் கர்த்தர் அழைத்தபோது, புறஜாதியார்மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் வந்திருக்கிறது. இவர்கள் மூலமாகவும் இவர்கள் சந்ததியார் மூலமாகவும் எல்லா ஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ஆதி 12:1-3; கலா 3:8; வெளி 5:8-10; வெளி 7:9-17; எண் 15:14; உபா 10:19).

"உமது மகத்துவமான நாமத்தை ...... கேள்விப்படுவார்களே" - புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (ரோமர் 10:9-17; மாற்கு 16:15-20; 2கொரி 1:18-24).

"அந்நிய ஜாதியானும், உமது நாமத்தினிமித்தம் தூர தேசத்திலிருந்து வந்து" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் எல்லாத் தேசத்தாரும் எருசலேமில் கர்த்தரை ஆராதிப்பார்கள். (ஏசா 2:2-4; சக 14:16-21).

"உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல" - தாவீதின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவரைத் துதித்து ஸ்தோத்தரிக்கும் மனப்பக்குவத்தில் இருந்தார்கள். சாலொமோனின் நாட்களிலும் இந்த நிலைமை தொடர்ந்தது. அதன் பின்பு, இஸ்ரவேல் புத்திரர் பல பாவங்களில் விழுந்து, தங்களுடைய அழிவைத் தேடிக் கொண்டார்கள். (2இராஜா 24-25; லூக்கா 1:20-24). ஆயிரம் வருஷ அரசாட்சியில் கர்த்தர் பூமியில் பிரத்தியட்சமாக ஆட்சி புரிவார். அப்போது எல்லா ஜனங்களும் கர்த்தருக்குப் பயந்து அவரை அறிந்து கொள்வார்கள். (ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 65:20-25; ஏசா 66:19-21; சக 8:23; சக 14:16-21).

"அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்வீராக" - சாலொமோன் சுயநலமில்லாமல் ஜெபிக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தாருக்காக ஜெபித்ததுபோலவே சாலொமோன் புறஜாதியாருக்காகவும் ஜெபிக்கிறான். (1இராஜா 8:43 = 1இராஜா 8:38). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு நமக்குப் பதில் கொடுப்பார். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:4-8; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:14-15).

### (x) யுத்தத்தில் இஸ்ரவேலைப் பாதுகாப்பீராக - (2நாளா 6:36)

1இராஜா 8:44 நீர் உம்முடைய ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும் போது, நீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்துக்கும், உம்முடைய நாமத்துக்கு நான் கட்டின இந்த ஆலயத்துக்கும் நேராகக் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினால்,

1இராஜா 8:45 பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக.

"அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும்போது" - கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தைப் பாதுகாப்பார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணி, பாவம் செய்யக்கூடாது. பாவம் செய்தால், கர்த்தர் அவர்களைத் தண்டித்துப் போடுவார். கர்த்தருடைய பாதுகாப்பு அவர்களுக்கு இராது. (1இராஜா 8:44-45).

## 8 அதிகாரம்

"நீர் தெரிந்துகொண்ட இந்த நகரம்" - இது எருசலேம் நகரத்தைக் குறிக்கும். தாவீது இந்த நகரத்தைத் தெரிந்து கொண்டார். கர்த்தரும் இந்த நகரத்தையே தமக்குத் தலைநகரமாகத் தெரிந்து கொண்டார். (1நாளா 22:1; சங் 78:68; சங் 132:13).

"அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக" - கர்த்தருடைய பிள்ளைகள் நீதியாக ஜீவித்தால், அவர்களுக்கு நியாய விசாரிப்பு இல்லை. ஆனால் அவர்கள் பாவம் செய்தால், கர்த்தரே அவர்களுடைய நியாயாதிபதியாக இருந்து, அவர்களுடைய பாவத்திற்கு உரிய தண்டனையை அளிப்பார். இஸ்ரவேலின் நியாயத்தை விசாரிக்க வேண்டுமென்று சாலொமோன் இரண்டு முறை விண்ணப்பம் பண்ணுகிறான். (1இராஜா 8:45,49; 1இராஜா 8:59).

(xi) **பாவங்களை மன்னித்து அடிமைத்தனத்தை நீக்குவீராக** - (2நாளா 6:36)

1இராஜா 8:46 பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால், அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, தேவரீர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்கள் சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அந்தச் சத்துருக்கள் அவர்களைத் தூரத்திலாகிலும் சமீபத்திலாகிலும் இருக்கிற தங்கள் தேசத்திற்குச் சிறைபிடித்துக் கொண்டுபோகும்போது,

1இராஜா 8:47 அவர்கள் சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கி வேண்டுதல் செய்து,

1இராஜா 8:48 தங்களைச் சிறைபிடித்துக் கொண்ட தங்கள் சத்துருக்களின் தேசத்திலே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் உம்மிடத்தில் திரும்பி, தேவரீர் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள் தேசத்திற்கும், தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது,

1இராஜா 8:49 உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து,

1இராஜா 8:50 உம்முடைய ஜனங்கள் உமக்கு விரோதமாய்ச் செய்த பாவத்தையும், அவர்கள் உம்முடைய கட்டளையை மீறிய அவர்கள் துரோகங்களையும் எல்லாம் மன்னித்து, அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டு போகிறவர்கள் அவர்களுக்கு இரங்கத் தக்கதான இரக்கத்தை அவர்களுக்குக் கிடைக்கப்பண்ணுவீராக.

1இராஜா 8:51 அவர்கள் எகிப்தென்கிற இருப்புக் காளவாயின் நடுவிலிருந்து தேவரீர் புறப்படப்பண்ணின உம்முடைய ஜனமும் உம்முடைய சுதந்தரமுமாய் இருக்கிறார்களே.

1இராஜா 8:52 அவர்கள் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம் தேவரீர் அவர்களுக்குச் செய்யும்படி, உம்முடைய கண்கள் உமது அடியானின் வேண்டுதலுக்கும், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் வேண்டுதலுக்கும் திறந்திருப்பதாக.

1இராஜா 8:53 கர்த்தராகிய ஆண்டவரே, நீர் எங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணும்போது, உம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்னபடியே, தேவரீர் பூமியின் சகல ஜனங்களிலும் அவர்களை உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே என்று விண்ணப்பம் பண்ணினான்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 8 அதிகாரம்

"பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே" - இந்த வாக்கியம் ரோமர் 3:23 ஆவது வசனத்தோடு ஒத்திருக்கிறது. அதில் பவுல் "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களாகி" என்று எழுதியிருக்கிறார். பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே என்று எல்லோரைப் பற்றியும் இந்த வாக்கியம் கூறினாலும், இது இயேசு கிறிஸ்துவிற்குப் பொருந்தாது. ஏனெனில் அவர் ஒருபாவமும் செய்யாதவர். (2கொரி 5:21; எபி 4:15; 1பேதுரு 2:22; 1யோவான் 3:5). இயேசு கிறிஸ்துவைப் போல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பாவங்களுக்கு விலகி ஜீவிக்க வேண்டும். (மத் 1:21; ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13; ரோமர் 12:1-2; 2கொரி 5:17-18; கலா 5:19-23; கொலோ 3:5-10; எபி 12:14-15; 1யோவான் 1:7-9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18).

"அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டு போகிறவர்கள் அவர்களுக்கு இரங்கத்தக்கதான இரக்கத்தை அவர்களுக்குக் கிடைக்கப் பண்ணுவீராக" - இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்றில் இந்த வாக்கியம் பல தடவை நிறைவேறியிருக்கிறது. (2இராஜா 25:27-30; எஸ்றா 1:1-3; நெகே 2:6; எரே 52:31-34; தானி 6).

"எகிப்தென்கிற இருப்புக் காளவாய்" - எகிப்து இருப்புக்காளவாய்க்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது அவர்கள் பல பாடுகளையும், துன்பங்களையும் அனுபவித்தார்கள். எகிப்தியரிகளின் சூளைகளில் அடிமைகளாகப் பணிபுரிந்தார்கள். இருப்புக் காளவாய் என்பது எகிப்தியரின் செங்கற்சூளைகளைக் குறிக்கலாம்.

"அவர்கள் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம்" - கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார். சாலொமோன் இதை நன்கு அறிந்து வைத்திருக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க வேண்டும். (2பேதுரு 1:1-9; 2கொரி 1:20).

"தேவரீர் பூமியின் சகல ஜனங்களிலும் அவர்களை உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே" - விசுவாசிகள் லௌகீகக் காரியங்களிலிருந்து வேறுபிரிந்து பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும். கர்த்தரிடமிருந்து பதிலைப் பெறுவதற்கு இதுவே இரகசியம்.

### (ஈ) சாலொமோன் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறான் - (2நாளா 7:1)

1இராஜா 8:54 சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடித்தபின்பு, அவன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற் படியிட்டிருந்ததை விட்டெழுந்து,

1இராஜா 8:55 நின்றுகொண்டு, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து, உரத்த சத்தத்தோடே சொன்னது:

1இராஜா 8:56 தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை.

1இராஜா 8:57 நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருந்து,

1இராஜா 8:58 நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடக்கிறதற்கும், அவர் நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக் கொள்ளுகிறதற்கும், நம்முடைய இருதயத்தைத் தம்மிடத்தில் சாயப்பண்ணுவாராக.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 8 அதிகாரம்

"பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே" - இந்த வாக்கியம் ரோமர் 3:23 ஆவது வசனத்தோடு ஒத்திருக்கிறது. அதில் பவுல் "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களாகி" என்று எழுதியிருக்கிறார். பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே என்று எல்லோரைப் பற்றியும் இந்த வாக்கியம் கூறினாலும், இது இயேசு கிறிஸ்துவிற்குப் பொருந்தாது. ஏனெனில் அவர் ஒருபாவமும் செய்யாதவர். (2கொரி 5:21; எபி 4:15; 1பேதுரு 2:22; 1யோவான் 3:5). இயேசு கிறிஸ்துவைப் போல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பாவங்களுக்கு விலகி ஜீவிக்க வேண்டும். (மத் 1:21; ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13; ரோமர் 12:1-2; 2கொரி 5:17-18; கலா 5:19-23; கொலோ 3:5-10; எபி 12:14-15; 1யோவான் 1:7-9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18).

"அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டு போகிறவர்கள் அவர்களுக்கு இரங்கத்தக்கதான இரக்கத்தை அவர்களுக்குக் கிடைக்கப் பண்ணுவீராக" - இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்றில் இந்த வாக்கியம் பல தடவை நிறைவேறியிருக்கிறது. (2இராஜா 25:27-30; எஸ்றா 1:1-3; நெகே 2:6; எரே 52:31-34; தானி 6).

"எகிப்தென்கிற இருப்புக் காளவாய்" - எகிப்து இருப்புக்காளவாய்க்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது அவர்கள் பல பாடுகளையும், துன்பங்களையும் அனுபவித்தார்கள். எகிப்தியரிகளின் சூளைகளில் அடிமைகளாகப் பணிபுரிந்தார்கள். இருப்புக் காளவாய் என்பது எகிப்தியரின் செங்கற்சூளைகளைக் குறிக்கலாம்.

"அவர்கள் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம்" - கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது கர்த்தர் அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார். சாலொமோன் இதை நன்கு அறிந்து வைத்திருக்கிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க வேண்டும். (2பேதுரு 1:1-9; 2கொரி 1:20).

1இராஜா 8:59 கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம் அறியும்படியாக,

1இராஜா 8:60 அவர் தமது அடியானுடைய நியாயத்தையும், தமது ஜனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தையும், அந்தந்த நாளில் நடக்கும் காரியத்துக்குத்தக்கதாய் விசாரிப்பதற்கும், நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக.

1இராஜா 8:61 ஆதலால் இந்நாளில் இருக்கிறதுபோல, நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது என்றான்.

"முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்து" - சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது முழங்காற்படியிடுகிறான். மனுஷரிடத்தில் பேசும்போது எழுந்துநின்று பேசுகிறான். (1இராஜா 8:54-55; 1இராஜா 8:22; 1இராஜா 19:18; 2நாளா 6:13; எஸ்றா 9:5; சங் 95:6; ஏசா 45:23; தானி 6:10, 1சாமு 1:26)

"அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" - சாலொமோனைப் போலவே யோசுவாவும்

கர்த்தருடைய வார்த்தைகளை நம்பினான். (யோசு 21:45; யோசு 23:14). கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர். கர்த்தர் நியமிக்கும் நிபந்தனைகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது நமக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் வரும். (2கொரி 1:20).

**கர்த்தரைக் குறித்து சாலொமோனின் வாஞ்சை**

1. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமல் இருப்பாராக. (1இராஜா 8:57)

2. நம்மை நெகிழவிடாமல் இருப்பாராக.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 8 அதிகாரம்

3. அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருப்பாராக.

4. நம்முடைய இருதயத்தைத் தம்மிடத்தில் சாயப்பண்ணுவாராக. (1இராஜா 8:58)

5. நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடக்கிறதற்கு நமக்கு உதவி புரிவாராக.

6. அவருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளுகிறதற்கு நம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்துவாராக.

7. என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக. (1இராஜா 8:60)

8. அவர் தமது அடியானுடைய நியாயத்தை விசாரிப்பாராக.

9. தமது ஜனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தை விசாரிப்பாராக.

10. கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம் அறியும்படி செய்வாராக. (1இராஜா 8:59)

**இஸ்ரவேலைக் குறித்து சாலொமோனின் வாஞ்சை**

1. உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது (1இராஜா 9:6; 1இராஜா 11:4)

2. நீங்கள் அவர் கட்டளைகளில் நடக்க வேண்டும்.

3. நீங்கள் அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

**(உ) சாலொமோனும் ஜனங்களும் செலுத்திய காணிக்கைகளும் பலிகளும்** - (2நாளா 7:4-8)

1இராஜா 8:62 பின்பு ராஜாவும் அவனோடே இருந்த இஸ்ரவேலர் அனைவரும், கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்தினார்கள்.

1இராஜா 8:63 சாலொமோன் கர்த்தருக்குச் சமாதானபலிகளாக, இருபத்தீராயிரம் மாடுகளையும், இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணினார்கள்.

1இராஜா 8:64 கர்த்தருடைய சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடம் சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளின் நிணத்தையும் கொள்ள மாட்டாமல் சிறிதாயிருந்த படியினால், ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்குமுன் இருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தப்படுத்தி, அன்றைய தினம் அங்கே சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்தினான்.

"ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்குமுன் இருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தப்படுத்தி" - இது வெண்கலப் பலிபீடம் இருக்கும் பகுதி. இந்த இடத்தில் திரளான பலிகள் செலுத்தப்பட்டன. கர்த்தர் இந்தப் பலிகளையெல்லாம் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி பட்சித்து, அங்கிகரித்தார். (1இராஜா 18:38; ஆதி 4:4; லேவி 9:24).

**(ஊ) பதினான்கு நாள் பண்டிகை** - (2நாளா 7:9-11)

1இராஜா 8:65 அக்காலத்தில்தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லை தொடங்கி எகிப்தின் நதிமட்டும் இருந்து வந்து, அவனோடே இருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும், ஆகப் பதினாலு நாள்வரைக்கும் பண்டிகையை ஆசரித்தார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 8 அதிகாரம்

1இராஜா 8:66 எட்டாம்நாளிலே ஜனங்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான்; அவர்கள் ராஜாவை வாழ்த்தி, கர்த்தர் தமது தாசனாகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த எல்லா நன்மைக்காகவும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

"கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும்" - தேவாலயத்து பிரதிஷ்டை ஏழு நாட்களுக்கு நடைபெறுகிறது. கூடாரங்களின் பண்டிகை மேலும் ஏழு நாட்களுக்கு நடைபெறுகிறது.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 9 அதிகாரம்

### (எ) தேவன் சாலொமோனுக்கு இரண்டாம் விசை தரிசனமாகிறார் - (3:5; 6:11-13; 2நாளா 7:12)

1இராஜா 9:1 சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும், தான் செய்யவேண்டும் என்று விரும்பின எல்லாவற்றையும் கட்டி முடித்தபின்பு,

1இராஜா 9:2 கர்த்தர் கிபியோனிலே சாலொமோனுக்குத் தரிசனமானதுபோல, இரண்டாந்தரமும் அவனுக்குத் தரிசனமானார்.

1இராஜா 9:3 கர்த்தர் அவனை நோக்கி: நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்.

1இராஜா 9:4 நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால்,

1இராஜா 9:5 இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

1இராஜா 9:6 நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில்,

1இராஜா 9:7 நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்.

1இராஜா 9:8 அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்பார்கள்.

1இராஜா 9:9 அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக் கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் என்றார்.

"சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை ...... கட்டி முடித்தபின்பு" - சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும், தன்னுடைய அரமனையையும் கட்டினான். இவ்விரண்டையும் கட்டி முடிப்பதற்கு சுமார் 20 வருஷங்களாயிற்று. அதன் பின்பு, கர்த்தர் கிபியோனிலே சாலொமோனுக்குத் தரிசனமானதுபோல, இரண்டாந்தரமும் அவனுக்குத் தரிசனமானார். கர்த்தர் ஆபிரகாமின் உடன்படிக்கையை ஈசாக்கோடும், யாக்கோபோடும் புதுப்பித்தது போல தாவீதின் உடன்படிக்கையைச் சாலொமோனோடு புதுப்பித்தார். (1இராஜா 9:1-9).

**தீர்க்கதரிசன எண் - 6**

"கர்த்தர் அவனை நோக்கி: நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்......" (1இராஜா 9:3-9) இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு மட்டுமே நிறைவேறியுள்ளது. மீதி இன்னும் நிறைவேற வேண்டியிருக்கிறது.

## 9 அதிகாரம்

**கர்த்தர் சாலொமோனுக்கு முன்னறிவித்த காரியங்கள்**

1. நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்குவேன். (1இராஜா 9:7)

2. என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்.

3. இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்.

4. இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்பார்கள். (1இராஜா 9:8)

5. தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக் கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்த படியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் (1இராஜா 9:9)

**இன்னும் நிறைவேறாத முன்னறிவிப்புக்கள்**

1. என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும். (1இராஜா 9:3)

2. இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். (1இராஜா 9:5)

3 இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற் போவதில்லை.

"இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்" - தாவீதைப்போல சாலொமோனும் கர்த்தருடைய வழிகளைப் பின்பற்றி, அவருடைய கற்பனைகளுக்கும், உடன்படிக்கைகளுக்கும், நியமங்களுக்கும், சாட்சிகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்தால், இஸ்ரவேலின் மேலுள்ள சாலொமோனின் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தைக் கர்த்தர் என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவார். (2சாமு 7:12).

"நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி" - கர்த்தருடைய இந்த வாக்குத்தத்தமும் நிபந்தனைக்குட்பட்டது. சாலொமோனும், அவனுடைய பிள்ளைகளும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கி, அவர் அவர்களுக்கு முன்வைத்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்து கொள்வீர்களானால், கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காத படிக்கு நிர்மூலமாக்குவார். அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள். (1இராஜா 9:6-7).

### 19. சாலொமோனுடைய ஆட்சியின் விபரம் - (9:10-11:43)

### (1) இருபது வருஷம் - கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜாவின் அரமனையையும் கட்டினான்

1இராஜா 9:10 சாலொமோன் கர்த்தருடைய ஆலயமும் ராஜ அரமனையுமாகிய இரண்டு மாளிகைகளையும் கட்டி நிறைவேற்றுகிற இருபதாம் வருஷம் முடிவிலே,

"இருபதாம் வருஷம்" - சாலொமோன் ராஜாவாகி, இருபது வருஷங்களின் முடிவில் என்று பொருள்படும். (1இராஜா 9:10; 1இராஜா 6:1). அதாவது சாலொமோன் ராஜாவாகி 24 ஆம் வருஷத்தில் அல்லது சாலொமோனுடைய மரணத்திற்கு 16 வருஷங்களுக்கு முன்பு. (1இராஜா 11:42).

## 9 அதிகாரம்

### (2) சாலொமோனும் ஈராமும் செய்து கொண்ட உடன்படிக்கை

1இராஜா 9:11 தன்னுடைய விருப்பத்தின் படியெல்லாம் தனக்குக் கேதுரு மரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், பொன்னையும் கொடுத்துவந்த தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, ராஜாவாகிய சாலொமோன் கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தான்.

1இராஜா 9:12 ஈராம் தனக்குச் சாலொமோன் கொடுத்த பட்டணங்களைப் பார்க்கிறதற்குத் தீருவிலிருந்து புறப்பட்டு வந்தான்; அவைகளில் அவன் பிரியப்படவில்லை.

1இராஜா 9:13 அதனாலே அவன்: என் சகோதரனே, நீர் எனக்குக் கொடுத்த இந்தப் பட்டணங்கள் என்ன பட்டணங்கள்? என்றான். அவைகளுக்கு இந்நாள்மட்டும் வழங்கி வருகிறபடி காபூல் நாடு என்று பேரிட்டான்.

1இராஜா 9:14 ஈராம் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருந்தான்.

"காபூல் நாடு" - தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, சாலொமோன் கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தான். ஆனால் ஈராம் அவைகளில் பிரியப்படவில்லை. ஆகையினால் அந்தப் பட்டணங்களை காபூல் நாடு **(Cabul)** என்று ஈராம் அழைத்தான். இந்தப் பெயருக்கு "பயனற்றது, எனக்குப் பிரியமானதல்ல" **"worthless, not to my taste"** என்று பொருள் (1இராஜா 9:11-13, 2நாளா 8:2)

### (3) சாலொமோனின் கட்டுமானப் பணிகளும் அமஞ்சி ஆட்களும்

1இராஜா 9:15 பிடித்த அமஞ்சி ஆட்களைக் கொண்டு சாலொமோன் ராஜா தான் கர்த்தருடைய ஆலயத்தையும், தன் அரமனையையும், மில்லோவையும், எருசலேமின் மதிலையும், ஆத்சோரையும், மெகிதோவையும், கேசேரையும் கட்டினான்.

1இராஜா 9:16 கேசேரை ஏன் கட்டினான் என்றால், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் புறப்பட்டுவந்து, அந்தக் கேசேர்பட்டணத்தைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலே குடியிருந்த கானானியரைக் கொன்றுபோட்டு, அதைச் சாலொமோனின் மனைவியாகிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான்.

1இராஜா 9:17 சாலொமோன் அந்தக் கேசேர் பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும்,

1இராஜா 9:18 பாலாத்தையும், வனாந்தர வெளியிலுள்ள தத்மோரையும்,

1இராஜா 9:19 தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரைவீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டினான்.

1இராஜா 9:20 இஸ்ரவேல் புத்திரர் சங்காரம் பண்ணக்கூடாமல் மீந்திருந்த இஸ்ரவேல் புத்திரரின் ஜாதியல்லாத எமோரியர், ஏத்தியர், பெரிசியர், ஏவியர், எபூசியருமான சகல ஜனத்திலும்,

1இராஜா 9:21 அவர்களுக்குப் பிறகு தேசத்தில் மீந்திருந்த சகல ஜனங்களுடைய பிள்ளைகளையும், சாலொமோன் இந்நாள்வரைக்கும் நடக்கிறதுபோல, அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக்கொண்டான்.

1இராஜா 9:22 இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் சாலொமோன் அடிமைப் படுத்தவில்லை; அவர்கள் யுத்தமனுஷரும், அவனுக்குப் பணிவிடைக்காரரும், பிரபுக்களும், சேர்வைக்காரரும், இரத வீரரும், குதிரைவீரருமாயிருந்தார்கள்.

சாலொமோனின் கட்டுமானப்பணிகள்

1. கர்த்தருடைய ஆலயம் (1இராஜா 9:15)
2. தன் அரமனை

## 9 அதிகாரம்

3. மில்லோ
4. எருசலேமின் மதில்
5. ஆத்சோர்
6. மெகிதோ
7. கேசேர்
8. கீழ்ப்பெத்தொரோன் (1இராஜா 9:17)
9. பாலாத் (1இராஜா 9:18)
10. வனாந்தரவெளியிலுள்ள தத்மோர்

"மில்லோ" (Millo) - இது சீயோனின் கோட்டையில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். இது அலங்கச்சுவர்களைச் சுற்றி அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் அஸ்திபாரக் கற்களாக இருக்கலாம். (1இராஜா 9:15,24; 1இராஜா 1:27; 2சாமு 5:9; 1நாளா 11:8; 2நாளா 32:5; 2இராஜா 12:20). சீகேமிலும் ஒரு மில்லோ உள்து. (நியா 9:6,20).

"எருசலேமின் மதில்" - தாவீது இந்த மதிலைக் கட்ட ஆரம்பித்தான். (2சாமு 5:9; 1நாளா 11:8). சாலொமோன் அதைக் கட்டி முடித்து, அதில் காணப்பட்ட உடைப்புகளை அடைத்தான். (1இராஜா 9:15; 1இராஜா 11:27).

"அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக் கொண்டான்" - புறஜாதியாரை மட்டுமே இஸ்ரவேல் ராஜாக்கள் அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக்கொண்டார்கள். (1இராஜா 9:20-22). யூதர்கள் அடிமைகளல்ல. ஆனாலும் தேவாலயத்து கட்டுமான வேலைகளைச் செய்வதற்கு இஸ்ரவேல் புத்திரரும் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். (1இராஜா 5:13; 1இராஜா 11:28) இஸ்ரவேல் புத்திரர் ஒருவரும் அடிமைப்படுத்தப்படவில்லை. அவர்கள் யுத்தமனுஷரும், அவனுக்குப் பணிவிடைக்காரரும், பிரபுக்களும், சேர்வைக் காரரும், இரதவீரரும், குதிரை வீரருமாயிருந்தார்கள். (1இராஜா 9:22).

### (4) சாலொமோனின் வேலையாட்களும் அவன் செலுத்திய பலிகளும்

1இராஜா 9:23 ஐந்நூற்றைம்பதுபேர் சாலொமோனின் வேலையை விசாரித்து, வேலையாட்களைக் கண்காணிக்கிறதற்குத் தலைமையான விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

1இராஜா 9:24 பார்வோனின் குமாரத்தி, தாவீதின் நகரத்திலிருந்து சாலொமோன் தனக்குக் கட்டின தன் மாளிகையிலே குடிவந்தாள்; அப்பொழுது மில்லோவைக் கட்டினான்.

1இராஜா 9:25 சாலொமோன் கர்த்தரின் ஆலயத்தை முடித்தபின்பு, அவருக்குக் கட்டின பலிபீடத்தின்மேல் வருஷத்தில் மூன்றுமுறை சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலி களையும் இட்டு, கர்த்தரின் சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தின்மேல் தூபங்காட்டிவந்தான்.

"வேலையாட்களைக் கண் காணிக்கிறதற்குத் தலைமையான விசாரிப்புக்காரராயிருந்தார்கள்." - (1இராஜா 5:16)

"பலிபீடத்தின்மேல் வருஷத்தில் மூன்றுமுறை" - (யாத் 23:14-17; உபா 16:16; 2நாளா 8:13)

### (5) இஸ்ரவேலின் முதலாவது கடற்படை - (2நாளா 8:17-18; 22:48)

1இராஜா 9:26 ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக் கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்வித்தான்.

1இராஜா 9:27 அந்தக் கப்பல்களில் ஈராம் சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்களாகிய தன் வேலைக்காரரைச் சாலொமோனுடைய வேலைக்காரரோடே கூட அனுப்பினான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 9 அதிகாரம்

1இராஜா 9:28 அவர்கள் ஓப்பீருக்குப் போய், அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டு வந்தார்கள்.

"எசியோன்கேபேர்" **(Ezion-geber)** - (எண் 33:35; உபா 2:8) ஏதோம் கலகம் பண்ணிய போது இந்த இடத்தை இழந்துபோனார்கள். (2இராஜா 8:20). உசியா இதை மறுபடியும் மீட்டுக் கொண்டான். (2இராஜா 14:22) ஆனாலும் இறுதியில் ஆகாஸ் இதை இழந்தான். (2இராஜா 16:6).

"சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்கள்" - சாலொமோனின் நாட்களில் தீருவின் கப்பலாட்கள் பிரசித்தி பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் சாலொமோனின் கப்பலாட்களுக்குப் பயிற்சி கொடுத்தார்கள்.

"ஓப்பீர்" **(Ophir)** - கிழக்குத் தேசத்து நாடு. இங்கு பொன்னும், விலையுயர்ந்த கற்களும் மிகுதியாக இருந்தது. (1இராஜா 10:11; 2நாளா 8:18; 2நாளா 9:10). யோக்தானின் குமாரர்கள் இங்கு குடியேறினார்கள். (ஆதி 10:29) யோபுவின் காலத்தில் இங்கு பொன் அதிகமாகக் கிடைத்தது. (யோபு 22:24; யோபு 28:16). தாவீதின் காலத்திலிருந்து யோசபாத்தின் காலம் வரையிலும் அவர்கள் ஓப்பீரோடு வியாபாரம் செய்து வந்தார்கள். தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத்தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும். (1இராஜா 10:22).

## 10 அதிகாரம்

### (6) சாலொமோனின் கீர்த்தியும் ஞானமும்

1இராஜா 10:1 கர்த்தருடைய நாமத்தைக் குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி சேபாவின் ராஜஸ்திரீக்குக் கேள்வியானபோது, அவள் விடுகதைகளினால் அவனைச் சோதிக்கிறதற்காக,

1இராஜா 10:2 மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும், எருசலேமுக்கு வந்தாள்; அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதில் இருந்த எல்லாவற்றையுங் குறித்து அவனிடத்தில் சம்பாஷித்தாள்.

1இராஜா 10:3 அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான், அவளுக்கு விடுவிக்கக் கூடாத படிக்கு, ஒன்றாகிலும் ராஜாவுக்கு மறைபொருளாயிருக்கவில்லை.

1இராஜா 10:4 சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரமனையையும்,

1இராஜா 10:5 அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு,

1இராஜா 10:6 ராஜாவை நோக்கி: உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று.

1இராஜா 10:7 நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன். நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது.

1இராஜா 10:8 உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்.

1இராஜா 10:9 உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உன்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக; கர்த்தர் இஸ்ரவேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கும் உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார் என்றாள்.

"சேபாவின் ராஜஸ்திரீ" - இவளைப் பற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் கூறப்படுகிறது. இவள் தென்கிழக்கு அரபியாவிலிருந்து வந்தாள் என்று ஒரு கருத்தும், எத்தியோப்பியாவிலிருந்து வந்தாள் என்று மற்றொரு கருத்தும் இவளைப் பற்றி கூறுகிறார்கள். சேபா கூஷின் பௌத்திரன். இவனுடைய பெயரால் அந்த தேசம் அழைக்கப்பட்டது. இந்த தேசத்து ஸ்திரீகள் ராஜ்யபாரம் பண்ணினார்கள். (ஆதி 10:7; அப் 8:27). இயேசு கிறிஸ்து சேபாவின் ராஜஸ்திரீயைத் தென்தேசத்து ராஜஸ்திரீ என்று அழைத்திருக்கிறார். (மத் 12:42) ஆகையினால் இவள் அரபியாவிலிருந்து வந்தவள் என்று கூறுவதைவிட எத்தியோப்பியாவிலிருந்து வந்தவள் என்று கூறுவது சிறப்பாக இருக்கும்.

**சேபாவின் ராஜஸ்திரீயும், சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியும்**

1. ராஜஸ்திரீ சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியைக் கேள்விப் பட்டாள். (1இராஜா 10:1,7)

2. விடுகதைகளினால் அவனைச் சோதிக்கிறதற்காக வந்தாள்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 10 அதிகாரம்

3. தன் மனதில் இருந்த எல்லாவற்றையுங் குறித்து அவனிடத்தில் சம்பாஷித்தாள். (1இராஜா 10:2)

4. சாலொமோனுடைய சகல ஞானத்தையும் கண்டாள். (1இராஜா 10:4)

5. சாலொமோனின் ஞானத்தில் தனக்குப் பாதிகூட அறிவிக்கப்படவில்லை என்று கூறினாள். (1இராஜா 10:6-7)

6. ராஜாவுக்கு வெகுமதிகளைக் கொடுத்தாள். (1இராஜா 10:10)

7. தன் தேசத்திற்குத் திரும்பிப் போனாள். (1இராஜா 10:13)

**சேபாவின் ராஜஸ்திரீ கொண்டுவந்தவைகள்**

1. விடுகதைகள் (1இராஜா 10:1)

2. ஒட்டகங்கள். (1இராஜா 10:2)

3. கந்தவர்க்கங்கள்

4. மிகுதியான பொன்

5. இரத்தினங்கள்

**சேபாவின் ராஜஸ்திரீயை ஆச்சரியத்தால் பிரமை கொள்ளவைத்த காரியங்கள்**

1. சாலொமோனுடைய ஞானம் (1இராஜா 10:4)

2. அவன் கட்டிய அரமனை

3. அவன் பந்தியின் போஜனபதார்த்தங்கள் (1இராஜா 10:5)

4. அவன் ஊழியக்காரரின் வீடுகள்

5. அவன் உத்தியோகஸ்தரின் வரிசை

6. அவர்கள் வஸ்திரங்கள்

7. அவனுடைய பானபாத்திரக்காரர்

8. கர்த்தருடைய ஆலயத்துக்குள் சாலொமோன் பிரவேசிக்கும் நடைமண்டபம்

"சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி ...... கேள்வியானபோது" - சாலொமோனின் வியாபாரத் தொடர்புகளைக் குறித்து சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்பட்டிருக்கிறாள். (1இராஜா 9:26-28; 2நாளா 8:17; 2நாளா 9:1).

"கர்த்தருடைய நாமம்" - சாலொமோனின் கீர்த்தியோடு கர்த்தருடைய நாமமும் சேர்ந்து வருகிறது. ஏனெனில் இவ்வளவு பெரிய கீர்த்தியைக் கர்த்தரால் மட்டுமே எந்தவொரு மனுஷனுக்கும் தரமுடியும்.

"எருசலேமுக்கு வந்தாள்" - இயேசு கிறிஸ்து சேபாவின் ராஜஸ்திரீயைத் தென்தேசத்து ராஜஸ்திரீ என்று குறிப்பிடுகிறார். நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடு எழுந்து நின்று, இவர்கள்மேல் குற்றம் சுமத்துவாள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். (மத் 12:42; லூக்கா 11:31). சாலொமோனை விடுகதைகளினால் சோதித்துப் பார்ப்பதற்காக அவள் எருசலேமுக்கு வந்தாள். (1இராஜா 10:1)

"ஞானமும் செல்வமும்" - சாலொமோனின் ராஜசபையிலே சேபாவின் ராஜஸ்திரீ கண்ட அனைத்தையும் இரண்டே வார்த்தைகளினால் அதாவது "ஞானமும் செல்வமும்" என்று கூறி முடித்து விடுகிறாள்.

### (7) சாலொமோனின் ஐசுவரியம்

**(அ) சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுக்குக் கொடுத்தது** - (2நாளா 9:1)

1இராஜா 10:10 அவள் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுத்தாள்; சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவாகிய சாலொமோனுக்குக் கொடுத்த அவ்வளவு கந்தவர்க்கங்கள் பிற்பாடு ஒருக்காலும் வரவில்லை.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 10 அதிகாரம்

### (ஆ) ஒப்பீரிலிருந்து வந்த பொன்னும் இரத்தினங்களும் - (9:28; 10:22)

1இராஜா 10:11 ஒப்பிரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் கப்பல்களும், ஒப்பீரிலிருந்து மிகுந்த வாசனைமரங்களையும் இரத்தினங்களையும் கொண்டுவந்தது.

"வாசனைமரங்கள்" (almug or algum trees) - (2நாளா 2:8). தேவாலயத்து அலங்கார வேலைகளையும், இசைக் கருவிகளையும் இந்த வாசனை மரங்களால் செய்தார்கள். (1இராஜா 10:12).

### (இ) சேபாவின் ராஜஸ்திரீ தன் தேசத்திற்குத் திரும்பிப் போகிறாள்

1இராஜா 10:12 அந்த வாசனைமரங்களால் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்கும் ராஜ அரமனைக்கும் ஊன்றுகால்களையும், சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் உண்டாக்கினான்; அப்படிப்பட்ட வாசனைமரங்கள் பிற்பாடு வந்ததுமில்லை, இந்நாள்வரைக்கும் காணப்படவுமில்லை.

1இராஜா 10:13 ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய்ச் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விரும்பிக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுத்தான்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடே தன் தேசத்திற்குத் திரும்பிப் போனாள்.

### (ஈ) சகல ராஜாக்களிடமிருந்தும் வந்த பொன்னும் திரவியங்களும் - (வசனம் 22; 9:14)

1இராஜா 10:14 சாலொமோனுக்கு வியாபாரிகளாலும், சுகந்த திரவிய வர்த்தகராலும், அரபிதேசத்து சகல ராஜாக்களாலும், மகாணங்களின் அதிபதிகளாலும் வந்த பொன்னையல்லாமல்,

1இராஜா 10:15 ஒவ்வொரு வருஷத்தில் அவனுக்கு வந்த பொன் அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருந்தது.

### (உ) பொன் தகட்டால் செய்யப்பட்ட பரிசைகள்

1இராஜா 10:16 சாலொமோன் ராஜா, அடித்த பொன்தகட்டால் இருநூறு பரிசைகளைச் செய்வித்தான்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறைபொன் சென்றது.

1இராஜா 10:17 அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்வித்தான்; ஒவ்வொரு கேடகத்திற்கு மூன்று இராத்தல் பொன் சென்றது; அவைகளை ராஜா லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைத்தான்.

"அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்வித்தான்" - (1இராஜா 10:16-17). சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமின் ஆட்சிக் காலத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் இந்தக் கேடகங்களையெல்லாம் எடுத்துச் சென்று விட்டான். (1இராஜா 14:26).

### (ஊ) தந்தங்கள்

1இராஜா 10:18 ராஜா தந்தத்தினால் பெரிய ஒரு சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடினான்.

1இராஜா 10:19 அந்தச் சிங்காசனத்திற்கு ஆறு படிகள் இருந்தது; சிங்காசனத்தின் தலைப்பு பின்னாக வளைவாயிருந்தது; உட்காரும் இடத்திற்கு இருபுறமும் கைச்சாய்மானங்கள் இருந்தது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நின்றது.

1இராஜா 10:20 ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும், பன்னிரண்டு சிங்கங்கள் நின்றது; எந்த ராஜ்யத்திலும் இப்படிப் பண்ணப்படவில்லை.

**10 அதிகாரம்**

1இராஜா 10:21 ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்னும், லீபனோன் வனம் என்கிற மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருந்தது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை.

1இராஜா 10:22 ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடே கூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத் தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும்.

1இராஜா 10:23 பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும், ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான்.

**சாலொமோனின் ஐசுவரியங்கள்**

1. 120 தாலந்து பொன் (1இராஜா 9:14)

2. 420 தாலந்து பொன் (1இராஜா 9:28)

3. 120 தாலந்து பொன் (1இராஜா 10:10)

4. 200 பொன் பரிசைகள். ஒவ்வொரு பரிசைக்கும் 600 சேக்கல் பொன் (1இராஜா 10:16)

5. 300 பொன் கேடகங்கள் - ஒவ்வொரு கேடகத்திற்கும் மூன்று ராத்தல் பொன் (1இராஜா 10:17)

இவைதவிர, ராஜா தந்தத்தினால் பெரிய ஒரு சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடினான். அந்தச் சிங்காசனத்திற்கு ஆறு படிகள் இருந்தது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நின்றது. ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும், பன்னிரண்டு சிங்கங்கள் நின்றது; ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பான பாத்திரங்களெல்லாம் பொன்னும், லீபனோன் வனம் என்கிற மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும் பொன்னுமாயிருந்தது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை. எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள்போலவும், கேதுருமரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்தி மரங்கள்போலவும் அதிகமாக்கினான். (1இராஜா 10:18-27).

**(8) சாலொமோனின் வீழ்ச்சி** - (10:24-11:8)

**(அ) பொன்னையும் வெள்ளியையும் அதிகமாகச் சேர்த்தான்** - (உபா 17:17)

1இராஜா 10:24 சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவன் முக தரிசனத்தைத் தேடினார்கள்.

1இராஜா 10:25 வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப் பாத்திரங்களையும், பொற் பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங் களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டுவருவார்கள்.

1இராஜா 10:26 சாலொமோன் இரதங்களையும் குதிரைவீரரையும் சேர்த்தான்; அவனுக்கு ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது, பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்; அவைகளை இரதங்கள் வைக்கும் பட்டணங்களிலும், அவர்களை எருசலேமில் தன்னிடத்திலும் வைத்திருந்தான்.

## 11 அதிகாரம்

**(இ) அதிகமான மனைவிகளைச் சேர்த்தான்** - (உபா 17:17)

1இராஜா 11:1 ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான்.

1இராஜா 11:2 கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்.

1இராஜா 11:3 அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்; அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்.

**சாலொமோனுடைய வீழ்ச்சியின் பாதைகள்**

1. ஐசுவரியம் (1இராஜா 10:14-27)
2. ஆயுதங்கள் (1இராஜா 10:26-29)
3. ஸ்திரீகள் (1இராஜா 11:1-3)
4. கர்த்தரைவிட்டுத் தன் இருதயத்தைத் திருப்பியது (1இராஜா 11:4)
5. விக்கிரகாராதனை (1இராஜா 11:5)

ஐசுவரியம் ஆசீர்வாதமானதுதான். ஆனால் அதை முறைப்படி கர்த்தருக்காகப் பயன்படுத்த வேண்டும். ஐசுவரியத்தின்மீது பேராசை வைப்பது விக்கிரகாராதனைக்குச் சமமானது. அப்போது ஐசுவரியமே சாபமாகி விடும். (யாக் 4:3; ரோமர் 13:14). சாலொமோனின் திரளான ஐசுவரியம் அவனை வீழ்ச்சியின் பாதையில் நடத்திற்று. ராஜாக்களுக்கு ஆயுதங்கள் தேவைதான். அதே சமயத்தில் தங்களுடைய பாதுகாப்பிற்குக் குதிரைகளையும், இரதங்களையும் மாத்திரம் நம்பிக் கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில் கர்த்தரே நமது பாதுகாப்பாக இருக்கிறார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணுவார். மனுஷனுக்காகவே கர்த்தர் மனுஷியைச் சிருஷ்டித்தார். ஆனால் ஒரு மனுஷன் அநேகம் ஸ்திரீகளை விவாகம் பண்ணக்கூடாது. ராஜாக்களுக்கு பல மனைவிகள் இருக்கக்கூடாது. (உபா 17:17).

**சாலொமோனின் ஆசை**

1. ஆரம்பத்தில் கர்த்தரிடத்தில் ஆசை வைத்தான். (1இராஜா 3:3)
2. பின்பு அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான். (1இராஜா 11:1-3)

"அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்" - இவர்கள் புறஜாதி தேசத்து ஸ்திரீகள். இஸ்ரவேல் புத்திரர் இவர்களை விவாகம் பண்ணக்கூடாது. இவர்களை விவாகம் பண்ணினால் தங்கள் தெய்வங்களுக்கு நேராக இஸ்ரவேல் புத்திரரின் இருதயங்களைத் திருப்பிப் போடுவார்கள். (யாத் 34:15-16). நீதிமொழிகள் புஸ்தகத்தில் அந்நிய ஸ்திரீகளுக்கு எதிராக பல ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கிறது. சாலொமோன் இந்தப் புஸ்தகத்தில் தான் எச்சரித்துக் கூறிய எச்சரிப்புக்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தானானால், அவனுடைய வாழ்க்கையில் அந்நிய ஸ்திரீகள் மூலமாக அதிகமான பிரச்சனைகள் வந்திருக்காது.

**அந்நிய ஜாதியாரான ஸ்திரீகளுக்கு எதிரான எச்சரிப்புக்கள்**

1. தன் தேவனுடைய உடன்படிக்கையை மறந்து, இச்சகமான வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கும் தப்புவிக்கப்படுவாய். (நீதி 2:16)
2. பரஸ்திரீயின் உதடுகள் தேன்கூடுபோல் ஒழுகும்; அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும்.....உன் வழியை அவளுக்குத் தூரப்படுத்து; அவளுடைய வீட்டின் வாசலைக்கிட்டிச் சேராதே. (நீதி 5:3-8)

## 11 அதிகாரம்

3. என் மகனே, நீ பரஸ்திரீயின் மேல் மயங்கித் திரிந்து, அந்நிய ஸ்திரீயின் மார்பைத் தழுவவேண்டியதென்ன? (நீதி 5:20)

4. அது உன்னைத் துன்மார்க்க ஸ்திரீக்கும், இச்சகம்பேசும் நாவையுடைய பரஸ்திரீக்கும் விலக்கிக் காக்கும். (நீதி 6:24)

5. இச்சகவார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கிக் காப்பதற்காக, ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப்பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக. (நீதி 7:4,5)

6. பரஸ்திரீகளின் வாய் ஆழமான படுகுழி; கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான். (நீதி 22:14)

7. வேசி ஆழமான படுகுழி; பரஸ்திரீ இடுக்கமான கிணறு. (நீதி 23:27)

8. உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். (நீதி 23:33)

"அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள்" - (யாத் 34:15-17; உபா 7:3-4; யோசு 23:12)

"சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்" - அந்நிய ஸ்திரீகள்மேல் அதிகமாக ஐக்கியம் வைத்தபோது, கர்த்தரிடத்தில் தான் வைத்த ஐக்கியத்தைச் சாலொமோன் குறைத்துக் கொண்டான். இறுதியில் சாலொமோனின் இருதயம் கர்த்தரைவிட்டு, முழுவதுமாகவே அகன்றுபோயிற்று. (1இராஜா 11:2-4).

"எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்" - சாலொமோனுக்குத் திரளான குதிரைகளும், இரதங்களும் இருந்ததுபோல (1இராஜா 10:26) திரளான மனையாட்டிகளும், மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். இந்த ஸ்திரீகள் அவன் இருதயத்தை கர்த்தரைவிட்டு வழுவிப்போகப் பண்ணினார்கள். (1இராஜா 11:3-4).

**(ஈ) கர்த்தருடைய பிரமாணத்தை வாசித்து அதற்குக் கீழ்ப்படிய வில்லை** - (உபா 17:19)

1இராஜா 11:4 சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.

"சாலொமோன் வயதுசென்றபோது" - சாலொமோன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான். தனது 60 ஆவது வயதில் மரித்துப்போனான். இப்போது அவனுக்கு 50 வயதுக்குமேல் இருக்கும். (1இராஜா 11:42). தன்னுடைய 20 ஆவது வயதில் ராஜாவானான். அவனுக்குத் திரளான மனைவிகள் இருந்தபடியினால் அவர்கள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள் (1இராஜா 3:3; நெகே 13:26).

"அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை" - விக்கிரகாராதனையைப் பொறுத்தளவில் தாவீது அதில் ஈடுபடாமல் விலகியே இருந்தான். பத்சேபாளோடு பாவம் செய்த காரியமும், கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றிய காரியமும் தாவீதின் வாழ்க்கையில் மிகப் பெரிய பாவங்களாக இருந்தன. ஆனாலும் தாவீது தன் பாவத்தின் நிமித்தம் மனம் வருந்தினான். இவைதவிர, தாவீது கர்த்தருடைய பார்வையில் செம்மையாகவும், அவருக்குப் பிரியமாகவும் ஜீவித்தான். (2சாமு 11-12; 2சாமு 24).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 11 அதிகாரம்

**கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்த இஸ்ரவேல் ராஜாக்கள்**

1. தாவீது (1இராஜா 11:4,33)
2. ஆசா (1இராஜா 15:11)
3. யோசபாத் (1இராஜா 22:43)
4. யோவாஸ் (2இராஜா 12:2)
5. அமத்சியா (2இராஜா 14:3)
6. உசியா (2இராஜா 15:3)
7. யோதாம் (2இராஜா 15:34)
8. எசேக்கியா (2இராஜா 18:3)
9. யோசியா (2இராஜா 22:2)

**(உ) விக்கிரக ஆராதனையில் பங்கு பெற்றான்** - (யாத் 20:1-5)

1இராஜா 11:5 சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான்.

1இராஜா 11:6 சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

1இராஜா 11:7 அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான்.

1இராஜா 11:8 இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான்.

"அஸ்தரோத்தையும் ...... மில்கோமையும்" - சாலொமோனின் மனைவிகளில் சிலர் இந்த தெய்வங்களை ஆராதித்தார்கள். சாலொமோன் தன் மனைவிகளின் பேச்சைக் கேட்டு, அவனும் இந்தத் தெய்வங்களைப் பின்பற்றினான். (1இராஜா 11:8).

**கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்த இஸ்ரவேலின் ராஜாக்கள்**

1. சவுல் (1நாளா 10:13)
2. சாலொமோன் (1இராஜா 11:6)
3. யெரொபெயாம் (1இராஜா 13:35)
4. ரெகொபெயாம் (1இராஜா 14:22)
5. அபியாம் (1இராஜா 15:3)
6. நாதாப் (1இராஜா 15:26)
7. பாஷா (1இராஜா 15:34)
8. ஏலா (1இராஜா 16:9)
9. சிம்ரி (1இராஜா 16:19)
10. உம்ரி (1இராஜா 16:25)
11. ஆகாப் (1இராஜா 16:30)
12. அகசியா (1இராஜா 22:52)
13. யோராம் (2இராஜா 3:2)
14. யோராம் (2இராஜா 8:18)
15. அகசியா (2இராஜா 8:27)
16. யெகூ (2இராஜா 10:31)
17. அத்தாலியாள் (2இராஜா 11:1)
18. யோவாகாஸ் (2இராஜா 13:2)
19. யோவாஸ் (2இராஜா 13:11)
20. யெரொபெயாம் (2இராஜா 14:24)
21. சகரியா (2இராஜா 15:9)

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 11 அதிகாரம்

22. சல்லூம் (2இராஜா 15:15)

23. மெனாகேம் (2இராஜா 15:18)

24. பெக்காகியா (2இராஜா 15:24)

25. பெக்கா (2இராஜா 15:28)

26. ஆகாஸ் (2இராஜா 16:2-4)

27. ஓசெயா (2இராஜா 17:2)

28. மனாசே (2இராஜா 21:2)

29. ஆமோன் (2இராஜா 21:20)

30. யோவாகாஸ் (2இராஜா 23:32)

31. யோயாக்கீம் (2இராஜா 23:37)

32. யோயாக்கீன் (2இராஜா 24:9)

33. சிதேக்கியா (2இராஜா 24:19)

"எருசலேமுக்கு எதிரான மலை" - இது ஒலிவமலையைக் குறிக்கும். இது "நாசமலை" **"mount of corruption"** என்றும் அழைக்கப் படுகிறது. (2இராஜா 23:13, சக 14:4).

"அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான்" - சாலொமோனின் மனைவிகள் வெவ்வேறு தெய்வங்களை வழிபட்டார்கள். அவர்கள் எல்லோருக்குமே தூபங்காட்டிப் பலியிடுகிற மேடைகளைச் செய்தான். கர்த்தரையும், அவருடைய கற்பனைகளையும் மறந்து, தன் மனைவிமார்களின் விக்கிரகங்களை ஆராதித்தான்.

**(9) சாலொமோனின் சிட்சைகள்** - (2சாமு 7:12-15)

**(அ) நியாயத்தீர்ப்பின் தீர்க்க தரிசனம்**

1இராஜா 11:9 ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி,

1இராஜா 11:10 அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்.

1இராஜா 11:11 ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக் கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்.

1இராஜா 11:12 ஆகிலும் உன் தகப்பனாகிய தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை; உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன்.

1இராஜா 11:13 ஆனாலும் ராஜ்யம் முழுவதையும் நான் பிடுங்காமலும், என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட எருசலேமினிமித்தமும், ஒரு கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக் கொடுப்பேன் என்றார்.

**சாலொமோன்மீது நியாயத்தீர்ப்பு வந்ததற்குக் காரணம்**

1. சாலொமோனின் இருதயம் கர்த்தரை விட்டு விலகிப்போயிற்று. (1இராஜா 11:1-4,9)
2. அந்நிய தேவர்களைப் பின்பற்றினான். (1இராஜா 11:10)
3. கர்த்தருடைய உடன்படிக்கையையும், கட்டளைகளையும் கைக்கொள்ளவில்லை. (1இராஜா 11:11)

**தீர்க்கதரிசன எண் - 7**

"ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி:............" (1இராஜா 11:11-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 11 அதிகாரம்

### நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற் போய் இந்தக் காரியத்தைச் செய்த படியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன். (1இராஜா 11:11)

2. உன் தகப்பனாகிய தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை; உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன். (1இராஜா 11:12)

3. ராஜ்யம் முழுவதையும் நான் பிடுங்காமலும், என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் தெரிந்து கொண்ட எருசலேமினிமித்தமும், ஒரு கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக் கொடுப்பேன் (1இராஜா 11:13)

"உன் ஊழியக்காரன்" - யெரொபெயாம். (1இராஜா 11:26-40; 1இராஜா 12:1-33).

"உன் தகப்பனாகிய தாவீதினிமித்தம்" - கர்த்தர் எப்போதுமே தம் நிமித்தமாக மட்டும் காரியம் செய்யாமல், சில சமயங்களில் மனுஷர் நிமித்தமாகவும், சில காரியங்களைச் செய்கிறார். இங்கு ஏற்கெனவே மரித்துப்போன தாவீதுக்காகக் கர்த்தர் சாலொமோனுக்கு நன்மை செய்கிறார்.

### தாவீதின் ராஜ்யத்தில் ஒரு பகுதியைக் கர்த்தர் அவனுடைய சந்ததிக்கு மீதியாக வைப்பதற்குக் காரணம்

1. தாவீதினிமித்தம்.

2. எருசலேமினிமித்தம்.

கர்த்தர் தாவீதையும், எருசலேமையும் தெரிந்தெடுத்திருக்கிறார். ஆகையினால் இவை இரண்டையும் கர்த்தர் மேன்மைப்படுத்துகிறார். யூதா தேசத்தில் ஒன்பது ராஜாக்கள் நேர்மையாக இருந்தார்கள். இதனால் தெற்கு ராஜ்யத்தின்மீது வரவிருந்த நியாயத்தீர்ப்பு காலதாமதமாயிற்று. வடக்கு ராஜ்ஜியத்தில் ஒரு ராஜாகூட நீதியாய் இல்லை. ஆகையினால் அவர்களுடைய அழிவு காலதாமதமில்லாமல் சடிதியாய் வந்தது. (1இராஜா 11:4; 1இராஜா 11:6).

### (ஆ) கர்த்தர் சாலொமோனுக்கு எதிராக எழுப்பிய விரோதிகள்

1இராஜா 11:14 கர்த்தர் ஏதோமியனாகிய ஆதாத் என்னும் ஒரு விரோதியைச் சாலொமோனுக்கு எழுப்பினார்; இவன் ஏதோமிலிருந்த ராஜகுலமானவன்.

1இராஜா 11:15 தாவீது ஏதோமில் இருக்கும்போது படைத்தலைவனாகிய யோவாப் ஏதோமிலுள்ள ஆண்மக்களையெல்லாம் சங்கரித்து, வெட்டுண்டவர்களை அடக்கம்பண்ணப் போனான்.

1இராஜா 11:16 அவர்களெல்லாம் சங்கரிக்குமளவும், தானும் இஸ்ரவேல் அனைத்தும் அங்கே ஆறுமாதம் இருக்கும்போது,

1இராஜா 11:17 ஆதாதும் அவனோடேகூட அவன் தகப்பனுடைய ஊழியக்காரரில் சில ஏதோமியரும் எகிப்திற்குப்போக ஓடிப் போனார்கள்; ஆதாத் அப்பொழுது ஒரு சிறுபிள்ளையாயிருந்தான்.

1இராஜா 11:18 அவர்கள் மீதியானிலிருந்து எழுந்து, பாரானுக்குச் சென்று, பாரானிலே சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, எகிப்திற்குப் பார்வோன் என்னும் எகிப்தின் ராஜாவினிடத்திற்குப் போனார்கள்; அவன் இவனுக்கு ஒரு வீடுகொடுத்து, இவனுக்கு ஆகாரத்தைத் திட்டம்பண்ணி, நிலத்தையும் கொடுத்தான்.

1இராஜா 11:19 ஆதாதுக்குப் பார்வோனின் கண்களில் மிகுந்த தயைகிடைத்த படியினால், அவன் ராஜஸ்திரீயாகிய தாப்பெனேஸ் என்னும் தன் மனைவியின் சகோதரியை அவனுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான்.

## 11 அதிகாரம்

1இராஜா 11:20 தாப்பெனேசின் சகோதரியாகிய இவள் அவனுக்குக் கேனுபாத் என்னும் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனைத் தாப்பெனேஸ் பார்வோனின் வீட்டிலே வளர்த்தாள்; அப்படியே கேனுபாத் பார்வோனின் வீட்டில் அவனுடைய குமாரருடன் இருந்தான்.

1இராஜா 11:21 தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான் என்றும், படைத்தலைவனாகிய யோவாப் இறந்துபோனான் என்றும், எகிப்திலே ஆதாத் கேள்விப்பட்டபோது, ஆதாத் பார்வோனை நோக்கி: நான் என் சுயதேசத்துக்குப் போக என்னை அனுப்பவேண்டும் என்றான்.

1இராஜா 11:22 அதற்குப் பார்வோன்: இதோ, நீ உன் சுயதேசத்துக்குப்போக விரும்புகிறதற்கு, என்னிடத்தில் உனக்கு என்ன குறைவு இருக்கிறது என்றான்; அதற்கு அவன்: ஒரு குறைவும் இல்லை; ஆகிலும் என்னை அனுப்பிவிடவேண்டும் என்றான்.

"கர்த்தர் ஏதோமியனாகிய ஆதாத் என்னும் ஒரு விரோதியைச் சாலொமோனுக்கு எழுப்பினார்" - சாலொமோனின் பாவத்தின் நிமித்தம் தாவீதின் குடும்பத்தார் மத்தியில் ஒரு விரோதி எழும்புகிறான். கர்த்தரே இதுபோன்ற விரோதிகளைச் சாலொமோனுக்கு எதிராக எழுப்புகிறார். (1இராஜா 11:14,23,27). தாவீதின் சந்ததியார் அக்கிரமம் செய்தால், கர்த்தர் அவர்களை மனுஷருடைய மிலாற்றினாலும், மனுப்புத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். (2சாமு 7:12-15) பாவம் செய்தவர்களின்மீது கர்த்தர் நீதியாய் நியாயம் விசாரிக்கும் வரையிலும் அவருடைய கோபம் பற்றி எரியும். (1இராஜா 11:9)

விரோதி (adversary) שָׂטָן - saw-tawn' - 7854

ஆ.பெ.சொ. - எதிராளி, எதிரி, சத்துரு, விரோதி, சாத்தான், தீங்கு செய்பவன், குற்றம் சாட்டுகிறவன், பொய் சொல்லுகிறவன் (to attack; accuse; resist; or oppose) satan (1நாளா 21:1; யோபு 1:6-12; யோபு 2:1-7; சங் 109:6; சக 3:1-2), adversary (1இராஜா 5:4; 1இராஜா 11:14,23,25; எண் 22:22,32; 1சாமு 29:4; 2சாமு 19:22-23).

### ஆதாத்தின் ராஜ்யம்

தாவீது ஏதோமில் இருந்தபோது படைத் தலைவனாகிய யோவாப் ஏதோமிலுள்ள ஆண்மக்களையெல்லாம் சங்கரித்தான். அப்போது ஆதாதும் அவனோடேகூட அவன் தகப்பனுடைய ஊழியக்காரரில் சில ஏதோமியரும் எகிப்திற்குப் போக ஓடிப் போனார்கள்; ஆதாத் அப்பொழுது ஒரு சிறுபிள்ளையாயிருந்தான். எகிப்தின் பார்வோன் ஆதாத்திற்கு ஒரு வீடுகொடுத்து, ஆகாரத்தைத் திட்டம்பண்ணி, நிலத்தையும் கொடுத்தான்.

தாவீது தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான் என்றும், படைத்தலைவனாகிய யோவாப் இறந்துபோனான் என்றும், எகிப்திலே ஆதாத் கேள்விப்பட்டான். அதன் பின்பு அவன் தன் சுய தேசத்திற்கு வந்து, சாலொமோனுக்கு விரோதியாக எழும்பினான்.(1இராஜா 11:15-17; 2சாமு 8:13-14; 1நாளா 18:12; சங் 60:6-12).

தாவீது ஏதோமை முற்றிலுமாக அழித்துப் போட்டதின் நிமித்தம் ஆதாத் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதியாக இருந்தான். சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு, வாய்ப்பு கிடைக்கும்போது இஸ்ரவேலைப் பழிவாங்க வேண்டுமென்று ஆதாத் காத்துக் கொண்டிருந்தான். தாவீதும், யோவாபும் மரித்த பின்பு தன் சுய தேசத்திற்கு வந்தான். (1இராஜா 11:17-22) ஏதோமியர் இஸ்ரவேலுக்கு யோசபாத்தின் காலம்வரையிலும் பகுதிப்பணம் கட்டினார்கள். (1இராஜா 22:47). ஆயினும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆதாத் இஸ்ரவேலுக்கு விரோதியாகவே இருந்தான்.

### (இ) இரண்டாம் விரோதி

1இராஜா 11:23 எலியாதாவின் குமாரனாகிய ரேசோன் என்னும் வேறொரு விரோதியை தேவன் எழுப்பினார்; இவன் தன் ஆண்டவனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவை விட்டு ஓடிப்போய்,

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 11 அதிகாரம்

1இராஜா 11:24 தாவீது சோபாவில் உள்ளவர்களைக் கொன்றுபோடுகையில், அவன் தன்னோடே சில மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, அந்தக் கூட்டத்திற்குத் தலைவனானான்; இவர்கள் தமஸ்குவுக்குப் போய், அங்கே குடியிருந்து, தமஸ்குவில் ஆண்டார்கள்.

1இராஜா 11:25 ஆதாத் பொல்லாப்புச் செய்ததுமல்லாமல், ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகி, சீரியாவின்மேல் ராஜாவாயிருந்து, இஸ்ரவேலைப் பகைத்தான்.

"எலியாதாவின் குமாரனாகிய ரேசோன் என்னும் வேறொரு விரோதியை தேவன் எழுப்பினார்" - இவன் சாலொமோனுக்கு எதிராக எழும்பிய இரண்டாவது விரோதி. சீரிய தேசத்தான். தாவீது ஆதாத் ஏசேரை முறியடித்த போது, இவன் சீரியரின் படைத்தளபதியாக இருந்திருக்க வேண்டும். (2சாமு 8:3-8). சிறிதுகாலம் வனாந்தரத்தில் தலைமறைவாக இருந்தான். அதன் பின்பு, ரேசோன் தமஸ்குவுக்குப் போய், அங்கே குடியிருந்து, தமஸ்குவில் ஆண்டான். ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகி, சீரியாவின்மேல் ராஜாவாயிருந்து, இஸ்ரவேலைப் பகைத்தான். (1இராஜா 11:23-25).

**(ஈ) மூன்றாம் விரோதி** - (வசனம் 9-13)

1இராஜா 11:26 சேரேதா ஊரிலுள்ள எப்பிராயீம் மனுஷனாகிய நேபாத்தின் குமாரன் யெரொபெயாம் என்னும் சாலொமோனின் ஊழியக்காரனும் ராஜாவுக்கு விரோதமாய்க் கையெடுத்தான்; அவனுடைய தாய் செரூகாள் என்னும் பேருள்ள ஒரு விதவை.

1இராஜா 11:27 அவன் ராஜாவுக்கு விரோதமாய்க் கையெடுத்த முகாந்தரம் என்னவென்றால், சாலொமோன் மில்லோவைக்கட்டி, தன் தகப்பனாகிய தாவீதுடைய நகரத்தின் இடிந்துபோன இடங்களைப் பழுது பார்த்தபோது,

1இராஜா 11:28 யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் காரிய சமர்த்தனான வாலிபன் என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் அவன் விசாரிப்புக்கு ஒப்புவித்தான்.

1இராஜா 11:29 அக்காலத்திலே யெரொபெயாம் எருசலேமிலிருந்து வெளியே போகிற போது, சீலோனியனான அகியா என்னும் தீர்க்கதரிசி புதுச்சால்வையைப் போர்த்துக்கொண்டிருந்து, வழியிலே அவனைக் கண்டான்; இருவரும் வயல்வெளியிலே தனித்திருக்கையில்,

1இராஜா 11:30 அகியா தான் போர்த்துக் கொண்டிருந்த புதுச்சால்வையைப் பிடித்து, அதைப் பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போட்டு,

1இராஜா 11:31 யெரொபெயாமை நோக்கி: பத்துத் துண்டுகளை எடுத்துக்கொள்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன்.

1இராஜா 11:32 ஆனாலும் என் தாசனாகிய தாவீதுக்காகவும், நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் எல்லாம் தெரிந்துகொண்ட எருசலேம் நகரத்துக்காகவும், ஒரு கோத்திரம் அவனுக்கு இருக்கும்.

1இராஜா 11:33 அவர்கள் என்னைவிட்டு, சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், மோவாபியரின் தேவனாகிய காமோசையும், அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பணிந்துகொண்டு, அவன் தகப்பனாகிய தாவீதைப்போல என் பார்வைக்குச் செம்மையாய் இருக்கிறதைச் செய்யவும், என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளவும், அவர்கள் என் வழிகளில் நடவாமற் போனபடியினால் அப்படிச் செய்வேன்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 11 அதிகாரம்

1இராஜா 11:34 ஆனாலும் ராஜ்யபார முழுவதையும் நான் அவன் கையிலிருந்து எடுத்துப் போடுவதில்லை; நான் தெரிந்து கொண்டவனும், என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டவனுமான என் தாசனாகிய தாவீதினிமித்தம், அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன்.

1இராஜா 11:35 ஆனாலும் ராஜ்யபாரத்தை அவன் குமாரன் கையிலிருந்து எடுத்து, அதிலே பத்துக் கோத்திரங்களை உனக்குத் தருவேன்.

1இராஜா 11:36 என் நாமம் விளங்கும்படிக்கு, நான் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே என் சமுகத்தில் என் தாசனாகிய தாவீதுக்கு எந்நாளும் ஒரு விளக்கு இருக்கத்தக்கதாக, அவன் குமாரனுக்கு ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன்.

1இராஜா 11:37 நீ உன் மனவிருப்பத்தின் படி ஆண்டுகொண்டு, இஸ்ரவேலின்மேல் ராஜாவாய் இருப்பதற்காக நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்.

1இராஜா 11:38 நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து, என் தாசனாகிய தாவீது செய்ததுபோல, என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து, நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன்.

1இராஜா 11:39 இப்படி நான் இந்தக் காரியத்தினிமித்தம் தாவீதின் சந்ததியைச் சிறுமைப்படுத்துவேன்; ஆகிலும் எந்நாளும் அப்படியிராது என்று சொன்னான்.

"யெரொபெயாம்" (Jeroboam) - சாலொமோனுக்கு எதிராக எழும்பிய மூன்றாவது விரோதி. இவன் எருசலேம் தேசத்தான். சாலொமோன் மில்லோவைக்கட்டி, தன் தகப்பனாகிய தாவீதுடைய நகரத்தின் இடிந்துபோன இடங்களைப் பழுது பார்த்தபோது, யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான். (1இராஜா 11:26-28). அகியா என்னும் தீர்க்கதரிசி இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்களுக்கு யெரொபெயாம் ராஜாவாவான் என்று தீர்க்கதரிசனம் கூறினான். (1இராஜா 11:29-39). இதனால் சாலொமோனுக்கு யெரொபெயாமின் மேல் கோபம் உண்டாயிற்று. இதனால் யெரொபெயாம் சாலொமோனுக்குப் பயந்து அவன் மரிக்கும் வரையில் எகிப்து தேசத்தில் இருந்தான். (1இராஜா 11:40).

"சீலோனியனான அகியா" - சீலோவிலே ஆசரிப்புக்கூடாரம் அநேக நாள் இருந்தது. இந்த ஊர்க்காரனான அகியா என்னும் தீர்க்கதரிசி யெரொபெயாமை எருசலேமிலிருந்து வெளியே போகிற போது கண்டான். அகியா தான் போர்த்துக்கொண்டிருந்த புதுச்சால்வையைப் பிடித்து, அதைப் பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போட்டு, யெரொபெயாமை நோக்கி: பத்துத் துண்டுகளை எடுத்துக்கொள்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன் என்று கர்த்தருடைய வார்த்தையைத் தீர்க்கதரிசனமாகக் கூறினான். (1இராஜா 11:29-39).

"அதைப் பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போட்டு" - இது அடையாளமாகச் செய்யப்படும் ஒரு செய்கை. (1இராஜா 22:11; ஏசா 20:2; எரே 19:1-13; எசே 12; சக 11:7-14)

**தீர்க்கதரிசன எண் - 8**

"அகியா தான் போர்த்துக்கொண்டிருந்த புதுச்சால்வையைப் பிடித்து, அதைப் பன்னிரண்டு துண்டாகக் கிழித்துப்போட்டு.........." (1இராஜா 11:30-39) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 11 அதிகாரம்

### நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. பத்துத் துண்டுகளை எடுத்துக்கொள்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ராஜ்யபாரத்தைச் சாலொமோனுடைய கையிலிருந்து எடுத்துக் கிழித்து, உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்பேன். (1இராஜா 11:31)

2. என் தாசனாகிய தாவீதுக்காகவும், நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் எல்லாம் தெரிந்துகொண்ட எருசலேம் நகரத்துக்காகவும், ஒரு கோத்திரம் அவனுக்கு இருக்கும். (1இராஜா 11:32)

3. ஆனாலும் ராஜ்யபார முழுவதையும் நான் அவன் கையிலிருந்து எடுத்துப் போடுவதில்லை; என் தாசனாகிய தாவீதினிமித்தம், அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன். (1இராஜா 11:34)

4. ஆனாலும் ராஜ்யபாரத்தை அவன் குமாரன் கையிலிருந்து எடுத்து, அதிலே பத்துக் கோத்திரங்களை உனக்குத் (யெரொபெயாமுக்கு) தருவேன். (1இராஜா 11:35)

5. என் நாமம் விளங்கும்படிக்கு, நான் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே என் சமுகத்தில் என் தாசனாகிய தாவீதுக்கு எந்நாளும் ஒரு விளக்கு இருக்கத்தக்கதாக, அவன் குமாரனுக்கு (ரெகொபெயாமுக்கு) ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன். (1இராஜா 11:36)

6. நீ உன் மனவிருப்பத்தின்படி ஆண்டுகொண்டு, இஸ்ரவேலின்மேல் ராஜாவாய் இருப்பதற்காக நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். (1இராஜா 11:37)

7. நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து... என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து, நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன். (1இராஜா 11:38)

8. தாவீதின் சந்ததியைச் சிறுமைப் படுத்துவேன்; ஆகிலும் எந்நாளும் அப்படியிராது. (1இராஜா 11:39)

### சாலொமோன்மீது நியாயத்தீர்ப்பு வரக் காரணம்

1. சாலொமோன் கர்த்தரை விட்டுவிட்டான்.

2. சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தை பணிந்துகொண்டான்.

3. மோவாபியரின் தேவனாகிய காமோசை பணிந்துகொண்டான்.

4. அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பணிந்துகொண்டான்.

5. அவன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையாய் இருக்கிறதைச் செய்யவில்லை.

6. கர்த்தருடைய கட்டளைகளையும், கர்த்தருடைய நியாயங்களையும் தாவீதைப்போல கைக்கொள்ளவில்லை.

"என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டவனுமான என் தாசனாகிய தாவீது" - பத்சேபாள், இஸ்ரவேல் புத்திரரை இலக்கம் பார்த்தது ஆகிய இரண்டு பாவங்களைத்தவிர வேறுபாவம் செய்யவில்லை. தாவீது கர்த்தருடைய கற்பனைகளையும் கர்த்தருடைய கட்டளைகளையும் கைக்கொண்டான். (2சாமு 11-12; 2சாமு 24). தன்னுடைய பாவங்களுக்காக தாவீது கர்த்தருடைய சமுகத்தில் மனம் வருந்தியதினால் கர்த்தர் அவனை மன்னித்தார். தாம் மன்னித்த பாவங்களைக் கர்த்தர் மறுபடியும் நினைத்துப் பார்க்காமல், தாவீதை ஆசீர்வதிக்கிறார்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 11 அதிகாரம்

"அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன்" - (1இராஜா 11:31)

"அவன் குமாரன் கையிலிருந்து எடுத்து" - சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமின் கையிலிருந்து ராஜ்யபாரம் எடுக்கப்படும். 1இராஜா 12 ஆவது அதிகாரத்தில் இது நிறைவேறிற்று.

"பத்துக் கோத்திரங்கள்" - யெரொபெயாமிற்கு யூதா, பென்யமீன், லேவி ஆகிய கோத்திரங்களைத் தவிர மற்ற பத்துக் கோத்திரங்களும் கொடுக்கப்படுகிறது. ஆனாலும் யெரொபெயாமின் விக்கிரகாராதனையின் நிமித்தமாகப் பத்து கோத்திரத்திலுமுள்ள திரளான ஜனங்கள் தெற்கு தேசத்தை நோக்கி வருகிறார்கள். வடக்கு ராஜ்யத்தில் கர்த்தருக்குப் பயந்த ராஜா ஒருவரும் எழும்பவில்லை. ஆகையினால் கர்த்தர் தெற்கு ராஜ்யத்தை அழிப்பதற்கு முன்பாகவே வடக்கு ராஜயத்தை அழித்துப்போட்டார்.

"விளக்கு" - தாவீதின் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காகத் தாவீதின் சந்ததியில் ஒருவர் எப்போதும் ராஜ்யபாரம் பண்ணிக் கொண்டிருப்பார். யூதா கோத்திரம் ராஜ்யபாரம் பண்ணும் கோத்திரமாக இருக்கும். (ஆதி 49:10; 2சாமு 7; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33).

"அவன் குமாரனுக்கு ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன்" - யூதா கோத்திரத்தோடு இருக்குமாறு பென்யமீன் கோத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. லேவியரும் தாவீதுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள்.

"நீ" - யெரொபெயாம்.(1இராஜா 11:29,37).

**யெரொபெயாமுடைய ஆசீர்வாதத்தின் நிபந்தனைகள்**

1. கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டதை யெல்லாம் அவன் கேட்டுக் கைக்கொள்ள வேண்டும்.
2. யெரொபெயாம் கர்த்தருடைய வழிகளில் நடக்க வேண்டும்.
3. கர்த்தருடைய தாசனாகிய தாவீது செய்ததுபோல, யெரொபெயாம் கர்த்தருடைய கட்டளைகளையும் கர்த்தருடைய கற்பனைகளையும் கைக் கொண்டு, கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்ய வேண்டும்.

**கீழ்ப்படிதலின் ஆசீர்வாதங்கள்**

1. நான் உன்னோடிருப்பேன்.
2. நான் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டுவேன்.
3. இஸ்ரவேலை உனக்குத் தருவேன். (இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்களை மட்டும்) (1இராஜா 11:35,38).

"தாவீதின் சந்ததியைச் சிறுமைப் படுத்துவேன்" - சாலொமோனின் பாவங்களின் நிமித்தம் கர்த்தர் தாவீதின் சந்ததியைச் சிறுமைப்படுத்துகிறார்.

"ஆகிலும் எந்நாளும் அப்படியிராது" - இது ஆதி 49:10; 2சாமு 7:14-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தை உறுதிபண்ணுகிறது.

### (10) சாலொமோனின் பொறாமைக் குணம்

1இராஜா 11:40 அதினிமித்தம் சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகைதேடினான்; யெரொபெயாம் எழுந்து, எகிப்திற்குச் சீஷாக் என்னும் எகிப்தின் ராஜாவினிடத்தில் ஓடிப்போய், சாலொமோன் மரணமடையுமட்டும் எகிப்தில் இருந்தான்.

"சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகைதேடினான்" - சாலொமோன் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போய்விட்டான். கர்த்தர் சாலொமோனுக்கு எதிராகத் தமது தீர்ப்பை அறிவித்துவிட்டார். கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி ஒப்புக் கொடுப்பதற்குப் பதிலாக சாலொமோன் தனக்கு விரோதமாகக் கர்த்தர் எழுப்பியவனைக் கொல்ல வகை தேடுகிறான். (1இராஜா 21:27-29; 2நாளா 33:12).

## 11 அதிகாரம்

"சீஷாக் என்னும் எகிப்தின் ராஜா" - சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணியிருக்கிறான். இந்தச் சீஷாக் பார்வோன்களில் ஒருவனல்ல. சாலொமோனுக்கு பிந்திய காலங்களில் யூதாவின்மீது படையெடுத்த எகிப்தின் ஒரு ராஜா. (1இராஜா 14:25-29).

### (11) சாலொமோனின் மரணம் - (2நாளா 9:29)

1இராஜா 11:41 சாலொமோனின் மற்ற நடபடிகளும், அவன் செய்தவை அனைத்தும், அவனுடைய ஞானமும், சாலொமோனுடைய நடபடிப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 11:42 சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்.

1இராஜா 11:43 சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ரெகொபெயாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"இஸ்ரவேலையெல்லாம்" - சாலொமோன் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் ஆளுகை செய்தான். அவனுக்குப் பின்பு இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது. (2சாமு 2:1-5:5).

"நாற்பது வருஷம்" - இஸ்ரவேலின் முதல் மூன்று ராஜாக்களாகிய சவுல் (அப் 13:21); தாவீது (2சாமு 5:4); சாலொமோன் (1இராஜா 11:42) ஆகியோர் நாற்பது வருஷங்கள் ஆளுகை செய்தார்கள். இதன் பின்பு யூதாவின் ராஜாவாகிய யோவாஸ் மட்டுமே 40 வருஷம் ஆட்சி புரிந்தான். (2இராஜா 12:1). ஆஷா 41 வருஷமும், (1இராஜா 15:10) உசியா 52 வருஷமும் (2இராஜா 15:1-2), மனாசே 55 வருஷமும் (2இராஜா 21:1) ஆட்சி புரிந்தார்கள். மற்ற ராஜாக்களின் ஆட்சிக்காலம் மிகவும் குறைவாகவே இருந்தது.

## 12 அதிகாரம்

### III. ரெகொபெயாமின் ஆட்சி - (12:1-24; 14:21-31; 2நாளா 10:1-12:16)

### 1. ரெகொபெயாமின் மதிகேடான செய்கை - (2நாளா 10:1-11)

1இராஜா 12:1 ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி, இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போனான்.

1இராஜா 12:2 ராஜாவாகி சாலொமோனை விட்டு ஓடிப்போய், எகிப்திலே குடியிருந்த நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமோ, எகிப்தில் இருக்கையில் இதைக் கேள்விப்பட்டான்.

1இராஜா 12:3 அவர்கள் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்; அவனும் இஸ்ரவேல் சபை அனைத்தும் வந்து, ரெகொபெயாமை நோக்கி:

1இராஜா 12:4 உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.

1இராஜா 12:5 அதற்கு அவன்: நீங்கள் போய், மூன்றுநாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பிவாருங்கள் என்றான்; அப்படியே ஜனங்கள் போயிருந்தார்கள்.

1இராஜா 12:6 அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணி, இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

1இராஜா 12:7 அதற்கு அவர்கள்: நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக் காரராயிருப்பார்கள் என்றார்கள்.

1இராஜா 12:8 முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவன் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி,

1இராஜா 12:9 அவர்களை நோக்கி: உம்முடைய தகப்பன் எங்கள்மேல் வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்னிடத்தில் சொன்ன இந்த ஜனங்களுக்கு மறுமொழி கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

1இராஜா 12:10 அப்பொழுது அவனோடே வளர்ந்த வாலிபர் அவனை நோக்கி: உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நீர் அதை எங்களுக்கு லகுவாக்கும் என்று உம்மிடத்தில் சொன்ன இந்த ஜனத்திற்கு நீர் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும்.

1இராஜா 12:11 இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல் வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்லவேண்டும் என்றார்கள்.

1இராஜா 12:12 மூன்றாம்நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே, யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமிடத்தில் வந்தார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 12 அதிகாரம்

1இராஜா 12:13 ராஜா முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபருடைய ஆலோசனையின் படியே அவர்களோடே பேசி:

1இராஜா 12:14 என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று ஜனங்களுக்குக் கடினமான உத்தரவு கொடுத்தான்.

1இராஜா 12:15 ராஜா ஜனங்களுக்குச் செவிகொடாமற்போனான்; கர்த்தர் சீலோனியனான அகியா வைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமுக்குச் சொன்ன தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்படி கர்த்தரால் இப்படி நடந்தது.

"சீகேம்" (Shechem) - ரெகொபெயாம் முதன் முறையாக நீதி விசாரிக்கிறான். எப்பிராயீம் கோத்திரத்தார் ரெகொபெயாம்மீது சிநேகமாக இல்லை. ஆகையினால் அவர்களுடைய பட்டணமாகிய சீகேமுக்கே ரெகொபெயாம் போகிறான். இதனால் எப்பிராயீம் கோத்திரத்தார் யூதா கோத்திரத்தாருக்குக் கீழ்ப்படிகிறார்கள். இது கெரிசீம் மலையில் உள்ளது. ஏபால் மலைக்கு எதிராக உள்ளது. (உபா 11:29; உபா 27:1-8). சீகேம் தேசத்தார் கூடிவரும் இடமாகும். (யோசு 24:1) ஆபிரகாம் முதலாவது பலிபீடத்தை இங்கு கட்டினான். (ஆதி 12:6). ஈசாக்கும், யாக்கோபும் இங்கு வசித்து வந்தார்கள். யோசேப்பு இங்கு அடக்கம்பண்ணப்பட்டான். யாக்கோபின் துரவு இங்கு இருந்தது. (யோவான் 4:5).

"நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம்" - இவன் இதுவரையில் எகிப்து தேசத்தில் இருந்தான். இப்போது தன்னுடைய கோத்திரத்தாரோடு திரும்பி வந்து, அவர்களுக்குத் தலைவராகிறான். தாவீதின் குடும்பத்தார் தங்களுக்குச் செய்யும் அநீதிகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று ரெகொபெயாமிடம் முறையிட வருகிறான். (1இராஜா 12:2-15).

"உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்" - யெரொபெயாமும் அவனுடைய கூட்டத்தாரும் ரெகொபெயாமிடம் வந்து, தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளைக் குறித்து முறையிடுகிறார்கள். தங்கள்மீது வைக்கப்பட்டிருக்கும் பாரமான நுகத்தை லகுவாக்கினால் ரெகொபெயாமைச் சேவிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்கள். மூன்று நாள் கழித்து, அவர்களுக்கு பதில் கூறுவதாகக் கூறி, ரெகொபெயாம் அவர்களை அனுப்பி விடுகிறான். (1இராஜா 12:5). ரெகொபெயாமுக்கு முதியோர் நல்ல ஆலோசனை கூறுகிறார்கள். அவர்கள்மீது வைக்கப்பட்ட பாரத்தை லகுவாக்குமாறு கூறுகிறார்கள். (1இராஜா 12:6-7). ஆனால் ரெகொபெயாமின் வாலிப சிநேகிதரோ அவர்கள்மீது வைக்கப்பட்ட நுகத்தை இன்னும் பாரமாக்குமாறு ஆலோசனை கூறுகிறார்கள். (1இராஜா 12:8-11). ரெகொபெயாம் வாலிபரின் துராலோசனையை ஏற்றுக் கொள்கிறான். ரெகொபெயாமின் ஆணவமான பேச்சைக் கேட்டு யெரொபெயாமும், அவனுடைய கூட்டத்தாரும் ராஜாவுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். (1இராஜா 12:11-20).

"பாரமான நுகம்" - சாலொமோன் பல கட்டிடங்களைக் கட்டினான். இதற்கு அமஞ்சி ஆட்களை வேலைக்கு அமர்த்தினான். தன் தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் ராஜாவின் கட்டிட வேலையில் கட்டாயமாகப் பணிபுரிய வேண்டும். இந்த கடினவேலை தவிர, சாலொமோன் ஜனங்கள்மீது ஏராளமான வரிகளையும் விதித்திருந்தான். இது இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் பாரமான நுகமாக இருந்தது. சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் இந்தப் பாரமான நுகத்தை லகுவாக்குவான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவனோ அந்த நுகத்தை மேலும் கடினமாக்கி விட்டான்.

"நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி" - ரெகொபெயாமுக்கு முதியவர்கள் நல்ல ஆலோசனை கூறுகிறார்கள். ஆனால் அவனோ அவர்கள் ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தன்னுடைய வாலிப சிநேகிதரின் ஆலோசனையை அங்கிகரிக்கிறான். (1இராஜா 12:8-15). ராஜாக்கள் தன்னுடைய ஜனங்களுக்குச் சேவகராக இருக்க வேண்டும். தன்னுடைய சுயநலத்திற்காக அவர்களை அடக்கி ஆளக்கூடாது.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 12 அதிகாரம்

“என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும்” - 1இராஜா 12:7 ஆவது வசனத்தில் நல்ல ஆலோசனை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ரெகொபெயாமோ இவ்வாறு பதில் கூறுகிறான். இதனால் பிரச்சனைகள் அதிகரிக்குமே தவிர, பிரச்சனைகள் நீங்கி, சமாதானம் உண்டாகாது.

“யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமிடத்தில் வந்தார்கள்” - தங்கள்மீது சுமத்தப்பட்ட பாரம் லகுவாக வேண்டும் என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். ராஜா அதை லகுவாக்கவில்லை என்றால், அவனுக்கு எதிராகக் கலகம் பண்ணும் கூட்டத்திற்கு யெரொபெயாம் தலைவனாக இருக்க ஆயத்தமாக இருக்கிறான். தங்களுடைய பாரத்தை ராஜா லகுவாக்கினால் ராஜாவோடு ஒத்துப்போவதாகவும் ஜனங்கள் கூறுகிறார்கள். ஆனால் ரெகொபெயாமின் மனம் மாறவில்லை. தன்னைப் பற்றி ஏற்கெனவே முன்னறிவிக்கப் பட்டிருக்கிற காரியங்கள் நிறைவேறும் விதமாக ரெகொபெயாம் தன் இருதயத்தைக் கடினப் படுத்தினான். (1இராஜா 11:30-39)

“தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்படி கர்த்தரால் இப்படி நடந்தது” - (1இராஜா 11:30-39)

**2. உள்நாட்டுக் குழப்பம்** - (2இராஜா 25:25; 2சாமு 2:8; 2நாளா 10:12)

1இராஜா 12:16 ராஜா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் ராஜாவுக்கு மறுஉத்தரவாக: தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள் என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விட்டார்கள்.

1இராஜா 12:17 ஆனாலும் யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருந்தான்.

1இராஜா 12:18 பின்பு ராஜாவாகிய ரெகொபெயாம் பகுதிவிசாரிப்புக் காரனாகிய அதோராமை அனுப்பினான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி, எருசலேமுக்கு ஓடிப்போனான்.

1இராஜா 12:19 அப்படியே இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தை விட்டு கலகம் பண்ணிப் பிரிந்து போயிருக்கிறார்கள்.

1இராஜா 12:20 யெரொபெயாம் திரும்பிவந்தான் என்று இஸ்ரவேலருக்கெல்லாம் கேள்வியான போது, அவனைச் சபையினிடத்தில் அழைத்தனுப்பி, அவனைச் சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்கினார்கள்; யூதாகோத்திரம் மாத்திரமேயன்றி வேறொருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை.

“இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய விட்டார்கள்” - தாவீதின் குடும்பத்தாரோடு சமாதானமாக இருக்க முடியாது என்றும், ரெகொபெயாம் தங்களுக்கு ராஜாவாக இருக்க தகுதியற்றவன் என்றும் தீர்மானம்பண்ணி, யெரொபெயாமும், அவனோடு திரளான ஜனங்களும் சேர்ந்து, ராஜாவுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். இதனால் இதுவரையிலும் சமஸ்த தேசமாக இருந்த இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிகிறது. 260 வருஷங்களாகப் பிரிந்தே இருக்கிறது. இந்தப் பிரிவின் ஆரம்பம் ரெகொபெயாமின் காலத்தில் நடைபெறுகிறது. மற்ற தேசங்களுக்கு இஸ்ரவேல் தேசம் ஓர் எடுத்துக்காட்டாகவும், ஆசீர்வாதமானதாகவும் இருக்க வேண்டும் என்னும் கர்த்தருடைய திட்டம் இந்தப் பிரிவினையினால் நிறைவேறாமல் தாமதமாயிற்று. இஸ்ரவேலின் பிரிந்த ராஜ்யங்கள் இரண்டுமே புறஜாதி தேசங்களிடத்தில் சிறையிருப்பில் வைக்கப் படுகிறார்கள். இக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய அன்றாடப் பிரச்சனைகளை நோக்கிப் பார்த்து, தீர்வுகாண விரும்பினார்கள். இதனால் வருங்காலத்தில் என்னென்ன விளைவுகள் உண்டாகும் என்று சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 12 அதிகாரம்

"ரெகொபெயாம் ராஜாவாயிருந்தான்" - இஸ்ரவேல்தேசம் இரண்டாகப் பிரிந்தது. யூதா தேசத்திற்கு ரெகொபெயாம் ராஜாவானான். யூதாவும், பென்யமீனும் இவனுடைய தேசத்தில் திரளாக இருந்தபோதிலும் மற்ற பத்துக் கோத்திரத்தாரும் தெற்குதேசத்தில் இருக்கிறார்கள். இதனால் யூதா கோத்திரம் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரங்களுக்கும் பிரதிநிதியாக விளங்கிற்று. (1இராஜா 12:17-23;1நாளா 9:3;2நாளா 10:17; 2நாளா 11:3,16-17;2நாளா 15:9; 2நாளா 16:1; 2நாளா 19:8;2நாளா 23:2; 2நாளா 30:1,5,10-11; 2நாளா 31:6; 2நாளா 35:17-18).

"இஸ்ரவேலர் எல்லாரும்" - இவர்கள் வடக்கு ராஜ்ஜியத்தின் பத்து கோத்திரத்தார் மட்டுமே ஆவார்கள். ஒருசில வசனங்களில் இஸ்ரவேலர் என்பது இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிக்காமல் அவர்களுடைய பத்துக் கோத்திரங்களை மட்டுமே குறிக்கும். (1இராஜா 12:18,20,23).

"கல்லெறிந்து கொன்றார்கள்" - (யாத் 17:4).

"இந்நாள்வரைக்கும்" - இந்தப் புஸ்தகத்தின் இந்தப் பகுதி 2இராஜா 17 ஆவது அதிகாரத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் அகற்றப்படுவதற்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.

"யூதாகோத்திரம்மாத்திரமேயன்றி" - பென்யமீன் கோத்திரத்தாருக்கும், (1இராஜா 12:21), லேவி கோத்திரத்தாருக்கும் (எசே 44:9-16) யூதா என்னும் பெயர் இங்கு பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்களில் பத்துக் கோத்திரத்திலிருந்து வந்தவர்களும் இருக்கிறார்கள்.

### 3. தீர்க்கதரிசனம் யுத்தத்தைத் தவிர்த்தது - (2நாளா 11:1-4)

1இராஜா 12:21 ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக் கொள்ளவும், யூதா வம்சத்தார் பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டினான்.

1இராஜா 12:22 தேவனுடைய மனுஷனாகிய சேமாயாவுக்கு தேவனுடைய வார்த்தையுண்டாகி அவர் சொன்னது :

1இராஜா 12:23 நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும் யூதா வம்சத்தார் அனைவரையும் பென்யமீனரையும், மற்ற ஜனங்களையும் நோக்கி:

1இராஜா 12:24 நீங்கள் போகாமலும், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டிற்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்; அப்பொழுது அவர்கள்: கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே திரும்பிப் போய்விட்டார்கள்.

"இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம் பண்ணவும்" - ரெகொபெயாம் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துவதற்குப் பதிலாக இஸ்ரவேல் வம்சத்தாரோடு யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறான். (1இராஜா 12:7-10). சேமாயா என்னும் தீர்க்கதரிசி இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம் பண்ணக் கூடாது என்று ரெகொபெயாமிற்கு எச்சரித்துக் கூறினான். அதன் நிமித்தமாக யுத்தம் தவிர்க்கப்படுகிறது. (1இராஜா 12:22-24)

"யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டினான்" - தாவீதின் காலத்தில் 5 இலட்சம் யுத்தவீரர்கள் இருந்தார்கள். (2சாமு 24:9).

"சேமாயா" (Shemaiah) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் செவிகொடுத்தார்" "Jehovah has heard" என்று பொருள்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 12 அதிகாரம்

**வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "செமாயா"க்கள்**

1. ஒரு தீர்க்கதரிசி (1இராஜா 12:22; 2நாளா 11:2; 2நாளா 12:5-15)
2. செருபாபேலின் உறவினன். (1நாளா 3:22)
3. சிமியோன் கோத்திரத்தான் (1நாளா 4:37)
4. ரூபன் கோத்திரத்தான் (1நாளா 5:4,8)
5. ஒரு லேவியன் (1நாளா 9:14; நெகே 11:15)
6. ஒரு லேவியன் (1நாளா 9:16) மறுபெயர் சம்முவா (Shammua) (நெகே 11:17)
7. கோகாத்தியரின் தலைவன் (1நாளா 15:8,11)
8. தாவீதின் காலத்திலிருந்த ஒரு லேவியன் (1நாளா 24:6)
9. வாசற்காக்கிற லேவியன் (1நாளா 26:6-7)
10. யோசபாத்தின் காலத்திலிருந்த ஒரு லேவியன் (2நாளா 17:8)
11. எசேக்கியாவின் வேலைக்காரன் (2நாளா 17:8)
12. எசேக்கியாவின் காலத்திலிருந்த ஒரு லேவியன் (2நாளா 31:15)
13. யோசியாவின் காலத்திலிருந்து ஒரு லேவியன் (2நாளா 35:9)
14. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (எஸ்றா 8:13)
15. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் தலைவன். (எஸ்றா 8:16)
16. ஒரு ஆசாரியன் (எஸ்றா 10:21)
17. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (நெகே 3:29)
18. நெகேமியாவை எதிர்த்தவன். (நெகே 6:10)
19. ஒரு ஆசாரியன் (நெகே10:8; நெகே 12:6,18, 34-35)
20. ஒரு பாடகன் (நெகே 12:36,52)
21. உரியாவின் தகப்பன் (எரே 26:20)
22. எரேமியாவை எதிர்த்தவன் (எரே 29:24-32)
23. யூதாவின் பிரபு (எரே 36:12)

## IV. யெரொபெயாமின் ஆட்சி

### 1. யெரொபெயாமின் பாவங்கள்

**(அ) பொறாமை, அவிசுவாசம்** - (11:37-38)

1இராஜா 12:25 யெரொபெயாம் எப்பிராயீம் மலைத் தேசத்தில் சீகேமைக் கட்டி, அதிலே வாசம்பண்ணி, அங்கிருந்து போய்ப் பெனூவேலைக் கட்டினான்.

1இராஜா 12:26 யெரொபெயாம்: இப்போது ராஜ்யபாரம் தாவீது வம்சவசமாய்த் திரும்புகிறதாயிருக்கும்.

1இராஜா 12:27 இந்த ஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப் போனால், இந்த ஜனங்களின் இருதயம் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் தங்கள் ஆண்டவன் வசமாய்த் திரும்பி, அவர்கள் என்னைக் கொன்றுபோட்டு, யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமின் பாரிசமாய்ப் போய் விடுவார்கள் என்று தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருந்தான்.

"யெரொபெயாம் எப்பிராயீம் மலைத் தேசத்தில் சீகேமைக் கட்டி" - யெரொபெயாம் ராஜாவான பின்பு, சீகேமைத் தனக்குத் தலைநகரமாக்கிக் கொண்டான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 12 அதிகாரம்

**பத்துக் கோத்திரத்து (வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தின்) ராஜாக்கள்**

1. யெரொபெயாம் (1இராஜா 14:21) - 22 வருஷங்கள்
2. நாதாப் (1இராஜா 15:25) - 2 வருஷங்கள்
3. பாஷா (1இராஜா 15:33) - 24 வருஷங்கள்
4. ஏலா (1இராஜா 16:2) - 2 வருஷங்கள்
5. சிம்ரி (1இராஜா 16:15) - 7 நாட்கள்
6. உம்ரி (1இராஜா 16:23) - 12 வருஷங்கள்
7. ஆகாப் (1இராஜா 16:29) - 22 வருஷங்கள்
8. அகசியா (1இராஜா 22:51) - 2 வருஷங்கள்
9. யோராம் (2இராஜா 3:1) - 12 வருஷங்கள்
10. யெகூ (2இராஜா 10:36) - 28 வருஷங்கள்
11. யோவாகாஸ் (2இராஜா 13:1) - 17 வருஷங்கள்
12. யோவாஸ் (2இராஜா 13:10) - 16 வருஷங்கள்
13. இரண்டாம் யெரொபெயாம் (2இராஜா 14:23) - 41 வருஷங்கள்
14. சகரியா (2இராஜா 15:8) - 6 மாதங்கள்
15. சல்லூம் (2இராஜா 15:13) - ஒருமாதம்
16. மெனாகேம் (2இராஜா 15:17) - 10 வருஷங்கள்
17. பெக்காகியா (2இராஜா 15:23) - 2 வருஷங்கள்
18. பெக்கா (2இராஜா 15:27) - 20 வருஷங்கள்
19. ஓசெயா (2இராஜா 17:1) - 9 வருஷங்கள்

"சீகேமைக் கட்டி" - யெரொபெயாம் சீகேமைப் பழுதுபார்த்து, அதை விரிவுபடுத்தி அதன் அலங்கங்களைக் கட்டினான். (2நாளா 11:11).

"பெனூவேல்" **(Penuel)** - யோர்தானின் கிழக்குப் பகுதியில் உள்ளது. (ஆதி 32:30; நியா 8:8).

"தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருந்தான்" - ஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப்போனால் அவர்களுடைய இருதயம் ரெகொபெயாமின் வசமாய் திரும்பும். அவர்கள் தன்னைக் கொன்று போடுவார்கள் என்று யெரொபெயாம் தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருந்தான். (1இராஜா 12:26-27).

### (ஆ) விக்கிரகாராதனை

1இராஜா 12:28 ஆகையால் ராஜாவானவன் யோசனைபண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி, ஜனங்களைப் பார்த்து: நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி,

1இராஜா 12:29 ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான்.

1இராஜா 12:30 இந்தக் காரியம் பாவமாயிற்று; ஜனங்கள் இந்த ஒரு கன்றுக்குட்டிக்காகத் தாண்மட்டும் போவார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 12 அதிகாரம்

### யெரொபெயாமின் வீழ்ச்சியின் பாதைகள்

1. இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரும் எருசலேமிற்குப் போகாமல் இருக்க சதிபண்ணினான். (1இராஜா 12:26-27)
2. மனுஷனுடைய ஆலோசனையைக் கேட்டான். ஆனால் கர்த்தரிடத்தில் விசாரிக்கவில்லை. (1இராஜா 12:28; ஏசா 30:1)
3. இரண்டு பொன்கன்றுக்குட்டிகளைச் செய்தான்.
4. நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்; இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று ஜனங்களுக்கு அறிவித்தான்.
5. ஒரு கன்றுக்குட்டியைப் பெத்தேலிலும், மற்றொரு கன்றுக்குட்டியைத் தாணிலும் ஸ்தாபித்தான். (1இராஜா 12:29)
6. அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான். (1இராஜா 12:31)
7. யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக் கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு பண்டிகையையும் கொண்டாடி, பலிபீடத்தின்மேல் பலி யிட்டான் (1இராஜா12:32-33)
8. கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரி யராக்கினான். (1இராஜா 13:33-34)

"பெத்தேல்" - யோசியா இதை எடுத்துப் போட்டான். (2இராஜா 23:15). தாணிலிருந்த கன்றுக்குட்டியை திகலாத்-பிலேசர் எடுத்துக் கொண்டு போய்விட்டான். (2இராஜா 15:29).

"இந்தக் காரியம் பாவமாயிற்று" - யெரொபெயாமின் விக்கிரகங்கள் இஸ்ரவேலுக்குப் பாவமாயிற்று. யெரொபெயாமின் காலத்தில் "அவன் இஸ்ரவேலரைப் பாவம் செய்யப் பண்ணினான்" என்னும் வாக்கியம் 23 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (1இராஜா 14:16; 1இராஜா 15:26,30,34; 1இராஜா 16:2,13,19,26; 1இராஜா 21:22; 1இராஜா 22:52; 2இராஜா 3:3; 2இராஜா 10:29,31; 2இராஜா 13:2,6,11; 2இராஜா 14:24; 2இராஜா 15:9,18,24,28; 2இராஜா 17:21; 2இராஜா 23:15). இதுபோன்ற காரியங்கள் யூதாவில் மனாசேயின் காலத்தைத் தவிர, வேறு யாருடைய காலத்திலும் நடைபெறவில்லை. (2இராஜா 21:11-17).

### (இ) மேடைகளும் ஈனமான ஆசாரியர்களும்

1இராஜா 12:31 அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான்.

1இராஜா 12:32 யூதாவில் ஆசரிக்கப்படும் பண்டிகைக்கொப்பாக எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே யெரொபெயாம் ஒரு பண்டிகையையும் கொண்டாடி, பலி பீடத்தின்மேல் பலியிட்டான்; அப்படியே பெத்தேலிலே தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்குப் பலியிட்டு, தான் உண்டுபண்ணின மேடைகளின் ஆசாரியர்களைப் பெத்தேலிலே ஸ்தாபித்து,

1இராஜா 12:33 தன் மனதிலே தானே நியமித்துக் கொண்ட எட்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே பெத்தேலில் தான் உண்டாக்கின பலிபீடத்தின்மேல் பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி, பலி பீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங் காட்டினான்.

"மேடையாகிய ஒரு கோவில்" - இது உயர்ந்த இடங்கள் மட்டுமல்ல. உயர்ந்த மேடையில் கட்டப்பட்டிருக்கும் ஒரு கோவில்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 12 அதிகாரம்

"தன் மனதிலே தானே நியமித்துக் கொண்ட" - கள்ள உபதேசங்களும், கள்ளமார்க்கங்களும் இதுபோலத்தான் ஆரம்பமாகும். சாத்தான் சத்தியத்திற்கு விரோதமான காரியங்களை ஜனங்களின் மனதில் ஏவுவான். (யோவான் 8:44; எபே 2:1-3; 1யோவான் 3:8). கள்ளத் தீர்க்கதரிசனங்களும் இதுபோலவே ஆரம்பமாயிற்று. (எரே 13:10; எரே 14:14; எரே 16:12; எரே 17:9; எரே 18:12; எரே 23:16-26; எசே 13:17).

"இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையை ஏற்படுத்தி" - யெரொபெயாம் மனுஷனால் ஏற்படுத்தப்பட்ட பண்டிகைகளை மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர்மூலமாகக் கொண்டாடுகிறான். (1இராஜா 12:31,33).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 13 அதிகாரம்

### 2. யெரொபெயாமும் தீர்க்கதரிசியும்

#### (1) பலிபீடத்திற்கு எதிரான தீர்க்கதரிசனம்

1இராஜா 13:1 யெரொபெயாம் தூபங்காட்ட பலிபீடத்தண்டையிலே நிற்கையில், இதோ, தேவனுடைய மனுஷன் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே, யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்து,

1இராஜா 13:2 அந்தப் பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறி;

**தீர்க்கதரிசன எண் - 9**

"பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்....." (1இராஜா 13:2-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்.
2. அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்.
3. மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும்.
4. இந்தப் பலிபீடம் வெடித்து, அதின்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம் (1இராஜா 13:3)

"யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன்" - யோசியா பிறப்பதற்கு 322 வருஷங்களுக்கு முன்பாகவே இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. (2இராஜா 22:1,3,17-18). இதுபோலவே, கோரேசு பிறப்பதற்கு 213 வருஷங்களுக்கு முன்பாகவே அவன் பிறப்பைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசனம் கூறினான். (2நாளா 36:22-23; ஏசா 44:28).

"அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்" - 2இராஜா 23:17-18 ஆகிய வசனங்களில் இது நிறைவேறிற்று.

#### (2) மூன்று அற்புதங்கள்

1இராஜா 13:3 அன்றையதினம் அவன் ஒரு அடையாளத்தையும் சொல்லி, இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து, அதின் மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம்; கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான்.

1இராஜா 13:4 பெத்தேலில் இருக்கிற அந்தப் பலிபீடத்திற்கு எதிராக தேவனுடைய மனுஷன் கூறின வார்த்தையை ராஜாவாகிய யெரொபெயாம் கேட்டபோது, அவனைப் பிடியுங்கள் என்று தன் கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டினான்; அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக் கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று.

1இராஜா 13:5 தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையால் குறித்திருந்த அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்து, சாம்பல் பலி பீடத்திலிருந்து கொட்டுண்டு போயிற்று.

1இராஜா 13:6 அப்பொழுது ராஜா தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வேண்டிக்கொண்டு, என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ண வேண்டும் என்றான்; அப்பொழுது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்தான், ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்ப்பட்டது.

## 13 அதிகாரம்

"கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம்" - தீர்க்கதரிசனம் உரைத்த நாளன்றே அது நிறைவேறுவதற்கான அடையாளத்தையும் தீர்க்கதரிசி கூறுகிறான். அந்தப் பலிபீடம் வெடிக்கும். இது தேவனுடைய வல்லமையினால் நடைபெறும். பலிபீடத்தின் மேலுள்ள சாம்பலெல்லாம் வெளியே கொட்டப்படும். இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறிய மனுஷனைப் பிடிப்பதற்கு யெரொபெயாம் தன் கையை நீட்டினான். அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று. இந்தச் சம்பவம் நடைபெற்ற ஒருசில நிமிஷங்களில் பலிபீடம் வெடித்தது. (1இராஜா 13:4-5).

**பலிபீடத்தண்டையில் நடைபெற்ற அற்புதங்கள்**

1. யெரொபெயாமின் கை முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று. (1இராஜா 13:4)
2. பலிபீடம் வெடித்தது. (1இராஜா 13:5)
3. ராஜாவின் மரத்துப்போன கை குணமாயிற்று. (1இராஜா 13:6)

"என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ணவேண்டும்" - தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்தான், ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்ப்பட்டது. பலிபீடத்தண்டையில் மூன்று அற்புதங்கள் நடைபெறுகிறது. ஆனாலும் யெரொபெயாம் மனந்திரும்பவில்லை. எவ்வளவுதான் அற்புதங்கள் நடந்தாலும், இன்னும் ஏராளமான ஜனங்கள் தங்களுடைய பாவமான வழிகளிலிருந்து திரும்பாமல் இருக்கிறார்கள். (1இராஜா 13:4-6).

### (3) தீர்க்கதரிசியின் கீழ்ப்படிதல்

1இராஜா 13:7 அப்பொழுது ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி: நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு; உனக்கு வெகுமானம் தருவேன் என்றான்.

1இராஜா 13:8 தேவனுடைய மனுஷன் ராஜாவை நோக்கி: நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை.

1இராஜா 13:9 ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொல்லி,

1இராஜா 13:10 அவன் பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல், வேறுவழியாய்ப் போய்விட்டான்.

"நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு" - தேவனுடைய மனுஷனுக்கு ராஜா வெகுமானம் தரவிரும்புகிறான். ஏனெனில் ராஜாவின் மரத்துப்போன கை குணமாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய மனுஷனோ வெகுமதியை வாங்க மறுத்து விடுகிறான். எவ்வளவுதான் வெகுமதிகளைக் கொடுத்தாலும், ராஜாவோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை என்று கூறி மறுத்து விடுகிறான். தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறான். (1இராஜா 13:8-9).

### (4) தீர்க்கதரிசியின் கீழ்ப்படியாமை

1இராஜா 13:11 கிழவனான ஒரு தீர்க்கதரிசி பெத்தேலிலே குடியிருந்தான்; அவன் குமாரர் வந்து தேவனுடைய மனுஷன் அன்றைய தினம் பெத்தேலிலே செய்த எல்லாச் செய்கைகளையும், அவன் ராஜாவோடே சொன்ன வார்த்தைகளையும், தங்கள் தகப்பனுக்கு அறிவித்தார்கள்.

1இராஜா 13:12 அப்பொழுது அவர்கள் தகப்பன்: அவன் எந்த வழி போனான் என்று அவர்களைக் கேட்டான். யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷன் போனவழி இன்னதென்று அவன் குமாரர் பார்த்திருந்தபடியால்,

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 13 அதிகாரம்

1இராஜா 13:13 அவன் தன் குமாரருடனே: கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுங்கள் என்றான்; அவர்கள் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுத்தபின், அவன் அதின்மேல் ஏறி,

1இராஜா 13:14 தேவனுடைய மனுஷனைத் தொடர்ந்துபோய், ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்திருக்கிற அவனைக் கண்டு: யூதாவிலிருந்துவந்த தேவனுடைய மனுஷன் நீர்தானா என்று அவனைக் கேட்டதற்கு; அவன், நான்தான் என்றான்.

1இராஜா 13:15 அப்பொழுது அவனை நோக்கி: என்னோடே வீட்டுக்கு வந்து அப்பம் புசியும் என்றான்.

1இராஜா 13:16 அதற்கு அவன்: நான் உம்மோடே திரும்பவும் உம்மோடே உள்ளே போகவுமாட்டேன்; இந்த ஸ்தலத்திலே உம்மோடே நான் அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவுமாட்டேன்.

1இராஜா 13:17 ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், அங்கே தண்ணீர் குடியாமலும், நீ போன வழியாய்த் திரும்பிவராமலும் இரு என்று கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிருக்கிறது என்றான்.

1இராஜா 13:18 அதற்கு அவன்: உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் பொய் சொன்னான்.

1இராஜா 13:19 அப்பொழுது அவன் இவனோடே திரும்பிப் போய், இவன் வீட்டிலே அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தான்.

"கிழவனான ஒரு தீர்க்கதரிசி பெத்தேலிலே குடியிருந்தான்" - யெரொபெயாமின் பலிபீடம் வெடித்துச் சிதறியதைப் பெத்தேலிலே குடியிருந்த ஒரு தீர்க்கதரிசி கேள்விப்படுகிறான். (1இராஜா 13:10-12) ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்திருந்த தேவனுடைய மனுஷனை இந்தத் தீர்க்கதரிசி தன் வீட்டுக்கு அழைத்து கொண்டு வந்தான். (1இராஜா 13:13-15). அவன் முதலில் வர மறுத்தாலும், தீர்க்கதரிசி வருந்திக் கேட்டதின் நிமித்தமாக அவனுடைய வீட்டிற்குப் போகிறான். (1இராஜா 13:16-19). அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருக்கிற போது, தேவனுடைய மனுஷனுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.(1இராஜா 13:20-22).

"ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்திருக்கிற அவனைக் கண்டு" - இவன் யூதாவுக்குப் போயிருந்திருக்க வேண்டும். இன்னும் ஒருசில மைல்கள் பிரயாணம் பண்ணியிருந்தால், தன்னுடைய தேசத்திற்கே போயிருந்திருக்கலாம். இந்த மரத்தில் ஓய்வெடுத்து சோதனையில் சிக்கிக் கொள்கிறான்.

"நீ அப்பம் புசியாமலும், அங்கே தண்ணீர் குடியாமலும், நீ போன வழியாய்த் திரும்பி வராமலும் இரு" - இது தேவனுடைய மனுஷனுக்குக் கர்த்தர் கொடுத்திருக்கும் கட்டளை. இந்தக் கட்டளையை அவன் மறக்கவில்லை. அவனே அதை இரண்டுமுறை தன் வாயால் கூறியிருக்கிறான். வயதான தீர்க்கதரிசி அவனைத் தன் வீட்டிற்கு அழைத்தபோது, அவனுடைய வார்த்தையை நம்பி அவனோடே தீர்க்கதரிசியின் வீட்டிற்குப் போய்விட்டான். ஒரு மனுஷனுக்குக் கர்த்தர் ஒரு வார்த்தையைத் தெளிவாகக் கூறியிருக்கும் போது அதை மற்றொரு மனுஷன் பொதுவாக மூலமாக மாற்றிக் கூறுவதில்லை.

### (5) தீர்க்கதரிசியின்மீது நியாயத்தீர்ப்பு

1இராஜா 13:20 அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருக்கிறபோது, அவனைத் திருப்பிக்கொண்டு வந்த தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டானதினால்,

1இராஜா 13:21 அவன் யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி,

## 13 அதிகாரம்

1இராஜா 13:22 அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்த படியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 13:23 அவன் போஜனபானம் பண்ணி முடிந்தபின்பு, அந்தத் தீர்க்கதரிசியைத் திருப்பிக்கொண்டு வந்தவன் அவனுக்குக் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுத்தான்.

1இராஜா 13:24 அவன் போனபிற்பாடு வழியிலே ஒரு சிங்கம் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது; அவன் பிரேதம் வழியிலே கிடந்தது; கழுதை அதினண்டையிலே நின்றது; சிங்கமும் பிரேதத்தண்டையிலே நின்றது.

1இராஜா 13:25 அந்த வழியிலே கடந்துவருகிற மனுஷர், வழியிலே கிடக்கிற பிரேதத்தையும், பிரேதத் தண்டையிலே நிற்கிற சிங்கத்தையும் கண்டு, கிழவனான தீர்க்கதரிசி குடியிருந்த பட்டணத்திலே வந்து சொன்னார்கள்.

1இராஜா 13:26 அவனை வழியிலிருந்து திரும்பப்பண்ணின தீர்க்கதரிசி அதைக் கேட்டபோது, அவன் கர்த்தருடைய வாக்கை மீறின தேவனுடைய மனுஷன் தான், கர்த்தர் அவனுக்குச் சொன்ன வார்த்தையின்படியே, கர்த்தர் அவனை ஒரு சிங்கத்திற்கு ஒப்புக்கொடுத்தார்; அது அவனை முறித்துக் கொன்றுபோட்டது என்று சொல்லி,

### தீர்க்கதரிசன எண் - 10

"அவன் யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு....." (1இராஜா 13:21-22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

### தேவனுடைய மனுஷனின் பாவங்கள்

1. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை.
2. கர்த்தருடைய கட்டளையைக் கடைப்பிடிக்க வில்லை.
3. கர்த்தர் வேறு எங்கும் போகக்கூடாது என்று அறிவித்திருந்தும், அவன் பெத்தேலுக்குப் போனான். (1இராஜா 13:9,22)
4. கர்த்தருடைய கட்டளையை மீறி தீர்க்கதரிசியின் வீட்டில் அப்பம் புசித்து, தண்ணீர் குடித்தான். (1இராஜா 13:8,22)

"அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம்" - பெத்தேலில் அப்பம் புசிக்கவும், தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று கர்த்தர் ஏன் கட்டளையிட்டார் என்று தெரியவில்லை. ஒருவேளை யெரொபெயாமின் விக்கிரகாராதனையின் நிமித்தமாகக் கர்த்தர் இதைத் தடைபண்ணியிருந்திருக்கலாம். யெரொபெயாமின் ராஜ்யத்தில் பக்தியுள்ள இஸ்ரவேல் புத்திரர் அவனைவிட்டுப் பிரிந்து, ரெகொபெயாமிடம்போய் சேர்ந்தார்கள். வயதான இந்தத் தீர்க்கதரிசியோ பெத்தேலைவிட்டு யூதாவுக்குப் போகாமல், அங்கேயே தங்கியிருக்கிறான். யெரொபெயாம் நிறுவின இரண்டு கன்றுக்குட்டிகளில் ஒன்று பெத்தேலில் உள்ளது. இதன் நிமித்தமாக அந்த ஊரில் போஜனம் பண்ண வேண்டாமென்று தேவனுடைய மனுஷனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டிருந்திருப்பார்.

"உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை" - அவனுடைய சரீரம் வேறு ஏதாவது ஒரு இடத்தில் அடக்கம் பண்ணப்படும்.

"ஒரு சிங்கம் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது" - இந்தச் சிங்கம் தேவனுடைய மனுஷனை மட்டுமே கொன்றுபோட்டது. ஆனால் அவனைப் புசிக்கவில்லை. தேவனுடைய மனுஷன் ஏறி வந்த கழுதை அங்கேயே இருக்கிறது. சிங்கமும் அந்தப் பிரேதத்தண்டையிலும், அந்தக் கழுதையின் அண்டையிலும் நிற்கிறது. (1இராஜா 13:24-25). சிங்கம்கூட கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறது. ஆனால் தேவனுடைய மனுஷனோ காத்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை. பெத்தேலிலுள்ள தீர்க்கதரிசிக்கு இந்தச் செய்தி வந்தபோது, அவன் தேவனுடைய மனுஷனின் பிரேதத்தையெடுத்து அதைத் தன்னுடைய கல்லறையில் அடக்கம் பண்ணினான். (1இராஜா 13:24-31).

## 13 அதிகாரம்

### (6) தீர்க்கதரிசி அடக்கம் பண்ணப் படுகிறான்

1இராஜா 13:27 தன் குமாரரை நோக்கி: எனக்குக் கழுதையின்மேல் சேணம் வைத்துக் கொடுங்கள் என்றான்; அவர்கள் சேணம் வைத்துக் கொடுத்தார்கள்.

1இராஜா 13:28 அப்பொழுது அவன் போய், வழியிலே கிடக்கிற அவன் பிரேதத்தையும், பிரேதத்தண்டையிலே கழுதையும் சிங்கமும் நிற்கிறதையும் கண்டான்; அந்தச் சிங்கம் பிரேதத்தைத் தின்னவுமில்லை, கழுதையை முறித்துப் போடவுமில்லை.

1இராஜா 13:29 அப்பொழுது கிழவனான அந்தத் தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிரேதத்தை எடுத்து, அதைக் கழுதையின்மேல் வைத்து, அதற்காகத் துக்கங் கொண்டாடவும் அதை அடக்கம்பண்ணவும், அதைத் தன் பட்டணத்திற்குக் கொண்டுவந்து,

1இராஜா 13:30 அவன் பிரேதத்தைத் தன்னுடைய கல்லறையிலே வைத்தான். அவனுக்காக: ஐயோ, என் சகோதரனே என்று புலம்பி, துக்கங் கொண்டாடினார்கள்.

1இராஜா 13:31 அவனை அடக்கம் பண்ணினபின்பு, அவன் தன் குமாரரை நோக்கி: நான் மரிக்கும்போது, தேவனுடைய மனுஷன் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையிலே என்னையும் நீங்கள் அடக்கம்பண்ணி, அவன் எலும்புகளண்டையிலே என் எலும்புகளையும் வையுங்கள்.

1இராஜா 13:32 அவன் பெத்தேலில் இருக்கிற பலிபீடத்திற்கும், சமாரியாவின் பட்டணங்களில் இருக்கிற மேடைகளாகிய சகல கோவில்களுக்கும் விரோதமாகக் கூறின கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும் என்றான்.

### (7) யெரொபெயாம் தொடர்ந்து பொல்லாப்பு செய்கிறான்

1இராஜா 13:33 இந்த நடபடிக்குப்பின்பு, யெரொபெயாம் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பாமல், மறுபடியும் ஜனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியராக்கினான்; எவன்மேல் அவனுக்கு மனதிருந்ததோ அவனைப் பிரதிஷ்டைபண்ணினான்; அப்படிப் பட்டவர்கள் மேடைகளின் ஆசாரியரானார்கள்.

1இராஜா 13:34 யெரொபெயாமின் வீட்டாரை பூமியின்மேல் வைக்காமல் அதம்பண்ணி அழிக்கும்படியாக இந்தக் காரியம் அவர்களுக்குப் பாவமாயிற்று.

“இந்த நடபடிக்குப்பின்பு, யெரொபெயாம் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பாமல்” - யெரொபெயாம் இன்னும் விக்கிரகாராதனையில் இருக்கிறான். தன் இருதயத்தைக் கடினப் படுத்திக் கொண்டான். தேவனுடைய மனுஷன் எச்சரித்தும் அவன் திருந்தவில்லை. பல அற்புதங்களை யெரொபெயாம் தன் கண்களால் பார்த்தும், அவன் மெய்யான கர்த்தரிடத்தில் திரும்பாமல், விக்கிரகாராதனையில் தொடர்ந்து நிற்கிறான். (1இராஜா 13:4-6) யெரொபெயாமின் பாவம் அவனையும், அவன் வீட்டாரையும் அழித்துப்போட்டது. (1இராஜா 13:34).

## 14 அதிகாரம்

### 3. யெரொபெயாமின்மீது நியாயத்தீர்ப்பு

#### (1) குமாரனின் வியாதி

1இராஜா 14:1 அக்காலத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் விழுந்தான்.

1இராஜா 14:2 அப்பொழுது யெரொபெயாம் தன் மனைவியைப் பார்த்து: நீ எழுந்து, நீ யெரொபெயாமின் மனைவியென்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி சீலோவுக்குப் போ; இந்த ஜனத்தின்மேல் நான் ராஜாவாவேன் என்று என்னோடே சொன்ன தீர்க்கதரிசியாகிய அகியா அங்கே இருக்கிறான்.

1இராஜா 14:3 நீ உன் கையிலே பத்து அப்பங்களையும், பணியாரங்களையும், ஒரு கலசம் தேனையும் எடுத்துக்கொண்டு அவனிடத்துக்குப் போ; பிள்ளைக்குச் சம்பவிக்கப் போகிறது இன்னதென்று அவன் உனக்கு அறிவிப்பான் என்றான்.

1இராஜா 14:4 அப்படியே யெரொபெயாமின் மனைவி செய்தாள்; அவள் எழுந்து சீலோவுக்குப் போய், அகியாவின் வீட்டிற்குள் பிரவேசித்தாள்; அகியாவோ முதிர் வயதானதினால் அவன் கண்கள் மங்கலடைந்து பார்க்கக் கூடாதிருந்தான்.

"யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் விழுந்தான்" - யெரொபெயாம் கட்டிய பலிபீடம் வெடித்துச் சிதறியது. மரத்துப்போன அவனுடைய கை குணமாயிற்று. (1இராஜா 13:4-6) அந்தக் காலத்தில் அவனுடைய குமாரனாகிய அபியா வியாதியில் விழுந்தான். தன்னுடைய மனைவியைத் தன் குமாரனின் நிமித்தம் அகியாவைப் பார்ப்பதற்காக அனுப்புகிறான். வேஷம்மாறி, சீலோவிற்குப் போகுமாறு கூறுகிறான். (1இராஜா 14:2). யெரொபெயாமிற்குத் தன் விக்கிரகங்கள்மேல் நம்பிக்கையில்லை. அரசியல் காரணங்களுக்காக அவன் விக்கிரகாராதனை செய்கிறான். தன் தேசத்தில் விக்கிரகங்கள் இல்லையென்றால், தன்னுடைய ஜனங்கள் எருசலேமுக்குப் போய்விடுவார்களோ என்னும் சந்தேகத்தில் விக்கிரகங்களை ஸ்தாபிக்கிறான். (1இராஜா 12:26-28). யெரொபெயாமின் உள்ளத்தில் கர்த்தரே மெய்யான தேவன் என்னும் நம்பிக்கை இருக்கிறது. கர்த்தரே யெரொபெயாமிற்குத் தேசத்தைக் கொடுத்தார். அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் அவனும், அவனுடைய குடும்பமும், அவனுடைய ராஜ்யமும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.(1இராஜா 11:30-39).

பணியாரங்கள் **(cracknels) - נִקֻּדִים - nik-kood' - 5350**

ஆண்பால் பெயர்ச்சொல் - பணியாரம் **(biscuit)**

"அகியாவோ முதிர் வயதானதினால் அவன் கண்கள் மங்கலடைந்து பார்க்கக் கூடாதிருந்தான்" - அகியாதான் யெரொபெயாம் ராஜாவாவான் என்று தீர்க்கதரிசனம் கூறியவன். இப்போது அகியாவிற்கு முதிர்வயதாயிற்று. கண்களின் பார்வையும் மங்கிவிட்டது. யெரொபெயாம் தன் மனைவியை வேஷம்மாறிப் போகச்சொன்னான். இது அவனுடைய குற்ற உணர்வைக் காண்பிக்கிறது. அப்பங்களையும், பணியாரங்களையும் ஒரு கலசம் தேனையும் மிகவும் ஏழ்மையில் இருப்பவர்களே காணிக்கையாகக் கொண்டுசெல்வார்கள். தன் தேசம் ஏழ்மையில் இருக்கிறது என்று யெரொபெயாம் அகியாவை ஏமாற்றுகிறான். இதுபோலவே ரெபெக்காளும், யாக்கோபும் ஒரு காலத்தில் ஈசாக்கை வஞ்சித்தார்கள். (ஆதி 27:1,22).

#### (2) அறிவை உணர்த்தும் வசனம் - (1கொரி 12:8; 2இராஜா 6:32)

1இராஜா 14:5 கர்த்தர் அகியாவினிடத்தில்: இதோ, யெரொபெயாமின் மனைவி வியாதியாயிருக்கிற தன் குமாரனுக்காக உன்னை ஒரு விசேஷம்கேட்க வருகிறாள்; நீ அவளுக்கு இன்ன இன்ன பிரகாரமாகச் சொல்ல வேண்டும்; அவள் உட்பிரவேசிக்கிற போது, தன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிப்பாள் என்றார்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 14 அதிகாரம்

1இராஜா 14:6 ஆகையால் வாசற்படிக்குள் பிரவேசிக்கும் அவளுடைய நடையின் சத்தத்தை அகியா கேட்டவுடனே, அவன்: யெரொபெயாமின் மனைவியே, உள்ளேவா; உன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிக்கிறதென்ன? துக்கச்செய்தியை உனக்கு அறிவிக்க நான் அனுப்பப்பட்டேன்.

"கர்த்தர் அகியாவினிடத்தில்: இதோ, யெரொபெயாமின் மனைவி....என்றார்" - எவ்வளவுதான் வேஷம் மாறினாலும், கர்த்தரை ஏமாற்ற முடியாது. யெரொபெயாமின் மனைவி அகியாவின் வீட்டிற்குள் வருவதற்கு முன்பாகவே கர்த்தர் அதை அகியாவுக்கு வெளிப்படுத்துகிறார்.

"யெரொபெயாமின் மனைவியே, உள்ளேவா" - அகியா தன்னை இவ்வாறு அழைத்தது யெரொபெயாமின் மனைவிக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கலாம். இரகசியமாகப் போகவேண்டும், வஞ்சிக்க வேண்டும் என்னும் எந்த எண்ணமும் அகியாவிடம் சித்திக்கவில்லை.

### (3) யெரொபெயாமிற்கு எதிரான தீர்க்கதரிசனம்

1இராஜா 14:7 நீ போய் யெரொபெயாமை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: ஜனத்தினின்று உன்னை நான் உயர்த்தி, உன்னை இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தின்மேல் அதிபதியாக வைத்தேன்.

1இராஜா 14:8 நான் ராஜ்யபாரத்தைத் தாவீது வம்சத்தாரின் கையிலிருந்து பிடுங்கி உனக்குக் கொடுத்தேன்; ஆனாலும் என் கற்பனைகளைக் கைக் கொண்டு, என் பார்வைக்குச் செம்மையானதையே செய்ய, தன் முழு இருதயத்தோடும் என்னைப் பின்பற்றின என் தாசனாகிய தாவீதைப் போல நீ இராமல்,

1இராஜா 14:9 உனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பொல்லாப்புச் செய்தாய்; எனக்குக் கோபம் உண்டாக்க, நீ போய் உனக்கு அந்நிய தேவர்களையும் வார்க்கப்பட்ட விக்கிரகங்களையும் உண்டுபண்ணி, உனக்குப் புறம்பே என்னைத் தள்ளிவிட்டாய்.

1இராஜா 14:10 ஆகையால் இதோ, நான் யெரொபெயாமுடைய வீட்டின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணி, யெரொபெயாமுக்கு, சுவர் மேல் நீர்விடும் ஒரு நாய் முதலாயிராதபடிக்கு, இஸ்ரவேலிலே அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்காரம்பண்ணி, குப்பை கழித்துப்போடப்படுகிறது போல யெரொபெயாமின் பின்னடியாரை அவர்கள் கட்டோடே அற்றுப் போகுமட்டும் கழித்துப்போடுவேன் என்றார்.

1இராஜா 14:11 யெரொபெயாமின் சந்ததியாரில் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்தின் பறவைகள் தின்னும்; கர்த்தர் இதை உரைத்தார்.

### தீர்க்கதரிசன எண் - 11

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்......" (1இராஜா 14:7-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

### நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் (கர்த்தர்) யெரொபெயாமுடைய வீட்டின்மேல் பொல்லாப்பை வரப் பண்ணுவேன். (1இராஜா 14:10).
2. யெரொபெயாமின் வீட்டில் எல்லா ஆண்பிள்ளைகளையும் சங்காரம் பண்ணுவேன்.
3. இஸ்ரவேலிலே அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்காரம்பண்ணுவேன்.
4. யெரொபெயாமின் சந்ததியாரில் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும். வெளியிலே சாகிறவனை ஆகாயத்தின் பறவைகள் தின்னும். (1இராஜா 14:11).

## 14 அதிகாரம்

5. உன் கால்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில் பிள்ளையாண்டான் செத்துப்போவான். (1இராஜா 14:12).

6. அவனுக்காக இஸ்ரவேலரெல்லாரும் துக்கங்கொண்டாடி அவனை அடக்கம் பண்ணுவார்கள். (1இராஜா 14:13).

7. யெரொபெயாமின் சந்ததியில் அவன் ஒருவனே கல்லறைக்குட்படுவான்.

8. கர்த்தர் தமக்கு இஸ்ரவேலின்மேல் ஒரு ராஜாவை எழும்பப்பண்ணுவார். அவன் அந்நாளிலே யெரொபெயாமின் வீட்டாரைச் சங்கரிப்பான் (1இராஜா 14:14).

9. தண்ணீரிலே நாணல் அசைகிறது போல, கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப் பண்ணுவார். (1இராஜா 14:15).

10. தாம் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து இஸ்ரவேலை வேரோடே பிடுங்கிப் போடுவார். (1இராஜா 14:15-16).

"என் தாசனாகிய தாவீதைப் போல நீ இராமல்" - இஸ்ரவேலின் ராஜாக்கள் தாவீதோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள். (1இராஜா 3:14; 1இராஜா 9:4; 1இராஜா 11:4,6, 33,38; 1இராஜா 14:8,1இராஜா 15:3,6;2இராஜா 14:3; 2இராஜா 16:2; 2இராஜா 18:3; 2இராஜா 22:2).

**யெரொபெயாமின் பாவங்கள்**

1. அந்நிய தேவர்களையும் வார்க்கப்பட்ட விக்கிரகங்களையும் உண்டுபண்ணினான்.

2. தனக்குப் புறம்பே கர்த்தரைத் தள்ளி விட்டான்.

"உனக்குப் புறம்பே என்னைத் தள்ளி விட்டாய்" - கர்த்தரை ஏற்கெனவே அறிந்திருக்கிறவன். மோசமான பாவத்தில் விழுவதை இந்த வாக்கியம் விவரிக்கிறது கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், உண்டாகும் ஆசீர்வாதங்களை யெரொபெயாம் தீர்க்கதரிசியின் மூலமாக ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறான். (1இராஜா 11:30-39; 1இராஜா 12:25-33).

"இஸ்ரவேலிலே அடைபட்டவனையும் விடுபட்டவனையும்" - அடைபட்டவன் என்பது அடிமையாக இருப்பவனையும், விடுபட்டவன் என்பது விடுதலை பெற்றிருப்பவனையும் குறிக்கும். யெரொபெயாமின் வீட்டில் கர்த்தர் எல்லோரையும் சங்காரம் பண்ணுவார்.

**(4) தீர்க்கதரிசனம் நிறைவேறுதற்கு அடையாளம்**

1இராஜா 14:12 ஆகையால் நீ எழுந்து, உன் வீட்டுக்குப்போ, உன் கால்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில் பிள்ளையாண்டான் செத்துப்போவான்.

1இராஜா 14:13 அவனுக்காக இஸ்ரவேலரெல்லாரும் துக்கங்கொண்டாடி அவனை அடக்கம் பண்ணுவார்கள்; யெரொபெயாமின் வீட்டாரில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக அவனிடத்திலே நல்ல காரியம் காணப்பட்டதினால், யெரொபெயாமின் சந்ததியில் அவன் ஒருவனே கல்லறைக்குட்படுவான்.

**(5) இஸ்ரவேலில் சிறையிருப்பு பற்றிய தீர்க்கதரிசனம்**

1இராஜா 14:14 ஆனாலும் கர்த்தர் தமக்கு இஸ்ரவேலின்மேல் ஒரு ராஜாவை எழும்பப்பண்ணுவார்; அவன் அந்நாளிலே யெரொபெயாமின் வீட்டாரைச் சங்கரிப்பான்; இப்போதே இது நடந்தேறும்.

1இராஜா 14:15 தண்ணீரிலே நாணல் அசைகிறது போல, கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணி, அவர்கள் பிதாக்களுக்குத் தாம் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து இஸ்ரவேலை வேரோடே பிடுங்கி, அவர்கள் தங்களுக்கு தோப்பு விக்கிரகங்களை வைத்து, கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கின படியினால், அவர்களை நதிக்கப்பாலே சிதறடித்து,

## 14 அதிகாரம்

1இராஜா 14:16 யெரொபெயாம் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவத்தினிமித்தம் இஸ்ரவேலை ஒப்புக் கொடுத்துவிடுவார் என்றான்.

"இப்போதே இது நடந்தேறும்" - இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு இருபது வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறிற்று. பாஷா யெரொபெயாமின் பின்னடியார் எல்லோரையும் அழித்துப்போட்டான். (1இராஜா 15:27-31).

"தண்ணீரிலே நாணல் அசைகிறது போல, கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணி" - தீர்க்கதரிசனத்தின் இந்தப் பகுதி 250 வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறிற்று. (2இராஜா 17).

"இந்த நல்ல தேசம்" - (உபா 9:6; யோசு 23:13,15; 1இராஜா 14:15,1நாளா 28:8)

"நதி" - ஐபிராத்து நதி. (2இராஜா 17).

"இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவத்தினிமித்தம்" - (1இராஜா 12:30)

"இஸ்ரவேலை ஒப்புக் கொடுத்துவிடுவார்" - கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் ஒருவன் புறக்கணித்தால், அவனுக்கு அழிவு வரும். பாவத்தில் மூழ்கி, அவன் நரகத்திற்குப் போவான். (ரோமர் 1:24-32).

### (6) யெரொபெயாமின் மகனுடைய மரணம்

1இராஜா 14:17 அப்பொழுது யெரொபெயாமின் மனைவி எழுந்து புறப்பட்டு திர்சாவுக்கு வந்தாள்; அவள் வாசற்படியிலே வருகையில் பிள்ளையாண்டான் செத்துப் போனான்.

1இராஜா 14:18 கர்த்தர் தீர்க்கதரிசியாகிய அகியா என்னும் தமது ஊழியக்காரனைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, அவர்கள் அவனை அடக்கம்பண்ணி, இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள்.

"திர்சா" (Tirzah) - இந்தப் பட்டணத்தைப் பாஷா எப்பிராயீமின் தலைநகரமாக்கினான். (1இராஜா 15:21) உம்ரி சமாரியவைக் கட்டும் வரையிலும் திர்சாவே தலைநகரமாக இருந்தது. (1இராஜா 15:33; 1இராஜா 16:6-24, யோசு 12:24; 2இராஜா 14-16; உன் 6:4). திர்சா என்னும் பெயரில் ஒரு ஸ்திரீயும் இருக்கிறாள். (எண் 26:33; எண் 27:1; எண் 36:11; யோசு 17:3)

"பிள்ளையாண்டான் செத்துப் போனான்" - 1இராஜா 14:12 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

"இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்காகத் துக்கங் கொண்டாடினார்கள்"-1இராஜா 14:13 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

### 4. யெரொபெயாமின் மரணம் - (2நாளா 13:20)

1இராஜா 14:19 யெரொபெயாம் யுத்தம் பண்ணினதும் ஆண்டதுமான அவனுடைய மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

1இராஜா 14:20 யெரொபெயாம் ராஜ்யபாரம்பண்ணின காலம் இருபத்திரண்டு வருஷம்; அவன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய நாதாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"யெரொபெயாம் ..... மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 13).

"யெரொபெயாம் ராஜ்யபாரம்பண்ணின காலம் இருபத்திரண்டு வருஷம்" - 2நாளா 13:20 ஆவது வசனத்தில் யெரொபெயாம் வியாதிப்பட்டான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் அவனுடைய குமாரனாகிய நாதாப் அவனோடு சேர்ந்து ஆட்சி புரிந்திருக்க வேண்டும். (1இராஜா 15:25) யெரொபெயாமின் மரணத்திற்குப் பின்பும், நாதாப் மேலும் இரண்டு வருஷம் ஆட்சி புரிந்தான். ராஜாக்கள் புஸ்தகத்தில் யூதா ராஜ்யத்தின் வரலாறு மட்டுமே தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. எப்பிராயீம் ராஜாக்களைப் பற்றி, ராஜாக்கள் புஸ்தகத்தில் அதிகமாக விளக்கப்படவில்லை.

## 14 அதிகாரம்

### V. ரெகொபெயாமின் ஆட்சியின் தொடர்ச்சி

#### 1. ஆட்சிக்காலம்

1இராஜா 14:21 சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் யூதாவிலே ராஜ்யபாரம் பண்ணினான்; ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே பதினேழுவருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்.

"அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்" - இஸ்ரவேலின் வரலாற்றில் பல இடங்களில் ராஜாக்களின் தாயாரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (1இராஜா 14:21; 1இராஜா 15:2,10; 1இராஜா 22:42; 2இராஜா 8:26; 2இராஜா 12:1; 2இராஜா 14:2; 2இராஜா 15:2,33; 2இராஜா 18:2; 2இராஜா 21:1,19; 2இராஜா 22:1; 2இராஜா 23:31,36; 2இராஜா 24:8,18; 2நாளா 24:1; 2நாளா 25:1; 2நாளா 26:3; 2நாளா 29:1).

#### 2. தேவதூஷணம் - (2நாளா 12:1)

1இராஜா 14:22 யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தாங்கள் செய்துவருகிற தங்களுடைய பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள்.

1இராஜா 14:23 அவர்களும் உயர்ந்த சகல மேட்டின் மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும், மேடைகளையும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டாக்கினார்கள்.

1இராஜா 14:24 தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியெல்லாம் செய்தார்கள்.

**யூதா ஜனங்களின் பாவங்கள்**

1. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்.
2. அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள்.
3. தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிகப் பாவம் செய்தார்கள்.
4. உயர்ந்த மேடைகளைக் கட்டினார்கள். (1இராஜா 14:23)
5. விக்கிரகங்களை உண்டாக்கினார்கள்.
6. தோப்புகளை உண்டாக்கினார்கள்.
7. இலச்சையான புணர்ச்சிக்காரராய் இருந்தார்கள். (1இராஜா 14:24)
8. புறஜாதிகளுடைய அருவருப்புகளின் படியெல்லாம் செய்தார்கள்.

"இலச்சையான புணர்ச்சிக்காரர்" (sodomites) - இவர்கள் சோதோமின் பாவத்தைச் செய்தவர்கள். (ஆதி 17). விக்கிரகாராதனையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஆண் வேசிகள். (1இராஜா 15:12; 1இராஜா 22:46; 2இராஜா 23:7). நியாயப்பிரமாணத்தில் இலச்சையான புணர்ச்சி தடைபண்ணப் பட்டிருக்கிறது. (உபா 23:17-18).

#### 3. யூதாவின்மீது எகிப்தியரின் படையெடுப்பு - (2நாளா 12:2-12)

1இராஜா 14:25 ரெகொபெயாம் ராஜ்யபாரம்பண்ணும் ஐந்தாம் வருஷத்திலே, எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து,

## 14 அதிகாரம்

1இராஜா 14:26 கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

1இராஜா 14:27 அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்பித்தான்.

1இராஜா 14:28 ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்போது, அரமனைச் சேவகர் அவைகளைப் பிடித்துக்கொண்டு போய், திரும்பத் தங்கள் அறையிலே வைப்பார்கள்.

"எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்" - இவன் 22 ஆவது எகிப்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவன். யூதாவின்மீது இவன் படையெடுத்து, எருசலேமைக் கைப்பற்றிக் கொண்டான். கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். (1இராஜா 14:26). யூதா புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்த படியினால் கர்த்தர் யூதாவுக்கு இந்த அழிவு வர அனுமதித்தார். (2நாளா 12:2). சீஷாக்கிடம் மிகப்பெரிய சேனை இருந்தது. (2நாளா 12:3) யூதா புத்திரர் கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தினார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை முழுவதும் அழித்துப்போடாதபடிக்கு காப்பாற்றினார். (2நாளா 12:4-12).

### 4. ரெகொபெயாமின் மரணம் - (2நாளா 12:13)

1இராஜா 14:29 ரெகொபெயாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 14:30 ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 14:31 ரெகொபெயாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப் பட்டான்; அம்மோன் ஜாதியான அவன் தாய்க்கு நாமாள் என்று பேர்; அவன் குமாரனாகிய அபியாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 15 அதிகாரம்

**VI. யூதாவின் இராஜாக்கள்** - (15:1-24; 2நாளா 13:1-16:14)

**1. அபியாமின் ஆட்சி** - (2நாளா 13:1-22)

1இராஜா 15:1 நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் என்னும் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகி,

1இராஜா 15:2 மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; அப்சலோமின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மாகாள்.

1இராஜா 15:3 தன் தகப்பன் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் அவன் நடந்தான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை.

1இராஜா 15:4 ஆனாலும் தாவீதினிமித்தம் அவனுடைய தேவனாகிய கர்த்தர், அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனை எழும்பப்பண்ணுகிறதினாலும், எருசலேமை நிலைநிறுத்துகிறதினாலும், அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிட்டு வந்தார்.

1இராஜா 15:5 தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்துவந்தான்.

1இராஜா 15:6 ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

1இராஜா 15:7 அபியாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது; அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 15:8 அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"யெரொபெயாம் என்னும் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே" - இவன் மரணமடைவதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்பு.

"அபியாம்" **(Abijam)** - மறுபெயர் அபியா **(Abijah)** (2நாளா 12:16).

**அபியாமின் சுபாவம்**

1. தன் தகப்பன் ரெகொபெயாம் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் அவன் நடந்தான்.

2. அவன் இருதயம் தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை.

"தாவீதினிமித்தம் அவனுடைய தேவனாகிய கர்த்தர்" - கர்த்தர் அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிட்டு வந்தார். இதைத் தாவீதின் நிமித்தமாகச் செய்தார். (2சாமு 11-12; 2சாமு 24).

"யுத்தம் நடந்துகொண்டிருந்தது" - இவ்விரண்டு அதிகாரங்களில் ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் நடைபெற்ற யுத்தத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 15:6; 1இராஜா 14:30).

**2. ஆசாவின் ஆட்சி** - (2நாளா 14:1-16:14)

**(1) நல்ல ராஜா** - (22:43; 2இராஜா 12:1)

1இராஜா 15:9 இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் இருபதாம் வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் ராஜாவாகி,

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 15 அதிகாரம்

1இராஜா 15:10 நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; அப்சலோமின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மாகாள்.

1இராஜா 15:11 ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

1இராஜா 15:12 அவன் இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றி, தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்கி,

1இராஜா 15:13 தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப் போட்டான்.

1இராஜா 15:14 மேடைகளோ தகர்க்கப்படவில்லை; ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது.

1இராஜா 15:15 தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவந்தான்.

“ஆசா யூதாவின்மேல் ராஜாவாகி” - யெரொபெயாம் பல பாவங்களைச் செய்தபோதிலும், அவனுடைய ஆயுசு நாட்கள் நீடித்திருந்தது. யூதாவின் இரண்டு ராஜாக்களான ரெகொபெயாம், அபியாம் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் இவன் ஜீவித்தான். ஆசாவின் ராஜ்யபாரத்திலும் யெரொபெயாம் இரண்டு வருஷம் உயிரோடு இருந்தான்.

“நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்” - ஆசா யூதா ராஜ்யத்தின்மீது நீடித்த காலமாக ராஜ்யபாரம் பண்ணிய மூன்றாவது ராஜா.

“கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்” - இஸ்ரவேலின் ராஜாக்களில் பலர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானவைகளைச் செய்தார்கள். ஆனால் ஆசாவோ செம்மையானவற்றைச் செய்கிறான். இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிளவுபட்ட பின்பு, யூதாவின் ராஜாக்களில் ஆசாவே கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்த முதலாவது ராஜாவாவான். இவனுடைய செம்மையான இருதயத்தின் நிமித்தம் கர்த்தர் இவனுக்கு நீடித்த ஆயுசைக் கொடுத்தார். இஸ்ரவேலின் ஏழு ராஜாக்களுடைய காலங்களில் ஆசா உயிரோடிருந்தான். (1இராஜா 15:25)

**ஆசாவின் செம்மையான கிரியைகள்**

1. இலச்சையான புணர்ச்சிக்காரரைத் தேசத்திலிருந்து அகற்றினான்.
2. தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்கினான்.
3. தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான் (1இராஜா 15:13)
4. அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப் போட்டான்.
5. தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும் படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு வந்தான். (1இராஜா 15:15)

விக்கிரகம் (idol) - מִפְלֶצֶת - mif-leh'-tseth - 4656

பெண்பால் பெயர்ச்சொல்-விக்கிரகம் (horror or monstrosity) (1இராஜா 15:13; 2நாளா 15:16). புறஜாதியாரின் விக்கிரகங்கள் அருவருப்பான ரூபங்களில் இருந்தன. இதனால் விக்கிரகாராதனை செய்கிறவர்களும் தங்களை அருவருப்பான காரியங்களில் ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

**15 அதிகாரம்**

"சுட்டெரித்துப்போட்டான்" - இந்த விக்கிரகங்கள் மரத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**(2) உள்நாட்டுக் குழப்பம்** - (2 நாளா 16:1-6; 2 இராஜா 25:25)

1இராஜா 15:16 ஆசாவுக்கும் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்களுடைய நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

1இராஜா 15:17 ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்குவரத்தாயிராத படிக்கு, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாக வந்து ராமாவைக் கட்டினான்.

"யுத்தம் நடந்து கொண்டிருந்தது" - ஆசாவுக்கும் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது (1இராஜா 15:6-7,14:30) இது மிகப்பெரிய யுத்தம் அல்ல. அவர்களுடைய ராஜ்யத்தின் எல்லைகளில் ஏற்படும் சிறுசிறு பிரச்சனைகளினால் இந்த யுத்தம் நடந்தது. (1இராஜா 15:32).

"இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா" - இவன் ஆசாவின் மூன்றாம்வருஷ ராஜ்யபாரத்தில் இஸ்ரவேலின்மீது ராஜாவானான். (1இராஜா 15:33).

"ராமா" (Ramah) - எருசலேமுக்குப் போட்டியாகப் பாஷா ராமாவைக் கட்டினான். இது எருசலேமிற்கு வடக்கே 5மைல் தூரத்திலுள்ளது.

**(3) சீரியரோடு உடன்படிக்கை** - (2 நாளா 16:7-11)

1இராஜா 15:18 அப்பொழுது ஆசா கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும், ராஜாவின் அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்து, அவைகளைத் தன் ஊழியக்காரர் கையிலே தமஸ்குவில் வாசமாயிருக்கிற எசியோனின் மகனாகிய தப்ரிமோனின் குமாரன் பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தனுப்பி:

1இராஜா 15:19 எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லச்சொன்னான்.

"பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜா" - இவன் அந்நிய தேசத்து ராஜா. இஸ்ரவேல் தேசத்து ராஜாக்கள் தங்களுக்குள் யுத்தம் நடைபெறும்போது அந்நிய தேசத்து ராஜாக்களின் உதவியை நாடினார்கள். இதற்காக அந்த ராஜாக்களுக்கு இஸ்ரவேலின் ராஜாக்கள் பெரிய வெகுமதிகளைக் கொடுப்பது வழக்கம். ஆசா தேவாலயத்தின் பொக்கிஷங்களை பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவிற்குக் கொடுத்து அனுப்பினான். இது ஒரு தவறான செய்கை. இதற்காக அனானி என்னும் தீர்க்கதரிசி ஆசாவைக் கடிந்து கொண்டான். (1இராஜா 16:7). பெனாதாத்தின் தகப்பனுக்கும், ஆசாவுக்கும் இடையில் ஏற்கெனவே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. (1இராஜா 15:19) யெரொபெயாமின்மீது நடைபெற்ற யுத்தத்தில் அபியாம் பெனாதாத்தின் தகப்பனுக்கு உதவி புரிந்தான்.(2 நாளா 13:17-20). பாஷாவும், பெனாதாத்தோடு உடன்படிக்கை பண்ண விரும்பினான். ஆகையினால் ஆசா அதிக வெகுமதிகளைப் பெனாதாத்திற்குக் கொடுத்து, அவனோடுள்ள உடன்படிக்கையை உறுதிபண்ணிக்கொண்டான். யெரொபெயாம் முதன் முதலாக எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்கின் உதவியை நாடினான். அந்நிய தேசத்து ராஜாக்களின் உதவியை நாடும் பழக்கம் பிளவுபட்ட இஸ்ரவேல் ராஜ்யங்களில் தொடர்ந்தது. இறுதியில் இஸ்ரவேல் தேசம் அந்நிய தேசங்களுக்கு அடிமையாயிற்று.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 15 அதிகாரம்

### (4) இஸ்ரவேல்மீது சீரியப்படையெடுப்பு - (2நாளா 16:2-4; 2இராஜா 16:5)

1இராஜா 15:20 பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடித்தான்.

1இராஜா 15:21 பாஷா அதைக் கேட்டபோது, ராமாவைக் கட்டுகிறதை விட்டு திர்சாவிலிருந்துவிட்டான்.

“பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து” - வடக்கு தேசமாகிய இஸ்ரவேல் ராஜ்யத்தின்மீது யுத்தம்பண்ண பெனாதாத் ஆசாவுக்கு உதவி பண்ண சம்மதிக்கிறான். பெனாதாத் தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங் கூட முறிய அடித்தான். யுத்தத்தில் தோல்வியடைந்ததினால், பாஷா ராமாவைக் கட்டுவதை நிறுத்தி விட்டான். இது ஆசாவுக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. (1இராஜா 15:20-21).

“கின்னரோத்” (Cinneroth) - மறுபெயர் "Chinneroth" (யோசு 11:2; யோசு 12:3). பாலஸ்தீனத்தின் வடக்கு மாகாணத்திலுள்ள பட்டணம். கின்னரோத் கடலின் பெயரே இந்தப் பட்டணத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடலுக்குக் கலிலேயாக்கடல் (sea of Galilee) என்று வேறொரு பெயரும் உள்ளது. (எண் 24:11; உபா 3:17; யோசு 13:27; யோசு 19:35).

### (5) ஆசாவின் கட்டுமானப் பணி - (2நாளா 16:5-6)

1இராஜா 15:22 அப்பொழுது ராஜாவாகிய ஆசா யூதா எங்கும் ஒருவரும் தப்பாமல் எல்லாரும் போய், பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவர பறைமுறை இடுவித்து; அவைகளினால் பென்யமீன் கோத்திரத்திலுள்ள கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான்.

“பறைமுறை இடுவித்து” - பாஷா யுத்தத்தில் தோற்றுப்போனதினால் ராமாவைக் கட்டுவதை நிறுத்திவிட்டான். பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவர ஆசா பறைமுறை இடுவித்தான். ராமாவிலிருந்து எடுத்து வரப்பட்ட கற்களாலும், மரங்களாலும் ஆசா பென்யமீன் கோத்திரத்திலுள்ள கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான்.

“கேபா” (Geba) - இது மிக்மாசிற்கு எதிராக உள்ளது. (1சாமு 14:5) ராமாவிற்கு வடக்கில் இது வலிமையான கோட்டையாக விளங்கிற்று. இதனால் எப்பிராயீம் புத்திரர் எருசலேமின்மீது யுத்தம் பண்ணுவது தவிர்க்கப்பட்டது.

“மிஸ்பா” (Mizpah) - ஆசா மிஸ்பாவில் ஒரு கிணற்றைத் தோண்டினான். ஒருவேளை மிஸ்பா சத்துருக்களால் முற்றிக்கைப்போடப்பட்டால் அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்காக ஆசா இந்தப் பள்ளத்தைத் தோண்டியிருக்கலாம். (எரே 41:9)

### (6) ஆசாவின் வியாதியும் மரணமும் - (2நாளா 16:12-14)

1இராஜா 15:23 ஆசாவின் மற்ற எல்லா வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா வல்லமையும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின பட்டணங்களின் வரலாறும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது; அவன் முதிர்வயதான காலத்தில் அவனுடைய கால்களில் வியாதி கண்டிருந்தது.

## 15 அதிகாரம்

1இராஜா 15:24 ஆசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், தன் தகப்பனாகிய தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப் பட்டான்; அவன் குமாரனாகிய யோசபாத் அவன் ஸ்தானத்திலே ராஜாவானான்.

"ஆசாவின் மற்ற எல்லா வர்த்தமானங்கள்" - (2நாளா 14:9-15:10)

"அவன் முதிர்வயதான காலத்தில் அவனுடைய கால்களில் வியாதி கண்டிருந்தது" - ராஜாக்கள் புஸ்தகத்தின் ஆசிரியர் ஆசாவின் வியாதியைப் பற்றி இதற்குமேல் எதுவும் விவரித்துக் கூறவில்லை. நாளாகமப் புஸ்தகத்தின் ஆசிரியர் ஆசாவின் வியாதியைப் பற்றி சற்று விவரமாகக் கூறியிருக்கிறார். ஆசாவுக்குக் கால்களில் வியாதி கண்டு, அவன் நோவு மிகவும் உக்கிரமாய் இருந்தது. அவன் தன் வியாதியிலும் கர்த்தரையல்ல பரிகாரிகளையே (மருத்துவர்களையே) தேடினான். பின்பு மரித்துப்போனான். (2நாளா 16:12-14).

## VII. இஸ்ரவேலின் ராஜாக்கள் - (15:25-16:27)

### 1. நாதாபின் ஆட்சி

1இராஜா 15:25 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இரண்டாம் வருஷத்திலே யெரொபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, இரண்டு வருஷம் இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணினான்.

1இராஜா 15:26 அவன் கர்த்தருடைய பார்வைகளுக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான்.

**ஆசாவின் ராஜ்யபாரக் காலத்தில் இஸ்ரவேலில் ராஜ்யபாரம் பண்ணிய ராஜாக்கள்**

1. நாதாப் (1இராஜா 15:25)
2. பாஷா (1இராஜா 15:33)
3. ஏலா (1இராஜா 16:8)
4. சிம்ரி (1இராஜா 16:11-15)
5. திப்னி (1இராஜா 16:21)
6. உம்ரி (1இராஜா 16:21-22)
7. ஆகாப் (1இராஜா 16:28-34)

"தன் தகப்பன் வழியிலும்" - யெரொபெயாமின் விக்கிரகாராதனை வழிகளில் நாதாப் பின்பற்றினான்.

### 2. பாஷாவின் ஆட்சி - (2நாளா 16:1-6)

**(1) உள்நாட்டுக் கலவரம்** - (2இராஜா 25:25)

1இராஜா 15:27 இசக்கார் வம்சத்தானாகிய அகியாவின் குமாரனான பாஷா, அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடு பண்ணி, நாதாபும் இஸ்ரவேலனைத்தும் பெலிஸ்தருக்கு இருந்த கிபெத்தோனை முற்றிக்கைபோட்டிருக்கையில், பாஷா அவனைக் கிபெத்தோனிலே வெட்டிப் போட்டான்.

1இராஜா 15:28 பாஷா யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அவனைக் கொன்றுபோட்ட பின், அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**ராஜாக்களையும், ராணிகளையும் கொன்றுபோட்ட சம்பவங்கள்**

1. இஸ்போசேத் - இவனுடைய வேலைக்காரர்கள் இவனைக் கொன்று போட்டார்கள். (2சாமு 4)
2. நாதாப் - பாஷா இவனைக் கொன்று போட்டான் (1இராஜா 15:27-28)
3. ஏலா - சிம்ரி இவனைக் கொன்று போட்டான். (1இராஜா 16:8-10)
4. திப்னி - உம்ரி இவனைக் கொன்று போட்டான் (1இராஜா 16:21-22)
5. யோராம் - யெகூ இவனைக் கொன்று போட்டான். (2இராஜா 9:14-26)

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 15 அதிகாரம்

6. அகசியா - யெகூ இவனைக் கொன்று போட்டான். (2இராஜா 9:27-29)

7. யெசபேல் - யெகூவின் கட்டளையின் பிரகாரம் அவனுடைய வேலையாட்கள் இவளைக் கொன்றுபோட்டார்கள். (2இராஜா 9:30-37)

8. அத்தாலியாள் - படைத்தளபதிகள் இவளைக் கொன்றுபோட்டார்கள். (2இராஜா 11:13-16)

9. யோவாஸ் - வேலைக்காரர்கள் இவனைக் கொன்றுபோட்டார்கள். (2இராஜா 12:19-21)

10. அமத்சியா - வேலைக்காரர்கள் இவனைக் கொன்றுபோட்டார்கள். (2இராஜா 14:17-20)

11. சகரியா - சல்லூம் இவனைக் கொன்றுபோட்டான். (2இராஜா 15:10)

12. சல்லூம் - மெனாகேம் இவனைக் கொன்றுபோட்டான். (2இராஜா 15:14)

13. பெக்காகியா - பெக்கா இவனைக் கொன்று போட்டான். (2இராஜா 15:25)

14. பெக்கா - ஓசெயா இவனைக் கொன்று போட்டான். (2இராஜா 15:30)

யூதா தேசத்தில் ஒரு ராஜாவும் ஒரு ராணியும் மட்டுமே கொல்லப்பட்டிருக்கிறார்கள். மற்ற சம்பவங்களெல்லாம் இஸ்ரவேல் தேசத்தில் நடைபெற்றிருக்கிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமை யெகூ கொன்றுபோட்டான். அப்போது அகசியாவும் அங்கே இருந்ததினால் அவனும் கொல்லப்பட்டான். மற்றக் கொலைச் சம்பவங்களெல்லாம் ராஜாங்கத்தின் சிம்மாசனத்தைப் பறிப்பதற்காகவே நடைபெற்றிருக்கிறது.

இஸ்ரவேலின் ஒரு ராஜாவாகிய சிம்ரி சதிக்காரர்களின் கைகளில் சிக்கிக் கொண்டதால் தன்னை அவர்கள் கொன்று போடுவார்கள் என்று பயந்து, தன் உயிரை மாய்த்துக் கொண்டான். (1இராஜா 16:18).

இஸ்ரவேல் தேசம் பிளவுண்ட பின்பு, யூதா தேசத்தைவிட வடக்கு இஸ்ரவேல் தேசம் துன்மார்க்கமாக இருந்தது. ஆகையினால் அங்கு துன்மார்க்கமான பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது.

### (2) யெரொபெயாமின் வீட்டாரெல்லாம் அழிந்தார்கள் - (14:7-13)

1இராஜா 15:29 அப்பொழுது யெரொபெயாம் செய்ததும், இஸ்ரவேலைச் செய்யப் பண்ணினதுமான பாவங்களினிமித்தமும், இஸ்ரவேலின் அவன் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கின கோபத்தினிமித்தம், கர்த்தர் சீலோனியனான அகியா என்னும் தமது ஊழியக்காரனைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே,

1இராஜா 15:30 அவன் ராஜாவானபின் அவன் யெரொபெயாமின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான்; யெரொபெயாமுக்கு இருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் விடவில்லை.

1இராஜா 15:31 நாதாபின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"கர்த்தர் சீலோனியனான அகியா என்னும் தமது ஊழியக்காரனைக் கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே" - (1இராஜா 14:7-16)

"இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவங்களினிமித்தமும்" -(1இராஜா 12:25-33)

**யெரொபெயாமின் வீட்டார் அழிக்கப் பட்டதற்குக் காரணம்**

1. அவனுடைய பாவங்கள்.

2. பொன்கன்றுக் குட்டிகளை ஆராதிப்பதற்கு அவன் இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணிய சம்பவம்.

## 15 அதிகாரம்

"நாதாபின் மற்ற வர்த்தமானங்கள்" - நாளாகமங்கள் புஸ்தகத்தில் நாதாபைப் பற்றிக் கூறப்படவில்லை. 1இராஜா 15:25-31, 1இராஜா 14:20 ஆகிய வசனங்களில் மட்டுமே நாதாபைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால், நாளாகமம் தவிர, இஸ்ரவேல் ராஜாக்களின் வரலாற்றை விவரிக்கும் வரலாற்றுப் புஸ்தகங்கள் வேறு சிலவும் இருந்திருக்க வேண்டும்.

### (3) பாஷாவின் ஆட்சிக்காலம்

1இராஜா 15:32 ஆசாவுக்கும் இஸ்ரவேல் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்கள் நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

1இராஜா 15:33 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அகியாவின் குமாரனாகிய பாஷா, இஸ்ரவேலனைத்தின் மேலும் திர்சாவிலே ராஜாவாகி இருபத்து நாலு வருஷம் ஆண்டு,

1இராஜா 15:34 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும், அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்தான்.

"பாஷா......இருபத்து நாலு வருஷம் ஆண்டு" - ஆசாவின் மூன்றாம் வருஷத்தில் பாஷா ஆட்சிக்கு வந்தான். ஆசாவின் 26 ஆவது வருஷ ஆட்சிக் காலத்தில் மரித்தான். (1இராஜா 16:8). ஆசாவின் 36 ஆவது வருஷ ஆட்சிக் காலத்தில் பாஷா யுத்தம் பண்ணினான் என்று 2நாளா 16:1 ஆவது வசனம் கூறுகிறது.

"யெரொபெயாமின் வழியிலும்" - பாஷா யெரொபெயாமின் விக்கிரகாராதனைக் காரியங்களில் ஈடுபட்டு, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான்.

## I இராஜாக்கள் – தொகுப்புரை

### 16 அதிகாரம்

### (4) பாஷாவுக்கு எதிரான தீர்க்கதரிசனம்

1இராஜா 16:1 பாஷாவுக்கும் விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தை ஆனானியின் குமாரனாகிய யெகூவுக்கு உண்டாயிற்று, அவர்:

1இராஜா 16:2 நான் உன்னைத் தூளிலிருந்து உயர்த்தி, உன்னை என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் தலைவனாக வைத்திருக்கையில், நீ யெரொபெயாமின் வழியிலே நடந்து, என் ஜனமாகிய இஸ்ரவேல் தங்கள் பாவங்களால் எனக்குக் கோபமுண்டாக்கும்படி அவர்களைப் பாவஞ்செய்யப் பண்ணுகிறபடியினால்,

1இராஜா 16:3 இதோ, நான் பாஷாவின் பின்னடி யாரையும் அவன் வீட்டாரின் பின்னடி யாரையும் அழித்துப்போட்டு, உன் வீட்டை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் வீட்டைப்போல ஆக்குவேன்.

1இராஜா 16:4 பாஷாவின் சந்ததியிலே பட்டணத்தில் சாகிறவனை நாய்கள் தின்னும்; வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும் என்றார்.

1இராஜா 16:5 பாஷாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனுடைய வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 16:6 பாஷா தன் பிதாக்களோடே நித்திரையடைந்து திர்சாவில் அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஏலா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1இராஜா 16:7 பாஷா தன் கைகளின் செய்கையால் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கி, அவர் பார்வைக்குச் செய்த எல்லாப் பொல்லாப்பினிமித்தமும், அவன் யெரொபெயாமின் வீட்டாரை வெட்டிப் போட்டதினிமித்தமும், இவர்களைப் போல் ஆவான் என்று அவனுக்கும், அவன் வீட்டுக்கும் விரோதமாக ஆனானியின் குமாரனாகிய யெகூ என்னும் தீர்க்கதரிசியினால் கர்த்தருடைய வார்த்தை பின்னும் உண்டாயிற்று.

**தீர்க்கதரிசன எண் - 16**

“பாஷாவுக்கும் விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தை ஆனானியின் குமாரனாகிய யெகூவுக்கு உண்டாயிற்று,.....” (1இராஜா 16:1-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. நான் பாஷாவின் பின்னடியாரையும் அவன் வீட்டாரின் பின்னடியாரையும் அழித்துப் போடுவேன். (1இராஜா 16:3)
2. உன் வீட்டை யெரொபெயாமின் வீட்டைப்போல ஆக்குவேன்.
3. பாஷாவின் சந்ததியிலே பட்டணத்தில் சாகிறவனை நாய்கள் தின்னும்.
4. வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகள் தின்னும் (1இராஜா 16:4)

“யெகூ” **(Jehu)** - இந்தப் பெயருக்கு “அவர் கர்த்தராக இருக்கிறார்” **"Jehovah is He"** என்று பொருள்.

**வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் “யெகூ”க்கள்**

1. ஒரு தீர்க்கதரிசி (1இராஜா 16:1,7,12; 2நாளா 19:2; 2நாளா 20:34)
2. ஒபேத்தின் குமாரன் (1நாளா 2:38)
3. சிமியோனியன் (1நாளா 4:35)
4. பென்யமீனன் (1நாளா 12:3)

## 16 அதிகாரம்

5. இஸ்ரவேலின் ராஜா (2இராஜா 9:1-10:36)

"பாஷா" **(Baasha)** - இந்தப் பெயருக்கு "தைரியம்" **"boldness"** என்று பொருள். இசக்கார் கோத்திரத்தான். சிம்ரி இவனை வெட்டிக் கொன்று போட்டான். (1இராஜா 15:27-16:13; 2நாளா 16:1-6; எரே 41:9).

"உன்னை என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் தலைவனாக வைத்திருக்கையில்" - பத்துக் கோத்திரங்களில் கர்த்தர் பாஷாவை உயர்த்தியிருக்கிறார். யெரொபெயாம் முதலாவதாக உயர்த்தப்பட்டான். அதன் பின்பு, பாஷா உயர்த்தப்பட்டிருக்கிறான். யெரொபெயாம் தன் பாவத்தின் நிமித்தமாக அழிந்தான். யெரொபெயாமின் வீட்டாரை அழிப்பதற்காக பாஷா உயர்த்தப்பட்டான். ஆனால் பாஷாவும், யெரொபெயாமின் விக்கிரகாராதனை வழிகளையே பின்பற்றினான். இதனால் இவனுடைய வீட்டாரும் யெரொபெயாமின் வீட்டாரைப்போல அழிந்துபோவார்கள் என்று கர்த்தர் முன்னறிவிக்கிறார்.(1இராஜா 16:1-4). யெரொபெயாமின் குடும்பத்தைப் பாஷா அழித்தான். இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். (1இராஜா 15:27-31). பாஷாவின் வீட்டாரும் அழிக்கப்பட வேண்டும். இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காகக் கர்த்தர் சிம்ரியை எழுப்பினார். (1இராஜா 16:11-20).

"பாஷாவின் மற்ற வர்த்தமானங்கள்" - பாஷாவைப் பற்றிய செய்திகள் 1இராஜா 15:16-16:13; 1இராஜா 21:22 ஆகிய வசனங்களிலும், 2இராஜா 9:9; 2நாளா 16; எரே 41:9 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

"இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகம்" - இஸ்ரவேலின் ராஜாக்களுடைய வரலாற்றை விளக்குவதற்காக ஒரு புஸ்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்தப் புஸ்தகம் இப்போது யாருடைய கையிலும் இல்லை.

"அவன் யெரொபெயாமின் வீட்டாரை வெட்டிப்போட்டதினிமித்தமும்" - யெரொபெயாமின் வீட்டாரை அழிப்பதில் பாஷா கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாகச் செயல்பட்டிருக்கிறான். தேவனுடைய வேளை வருவதற்கு முன்பாகவே அவன் நாதாபைக் கொன்று போட்டான். (1இராஜா 15:27-29).

### 3. ஏலாவின் ஆட்சி

1இராஜா 16:8 யூதாவின் ராஜாவான ஆசாவின் இருபத்தாறாம் வருஷத்திலே பாஷாவின் குமாரனாகிய ஏலா இஸ்ரவேலின்மேல் திர்சாவிலே ராஜாவாகி இரண்டு வருஷம் அரசாண்டான்.

"ஆசாவின் இருபத்தாறாம் வருஷத்திலே" - பாஷா 24 வருஷங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான் என்பதை இந்த வாக்கியம் உறுதிபண்ணுகிறது. (1இராஜா 15:33).

### 4. சிம்ரியின் ஆட்சி

**(1) உள்நாட்டுக் குழப்பம்** - (2இராஜா 25:25)

1இராஜா 16:9 இரதங்களில் பாதி பங்குக்குத் தலைவனாகிய சிம்ரி என்னும் அவன் ஊழியக்காரன் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் திர்சாவிலே அவ்விடத்து அரமனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்து வெறி கொண்டிருக்கையில்,

1இராஜா 16:10 சிம்ரி உள்ளே புகுந்து, யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்தில் அவனை வெட்டிக் கொன்று போட்டு, அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**(2) பாஷாவின் வீட்டாரெல்லாம் அழிந்தார்கள்** - (16:1-7)

1இராஜா 16:11 அவன் ராஜாவாகி, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்த போது, அவன் பாஷாவின் வீட்டாரையெல்லாம் வெட்டிப் போட்டான்; அவன் இனத்தாரையாகிலும், அவன் சிநேகிதரையாகிலும், சுவரில் நீர் விடும் ஒரு நாயையாகிலும் அவன் உயிரோடே வைக்கவில்லை.

## 16 அதிகாரம்

1இராஜா 16:12 அப்படியே பாஷாவும், அவன் குமாரனாகிய ஏலாவும், தங்கள் வீணான விக்கிரகங்களினாலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கிச் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப் பண்ணினதுமான அவர்களுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும்,

1இராஜா 16:13 கர்த்தர் தீர்க்கதரிசியாகிய யெகூவினால் பாஷாவைக்குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே, சிம்ரி பாஷாவின் வீட்டாரையெல்லாம் அழித்துப்போட்டான்.

1இராஜா 16:14 ஏலாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"வீணான விக்கிரகங்களினாலே" - (1இராஜா 16:13,26)

"கர்த்தர் தீர்க்கதரிசியாகிய யெகூவினால் பாஷாவைக்குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே" - பாஷாவும், அவன் குமாரனாகிய ஏலாவும், தங்கள் வீணான விக்கிரகங்களினாலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினார்கள். இஸ்ரவேலையும் விக்கிரகாராதனை செய்யுமாறு பாவம் செய்யப் பண்ணினார்கள். இதனால் பாஷாவின் வீட்டாரும், ஏலாவின் வீட்டாரும் அழிந்தார்கள்.

"ஏலாவின் மற்ற வர்த்தமானங்கள்" - ஏலாவைப் பற்றி 1நாளா 9:8 ஆவது வசனத்தில் மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. இதுதவிர, நாளாகமம் புஸ்தகங்களில் ஏலாவைப் பற்றி வேறு எந்தச் செய்தியும் கூறப்படவில்லை. ஆகையினால் வடக்கு ராஜ்யத்தின் ராஜாக்களைப் பற்றி வேறு ஏதாவது ஒரு புஸ்தகம் விரிவாகக் கூறியிருக்க வேண்டும்.

### (3) உள்நாட்டுக் குழப்பம் - (2இராஜா 25:25)

1இராஜா 16:15 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் ராஜாவாயிருந்தான்; ஜனங்கள் அப்பொழுது பெலிஸ்தருக்கு இருக்கிற கிபெத்தோனுக்கு எதிராகப் பாளயமிறங்கியிருந்தார்கள்.

1இராஜா 16:16 சிம்ரி கட்டுப்பாடுபண்ணி, ராஜாவைக் கொன்றுபோட்டான் என்பதை அங்கே பாளயமிறங்கின ஜனங்கள் கேட்டபோது, இஸ்ரவேலரெல்லாம் அந்நாளிலே தானே பாளயத்திலே படைத் தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேல்மேல் ராஜாவாக்கினார்கள்.

1இராஜா 16:17 அப்பொழுது உம்ரியும் அவனோடே கூட இஸ்ரவேல் அனைத்தும் கிபெத்தோனிலிருந்து வந்து, திர்சாவை முற்றிக்கை போட்டார்கள்.

"சிம்ரி திர்சாவிலே ஏழுநாள் ராஜாவாயிருந்தான்" - இஸ்ரவேல் தேசத்தில் மிகவும் குறைந்த காலத்திற்கு ராஜாவாக இருந்தவன் இவன்தான். சேனைவீரர்கள் உம்ரியை இஸ்ரவேல் மேல் ராஜாவாக்கினார்கள். அவன் சிம்ரிக்கு எதிராக எழும்பினான். இதனால் சிம்ரி தன் உயிரை மாய்த்துக் கொண்டான். தன்னுடைய ராஜஅரமனையைத் தீக்கொளுத்திச் சிம்ரி அதில் செத்துப்போனான். (1இராஜா 16:16-20).

### (4) சிம்ரியின் மரணம்

1இராஜா 16:18 பட்டணம் பிடிபட்டதைச் சிம்ரி கண்டபோது, அவன் ராஜாவின் வீடாகிய அரமனைக்குள் பிரவேசித்து, தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி, அதிலே செத்தான்.

1இராஜா 16:19 அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவன் பாவத்திலும் நடந்ததினால், கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம் அப்படி நடந்தது.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 16 அதிகாரம்

1இராஜா 16:20 சிம்ரியின் மற்ற வர்த்தமானங்களும், அவன் பண்ணின அவனுடைய கட்டுப்பாடும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

"அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவன் பாவத்திலும்" - இஸ்ரவேல் புத்திரரைப் பாவம் செய்யுமாறு சிம்ரி கட்டாயப்படுத்தினான். சிம்ரி இரதங்களில் பாதிப்பங்குக்குத் தலைவனாக இருந்தவன். (1இராஜா 16:9) ஆகையினால் தேசத்தில் இவனுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. பொன்கன்றுக்குட்டிகளை ஜனங்கள் எல்லோரும் ஆராதிக்க வேண்டுமென்று கட்டளையிட்டு, தன் கட்டளைக்குக் கீழ்ப்படியுமாறு இஸ்ரவேல் ஜனங்களைக் கட்டாயப்படுத்தினான்.

"சிம்ரியின் மற்ற வர்த்தமானங்கள்" - நாளாகமம் புஸ்தகத்தில் சிம்ரியைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஆகையினால் இவனுடைய வரலாறு இஸ்ரவேல் ராஜாக்களின் விசேஷித்த வரலாற்றுப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும்.

### 5. உம்ரியின் ஆட்சி

#### (1) உள்நாட்டுக் குழப்பம் - (2இராஜா 25:25)

1இராஜா 16:21 அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு வகுப்பாய்ப் பிரிந்து, பாதி ஜனங்கள் கீனாத்தின் குமாரனாகிய திப்னியை ராஜாவாக்க அவனைப் பின்பற்றினார்கள்; பாதி ஜனங்கள் உம்ரியைப் பின்பற்றினார்கள்.

1இராஜா 16:22 ஆனாலும் கீனாத்தின் குமாரனாகிய திப்னியைப் பின்பற்றின ஜனங்களைப் பார்க்கிலும், உம்ரியைப் பின்பற்றின ஜனங்கள் பலத்துப் போனார்கள்; திப்னி செத்துப் போனான்; உம்ரி அரசாண்டான்.

"இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு வகுப்பாய்ப் பிரிந்து" - சிம்ரி மரித்துப்போனான். அவனுக்குப் பின்பு, வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தில் யார் ராஜாவாக ஆளுகை செய்ய வேண்டுமென்பதில் குழப்பமும், கலகமும், பிரிவினையும் உண்டாயிற்று. வடக்கு ராஜ்யம் மேலும் இரண்டாகப் பிரிந்தது. ஒரு பிரிவினர் திப்னியைப் பின்பற்றினார்கள். மற்றொரு பிரிவினர் உம்ரியைப் பின்பற்றினார்கள். (1இராஜா 16:21-22). ஆனாலும் திப்னியைப் பின்பற்றின ஜனங்களைப் பார்க்கிலும், உம்ரியைப் பின்பற்றின ஜனங்கள் பலத்துப் போனார்கள்; திப்னி செத்துப்போனான்; உம்ரி 12 வருஷங்களாக அரசாண்டான். (1இராஜா 16:22-23).

#### (2) சமாரியவை உம்ரி கட்டுகிறான்

1இராஜா 16:23 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்தில், உம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவாகி, பன்னிரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்; அவன் திர்சாவிலே ஆறுவருஷம் அரசாண்டு,

1இராஜா 16:24 பின்பு சேமேரின் கையிலிருந்து சமாரியா மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி, அந்த மலையின்மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு மலையினுடைய எஜமானாயிருந்த சேமேருடைய பேரின்படியே சமாரியா என்னும்பேரைத் தரித்தான்.

#### (3) உம்ரியின் பொல்லாப்பும் மரணமும்

1இராஜா 16:25 உம்ரி கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கேடாய் நடந்து,

1இராஜா 16:26 நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் சகல வழியிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குத் தங்கள் வீணான விக்கிரகங்களாலே கோபம் மூட்டும்படியால் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடந்தான்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 16 அதிகாரம்

1இராஜா 16:27 உம்ரி செய்த அவனுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் காண்பித்த வல்லமையும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 16:28 உம்ரி தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, சமாரியாவிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய ஆகாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

"தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கேடாய் நடந்து" - பெரொபெயாமையும், இஸ்ரவேலின் மற்ற ராஜாக்களையும் பார்க்கிலும் உம்ரி மிகவும் கேடாய் நடந்து கொண்டான். விக்கிரகாராதனை செய்தான். ஜனங்களையும், விக்கிரகாராதனை செய்ய வைத்து, அவர்களைக் கட்டுப்பாடு பண்ணினான். (1இராஜா 16:25-26).

"உம்ரி செய்த அவனுடைய மற்ற வர்த்தமானங்கள்" - நாளாகமம் புஸ்தகத்தில் உம்ரியைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஆகையினால் இவனுடைய வரலாறு இஸ்ரவேல் ராஜாக்களின் விசேஷித்த வரலாற்றுப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும்.

### VIII. ஆகாபின் ஆட்சி - (16:29-22:40; 2நாளா 18:1-34)

#### 1. ஆகாபின் பொல்லாப்பு - (18:18; 21:19,25-26)

1இராஜா 16:29 யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தெட்டாம் வருஷத்தில் உம்ரியின் குமாரனாகிய ஆகாப் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி, சமாரியாவில் இஸ்ரவேலின் மேல் இருபத்திரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்.

1இராஜா 16:30 உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

1இராஜா 16:31 நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது அவனுக்குக் கொஞ்சக் காரியமென்று நினைத்தாற்போல் அவன் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினது மல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு,

1இராஜா 16:32 தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப்பலிபீடத்தைஎடுப்பித்தான்.

1இராஜா 16:33 ஆகாப் ஒரு விக்கிரகத்தோப்பையும் வைத்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும் படிக்கு தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்து வந்தான்.

"ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும்" - உம்ரி செய்த பாவங்களைப் பற்றி விரிவாகக் கூறப்படவில்லை. (1இராஜா 16:25) இவன் அந்நிய ஸ்திரீயாகிய யேசபேலை விவாகம் பண்ணினான். பாகாலைச் சேவித்தான். பாகாலின் கோவிலுக்குப் பலிபீடத்தையும் எடுப்பித்தான். விக்கிரகத்தோப்பை வைத்தான். (1இராஜா 16:31).

#### 2. எரிகோவைக் கட்டியோர்மீது சாபம் - (6:22)

1இராஜா 16:34 அவன் நாட்களிலே பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினான்; கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவாவைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் அதின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது, அபிராம் என்னும் தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூப் என்னும் தன் இளையகுமாரனையும் சாகக் கொடுத்தான்.

"ஈயேல் எரிகோவைக் கட்டினான்" - ஆகாப் எரிகோவைக் கட்டியபோது, யோசுவா எரிகோவைக் கட்டுகிறவனுக்கு வரப்போகிற சாபத்தைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் நிறைவேறிற்று. (யோசு 6:26).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 17 அதிகாரம்

**3. மூன்றரை வருஷம் பஞ்சம்** - (லூக் 4:25; யாக் 5:17)

1இராஜா 17:1 கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

"திஸ்பியனாகிய எலியா" (Elijah the Tishbite) - எலியா என்னும் பெயருக்கு "கர்த்தர் தேவனாயிருக்கிறார்" "God is Jehovah" என்று பொருள்.

**வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "எலியா"க்கள்**

1. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (எஸ்றா10:21)

2. தீர்க்கதரிசி.

"எலியா" - எலியாவின் பெயர் வேதாகமத்தில் 69 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 17:1-19:21; 1இராஜா 21:17-28; 2இராஜா 1:1-17; 2இராஜா 2:1-15; 2இராஜா 3:11; 2இராஜா 9:36; 2இராஜா 10:10, 17; 2நாளா 21:12; மல் 4:5). புதிய ஏற்பாட்டில் "Elias" என்று அழைக்கப்படுகிறார். இது எலியாவின் கிரேக்கப் பெயராகும். புதிய ஏற்பாட்டில் 30 இடங்களில் எலியாவின் பெயர் கூறப்பட்டிருக்கிறது. (மத் 11:14; மத் 16:14; மத் 17:3-12; மத் 27:47-49; மாற்கு 6:15; மாற்கு 8:28; மாற்கு 9:4-13; மாற்கு 15:35-36; லூக்கா 1:17; லூக்கா 4:25-26; லூக்கா 9:8,19,30,33,54; யோவான் 1:21-25; ரோமர் 11:2; யாக் 5:17)

எலியா தீர்க்கதரிசிகளில் மிகவும் முக்கியமானவர். ஆனாலும் மற்ற தீர்க்கதரிசிகளைப் போல இவர் தீர்க்கதரிசன புஸ்தகம் எதுவும் எழுதவில்லை. நான்கு வசனங்களை மட்டுமே எலியா எழுதியிருக்கிறார். (2நாளா 21:12-15). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக இஸ்ரவேல் ராஜ்யம் பூமியில் கூட்டிச் சேர்க்கப்படும் என்பதை எலியா முன்னறிவித்திருக்கிறார். (மல் 4:5-6; வெளி 11:3-12). வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டு சாட்சிகள் என்று கூறப் பட்டிருக்கிறவர்களில் எலியாவும் ஒருவர். (சக 14:11-14; வெளி 11:3-12). எலியாவையும், யோவான்ஸ்நானனையும் ஒப்பிட்டுக் கூறுகிறார்கள். (மத் 16:14; மாற்கு 6:15,மாற்கு 8:28; யோவான் 1:21-25) எலியாவின் ஆவியும், வல்லமையும், ஊழியமும் யோவான் ஸ்நானனிடமும் காணப்படுவதாகக் கூறுகிறார்கள். (மத் 11:14; மத் 17:11-12; மாற்கு 9:12-13; லூக்கா 1:17).

**எலியாவிற்கும், யோவான்ஸ்நானனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள்**

1. இருவருமே ஒரே ஆவியினாலும், ஒரே வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறார்கள். (2இராஜா 1:9; லூக்கா 1:17)

2. இவ்விருவமே வனாந்தரங்களிலும், தனிமையிலும் ஜீவித்திருக்கிறார்கள். (1இராஜா 17:3; 1இராஜா 19:4; லூக்கா 1:80)

3. இவ்விருவரும் ஒரேமாதிரியான வஸ்திரம் அணிந்திருந்தார்கள். மிகவும் எளிமையாக ஜீவித்தார்கள். (2இராஜா 1:8; மத் 3:4)

4. இவ்விருவரும் ராஜாக்களைப் பயமில்லாமல் தைரியமாகக் கடிந்து கூறினார்கள். (1இராஜா 18:17-18; 2இராஜா 1; மத் 14:4)

5. ராஜாக்கள் இவ்விருவரையுமே கொல்ல வேண்டுமென்று முயற்சி பண்ணினார்கள். (2இராஜா 1:9-16; மத் 14:3-4)

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 17 அதிகாரம்

6. இவ்விருவரும் சோர்வு அடைந்ததில்லை. (1இராஜா 19:4; மத் 11:1-6)

7. இவ்விருவரும் நீதியைப் பிரசங்கித்தார்கள்.(1இராஜா 18:20-24; மத் 21:32)

8. இவ்விருவர்மீதும் ராணிகளின் கோபப் பார்வைப் பதிந்திருந்தது. (1இராஜா 19:1-7; மத் 14:3-12)

9. இவ்விருவருடைய ஊழியங்களிலும் நல்ல கனி வெளிப்பட்டது. (1இராஜா 18:17-41; மத் 3:5-6)

10. இவ்விருவரும் இஸ்ரவேல் தேசத்தில் மிகுந்த செல்வாக்கோடு இருந்தார்கள். (1இராஜா 18:25-41; மாற்கு 11:32)

11. இவ்விருவருமே தீர்க்கதரிசனத்தின் பிரகாரம் செயல் பட்டார்கள். (மல் 4:5-6; ஏசா 40:3; மல் 3:1)

12. இவ்விருவரும் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தினார்கள். யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பாகவும், (மல் 3:1), எலியா இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகவும் (மல் 4:5-6) அவருடைய வழியைச் செம்மைப் படுத்தினார்கள்.

13. இவ்விருவருமே தங்களுடைய விசுவாசத்தில் சோர்வடைந்தார்கள். ஆனாலும் விரைவில் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டார்கள். (1இராஜா 19:1-7,18; ரோமர் 11:1-4; மத் 11:1-6)

14. இவ்விருவமே தீர்க்கதரிசிகள் (1இராஜா 18:22; மத் 11:9)

**தீர்க்கதரிசன எண் - 13**

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (1இராஜா 17:1) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இந்த வருஷங்களிலே" - இது மூன்றரை வருஷக்காலத்தைக் குறிக்கும்.(லூக்கா 4:25; யாக் 5:17). மூன்று வருஷங்களில் மேலும் ஆறுமாதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்தத் தீர்க்கதரிசனம் இந்த வருஷங்களின் கடைசியில் கூறப்பட்டதாகும். (1இராஜா 18:1).

**4. எலியாவைக் காகம் போஷிக்கிறது**

1இராஜா 17:2 பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்:

1இராஜா 17:3 நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு.

1இராஜா 17:4 அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார்.

1இராஜா 17:5 அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான்.

1இராஜா 17:6 காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது; தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான்.

1இராஜா 17:7 தேசத்தில் மழை பெய்யாத படியினால், சிலநாளுக்குப் பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று.

**தீர்க்கதரிசன எண் - 14**

"நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய்...." (1இராஜா 17:3-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்தத் தீர்க்கதரிசனத்தில் கேரீத் ஆற்றில் எலியாவிற்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கும் என்னும் முன்னறிவிப்பும், மேலும் காகங்கள் அவனைப் போஷிக்கும் என்னும் முன்னறிவிப்பும் காணப்படுகிறது. காகங்கள் எலியாவை ஒவ்வொரு நாளும் இரண்டு முறை போஷித்தன. (1இராஜா 17:5-7).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 17 அதிகாரம்

**கர்த்தர் எலியாஷைக் குறித்து கூறிய கட்டளைகள்**

1. உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிட்டேன்.
2. உன்னைப் பராமரிக்கும்படி சாறிபாத் ஊரில் இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் (1இராஜா 17:9)

**எலியா அற்புதமாகப் போஷிக்கப்பட்ட சம்பவங்கள்**

1. காகங்கள் எலியாவை தினமும் இரண்டு வேளை போஷித்தன. (1இராஜா 17:4-7)
2. ஒரு விதவை (1இராஜா 17:9-16)
3. ஒரு தேவதூதன் (1இராஜா 19:5-6)

"கேரீத் ஆறு" (Cherith) - மழைக்காலத்தில் கேரீத் ஆறு நிரம்பி ஓடும். அது யோர்தான் நதியில்போய் கலக்கும்.

"காகங்கள்" - வேதாகமத்தில் இரண்டு விதமான காகங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஒன்று "ஓரேப்" (oreb) மற்றொன்று "ஆரேப்" (arab) என்பதாகும். இந்த வசனத்தில் கூறப்பட்டிருப்பது ஓராப் என்னும் காகமாகும்.

காகங்கள் (ravens) - עֹרֵב - o-rabe', o-rabe' - 6158

ஆ.பெ.சொ. - காகம், காக்கை

காகங்கள் (ravens) עָרַב - aw-rab' - 6150

பெயர்ச்சொல் - காகம்

**5. பானையின் மாவும் கலசத்தின் எண்ணெயும் குறையவில்லை**

1இராஜா 17:8 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று அவர்:

1இராஜா 17:9 நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்.

1இராஜா 17:10 அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்; அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்குப் போனான்; அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்கு அவன் வந்தபோது, அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள்; அவன் அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றான்.

1இராஜா 17:11 கொண்டுவர அவள் போகிறபோது அவன் அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா என்றான்.

1இராஜா 17:12 அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப் படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

1இராஜா 17:13 அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே; நீ போய் உன்வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்.

1இராஜா 17:14 கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 17 அதிகாரம்

1இராஜா 17:15 அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள்.

1இராஜா 17:16 கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை.

**தீர்க்கதரிசன எண் - 15**

“நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு” (1இராஜா 17:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. பஞ்சகாலம் முடியும் வரையிலும் சாறிபாத் ஊரிலுள்ள ஒரு விதவை எலியாவுக்கு தினமும் போஜனம் கொடுத்தாள்.

**தீர்க்கதரிசன எண் - 16**

“எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே; நீ போய் உன்வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து....” (1இராஜா 17:13-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை (1இராஜா 17:14)

2. கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை.

“எலியாவின் சொற்படி செய்தாள்” - சாறிபாத் ஊரின் விதவை எலியாவின் வார்த்தைகளை விசுவாசித்தாள். எலியாவின் வார்த்தையின்படி செய்வதற்கு அவளிடத்தில் விசுவாசம் இருந்தது. பஞ்சகாலம் முழுவதும் அவர்களுக்கு போதுமான அளவு எண்ணெயும், மாவும் கிடைத்தது. பஞ்சம் முடிந்தபின்பு, எண்ணெயும், மாவும் குறைந்து போயிற்று. (1இராஜா 17:14-16).

பானை (barrel) - כַּד - kad - 3537

பெ.பெ.சொ.-குடம்,பானை,கிண்ணி (a large clay jar) barrel (1இராஜா 17:12-16; 1இராஜா 18:33) pitcher (ஆதி 24:14-20,43-46; நியா 7:16-20; பிர 12:6).

**6. விதவையின் மகனை எலியா உயிருடன் எழுப்புகிறான்**

1இராஜா 17:17 இவைகள் நடந்தபின்பு, வீட்டுக்காரியாகிய அந்த ஸ்திரீயின் மகன் வியாதியில் விழுந்தான்; அவனுடைய சுவாசம் போகுமட்டும் அவனுடைய வியாதி அதிகரித்துக்கொண்டே இருந்தது.

1இராஜா 17:18 அப்பொழுது அவள் எலியாவை நோக்கி: தேவனுடைய மனுஷனே, எனக்கும் உமக்கும் என்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும், என் குமாரனைச் சாகப்பண்ணவுமா? என்னிடத்தில் வந்தீர் என்றாள்.

1இராஜா 17:19 அதற்கு அவன்: உன் குமாரனை என்னிடத்தில் தா என்று சொல்லி, அவனை அவள் மடியிலிருந்து எடுத்து, தான் தங்கியிருக்கிற மேல்வீட்டிலே அவனைக் கொண்டுபோய், தன் கட்டிலின்மேல் வைத்து:

1இராஜா 17:20 என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங் கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு;

1இராஜா 17:21 அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்து: என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பி வரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.

1இராஜா 17:22 கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது; அவன் பிழைத்தான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 17 அதிகாரம்

1இராஜா 17:23 அப்பொழுது எலியா பிள்ளையை எடுத்து, மேல் வீட்டிலிருந்து அவனைக் கீழ்வீட்டிற்குள் கொண்டு வந்து, அவனை அவன் தாயினிடத்தில் கொடுத்து: பார் உன் பிள்ளை உயிரோடிருக்கிறான் என்று சொன்னான்.

1இராஜா 17:24 அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்.

"தேவனுடைய மனுஷன்" - பஞ்சகாலத்திற்குப் பின்பு சாறிபாத் ஊர் விதவை ஸ்திரீயின் மகன் வியாதியில் விழுந்தான்; அவனுடைய சுவாசம் போகுமட்டும் அவனுடைய வியாதி அதிகரித்துக் கொண்டே இருந்தது. அப்போது அந்த ஸ்திரீ எலியாவை "தேவனுடைய மனுஷனே" என்று அழைக்கிறாள். தன்னுடைய கடந்தகாலப் பாவங்கள், தன்னுடைய மகனின் வியாதிக்குக் காரணம் என்று நினைக்கிறாள். தன்னுடைய வீட்டில் நடைபெற்ற அற்புதங்களையெல்லாம் பார்க்கும்போது எலியாவைத் தேவனுடைய மனுஷன் என்று புரிந்து கொண்டாள். விதவை ஸ்திரீயின் மகன் செத்துப்போனான். எலியா செத்துப்போன அந்தப் பிள்ளைக்காகக் கர்த்தரிடத்தில் ஜெபித்தான். கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது; அவன் பிழைத்தான். எலியா அந்த ஸ்திரீயிடம் அவளுடைய பிள்ளையை உயிரோடு ஒப்படைத்தான். அப்போது அந்த ஸ்திரீ மறுபடியும் எலியாவை நோக்கி, "நீர் தேவனுடைய மனுஷன்" என்று அறிக்கையிடுகிறாள். (1இராஜா 17:17-24).

"அவன் பிழைத்தான்" - மரித்துப்போனவன் மறுபடியும் பிழைத்ததாக வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது சம்பவம். மறுபடியும் பிழைத்த இவன் தன்னுடைய வாழ்நாள் முடியும்மட்டும் உயிரோடு இருப்பான். அதன் பின்பு மறுபடியும் மரித்துப்போவான்.

"உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை" - எலியாவைப் பற்றி சாறிபாத் ஊர் ஸ்திரீக்கு ஏற்கெனவே நன்றாகத் தெரிந்திருக்கிறது. இப்போது அதை மறுபடியும் உறுதிபண்ணிக் கொள்கிறாள். தேவனுடைய மனுஷர்கள் அற்புதங்களைச் செய்கிறார்கள். இதனால் அவர்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பது உறுதிபண்ணப் படுகிறது. இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும், ஆதித்திருச்சபை விசுவாசிகளும் தங்களுடைய ஊழியத்தை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணினார்கள். இதே சிலாக்கியம் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் விசுவாசிகளாகிய நமக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது. (மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; எபி 2:3-4).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 18 அதிகாரம்

### 7. எலியா ஆகாபைச் சந்திக்கச் செல்கிறான்

1இராஜா 18:1 அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்.

1இராஜா 18:2 அப்பொழுது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப் போனான்; பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருந்தது.

"அநேகநாள் சென்று" - மூன்றாம் வருஷத்தின் முடிவில்.

**தீர்க்கதரிசன எண் - 17**

"நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்" (1இராஜா 18:1) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

### 8. ஆகாப் தண்ணீரைத் தேடுகிறான்

1இராஜா 18:3 ஆனபடியால் ஆகாப் அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியாவை அழைப்பித்தான்; ஒபதியா கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான்.

1இராஜா 18:4 யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவந்தான்.

1இராஜா 18:5 ஆகாப் ஒபதியாவைப் பார்த்து: நீ தேசத்திலிருக்கிற எல்லா நீரூற்றுகளிடத்திலும், எல்லா ஆறுகளிடத்திலும் போ; நாம் சகல மிருகஜீவன்களையும் சாகக்கொடாமல், குதிரைகளையும் கோவேறு கழுதைகளையுமாவது உயிரோடே காப்பாற்றும்படிக்கு நமக்குப் புல் அகப்படுமா என்று பார் என்றான்.

1இராஜா 18:6 அப்படியே தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி, அதைப் பகுத்துக் கொண்டு, ஆகாப் ஒரு வழியாயும், ஒபதியா வேறொரு வழியாயும் போனார்கள்.

"யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது" - முதன் முறையாக அரசாங்கம் மார்க்கக் காரியங்களில் தலையிட்டு, மெய்யான மார்க்கத்திற்கு விரோதமாக எழும்பி நிற்கிறது. இதில் யேசபேல் என்னும் ராஜஸ்திரீ முதன்மையானவளாக இருக்கிறாள். இவள் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரித்தாள்.

### 9. எலியா ஒபதியாவைச் சந்திக்கிறான்

1இராஜா 18:7 ஒபதியா வழியில் போகும்போது, எலியா அவனுக்கு எதிர்ப்பட்டான்; அவன் இவனை இன்னான் என்று அறிந்து, முகங்குப்புற விழுந்து, நீர் என் ஆண்டவனாகிய எலியா அல்லவா என்று கேட்டதற்கு.

1இராஜா 18:8 அவன், நான்தான்; நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல் என்றான்.

1இராஜா 18:9 அதற்கு அவன்: ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு, நீர் உமது அடியானை அவன் கையில் ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன்.

1இராஜா 18:10 உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; நீர் இல்லையென்று அவர்கள் சொன்னபோது, அவன் அந்த ராஜ்யத்தையும் அந்த ஜாதியையும் உம்மைக் காணவில்லை என்று சத்தியம் வாங்கிக்கொண்டான்.

## 18 அதிகாரம்

1இராஜா 18:11 இப்போதும் நீ போய், உன் ஆண்டவனுக்கு, இதோ, எலியா வந்திருக்கிறான் என்று சொல் என்று நீர் சொல்லுகிறீரே.

1இராஜா 18:12 நான் உம்மை விட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப் போய் அறிவித்த பின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே; உமது அடியானாகிய நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்துநடக்கிறவன்.

1இராஜா 18:13 யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசகளைக் கொன்றுபோடுகிற போது, நான் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் நூறு பேரை ஒவ்வொரு கெபியிலே ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, பராமரித்துவந்த என்னுடைய செய்கை என் ஆண்டவனுக்கு அறிவிக்கப்பட்ட வில்லையோ?

1இராஜா 18:14 இப்போதும் என் ஆண்டவன் என்னைக் கொன்றுபோடும் படியாக, நீர்: இதோ, எலியா வந்திருக்கிறான் என்று போய் அவனுக்குச் சொல் என்று சொல்லுகிறீரே என்றான்.

1இராஜா 18:15 அதற்கு எலியா: இன்றைக்கு என்னை அவனுக்குக் காண்பிப்பேன் என்று சேனைகளின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

1இராஜா 18:16 அப்பொழுது ஒபதியா போய், ஆகாபைச் சந்தித்து அவனுக்கு அதை அறிவித்தவுடனே, ஆகாப் எலியாவைச் சந்திக்கப்போனான்.

"ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு" - ஆகாப் எலியாவைத் தன் தேசம் முழுவதும் தேடிக் கொண்டிருக்கிறான். எலியாவைப் பற்றி ஒபதியா ஆகாபிடம் சொன்னால் ராஜாவிடம் பொய்சொன்ன குற்றத்திற்காக அவன் தன்னைக் கொன்றுபோடுவான் என்று ஒபதியா பயப்படுகிறான். (1இராஜா 18:9-16).

"இன்றைக்கு என்னை அவனுக்குக் காண்பிப்பேன்" - எலியா "சேனைகளின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" என்று உறுதி கூறியபின்பு, ஒபதியா ஆகாபிடம் எலியாவைப் பற்றி அறிவிக்கச் சம்மதிக்கிறான். (1இராஜா 18:15-16)

### 10. ஆகாபும் அவனுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளும்

1இராஜா 18:17 ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான்.

1இராஜா 18:18 அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்.

1இராஜா 18:19 இப்போதும் கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிறதோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டு வர ஆட்களை அனுப்பும் என்றான்.

1இராஜா 18:20 அப்படியே ஆகாப்: இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடத்திலும் ஆட்களை அனுப்பி, கர்மேல்பர்வதத்திலே அந்தத் தீர்க்கதரிசிகளைக் கூடிவரும்படி செய்தான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 18 அதிகாரம்

1இராஜா 18:21 அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

1இராஜா 18:22 அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி: கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர்.

1இராஜா 18:23 இப்போது இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டு வரட்டும்; ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு, அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைக்கக் கடவர்கள்; நான் மற்றக் காளையை அப்படியே செய்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன்.

1இராஜா 18:24 நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச்சொல்லிக் கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்; அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள்.

"இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல" - ராஜாவிடம் பேசுவதற்கு எலியா பயப்படவில்லை. தேசத்தில் பஞ்சம் வந்ததற்கும், இஸ்ரவேல் ஜனங்கள் பாடுகளை அனுபவிப்பதற்கும் தான் காரணமல்ல என்பது எலியாவுக்கு நன்றாகத் தெரியும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை ஆராதிக்காமல், பாகாலை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சனைகளுக்கு அவர்களுடைய விக்கிரகாராதனையே.

"யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிறதோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேர்" - கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும் கூடிவரச்செய்யுமாறு எலியா ஆகாபிடம் கூறுகிறான். இந்தத் தீர்க்கதரிசிகள் 450 பேரும் போக, யேசபேலின் பந்தியில் சாப்பிடுகிற மேலும் 400 பேர் இருக்கிறார்கள். இவர்கள் தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள். ஆக மொத்தம் யேசபேலிடத்தில் 850 தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் யேசபேல் போஜனம் கொடுத்து ஆதரிக்கிறாள்.

"நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்" - மெய்யான தெய்வம் யார் என்பதை நிரூபிக்க வேண்டுமென்று எலியா விரும்புகிறான். ஆகாபும், யேசபேலும் இஸ்ரவேல் ஜனங்களும் பாகாலை ஆராதிக்கிறார்கள். எலியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கிறான். பாகாலின் பக்கத்தில் 850 தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். கர்த்தரின் பக்கத்தில் எலியா மட்டுமே தனியாக இருக்கிறான். "அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்" என்று ஜனங்கள் எல்லோரும் அங்கிகரிக்கிறார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குப் பாகால் அக்கினியினால் உத்தரவு அருளவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோ அக்கினியினால் உத்தரவு அருளினார். இதனால் கர்த்தரே மெய்யான தெய்வம் என்பது இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் மறுபடியும் நிரூபணமாயிற்று. (1இராஜா 18:21-24).

### 11. பாகால் தீர்க்கதரிசிகளின் முயற்சிகள்

1இராஜா 18:25 அப்பொழுது எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் அநேகரானதால் நீங்களே முந்தி ஒரு காளையைத் தெரிந்துகொண்டு அதை ஆயத்தம்பண்ணி, நெருப்புப் போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக்கூப்பிடுங்கள் என்றான்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 18 அதிகாரம்

1இராஜா 18:26 தங்களுக்குக் கொடுக்கப் பட்ட காளையைஅவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி: பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள்.

1இராஜா 18:27 மத்தியான வேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான்; அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும் என்றான்.

1இராஜா 18:28 அவர்கள் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள்.

1இராஜா 18:29 மத்தியானவேளை சென்றபின்பு, அந்திப்பலிசெலுத்தும் நேரமட்டாகச் சன்னதம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும்பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை, கவனிப்பாரும் இல்லை.

"நெருப்புப்போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக்கூப்பிடுங்கள்" - பாகாலின் தீர்க்கதரிசிகள் முதலாவதாகச் செயல்பட எலியா அனுமதிக்கிறான். பாகால் அக்கினியால் உத்தரவு கொடுக்க வேண்டும். அதற்காக அவர்கள் "பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். அவர்கள் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள். ஆனாலும் ஒரு சத்தமும்பிறக்கவில்லை". எலியா அவர்களையும், பாகாலையும் பரியாசம் பண்ணினான். பாகால் ஒரு விக்கிரகம். அதற்கு ஜீவன் இல்லை. அது அக்கினியில் எரிந்துபோகும். அக்கினியால் உத்தரவு கொடுக்க பாகாலால் முடியாது.

"இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள்" - இது புறஜாதியாரின் வழக்கம். மரித்தோருக்காக இழவு கொண்டாடும் போதும் புறஜாதியார் தங்களை இவ்வாறு துக்கப்படுத்திக் கொள்வார்கள். (லேவி 19:28) இது விக்கிரகாராதனையின் ஒரு பகுதி. இந்தப் பழக்கம் முதன் முதலில் சீரிய தேசத்தில் ஆரம்பமாயிற்று.

**12. கர்த்தரிடத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி** - (லேவி 9:24)

1இராஜா 18:30 அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி: என் கிட்டே வாருங்கள் என்றான்; சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது, தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு:

1இராஜா 18:31 உனக்கு இஸ்ரவேல் என்னும் பேர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப் பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, பன்னிரண்டு கற்களை எடுத்து,

1இராஜா 18:32 அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடிவிதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கி,

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 18 அதிகாரம்

1இராஜா 18:33 விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்துசந்தாகத் துண்டித்து விறகுகளின்மேல் வைத்தான்.

1இராஜா 18:34 பிற்பாடு அவன்: நீங்கள் நாலுகுடம் தண்ணீர் கொண்டுவந்து, சர்வாங்க தகனபலியின்மேலும், விறகுகளின்மேலும் ஊற்றுங்கள் என்றான்; பின்பு இரண்டாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; இரண்டாந்தரமும் ஊற்றினார்கள்; அதற்குப்பின்பு மூன்றாந்தரமும் அப்படியே ஊற்றுங்கள் என்றான்; மூன்றாந்தரமும் ஊற்றினார்கள்.

1இராஜா 18:35 அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது; வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்பினான்.

1இராஜா 18:36 அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்.

1இராஜா 18:37 கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்.

1இராஜா 18:38 அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.

1இராஜா 18:39 ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

1இராஜா 18:40 அப்பொழுது எலியா அவர்களை நோக்கி: நீங்கள் பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப் போகாதபடிக்கு அவர்களைப் பிடியுங்கள் என்றான்; அவர்களைப் பிடித்தபோது, எலியா அவர்களைக் கீழே கீசோன் ஆற்றங்கரையிலே கொண்டுபோய், அங்கே அவர்களை வெட்டிப்போட்டான்.

"என் கிட்டே வாருங்கள்" - எலியா கர்த்தரைப் பூரணமாக விசுவாசிக்கிறான். கர்த்தர் தன் பக்கத்தில் இருக்கிறார் என்பதில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. கர்த்தருடைய பலிபீடத்தைச் செப்பனிடுகிறான். பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறான். இந்தப் பன்னிரண்டு கற்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு அடையாளமாகும். சர்வாங்க தகனபலியின்மீதும், விறகுகளின்மீதும் நாலுகுடம் தண்ணீரை ஊற்றினான். இப்படியே மூன்றுதரம் தண்ணீர் ஊற்றினான். எலியா கர்த்தரிடத்தில் ஜெபித்தான். அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

"அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே" - யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் இரண்டு அந்திப்பொழுதுகள் உள்ளன. ஒன்று மதியவேளைக்குப் பின்பு சூரியன் மறைய ஆரம்பிக்கும் நேரம். மற்றொன்று சூரியன் முழுவதுமாக மறைந்தபின்பு உள்ள அந்திப் பொழுது. அந்திப்பலி மாலை சுமார் 3 மணி அளவில் செலுத்தப்படும்.

"கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி" - எலியா பலியை ஆயத்தமாக வைத்து விட்டு, கர்த்தரிடத்தில் ஜெபித்தான். அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கிற்று. இது சாதாரண அக்கினி அல்ல. இதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. பொதுவாக அக்கினி கீழிருந்து மேலாகப் பட்சிக்கும். ஆனால் இதுவோ கர்த்தரிடத்திலிருந்து வந்த அக்கினி. ஆகையினால் இது மேலிருந்து கீழாகப் பட்சித்துப் போடுகிறது. மிகப்பெரிய அற்புதம் நடைபெறுகிறது. ஆகையினால் ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள். (1இராஜா 18:38-39).

## 18 அதிகாரம்

"பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடிக்கு அவர்களைப் பிடியுங்கள்" - எலியா இந்த வேளைக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் இப்போது தேவனுக்குப் பயப்படுகிறார்கள். தேவனுக்கும், தீர்க்கதரிசியின் வார்த்தைக்கும் கீழ்ப்படிய ஆயத்தமாக இருக்கிறார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகள் எல்லோரையும் எலியா பிடித்தான். அவர்களைக் கீசோன் ஆற்றங்கரையிலே கொண்டுபோய், அங்கே அவர்களை வெட்டிப் போட்டான்.

### 13. மழை

1இராஜா 18:41 பின்பு எலியா ஆகாபை நோக்கி: நீர் போம், போஜனபானம் பண்ணும்; பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான்.

1இராஜா 18:42 ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன்முழங்காலில் பட குனிந்து,

1இராஜா 18:43 தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய்ச் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான்.

1இராஜா 18:44 ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான்; அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி: மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான்.

1இராஜா 18:45 அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று; ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான்.

1இராஜா 18:46 கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்கு முன் ஓடினான்.

"பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது" - எலியா மிகுந்த உற்சாகமாக இருக்கிறான். உற்சாகத்தில் பெருமழையின் இரைச்சல் கேட்பதாகக் கூறுகிறான். மழை பெய்வதற்கு முன்பாக ராஜாவை யெஸ்ரயேலுக்குப் போகுமாறு அனுப்பிவிடுகிறான்.

"எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து" - கிழக்கு தேசத்தில் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது பலவிதமான நிலைமைகளிலிருந்து ஜெபிப்பது வழக்கம். அதில் இதுவும் ஒன்று. எலியா தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து ஜெபிக்கிறான்.

"கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால்" - கர்த்தருடைய கை என்பது தேவனுடைய அற்புத வல்லமையைக் குறிக்கும். (1இராஜா 18:46; அப் 4:30; அப் 11:21) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் எலியா ஆகாபுக்கு முன்பாக ஓடினான். கர்மேலிலிருந்து யெஸ்ரயேலுக்கு இடையிலுள்ள 30 மைல் தூரத்தையும் எலியா கர்த்தருடைய பெலத்தினால் ஓடித்தீர்த்தான்.

"அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு" - யூதர்கள் பிரயாணம் பண்ணும்போதும், பணிகளில் ஈடுபடும்போதும் தங்கள் அரைகளைக் கட்டிக் கொள்வது வழக்கம். (1இராஜா 18:46; யாத் 12:11; 2இராஜா 4:29; 2இராஜா 9:1; லூக்கா 12:37; லூக்கா 17:8; அப் 12:8). எலியா வார்க்கச்சை அணிந்திருந்தான். (2இராஜா 1:8) யோவான் ஸ்நானனும் வார்க்கச்சை அணிந்திருந்தான். (மத் 3:4).

"ஆகாபுக்குமுன் ஓடினான்" - ராஜாவின் இரதத்திற்கு முன்பாக ஓடுவது ராஜாவுக்கு ஒரு மேன்மையான காரியம். எலியா ஆகாபுக்கு முன்பாக ஓடி ராஜாவைக் கனப்படுத்துகிறான். (1இராஜா 1:5; 1சாமு 8:11; 2சாமு 15:1).

## 19 அதிகாரம்

### 14. எலியா யேசபேலுக்கு பயந்து ஓடுகிறான்

1இராஜா 19:1 எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான்.

1இராஜா 19:2 அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் எனக்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள்.

1இராஜா 19:3 அவனுக்கு அது தெரிந்த போது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரன் அங்கே நிறுத்திவிட்டான்.

"யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி" - எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டான். இதனால் யேசபேல் எலியாமீது மிகுந்த கோபமாக இருக்கிறாள். எலியாவுக்குக் கொடுக்கப்போகும் தண்டனையை ஒரு ஆள் மூலமாகச் சொல்லி அனுப்புகிறாள். இந்தத் துர்ச்செய்தி கிடைத்தவுடன் எலியா தப்பித்து ஓடி விடுகிறான்.

"தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான்" - தான் போகும் இடம் யாருக்கும் தெரியக்கூடாது என்பதில் எலியா மிகுந்த கவனமாகச் செயல்படுகிறான். ஆகையினால் தன்னுடைய வேலைக்காரனைக் கூடத் தன்னோடு அழைத்துச் செல்லாமல் தனியாக ஓடிப்போனான்.

### 15. தெய்வீக வல்லமை

1இராஜா 19:4 அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி,

1இராஜா 19:5 ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான்.

1இராஜா 19:6 அவன் விழித்துப் பார்க்கிறபோது, இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன், புசித்துக் குடித்துத் திரும்பப் படுத்துக்கொண்டான்.

1இராஜா 19:7 கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம் பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான்.

1இராஜா 19:8 அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்.

"அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய்" - அக்காலத்தில் பிரயாணத் தூரத்தை இவ்வாறு அளப்பது வழக்கம். இது சுமார் 18 முதல் 30 மைல் வரையிலுமுள்ள தூரத்தைக் குறிக்கும். (ஆதி 30:36; ஆதி 31:23; யாத் 5:3; யாத் 8:27; எண் 11:31; உபா 1:2; 2இராஜா 3:9; லூக்கா 2:44) ஒரு ஓய்வுநாள் பிரயாணத் தூரம் என்பது சுமார் ஒரு மைல் ஆகும். (அப் 1:12).

## 19 அதிகாரம்

"ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து" - இது யோனாவின் சம்பவத்தைப் போன்று இருக்கிறது. (யோனா 4, யோபு 30:4; சங் 120:4). எலியா தேவனுடைய வல்லமையான ஊழியக்காரன். கர்த்தருடைய வல்லமையைப் பிரத்தியட்சமாகப் பார்த்தவன். இரட்சிக்கவும், அழிக்கவும் கர்த்தருக்கு வல்லமை உள்ளது. கர்த்தர் எலியாவை வல்லமையாகப் பயன்படுத்தி இருக்கிறார். ஆனால் அந்த எலியாவோ இப்போது ஒரு ஸ்திரீக்குப் பயந்து தன் ஜீவனைக் காத்துக் கொள்ள ஓடி ஒளிகிறான்.

"தான் சாகவேண்டும் என்று கோரி" - எலியா அதிகத்தூரம் ஓடிவந்து விட்டான். இப்போது சாவதற்குக்கூட ஆயத்தமாக இருக்கிறான். இவன் சாவதற்குப் பயந்ததினால் தான் யேசபேலைவிட்டு ஓடி வந்திருக்கிறான். ஆனால் எலியா மரித்துப் போக வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமல்ல. அவன் இன்னும் மரணத்தை ருசிபார்க்க வில்லை. கர்த்தர் அவனைச் சுழற்காற்றில் இழுத்துக் கொண்டார். எலியா இன்னும் மரிக்கவில்லை. இப்போது அவனுக்கு 3,500 வயதுக்குமேல் ஆகியிருக்க வேண்டும். வருங்கால உபத்திரவக்காலத்தில் எலியா இரண்டு சாட்சிகளில் ஒருவனாக மரிப்பான். (2இராஜா 2:11; சக 4:11-14; வெளி 11:3-12)

மரணத்தைக் காணாமல், பரலோகத்திற்கு இரண்டுபேர் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. ஏனோக்கும் **(Enoch)**, எலியாவுமே **(Elijah)** அவர்கள்.

மல் 4:5-6 ஆகிய வசனங்களில் இவ்விரண்டு சாட்சிகளில் எலியாவும் ஒருவரென்று ஏற்கெனவே முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. யோவான் ஸ்நானன் எலியா அல்ல. (யோவான் 1:21) இவன் எலியாவின் ஆவியோடும், எலியாவின் வல்லமையோடும் இயேசு கிறிஸ்துவிற்குப் பாதையைச் செம்மைப்படுத்த வந்தவன். மேசியாவின் இரண்டாம் வருகைக்கு எலியா ஜனங்களுடைய இருதயங்களை ஆயத்தப்படுத்துவான். (லூக்கா 1:17).

எலியாவைத்தவிர மரணத்தைக் காணாமல், வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மற்றொருவர் ஏனோக்கு ஆவார். (ஆதி 5:21-24;எபி 11:5;2இராஜா 2). இவ்விருவருமே நியாயத்தீர்ப்பை அறிவித்த தீர்க்கதரிசிகள். (யூதா 1:14-15; 1இராஜா 17-18). இவ்விருவரும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் மரிக்க வேண்டும். (எபி 9:27; 1கொரி 15:51-58).

"தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும்" - தேவதூதன் எலியாவுக்குப் போஜனத்தை ஆயத்தம் பண்ணுகிறான். அந்தப் போஜனத்தின் பலத்தினால் எலியா நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான். (1இராஜா 19:5-8).

"நாற்பதுநாள் இரவுபகல்" - (மத் 4:2)

"ஓரேப்" **(Horeb)** - எலியா ஒரு சூரைச் செடியின்கீழ்ப் படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான். அந்த இடத்திலிருந்து ஓரேப் 180 மைல் தூரத்திலுள்ளது. இந்த இடத்திற்கு எலியா 40 நாட்கள் இரவு பகலாக நடந்த சென்றான். ஒருவேளை உபவாசத்தில் இருந்ததினால் அவனால் அதிகத் தூரம் நடக்க முடியாமல் போயிருந்திருக்கும். எலியாவுக்குத் தேவனுடைய சித்தம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் ஓரேப் மலைக்குப் போனான். இலக்கை நிருணயிக்காமல் எங்கும் போகக்கூடாது. இவனுடைய செயல் மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்திருக்கிறது. தன்னுடைய சுய சித்தத்தின் பிரகாரமாகத் தன் நேரத்தையும், பெலத்தையும் செலவு செய்து, எலியா நீண்ட தூரம் நடந்து போனான். அதனால் ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. எங்கிருந்து புறப்பட்டானோ அங்கேயே திரும்பி வந்துவிட்டான். எலியா ஓரேபுக்குப் போக வேண்டிய அவசியமேயில்லை. ஓரேபில் எலியாவைப் பார்த்தவுடன், கர்த்தர் அவனை நோக்கி, "எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்" என்று கேள்வி கேட்கிறார். எலியா தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் கர்த்தரிடம் கூறுகிறான். கர்த்தர் அவனைப் பார்த்து, "நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு" என்று கூறி எலியாவைத் திரும்ப அனுப்பிவிடுகிறார்.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 19 அதிகாரம்

ஓரேபிற்குப் போவதற்கு 40 நாள், அங்கிருந்து திரும்பி வருவதற்கு 40 நாள் ஆக மொத்தம் 80 நாட்களாக எலியா தேவையில்லாமல் பிரயாணம் பண்ணியிருக்கிறான். எலியா சூரைச்செடியின் கீழேயே கர்த்தரிடத்தில் ஜெபித்து, கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

### 16. புதிய வெளிப்பாடும் புதிய கட்டளையும்

1இராஜா 19:9 அங்கே அவன் ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான்; இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர்: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார்.

1இராஜா 19:10 அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.

1இராஜா 19:11 அப்பொழுது அவர்: நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார்; அப்பொழுது, இதோ, கர்த்தர் கடந்துபோனார்; கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமிஅதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை.

1இராஜா 19:12 பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.

1இராஜா 19:13 அதை எலியா கேட்டபோது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலில் நின்றான். அப்பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

1இராஜா 19:14 அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள். உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்.

1இராஜா 19:15 அப்பொழுது கர்த்தர் அவனைப் பார்த்து: நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப் போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி,

1இராஜா 19:16 பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு.

1இராஜா 19:17 சம்பவிப்பதாவது: ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான்; யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான்.

1இராஜா 19:18 ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 19 அதிகாரம்

"எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்" - கர்த்தர் எலியாவை ஒரேபுக்கு வரச்சொல்ல வில்லை. அவன் யேசபேலிடமிருந்து பயந்து ஓடி வந்திருக்கிறான். தன்னுடைய பயத்தில் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணாமல், அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கிறான். ஆரம்பத்திலேயே எலியா ஜெபித்திருந்தால், கர்த்தர் அவனைப் பாதுகாத்திருப்பார், சரியான இடத்திற்கு வழிநடத்தியிருப்பார்.

**எலியா கர்த்தருக்குக் கூறிய பதில்**

1. சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்.
2. இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்.
3. உம்முடைய பலிபீடங்களை இடித்துப் போட்டார்கள்.
4. உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்.
5. நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்.
6. என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள்.

எலியாவைப் பற்றி கர்த்தருக்குப் பூரணமாகத் தெரியும். எலியா கர்த்தரிடம் கூறியவை அனைத்தும் உண்மையானவை அல்ல. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் தான் மட்டுமே மீதியாக இருப்பதாக எலியாக கூறுகிறான். ஆனால் ஒபதியாவும், அவனால் போஷிக்கப்பட்ட மேலும் 400 தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். (1இராஜா 18:4) இவர்கள் தவிர பாகாலுக்கு தங்கள் முழங்கால்களை முடக்காத மேலும் 7,000 புருஷர்கள் இஸ்ரவேல் தேசத்திலே இருக்கிறார்கள். (1இராஜா 19:18). இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் எலியாவின் பிராணனை வாங்கத் தேடவில்லை. (1இராஜா 18:39). யேசபேல் மட்டுமே எலியாவைக் கொல்ல வகைதேடுகிறாள். (1இராஜா 19:1-7).

**கர்த்தர் எலியாவுக்குக் கூறிய கட்டளைகள்**

1. நீ வெளியே வா.
2. கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில்
3. நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போ. (1இராஜா 19:15)
4. ஆசகேல், யெகூ, எலிசா ஆகியோரை அபிஷேகம் பண்ணு. (1இராஜா19:15-18)

"அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று" - கர்த்தர் பெருங்காற்றிலும் இல்லை. பூமியதிர்ச்சியிலும் இல்லை. அமைதியான சூழ்நிலையில் கர்த்தருடைய சத்தம் உண்டாயிற்று. ஒருவர் அமைதியாக ஜெபிப்பதினால் அவரிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இல்லை என்று தீர்மானம் பண்ணிவிடக்கூடாது. சில சமயங்களில் கர்த்தர் பலத்த இடி ஓசைகளின் மத்தியிலும் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். (யாத் 20:18; வெளி 10:3-4) அமைதியான சூழ்நிலையிலும் கர்த்தர் தம்மை வெளிப்படுத்துகிறார்.

"தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக் கொண்டு" - கர்த்தருடைய பிரசன்னத்திற்கு முன்பாகத் தன் முகத்தை மூடிக் கொள்வது பக்திக்கு அடையாளம். கர்த்தர் எரிகிற முட்செடியில் தோன்றியபோது மோசே தன் முகத்தை மூடிக் கொண்டான். மோசே கர்த்தரைப் பார்க்கப் பயந்தார். (யாத் 3:6). சேராபீன்கள்கூட தங்கள் இரண்டு செட்டைகளினால் தங்களுடைய முகங்களை மூடிக் கொள்ளும். (ஏசா 6:2)

"இங்கே உனக்கு என்ன காரியம்" - கர்த்தர் எலியாவிடம் இரண்டாம் முறையாக "நீ ஏன் ஒரேபுக்கு வந்தாய்" என்று கேட்கிறார். (1இராஜா 19:9).

"வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்" - எலியா 1இராஜா 19:10 ஆவது வசனத்தில் கூறிய காரியங்களை மறுபடியும் கூறுகிறான்.

"நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய்" - எலியா எங்கிருந்து வந்தானோ அங்கேயே திரும்பிப் போகுமாறு கர்த்தர் அவனுக்குக் கட்டளையிடுகிறார்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 19 அதிகாரம்

**எலியா அபிஷேகம் பண்ணியவர்கள்**

1. ஆசகேல் - சீரியாவின்மேல் ராஜாவாக. (1இராஜா 19:15)
2. யெகூ - இஸ்ரவேலின்மேல் ராஜாவாக (1இராஜா 19:16)
3. எலிசா - தன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக.

**தீர்க்கதரிசன எண் - 18**

"ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான்" (1இராஜா 19:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான்.
2. யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்று போடுவான்.

"எலிசா கொன்று போடுவான்" - யாரைக் கொல்ல வேண்டுமென்று எலிசா கட்டளையிடுவான்.

"பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களை... உடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" - இந்த வாக்கியம் ரோமர் 11:4 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அவனை முத்தஞ் செய்யாதிருக்கிற" - விக்கிரகாராதனையில் விக்கிரகங்களை முத்தஞ் செய்து ஆராதிப்பது வழக்கம்.

**17. எலிசாவின் அழைப்பு** - (வசனம் 16)

1இராஜா 19:19 அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக் கொண்டிருந்தான்; எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்.

1இராஜா 19:20 அப்பொழுது அவன் மாடுகளை விட்டு, எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப்பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான். அதற்கு அவன்: போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள் என்றான்.

1இராஜா 19:21 அப்பொழுது அவன் இவனை விட்டுப்போய், ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து, ஏரின்மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்ட பிற்பாடு, அவன் எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியஞ் செய்தான்.

"அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்" - எலிசா எலியாவைப் பின்பற்ற வேண்டுமென்பதற்கு இது அடையாளம். எலிசா உடனடியாக எலியாவைப் பின்பற்ற ஆயத்தமாகிறான். ஜனங்களுக்கு தன் ஏர்மாட்டை அடித்து, சமைத்து, விருந்து செய்து, எலியாவுக்கு ஊழியம் செய்ய அவன் பின்னால் செல்கிறான். (1இராஜா 19:20-21).

## 20 அதிகாரம்

### 18. ஆகாப் சீரியரோடு பண்ணிய முதலாவது யுத்தம் - (2இராஜா 16:5)

#### (1) பெனாதாத்தின் முதலாவது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் படுகிறது

1இராஜா 20:1 சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் சேனையையெல்லாம் கூட்டிக் கொண்டுபோய், சமாரியாவை முற்றிக்கைபோட்டு அதின்மேல் யுத்தம் பண்ணினான்; அவனோடேகூட முப்பத்திரண்டு ராஜாக்கள் இருந்ததுமல்லாமல், குதிரைகளும் இரதங்களும் இருந்தது.

1இராஜா 20:2 அவன் நகரத்திற்குள் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி:

1இராஜா 20:3 உன்னுடைய வெள்ளியும் உன்னுடைய பொன்னும் என்னுடையது; உன்னுடைய ஸ்திரீகளும் உன்னுடைய குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களும் என்னுடையவர்கள் என்று பெனாதாத் சொல்லுகிறான் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.

1இராஜா 20:4 இஸ்ரவேலின் ராஜா அதற்குப் பிரதியுத்தரமாக: ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய வார்த்தையின்படியே, நானும் உனக்கு உண்டான யாவும் உம்முடையவைகள் தான் என்று சொல்லியனுப்பினான்.

"சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன்சேனையையெல்லாம் கூட்டிக்கொண்டுபோய்" - இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு பெனாதாத் யுத்தம் பண்ண வருகிறான். ஆகாபின் வெள்ளியையும், பொன்னையும், ஸ்திரீகளையும், குமாரருக்குள் சமர்த்தராயிருக்கிறவர்களையும் தான் எடுத்துக் கொள்ள விரும்புவதாகப் பெனாதாத் ஆகாபிடம் கூறுகிறான்.

ஆகாப் அதற்குச் சம்மதிக்கிறான். (1இராஜா 20:1-4). பெனாதாத் மறுபடியும் ஆகாபிடம் வேறொரு செய்தியைச் சொல்லி அனுப்புகிறான். தன்னுடைய ஊழியக்காரரைப் பெனாதாத் ஆகாபிடம் அனுப்புவான். அவர்கள் ஆகாபின் வீடுகளையெல்லாம் சோதித்துப் பார்த்து, தங்கள் கண்களுக்குப் பிரியமானவைகளெல்லாம் எடுத்துக் கொண்டு போவார்கள் என்று பெனாதாத் கூறுகிறான். ஆனால் இந்தக் கோரிக்கையை ஆகாப் ஏற்றுக் கொள்ளவில்லை. (1இராஜா 20:5-9). பெனாதாத் ஆகாபின்மீது யுத்தம் பண்ணுகிறான். இந்த யுத்தத்தில் பெனாதாத் தோற்றுப்போனான். (1இராஜா 20:10-20).

#### (2) பெனாதாத்தின் இரண்டாவது கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது

1இராஜா 20:5 அந்த ஸ்தானாபதிகள் திரும்பவும் வந்து: பெனாதாத் சொல்லுகிறது என்னவென்றால், உன் வெள்ளியையும், உன் பொன்னையும், உன் ஸ்திரீகளையும், உன் குமாரர்களையும் நீ எனக்குக் கொடுக்க வேண்டும் என்று உமக்குச் சொல்லியனுப்பினேனே.

1இராஜா 20:6 ஆனாலும் நாளை இந்நேரத்திலே என் ஊழியக்காரரை உன்னிடத்தில் அனுப்புவேன்; அவர்கள் என் வீட்டையும் உன் ஊழியக்காரரின் வீடுகளையும் சோதித்து, உன் கண்ணுக்குப் பிரியமானவைகள் எல்லாவற்றையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு போவார்கள் என்றார் என்று சொன்னார்கள்.

1இராஜா 20:7 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, தேசத்தின் மூப்பரையெல்லாம் அழைப்பித்து: இவன் பொல்லாப்புத் தேடுகிற விதத்தைக் கவனித்துப்பாருங்கள்; என் ஸ்திரீகளையும், என் குமாரர்களையும், என் வெள்ளியையும், என் பொன்னையும் கேட்க, இவன் என்னிடத்தில் ஆள் அனுப்பினபோது, நான் கொடுக்க மாட்டேன் என்று இவனுக்கு மறுக்கவில்லையே என்றான்.

## 20 அதிகாரம்

1இராஜா 20:8 அப்பொழுது சகல மூப்பரும் சகல ஜனங்களும் அவனைப் பார்த்து: நீர் அவனுக்குச் செவிகொடுக்கவும், அவனுக்குச் சம்மதிக்கவும் வேண்டாம் என்றார்கள்.

1இராஜா 20:9 அதினால் அவன் பெனாதாத்தின் ஸ்தானாபதிகளை நோக்கி: நீங்கள் ராஜாவாகிய என் ஆண்டவனுக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், நீர் முதல் விசை உமது அடியானுக்குச் சொல்லியனுப்பின யாவும் செய்வேன்; இந்தக் காரியத்தையோ நான் செய்யக்கூடாது என்று சொல்லுங்கள் என்றான்; ஸ்தானாபதிகள் போய், இந்த மறுமொழியை அவனுக்குச் சொன்னார்கள்.

### (3) பெனாதாத்தின் பெருமை

1இராஜா 20:10 அப்பொழுது பெனாதாத் அவனிடத்தில் ஆள் அனுப்பி: எனக்குப் பின் செல்லுகிற ஜனங்கள் எல்லாரும் கைக்கு ஒரு பிடியாவது வாரிக்கொள்ள சமாரியாவின் தூள் போதுமானதாயிருந்தால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக் கடவர்கள் என்று சொல்லச்சொன்னான்.

"தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள்" - பெனாதாத் இஸ்ரவேலை உடனடியாக அழிக்கப் போவதாகப் பெருமையோடு கூறுகிறான். ஆனால் ஆகாபோ எபிரெயரின் பழமொழி ஒன்றை அவனுக்கு எடுத்துக் கூறி பெனாதாத்தை எதிர்த்து நிற்கிறான். (1இராஜா 20:10-11). இதனால் கோபம் கொண்ட பெனாதாத் குடிவெறியில் சமாரியாவின்மீது யுத்தம் பண்ணுவதற்கு உடனடியாக ஆயத்தமானான். (1இராஜா 20:12).

### (4) ஆகாப் பெனாதாத்திற்குக் கூறிய பதிலுரை

1இராஜா 20:11 அதற்கு இஸ்ரவேலின் ராஜா பிரதியுத்தரமாக: ஆயுதம் தரித்திருக்கிறவன், ஆயுதம் உரிந்து போடுகிறவனைப்போலப் பெருமை பாராட்டலாகாது என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றான்.

1இராஜா 20:12 பெனாதாத்தும், மற்ற ராஜாக்களும் கூடாரங்களிலே குடித்துக் கொண்டிருக்கையில், இந்த வார்த்தையைக் கேட்டு, தன் ஊழியக்காரரை நோக்கி: ஆயத்தம்பண்ணுங்கள் என்றான்; அப்படியே நகரத்தின்மேல் சண்டைசெய்ய ஆயத்தம்பண்ணினார்கள்.

### (5) ஆகாபுக்கு தேவன் தந்த ஜெய வாக்குத்தத்தம்

1இராஜா 20:13 அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து: அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் கண்டாயா? இதோ, நானே கர்த்தர் என்று நீ அறியும்படி இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 20:14 யாரைக்கொண்டு என்று ஆகாப் கேட்டான்; அதற்கு அவன்: மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரைக் கொண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்; பின்பு அவன், யுத்தத்தை யார் துவக்கவேண்டும் என்று கேட்டதற்கு; அவன், நீர்தான் என்றான்.

**தீர்க்கதரிசன எண் - 19**

"அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து......" (1இராஜா 20:13-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 20 அதிகாரம்

### நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இன்றைக்கு அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்.

2. மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரைக் கொண்டு ஒப்புக்கொடுப்பேன். (1இராஜா 20:14)

### (6) சீரியர்மீது வெற்றி

1இராஜா 20:15 அவன் மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரை இலக்கம்பார்த்தான், அவர்கள் இருநூற்று முப்பத்திரண்டு பேர்; அவர்களுக்குப்பின்பு, இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனத்தின் இலக்கமும் பார்த்து ஏழாயிரம்பேர் என்று கண்டான்.

1இராஜா 20:16 அவர்கள் மத்தியான வேளையிலே வெளியே புறப்பட்டார்கள்; பெனாதாத்தும், அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு ராஜாக்களாகிய மற்ற ராஜாக்களும், கூடாரங்களில் குடித்து வெறி கொண்டிருந்தார்கள்.

1இராஜா 20:17 மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர் முன்தண்டாகப் புறப்படுகிறபோது, பெனாதாத் அனுப்பின மனுஷர்: சமாரியாவிலிருந்து மனுஷர் புறப்பட்டு வருகிறார்கள் என்று அவனுக்கு அறிவித்தார்கள்.

1இராஜா 20:18 அப்பொழுது அவன்: அவர்கள் சமாதானத்திற்காகப் புறப்பட்டு வந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்; அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டுவந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள் என்றான்.

1இராஜா 20:19 மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரான அவர்களும், அவர்கள் பின்னே வருகிற இராணுவமும், நகரத்திலிருந்து வெளியே வந்தபோது,

1இராஜா 20:20 அவர்கள் அவரவர் தங்களுக்கு எதிர்ப்படுகிறவர்களை வெட்டினார்கள்; சீரியர் முறிந்தோடிப் போனார்கள்; இஸ்ரவேலர் அவர்களைத் துரத்தினார்கள்; சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், குதிரையின்மேல் ஏறிச் சில குதிரைவீரரோடுங்கூடத் தப்பியோடிப் போனான்.

1இராஜா 20:21 இஸ்ரவேலின் ராஜா புறப்பட்டு, குதிரைகளையும், இரதங்களையும் முறிய அடித்து, சீரியரில் மகா சங்காரம் உண்டாக வெட்டினான்.

"மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகர்" - இஸ்ரவேலில் இவர்களுடைய எண்ணிக்கை 232 பேர். இவர்கள் தவிர இஸ்ரவேலின் யுத்தவீரர்கள் 7,000பேர். ஆகமொத்தம் இஸ்ரவேலில் 7,232 யுத்த வீரர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் சீரியரின் சேனையோ மிகவும் பெரியது. அவர்களிடத்தில் 33 ராஜாக்களும், அவர்களுடைய சேனைகளும் இருக்கிறார்கள். தங்களுடைய சுய நம்பிக்கையிலும், சுய பெருமையிலும் அவர்கள் குடித்து வெறித்திருந்தார்கள். கர்த்தருடைய வல்லமை அவர்களுக்கு விரோதமாக எழும்பிற்று. சீரியரின்சேனை உடனடியாகத் தோற்றுப் போயிற்று. (1இராஜா 20:15-21).

"கூடாரங்கள்" (pavilions) - (ஆதி 33:17; யோபு 27:18; யோனா 4:5).

### 19. யுத்தத்தைப் பற்றிய தீர்க்கதரிசன எச்சரிப்பு

1இராஜா 20:22 பின்பு அந்தத் தீர்க்கதரிசி இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் போய் உம்மைப் பலப்படுத்திக்கொண்டு, நீர் செய்யத்தக்கது இன்னதென்று கவனித்துப்பாரும்; மறுவருஷத்திலே சீரியாவின் ராஜா உமக்கு விரோதமாக வருவான் என்றான்.

## 20 அதிகாரம்

**தீர்க்கதரிசன எண் - 20**

"மறுவருஷத்திலே சீரியாவின் ராஜா உமக்கு விரோதமாக வருவான்" (1இராஜா 20:22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ஆகாபை ஏற்கெனவே எச்சரித்த தீர்க்கதரிசி இப்போது இந்தத் தீர்க்கதரிசனத்தையும் கூறுகிறான். ஆகையினால் ஆகாப் தன்னைத் தாழ்த்தி, கர்த்தரை நம்பி, சீரியரின் யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

### 20. ஆகாப் சீரியரோடு பண்ணிய இரண்டாவது யுத்தம் - (2இராஜா 16:5)

### (1) சீரியரின் திட்டம்

1இராஜா 20:23 சீரியாவின் ராஜாவுடைய ஊழியக்காரர் அவனைப் பார்த்து: அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை மேற்கொண்டார்கள்; நாம் அவர்களோடே சமபூமியிலே யுத்தம் பண்ணினால் நல்லது; அப்பொழுது அவர்களை மேற்கொள்வது நிச்சயம்.

1இராஜா 20:24 அதற்காக நீர் செய்ய வேண்டியது என்னவென்றால், இந்த ராஜாக்கள் ஒவ்வொருவரையும் தங்கள் ஸ்தலத்திலிருந்து மாற்றி, அவர்களுக்குப் பதிலாகச் சேனாபதிகளை ஏற்படுத்தி;

1இராஜா 20:25 நீர் மடியக்கொடுத்த சேனைக்குச் சரியாய்ச் சேனையையும், அந்தக் குதிரைகளுக்குச் சரியாய்க் குதிரைகளையும், இரதங்களுக்குச் சரியாய் இரதங்களையும் இலக்கம்பார்த்துக் கொள்ளும்; பிற்பாடு சமபூமியிலே நாம் அவர்களோடு யுத்தம்பண்ணி, நிச்சயமாய் அவர்களை மேற்கொள்வோம் என்றார்கள்; அவன் அவர்கள் சொற்கேட்டு அப்படியே செய்தான்.

"அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள்" - சீரியருக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பற்றி சரியாகத் தெரியவில்லை. கர்த்தர் மலைக்கு மட்டுமே தேவன், அவர் பள்ளத்தாக்கிற்குத் தேவன் இல்லை என்று நினைக்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேலோடு மலையில் யுத்தம் பண்ணாமல், பள்ளத்தாக்கில் யுத்தம் பண்ண வேண்டும் தீர்மானிக்கிறார்கள். மேலும் ராஜாக்களுக்குப் பதிலாகச் சேனாபதிகளை ஏற்படுத்தித் தங்களுடைய சேனைகளை வலுப்படுத்த வேண்டுமென்று சீரியர்கள் தீர்மானிக்கிறார்கள். (1இராஜா 20:23-25).

### (2) தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் - (வசனம் 22)

1இராஜா 20:26 மறுவருஷத்திலே பெனாதாத் சீரியரை இலக்கம்பார்த்து, இஸ்ரவேலோடு யுத்தம்பண்ண ஆப்பெக்குக்கு வந்தான்.

1இராஜா 20:27 இஸ்ரவேல் புத்திரரும் இலக்கம் பார்க்கப்பட்டு, தேவையானதைச் சம்பாதித்துக் கொண்டு, அவர்களை எதிர்க்கப்புறப்பட்டு, அவர்களுக்கு எதிரே இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப் போலப் பாளயமிறங்கினார்கள்; தேசம் சீரியரால் நிறைந்திருந்தது.

"அவர்களுக்கு எதிரே இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போலப் பாளயமிறங்கினார்கள்" - சீரியரின் திரளான சேனைக்கு முன்பாக இஸ்ரவேலின் சேனை இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போலவே இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணுகிறார். தாம் பள்ளத்தாக்கிற்கும் தேவன் என்பதை நிரூபிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரைச் சீரியரின் கையிலிருந்து இரட்சிக்கிறார். (1இராஜா 20:26-28).

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 20 அதிகாரம்

**தீர்க்கதரிசன எண் - 21**

"நான் இந்த ஏராளமான ஜனக் கூட்டத்தையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்" (1இராஜா 20:28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. கர்த்தர் பள்ளத்தாக்குகளின் தேவனாயிராமல், மலைகளின் தேவனாயிருக்கிறார் என்று சீரியர் சொல்லியிருக்கிற படியினால், நான் இந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்.
2. நானே கர்த்தர் என்று நீங்கள் அறிவீர்கள்.

### (4) சீரியர்மீது இரண்டாவது முறையாக வெற்றி

1இராஜா 20:29 ஏழுநாளளவும் அவர்கள் முகமுகமாய்ப் பாளயமிறங்கியிருந்தார்கள்; ஏழாம் நாளில் யுத்தம் கலந்து, இஸ்ரவேல் புத்திரர் ஒரேநாளிலே சீரியரில் லட்சம் காலாட்களை மடங்கடித்தார்கள்.

1இராஜா 20:30 மீதியானவர்கள் ஆப்பெக் பட்டணத்திற்குள் ஓடிப்போனார்கள்; அங்கே மீதியாயிருந்த இருபத்தேழாயிரம் பேரின் மேல் அலங்கம் இடிந்து விழுந்தது; பெனாதாத்தும் ஓடிப்போய் நகரத்திற்குள் புகுந்து, உள்ளறையிலே பதுங்கினான்.

"ஏழுநாளளவும் அவர்கள் முகமுகமாய்ப் பாளயமிறங்கியிருந்தார்கள்" - ஒருவருக்கொருவர் யுத்தம் பண்ணாமல், நேருக்கு நேராக ஏழு நாளளவும் இருக்கிறார்கள். இதற்கான காரணம் தெரியவில்லை. சில சமயங்களில் நாற்பது நாட்களுக்குக்கூட நேருக்கு நேர் இருந்திருக்கிறார்கள் (1சாமு 17:16). ஏழாம் நாளில் யுத்தம் ஆரம்பமாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் ஒரேநாளிலே சீரியரில் லட்சம் காலாட்களை மடங்கடித்தார்கள். மீதியாயிருந்த இருபத்தேழாயிரம்பேரின் மேல் அலங்கம் இடிந்து விழுந்தது. (1இராஜா 20:30).

### (5) ஆகாபின் பாவம்

1இராஜா 20:31 அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: இதோ, இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்கள் தயவுள்ள ராஜாக்கள் என்று கேட்டிருக்கிறோம்; நாங்கள் இரட்டுகளை எங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளை எங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் போவோம்; ஒருவேளை உம்மை உயிரோடே வைப்பார் என்று சொல்லி,

1இராஜா 20:32 இரட்டைத் தங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளைத் தங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் வந்து: என்னை உயிரோடே வையும் என்று உமது அடியானாகிய பெனாதாத் விண்ணப்பம் பண்ணுகிறான் என்றார்கள். அதற்கு அவன், இன்னும் அவன் உயிரோடே இருக்கிறானா, அவன் என் சகோதரன் என்றான்.

1இராஜா 20:33 அந்த மனுஷர் நன்றாய்க் கவனித்து, அவன் வாயின் சொல்லை உடனே பிடித்து: உமது சகோதரனாகிய பெனாதாத் இருக்கிறான் என்றார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் போய், அவனை அழைத்துக் கொண்டுவாருங்கள் என்றான்; பெனாதாத் அவனிடத்தில் வந்தபோது, அவனைத் தன் இரதத்தில் ஏற்றிக்கொண்டான்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 20 அதிகாரம்

1இராஜா 20:34 அப்பொழுது பெனாதாத் இவனைப் பார்த்து: என் தகப்பன் உம்முடைய தகப்பனார் கையிலே பிடித்த பட்டணங்களைத் திரும்பக் கொடுத்து விடுகிறேன்; என் தகப்பன் சமாரியாவிலே செய்ததுபோல, நீரும் தமஸ்குவிலே வீதிகளை உண்டாக்கிக்கொள்ளலாம் என்றான். அதற்கு அவன், இந்த உடன்படிக்கை செய்து நான் உம்மை அனுப்பிவிடுகிறேன் என்று சொல்லி, அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பிவிட்டான்.

"இஸ்ரவேல் வம்சத்து ராஜாக்கள் தயவுள்ள ராஜாக்கள்" - இஸ்ரவேல் புத்திரர்கள் பல சமயங்களில் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனாலும், அவர்களிடத்தில் புறஜாதி ராஜாக்களிடத்தில் காணப்படாத மனிதாபிமான நல்ல குணங்கள் காணப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரின் தயவையும், இரக்கத்தையும் பற்றி புறஜாதியாரும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இதனால் பெனாதாத்தின் ஊழியக்காரர் இரட்டைத் தங்கள் அரைகளில் கட்டி, கயிறுகளைத் தங்கள் தலைகளில் சுற்றிக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவின் இரக்கத்திற்காகவும், தயவிற்காகவும் கெஞ்சுகிறார்கள். ஆகாப் பெனாதாத்தை மன்னித்து, தன்னிடத்தில் ஏற்றுக் கொள்கிறான். (1இராஜா 20:32,33).

"பெனாதாத் அவனிடத்தில் வந்தபோது, அவனைத் தன் இரதத்தில் ஏற்றிக்கொண்டான்" - பெனாதாத் ஆகாபிடம் சரணடைந்தான். ஆகாப் அவனோடு உடன்படிக்கை செய்து, அவனை விட்டுவிடுகிறான். (1இராஜா 20:33-34). இந்தக் காரியத்தில் கர்த்தர் பிரியப்படவில்லை. தம்முடைய தீர்க்கதரிசிகளில் ஒருவனைக் கர்த்தர் ஆகாபினிடத்தில் அனுப்புகிறார். அவன் ஆகாபைக் கடிந்து கொண்டு அடுத்த வருஷத்தில் சீரியரோடு நடைபெறும் யுத்தத்தில் இஸ்ரவேல் தோற்றுப்போகும் என்று தீர்க்கதரிசனம் கூறுகிறான். (1இராஜா 20:35-43).

### (6) தீர்க்கதரிசி மூலமாக எச்சரிப்பு

1இராஜா 20:35 அப்பொழுது தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படி தன் தோழனை நோக்கி: நீ என்னை அடி என்றான்; அந்த மனுஷன் அவனைப் பார்த்து அடிக்கமாட்டேன் என்றான்.

1இராஜா 20:36 அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: நீ கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமற் போனபடியால், இதோ, நீ என்னைவிட்டுப் புறப்பட்டுப் போனவுடனே ஒரு சிங்கம் உன்னைக் கொல்லும் என்றான்; அப்படியே இவன் அவனை விட்டுப் புறப்பட்டவுடனே, ஒரு சிங்கம் இவனைக் கண்டு கொன்று போட்டது.

1இராஜா 20:37 அதின்பின் அவன் வேறொருவனைக் கண்டு: என்னை அடி என்றான்; அந்த மனுஷன், அவனைக் காயமுண்டாக அடித்தான்.

1இராஜா 20:38 அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி போய், தன் முகத்தின்மேல் சாம்பலைப் போட்டு, வேஷமாறினவனாய் வழியிலே ராஜாவுக்காகக் காத்திருந்தான்.

1இராஜா 20:39 ராஜா அவ்வழியாய் வருகிறபோது, இவன் ராஜாவைப்பார்த்துக் கூப்பிட்டு: உமது அடியான் யுத்தத்தில் நின்றபோது, ஒருவன் விலகி, என்னிடத்தில் ஒருவனைக் கொண்டு வந்து, இந்த மனுஷனைப் பத்திரம்பண்ணு; இவன் தப்பிப்போனால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாயிருக்கும், அல்லது ஒரு தாலந்து வெள்ளியை நீ கொடுக்கவேண்டும் என்றான்.

## 20 அதிகாரம்

1இராஜா 20:40 ஆனாலும் உமது அடியான் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான் என்றான். இஸ்ரவேலின் ராஜா அவனைப் பார்த்து: நீ சொன்ன தீர்ப்பின்படியே ஆகும் என்றான்.

1இராஜா 20:41 அப்பொழுது அவன் சீக்கிரமாய்த் தன் முகத்தின் மேலிருக்கும் சாம்பலைத் துடைத்துவிட்டதினால், இஸ்ரவேலின் ராஜா அவன் தீர்க்கதரிசிகளில் ஒருவன் என்று அறிந்துகொண்டான்.

1இராஜா 20:42 அப்பொழுது இவன் அவனை நோக்கி: சங்காரத்திற்கு நான் நியமித்த மனுஷனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாகவும், உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாகவும் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 20:43 அதினால் இஸ்ரவேலின் ராஜா சலிப்பும் விசனமுமாய்த் தன் வீட்டிற்குப் போகப் புறப்பட்டுச் சமாரியாவுக்கு வந்தான்.

"நீ என்னை அடி" - ஒரு தீர்க்கதரிசி தன்தோழனைப் பார்த்து, தன்னை அடிக்குமாறு கூறுகிறான். ஆனால் அவனோ அடிக்க மறுத்து விடுகிறான். தீர்க்கதரிசியின் வார்த்தைப்படி ஒரு சிங்கம் அவன் தோழனைக் கொன்றுபோட்டது. (1இராஜா 20:35-36). இது கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமற்போனதினால் ஏற்பட்ட சம்பவம். அதே தீர்க்கதரிசி வேறொருவனைப் பார்த்து தன்னை அடிக்குமாறு கூறுகிறான். அவன் தீர்க்கதரிசியைக் காயம் உண்டாக அடித்தான். (1இராஜா 20:37). அதன் பின்பு, தீர்க்கதரிசி வேஷம்மாறி, ராஜாவினிடத்தில் போய், கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறான்.

"சங்காரத்திற்கு நான் நியமித்த மனுஷனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால், உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாகவும், உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாகவும் இருக்கும் என்று அந்தத் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை ஆகாபிடம் கூறுகிறான். (1இராஜா 20:39-43).

**தீர்க்கதரிசன எண் - 22**

"நீ கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமற் போனபடியால், இதோ, நீ என்னைவிட்டுப் புறப்பட்டுப் போனவுடனே ஒரு சிங்கம் உன்னைக் கொல்லும்" (1இராஜா 20:36) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"ஒரு சிங்கம் இவனைக் கண்டு கொன்று போட்டது" - இந்தப் புஸ்தகத்தில் இரண்டாம் முறையாக சிங்கம் மனுஷனைக் கொன்றுபோட்ட சம்பவத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 20:36; 1இராஜா 13:24).

**தீர்க்கதரிசன எண் - 23**

"சங்காரத்திற்கு நான் நியமித்த மனுஷனை உன் கையிலிருந்து தப்பிப்போகும்படி நீ விட்டபடியினால்....." (1இராஜா 20:42) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. உன் பிராணன் அவன் பிராணனுக்கு ஈடாக இருக்கும்.

2. உன் ஜனம் அவன் ஜனத்திற்கு ஈடாக இருக்கும்.

"சலிப்பும் விசனமுமாய்" - ஆகாப் கர்த்தருக்குக் கீழ்ப்படியவில்லை. ஆகையினால் அவனுக்குச் சலிப்பும், விசனமும் உண்டாயிற்று. கர்த்தர் ஆகாபிற்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறார். அவன் அதையெல்லாம் தியானித்துப் பார்த்து, நீதியாய் ஜீவித்திருக்க வேண்டும். ஆனால் ஆகாபோ மேலும் அதிகமாகப் பாவம் செய்து, கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். (1இராஜா 21:1-24).

## I இராஜாக்கள் – தொகுப்புரை

### 21 அதிகாரம்

### 21. ஆகாப் நாபோத்துக்கு எதிராகச் செய்த பாவம்

#### (1) அவனுடைய திராட்சத்தோட்டத்தை இச்சிக்கிறான்

1இராஜா 21:1 இவைகளுக்குப் பின்பு, யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு யெஸ்ரயேலிலே சமாரியாவின் ராஜாவாகிய ஆகாபின் அரமனை அண்டையில் ஒரு திராட்சத்தோட்டம் இருந்தது.

1இராஜா 21:2 ஆகாப் நாபோத்தோடே பேசி: உன் திராட்சத்தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப்பார்க்கிலும் நல்ல திராட்சத்தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால், அதின் விலைக்கிரயமான பணத்தைத் தருவேன் என்றான்.

1இராஜா 21:3 நாபோத் ஆகாபை நோக்கி: நான் என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடாதபடி கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான்.

1இராஜா 21:4 இப்படி என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன் என்று யெஸ்ரயேலனாகிய நாபோத் தன்னோடே சொன்ன வார்த்தைக்காக ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின் மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தான்.

“நாபோத்துக்கு ..... ஒரு திராட்சத்தோட்டம் இருந்தது.” - இந்தத் தோட்டம் அவனுடைய பிதாக்களின் சுதந்தரத்தின் மூலமாக நாபோத்துக்குக் கிடைத்திருக்கிறது. (1இராஜா 21:3).

“அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு” - ஆகாபிற்கு நாபோத்தின் திராட்சத்தோட்டத்தின்மீது பிரியம் உண்டாயிற்று. அதைத் தன்னுடைய கீரைக் கொல்லையாக்குவதற்கு ஆகாப் விரும்புகிறான். அதை விலைக்கோ அல்லது பண்டமாற்று முறையில் வேறொரு நிலத்தைக் கொடுத்தோ ஆகாப் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். ஆனால் நாபோத்தோ தனக்குச் சுதந்தரமாகக் கிடைத்த தன்நிலத்தை ஆகாபிற்குக் கொடுக்க விரும்பவில்லை. (1இராஜா 21:3). இதனால் ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின் மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தான். (1இராஜா 21:4). யேசபேலுக்கு ஆகாபின் பிரச்சனை தெரிய வந்தபோது அவள் தந்திரமாய் நாபோத்தைக் கொன்று அவனுடைய திராட்சத்தோட்டத்தை ஆகாபிற்குப் பெற்றுத் தருகிறாள். (1இராஜா 21:5-16).

“என் பிதாக்களின் சுதந்தரம்” - மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குச் சுதந்தரமாகக் கிடைக்கப் பெற்ற நிலத்தை விற்கக்கூடாது. ஏதாவது ஒரு சூழ்நிலையில் அதை விற்றுப் போட்டாலும் யூபிலி வருஷத்தில் அந்த நிலம் அவர்களுக்கு மீட்டுத் தரப்படும். (லேவி 25:23-25; எண் 36:7). இதனால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பிதாக்களின் சுதந்தரத்தை மிகவும் அருமையான சொத்தாகப் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள். சுதந்தரத்தை விற்பது தங்கள் குடும்பத்திலிருந்து பிரிந்து போவதற்குச் சமம்.

#### (2) யேசபேலின் சதித்திட்டம்

1இராஜா 21:5 அப்பொழுது அவன் மனைவியாகிய யேசபேல் அவனிடத்தில் வந்து: நீர் போஜனம்பண்ணாதபடிக்கு, உம்முடைய மனம் சலிப்பாயிருக்கிறது என்ன என்று அவனைக் கேட்டதற்கு,

1இராஜா 21:6 அவன் அவர்களைப் பார்த்து: நான் யெஸ்ரயேலனாகிய நாபோத்தோடே பேசி: உன் திராட்சத் தோட்டத்தை எனக்கு விலைக்கிரயமாய்க் கொடு; அல்லது உனக்கு ராசியானால் அதற்குப் பதிலாக வேறே திராட்சத் தோட்டத்தை உனக்குத் தருவேன் என்றேன். அதற்கு அவன்: என் திராட்சத் தோட்டத்தை உமக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னான் என்றான்.

## 21 அதிகாரம்

1இராஜா 21:7 அப்பொழுது அவன் மனைவியாகிய யேசபேல் அவனை நோக்கி: நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறவர் அல்லவா? நீர் எழுந்து போஜனம் பண்ணி மன மகிழ்ச்சியாயிரும்; யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை நான் உமக்குக் கொடுப்பேன் என்று சொன்னாள்.

1இராஜா 21:8 அவள் ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதி, அவன் முத்திரையை அவைகளுக்குப் போட்டு, அந்த நிருபங்களை நாபோத் இருக்கும் பட்டணத்தில் அவனோடே குடியிருக்கிற மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள்.

1இராஜா 21:9 அந்த நிருபங்களில் அவள் எழுதினது என்னவென்றால்: நீங்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்தி,

1இராஜா 21:10 தேவனையும் ராஜாவையும் தூஷித்தாய் என்று அவன்மேல் சாட்சி சொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை அவனுக்கு எதிராக நிறுத்தி, அவனை வெளியே கொண்டு போய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள் என்று எழுதினாள்.

**யேசபேலின் சதித்திட்டம்**

1. யேசபேல் ஆகாபின் பெயரால் நிருபங்களை எழுதினாள்.

2. ஆகாபின் முத்திரையை அவைகளுக்குப் போட்டாள்.

3. அந்த நிருபங்களை நாபோத் இருக்கும் பட்டணத்தில் அவனோடே குடியிருக்கிற மூப்பரிடத்துக்கும் பெரியோரிடத்துக்கும் அனுப்பினாள். (1இராஜா 21:8)

4. உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி, நாபோத்தை ஜனத்தின் முன் நிறுத்துமாறு யேசபேல் நிருபத்தில் எழுதியிருக்கிறாள். (1இராஜா 21:9)

5. தேவனையும் ராஜாவையும் தூஷித்தாய் என்று அவன்மேல் சாட்சிசொல்லுகிற பேலியாளின் மக்களாகிய இரண்டு பேரை அவனுக்கு எதிராக நிறுத்துமாறு யேசபேல் அந்த நிருபத்தில் எழுதியிருக்கிறாள்.

6. அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள் என்று அந்த நிருபத்தில் எழுதினாள். (1இராஜா 21:10)

"அவன் முத்திரையை அவைகளுக்குப் போட்டு" - கையெழுத்துக்களைப் போலவே முத்திரையும் முக்கியமானது. மோதிரங்களும் முத்திரைகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 41:42). தாமார் தன் மாமனாகிய யூதாவின் முத்திரை மோதிரத்தை அடையாளமாகப் பெற்றுக் கொண்டாள். (ஆதி 38:18).

"அந்த நிருபங்களில்" - வேதாகமத்தில் இரண்டாம் முறையாக நிருபங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. தாவீது முதன்முதலாக நிருபத்தை எழுதினான். (2சாமு 11:14-15). தாவீதின் நிருபத்திலும், யேசபேலின் நிருபத்திலும் கொலை செய்ய வேண்டுமென்னும் கட்டளையே எழுதப்பட்டிருக்கிறது. (1இராஜா 21:9-11).

"உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி" - இது ஒரு மாய்மாலமான உபவாசம். நாபோத்தைக் குற்றவாளியாக்க வேண்டும் என்பதற்காகவே இந்த உபவாசம் நியமிக்கப்படுகிறது. (1இராஜா 21:9,13).

"பேலியாளின் மக்கள்" - (உபா 13:13).

"அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்கள்" - (யாத் 17:4.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 21 அதிகாரம்

### (3) யேசபேலின் சதித்திட்டம் வெற்றி பெறுகிறது

1இராஜா 21:11 அவன் பட்டணத்திலே குடியிருக்கிற மூப்பரும் பெரியோருமாகிய அவன் பட்டணத்து மனுஷர், யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதிக் கட்டளையிட்டிருந்தபடியேசெய்தார்கள்.

1இராஜா 21:12 அவர்கள் உபவாசம் என்று பிரசித்தப்படுத்தி நாபோத்தை ஜனத்தின் முன்னே நிறுத்தினார்கள்.

1இராஜா 21:13 அப்பொழுது பேலியாளின் மக்களாகிய இரண்டுபேர் வந்து, அவனுக்கு எதிராக உட்கார்ந்து; நாபோத் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்று ஜனத்திற்கு முன்பாக அவன்மேல் சாட்சி சொன்னார்கள்; அதற்குப்பின்பு அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய், அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்து,

1இராஜா 21:14 பிற்பாடு யேசபேலுக்கு, நாபோத் கல்லெறியுண்டு செத்தான் என்று சொல்லியனுப்பினார்கள்.

"யேசபேல் தங்களுக்கு அனுப்பின நிருபங்களில் எழுதிக் கட்டளையிட்டிருந்தபடியே செய்தார்கள்" - பட்டணத்தின் மூப்பர்கள் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள். இது நீதியான நியாய விசாரிப்பு அல்ல. ஆனாலும் அவர்கள் யேசபேலின் துன்மார்க்கத்துக்குத் துணை போகிறார்கள். குற்றமில்லாத ஒரு மனுஷனுடைய இரத்தத்தைச் சிந்தியதற்காக இவர்கள் எல்லோருமே நியாயம் விசாரிக்கப்படுவார்கள். (1இராஜா 21:12-14).

1இராஜா 21:16 நாபோத் செத்துப் போனதை ஆகாப் கேட்டபோது, அவன் யெஸ்ரயேலனாகிய நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்படி எழுந்துபோனான்.

"திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ளும்" - யேசபேல் சதி பண்ணுகிறாள். ஆகாபால் விலைக்கு வாங்க முடியாத தோட்டத்தை யேசபேல் வஞ்சனையால் அவனுக்குப் பெற்றுத் தருகிறாள்.

"நாபோத் செத்துப்போனதை ஆகாப் கேட்ட போது" - இதுவரையிலும் தனக்கு நாபோத்தின் திராட்சத்தோட்டம் கிடைக்கவில்லை என்று வருத்தத்தோடு இருந்த ஆகாப் இப்போது அதைத் தனக்குச் சொந்தமாய் எடுத்துக் கொள்ளும்படி எழுந்துபோனான். தோட்டம் கிடைத்தது ஆகாபிற்கு சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் கர்த்தருக்கோ இதில் பிரியமில்லை. எலியா மூலமாகக் கர்த்தர் ஆகாபிற்கு நியாயத்தீர்ப்பின் வார்த்தையைக் கூறினார். (1இராஜா 21:16-24).

### (5) ஆகாப், யேசபேலுக்கு எதிராக எலியாவின் தீர்க்கதரிசனம்

1இராஜா 21:17 கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று; அவர்:

1இராஜா 21:18 நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக் கொள்ள அங்கே போயிருக்கிறான்.

1இராஜா 21:19 நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

## 21 அதிகாரம்

1இராஜா 21:20 அப்பொழுது ஆகாப் எலியாவை நோக்கி: என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா என்றான். அதற்கு அவன்: கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்.

1இராஜா 21:21 நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப் போட்டு, ஆகாபுக்கு சுவரில் நீர்விடும் ஒரு நாயாகிலும் இராதபடிக்கு இஸ்ரவேலில் அடைபட்டவனையும் விடுபட்டவனையும் சங்கரித்து,

1இராஜா 21:22 நீ எனக்குக் கோபம் உண்டாக்கி, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் என்றார் என்று சொன்னான்.

1இராஜா 21:23 யேசபேலையும் குறித்துக் கர்த்தர்: நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும்.

1இராஜா 21:24 ஆகாபின் சந்ததியில் பட்டணத்திலே சாகிறவனை நாய்களும், வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப் பறவைகளும் தின்னும் என்றார்.

**தீர்க்கதரிசன எண் - 24**

"நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்" (1இராஜா 21:19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என் பகைஞனே" - எலியா ஆகாபிற்குப் பகைஞனாகத் தெரிகிறான். ஏனெனில் எலியா சத்தியத்தைப் பேசுகிறான். ஆகாபின் பாவங்களை வெளிப்படுத்துகிறான்.

**தீர்க்கதரிசன எண் - 25**

"நான் உன்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியை அழித்துப் போட்டு...." (1இராஜா 21:21-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்**

1. நான் உன்மேல் பொல்லாப்பு வரப் பண்ணுவேன்.
2. உன் சந்ததியை அழித்துப் போடுவேன்.
3. உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் (1இராஜா 21:22).
4. நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும். (1இராஜா 21:23).
5. ஆகாபின் சந்ததியில் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும். (1இராஜா 21:24).
6. ஆகாபின் சந்ததியில் வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப்பறவைகள் தின்னும்

"உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன்" - (1இராஜா 15:27-31; 1இராஜா 16:11-13)

"நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும்" - இந்த வாக்கியம் 2இராஜா 9:30-37 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று.

## 21 அதிகாரம்

### (6) ஆகாபின் பொல்லாப்பும் தன்னைத் தாழ்த்தியதும்

1இராஜா 21:25 தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை.

1இராஜா 21:26 கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்னின்று துரத்திவிட்ட எமோரியர் செய்தபடியெல்லாம், அவன் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றி, மகா அருவருப்பாய் நடந்துகொண்டான்.

1இராஜா 21:27 ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக் கொண்டு, உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்து கொண்டான்.

"கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை" - இதுவரையிலும் இஸ்ரவேல் தேசத்தில் ஆகாபே மிகப்பெரிய பொல்லாப்பான ராஜாவாக இருந்திருக்கிறான். கர்த்தர் அவனையும், அவன் குடும்பத்தாரையும் நியாயம் தீர்த்தார். ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தினுடைய ராஜாக்களின் பொல்லாப்பு குறையாமல் அதிகரித்துக் கொண்டு வந்தது. இஸ்ரவேல் தேசத்தில் யெரொபெயாம் தன் துன்மார்க்கமான வழிகளை விட்டுத் திரும்பாமல், தீமையான காரியங்களுக்கு அஸ்திபாரம் போட்டான். (1இராஜா 13:33-34). நாதாப், பாஷா, ஏலா ஆகிய ராஜாக்களும் யெரொபெயாமின் வழிகளிலேயே நடந்தார்கள். (1இராஜா 15:25-26; 1இராஜா 16:13) இந்த ராஜாக்கள் எல்லோரையும் விட உம்ரி அதிக பொல்லாப்பு செய்தான். (1இராஜா 16:25). இந்த வசனத்தில் ஆகாபின் பொல்லாப்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பொல்லாப்பு செய்வதில் ஆகாபைப்போல ஒருவனுமில்லை என்று இந்த வசனம் கூறுகிறது. (1இராஜா 21:25) கர்த்தர் ஆகாபுக்கு யுத்தத்தில் இரண்டு வெற்றிகளைக் கொடுத்தார். ஆனாலும் அவன் பொல்லாப்பு செய்தான். இஸ்ரவேல் தேசத்தின் பொல்லாப்பு நாளுக்குநாள் அதிகரித்தது. கர்த்தர் இறுதியில் அவர்களை அந்நிய ஜாதியாரின் கைகளில் விற்றுப்போட்டார். இஸ்ரவேல் தேசம் புறஜாதி தேசத்தின் சிறையிருப்பிற்கு உட்பட்டது. (2இராஜா 17).

"ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்ட போது" - கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைக் கேட்டபோது, ஆகாப் முதன் முறையாகத் தன்னைத் தாழ்த்துகிறான். ஆகையினால் கர்த்தர் ஆகாபுக்கு நியமித்த பொல்லாப்பை அவனுக்கு அனுப்பாமல் அவனுக்குப் பின்பு வரும் அவனுடைய வீட்டாரின்மீது அனுப்புகிறார். (1இராஜா 21:26-29).

#### ஆகாப் தன்னைத் தாழ்த்திய விவரம்

1. தன் வஸ்திரங்களைக் கிழித்தான்.
2. தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக் கொண்டான்.
3. உபவாசம் பண்ணினான்.
4. இரட்டிலே படுத்துக் கொண்டான்.
5. தாழ்மையாய் நடந்துகொண்டான்.

### (7) ஆகாப் பொல்லாப்பிலிருந்து தப்புகிறான்

1இராஜா 21:28 அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று, அவர்:

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 21 அதிகாரம்

**தீர்க்கதரிசன எண் - 26**

"நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன்" (1இராஜா 21:29) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

## 22 அதிகாரம்

**22. ஆகாப் சீரியரோடு பண்ணிய மூன்றாவது யுத்தம்** - (2இராஜா 16:5)

**(1) யோசபாத்தோடு ஒப்பந்தம்** - (2நாளா 18:1-3)

1இராஜா 22:1 சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாமலிருந்தது.

1இராஜா 22:2 மூன்றாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவினிடத்திற்குப் போயிருக்கும்போது,

1இராஜா 22:3 இஸ்ரவேலின் ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று அறியீர்களா? நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக் கொள்ளாமல், சும்மாயிருப்பானேன் என்று சொல்லி,

1இராஜா 22:4 யோசபாத்தை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடுகூட வருகிறீரா என்று கேட்டான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்றான்.

"சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாமலிருந்தது" - 1இராஜா 22:34 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சமாதான உடன்படிக்கையின் படி இவர்களுக்குள் யுத்தமில்லாமலிருந் திருக்கலாம். இந்த மூன்று வருஷக்காலத்தில் சீரிய தேசம் தங்களுடைய இரண்டு தோல்விகளிலிருந்து மீண்டுகொண்டது. ஆகாபுக்கு எதிராகவும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்திற்கு எதிராகவும் சீரிய தேசம் தன்னை வலுப்படுத்திக் கொண்டது. (2நாளா 17:1).

**யோசபாத் தாழ்ந்துபோன சம்பவம்**

1. ஆகாபோடே சம்பந்தங்கலந்தான். (2நாளா 18:1)
2. ஆகாபோடு இராணுவ உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டான். (1இராஜா 22:4; 2நாளா 18:3)
3. சீரியரால் தோற்கடிக்கப்பட்டான். (1இராஜா 22:29-36)
4. அகசியாவோடு வியாபாரத் தொடர்பு வைத்துக் கொண்டான். (2நாளா 20:36)
5. அகசியாவோடு கூடிக்கொண்ட படியினால் கர்த்தர் அவனைத் தண்டித்தார். (2நாளா 20:37)

"நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக்கொள்ளாமல், சும்மாயிருப்பானேன்" - இப்போது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் சீரியாவின்மீது யுத்தம் பண்ணுவதற்கு ஆரம்பிக்கிறான். இதற்கு முன்பு நடைபெற்ற இரண்டு யுத்தங்களில் சீரியர்கள் இஸ்ரவேலின்மீது யுத்தம் பண்ண வந்தார்கள். (1இராஜா 22:3-4; 1இராஜா 20:1-12,23-27).

**(2) யோசபாத் தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான்** - (2நாளா 8:4)

1இராஜா 22:5 பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும்.

"கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும்" - யுத்தத்தைப் பற்றி கர்த்தருடைய வார்த்தையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று யோசபாத் கூறுகிறான். ஆகாப் 400 தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்தான். ஆனால் அவர்கள் எல்லோருமே கள்ளத்தீர்க்கதரிசிகள். யுத்தத்தில் கர்த்தர் அவர்களுக்கு வெற்றியைத் தருவார் என்று பொய்யாய் தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். (1இராஜா 22:6).

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 22 அதிகாரம்

**(3) கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜெயங் கிடைக்கும் என்றனர்** - (2நாளா 18:5)

1இராஜா 22:6 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து: நான் கிலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு; அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்.

**(4) யோசபாத் உண்மையான தீர்க்கதரிசியிடம் ஆலோசனை கேட்கிறான்** - (2நாளா 18:6)

1இராஜா 22:7 பின்பு யோசபாத்; நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களை யெல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான்.

"கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா" - 400 தீர்க்கதரிசிகளும் கூறிய செய்தியில் யோசபாத் ஏதோ ஒரு குறையைக் கண்டு பிடித்திருக்கிறான். ஆகையினால் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குப் பதிலாகக் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறு யாராகிலும் இருக்கிறார்களா என்று யோசபாத் ஆகாபிடம் தேடிப்பார்க்குமாறு கூறுகிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவன் வந்தான். ஆனால் அவனோ இவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் கூறுகிறான். (1இராஜா 22:8-28).

**5) மிகாயாவை அழைக்கிறார்கள்** - (வசனம் 27; 2நாளா 18:8)

1இராஜா 22:8 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் என்றான். அதற்கு யோசபாத், ராஜாவே, அப்படிச் சொல்லவேண்டாம் என்றான்.

1இராஜா 22:9 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா என்றான்.

"மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்" - தேவதூஷணம் மிகுந்திருந்தாலும் கர்த்தர் அதற்கு நடுவிலும் தமக்கு உண்மையான ஒருவனை வைத்திருக்கிறார். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் கர்த்தருக்காக ஊழியம் செய்வார்கள். எலியா இன்னும் உயிரோடுதான் இருக்கிறான். அவன் ஆகாபிற்குப் பல தீர்க்கதரிசனங்களைக் கூறினான். ஆனால் ஆகாபோ எலியாவை முழுவதுமாகப் புறக்கணித்து விட்டு, இங்கு மிகாயாவைப் பற்றிக் கூறுகிறான். இந்த மிகாயாவையும் ஆகாப் விரும்பவில்லை. ஏனெனில் அவன் ஆகாபைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன்.

**(6) கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜெயங் கிடைக்கும் என்றனர்** - (2நாளா 18:10-11)

1இராஜா 22:10 இஸ்ரவேலின் ராஜாவும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலி முகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்திலே ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டவர்களாய், அவரவர் தம்தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 22 அதிகாரம்

1இராஜா 22:11 கேனானாவின் குமாரன் சிதேக்கியா தனக்கு இருப்புக் கொம்புகளை உண்டாக்கி, இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப் போடுவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

1இராஜா 22:12 சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்.

**(7) ஆகாபுக்கு நல்ல வார்த்தை கூறுமாறு மிகாயாவை ஒருவன் எச்சரிக்கிறான்** - (2நாளா 18:12)

1இராஜா 22:13 மிகாயாவை அழைக்கப் போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்றான்.

1இராஜா 22:14 அதற்கு மிகாயா: கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

**(8) மிகாயாவின் முதலாவது தீர்க்கதரிசனம்** - (2நாளா 18:14)

1இராஜா 22:15 அவன் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று கேட்டான். அதற்கு அவன்: "போம் உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றான்.

1இராஜா 22:16 ராஜா அவனைப் பார்த்து: நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்க வேண்டும் என்று சொன்னான்.

"போம் உமக்கு வாய்க்கும்" - இந்த வாக்கியம் இங்கு வஞ்சகப்புகழ்ச்சியாகக் **irony** கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 18:27) ஆகாப் இந்த நல்ல செய்தியைத்தான் கேள்விப்பட விரும்புகிறான். தேவனிடமிருந்து வரும் செய்தி இதுவல்ல. ஆனால் ஆகாபோ மிகாயாவின் வார்த்தையை நம்பவில்லை. (1இராஜா 22:15-16).

**(9) இஸ்ரவேலின் தோல்வியைப் பற்றி மிகாயாவின் தீர்க்கதரிசனம்** - (2நாளா 18:16)

1இராஜா 22:17 அப்பொழுது அவன்: இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்; அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார் என்று சொன்னான்.

1இராஜா 22:18 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: இவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்று நான் உம்மோடே சொல்ல வில்லையா என்றான்.

**தீர்க்கதரிசன எண் - 27**

"இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்" (1இராஜா 22:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யுத்தத்தில் ஆகாப் மரித்துப்போவான். இஸ்ரவேல் தேசத்தார் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருப்பார்கள். (1இராஜா 22:17,36).

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 22 அதிகாரம்

"தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன்" - மிகாயா கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னான். ஆனால் ஆகாபும், யோசபாத்தும் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் யுத்தத்திற்குப் போனார்கள். யுத்தத்தில் ஆகாப் கொல்லப்பட்டான். யோசபாத் எப்படியோ தப்பித்துக் கொண்டான். (1இராஜா 22:34-36).

### (10) பொய்யின் ஆவியைப்பற்றி மிகாயாவின் தீர்க்கதரிசனம் - (2நாளா 18:18-22; 1சாமு 18:10; உபா 13:1-5; 18:20-22; எரே 23:16-38; எசே 13)

1இராஜா 22:19 அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரம சேனையெல்லாம் அவரிடம் அவர் வலது பக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்.

1இராஜா 22:20 அப்பொழுது கர்த்தர்: ஆகாப் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்.

1இராஜா 22:21 அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: நான் அவனுக்குப் போதனை செய்வேன் என்றது.

1இராஜா 22:22 எதினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார். அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய் என்றார்.

1இராஜா 22:23 ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான்.

"கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்" - மிகாயா ராஜாக்களிடம் கர்த்தருடைய வார்த்தையைத் தொடர்ந்து கூறுகிறான். ஆகாபின் தீர்க்கதரிசிகள் பொய்கூறுகிறார்கள் என்பதை விவரித்துக் கூறுகிறான். (1இராஜா 22:19-22).

**கர்த்தர் அனுமதித்த பொய்ப்போதனை**

ஆகாப் கர்த்தருக்கு விரோதமாக இருக்கிறான். விக்கிரங்களைச் சேவிக்கிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்குச் செவி கொடுப்பதற்குப் பதிலாக அவன் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குச் செவிகொடுக்கிறான். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாகப் பொய்யைப் போதனை செய்யும் ஓர் ஆவி வந்து நின்றது. கர்த்தர் அந்தப் பொய்யின் ஆவியைப் பாகாலுடைய தீர்க்கதரிசிகளாகிய 400 பேருடைய வாயிலும் வந்து பேசுமாறு கட்டளையிட்டார். ஆகையினால், அந்தத் தீர்க்கதரிசிகள் பொய்யைத் தீர்க்கதரிசனமாகக் கூறினார்கள்.

## I இராஜாக்கள் - தொகுப்புரை

### 22 அதிகாரம்

"ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்" - கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார். பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறார்கள். சில சமயங்களில் பூமியிலுள்ள மனுஷர் சம்பந்தமான காரியங்களைப் பேசும்போது, பரமசேனைக்கு நடுவில் பிசாசுகளும் வந்து விடுகின்றன. அதுபோலத் தான் இங்கு பொய்யைப் போதனை செய்யும் ஆவி வந்திருக்கிறது. பொய்யின் ஆவிகள் பூமியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட மனுஷனிடத்தில் மட்டுமே குறிப்பிட்ட காலத்திற்கு கிரியை செய்ய அனுமதி பெற்றிருக்கிறது. (1இராஜா 22:21-23; யோபு 1:6; யோபு 2:1; வெளி 12:9-12).

"ஒரு ஆவி புறப்பட்டு வந்து" - இது பொய்யின் ஆவி. இது ஒரு பிசாசு. மனுஷரைப் பொய்பேச வைக்கக்கூடிய ஆவி. இது மனுஷருக்குப் போதனை செய்யும். ஆனால் பொய்யான காரியங்களைப் போதிக்கும். கர்த்தருடைய சமுகத்திலிருந்த பரமசேனையெல்லாம் கர்த்தருக்கு ஆலோசனை கூறினார்கள். பொய்யின் ஆவியும் அவர்களோடு சேர்ந்து கர்த்தரிடம் பேசிற்று. ஒரு ஆவி இப்படியும், வேறொரு ஆவி அப்படியும் கூறிற்று. பலவிதமான கருத்துக்கள் அங்கு கூறப்பட்டாலும் கர்த்தர் பொய்யின் ஆவியை ஆகாபிடத்தில் அனுப்புகிறார்.

"கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்" - பொய்யின் ஆவி மனுஷரை வஞ்சிக்கிறது. இந்த மனுஷர்கள் கர்த்தருடைய சத்திய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள்.

**11) உண்மையான தீர்க்கதரிசியின் பரீட்சை** - (2நாளா 18:23-27; உபா 13:1-5; 18:22; எரே 23:16-38; எசே 13)

1இராஜா 22:24 அப்பொழுது கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா கிட்டேவந்து, மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது என்றான்.

1இராஜா 22:25 அதற்கு மிகாயா: நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையிலே பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய் என்றான்.

1இராஜா 22:26 அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: மிகாயாவைப் பிடித்து, அவனைப் பட்டணத்துத் தலைவனாகிய ஆமோனிடத்திற்கும், ராஜாவின் குமாரனாகிய யோவாசிடத்திற்கும் திரும்பக் கொண்டுபோய்,

1இராஜா 22:27 இவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே வருமளவும், இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான்.

1இராஜா 22:28 அப்பொழுது மிகாயா: நீர் சமாதானத்தோடே திரும்பிவருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக் கொண்டு பேசினதில்லை என்று சொல்லி; ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள் என்றான்.

"சிதேக்கியா கிட்டேவந்து, மிகாயாவைக் கன்னத்தில் அடித்து" - பாகாலின் 400 தீர்க்கதரிசிகளுக்கு மிகாயா தலைவனாக இருக்க வேண்டும். (1இராஜா 22:11,24) அடிப்பட்ட மிகாயா சிதேக்கியாவுக்கும் தீர்க்கதரிசனம் கூறுகிறான். (1இராஜா 22:25).

## 22 அதிகாரம்

**தீர்க்கதரிசன எண் - 28**

"நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையிலே பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய்" (1இராஜா 22:25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள்" - ஆகாப் மிகாயாவைச் சிறைச்சாலையில் அடைத்து விடுகிறான். யுத்தத்தில் ஜெயம்பெற்று, திரும்பி வரும்போது, மிகாயாவுக்குத் தண்டனை கொடுக்கலாம் என்று நினைக்கிறான். ஆனால் ஆகாப் யுத்தத்தில் மரித்துப்போனான். (1இராஜா 22:26-28).

**தீர்க்கதரிசன எண் - 29**

"நீர் சமாதானத்தோடே திரும்பிவருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக்கொண்டு பேசினதில்லை" (1இராஜா 22:28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

**(12) கீலேயாத்திலுள்ள ராமோத்திலே யுத்தம்** - (2நாளா 18:28-34)

1இராஜா 22:29 பின்பு இஸ்ரவேலின் ராஜாவும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போனார்கள்.

1இராஜா 22:30 இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: நான் வேஷம்மாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்; நீரோ ராஜவஸ்திரம் தரித்திரும் என்று சொல்லி, இஸ்ரவேலின் ராஜா வேஷம்மாறி, யுத்தத்தில் பிரவேசித்தான்.

1இராஜா 22:31 சீரியாவின் ராஜா தனக்கு இருக்கிற இரதங்களின் முப்பத்திரண்டு தலைவரையும் நோக்கி: நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல் இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடேமாத்திரம் யுத்தம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டிருந்தான்.

1இராஜா 22:32 ஆதலால் இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், இவன் தான் இஸ்ரவேலின் ராஜா என்று சொல்லி யுத்தம்பண்ண அவனுக்கு நேராகச் சாய்ந்துவந்தார்கள்; அப்பொழுது யோசபாத் கூக்குரலிட்டான்.

1இராஜா 22:33 இவன் இஸ்ரவேலின் ராஜா அல்ல என்று இரதங்களின் தலைவர் கண்டு அவனைவிட்டு, விலகிப்போனார்கள்.

1இராஜா 22:34 ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான்; அது இஸ்ரவேலின் ராஜாவினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் பட்டது; அப்பொழுது அவன் தன் சாரதியைப் பார்த்து: நீ திரும்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது என்றான்.

1இராஜா 22:35 அன்றையதினம் யுத்தம் அதிகரித்தது; ராஜாவைச் சீரியருக்கு எதிராக இரதத்தில் நிறுத்தி வைத்தார்கள்; சாயங்காலத்திலே அவன் இறந்துபோனான்; காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிந்தது.

1இராஜா 22:36 பொழுதுபோகும்போது அவரவர் தம்தம் பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது.

"நான் வேஷம்மாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்" - இஸ்ரவேலின் ராஜா வேஷம்மாறி, யுத்தத்தில் பிரவேசித்தான். சீரியாவின் ராஜாவோ இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடேமாத்திரம் யுத்தம்பண்ணுங்கள் என்று தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். அவர்கள் ராஜா வேஷம் தரித்திருந்த யோசபாத்தைக் கொல்வதற்குச் சாய்ந்து வந்தார்கள். ஆனால் யோசபாத் தான் ராஜா அல்ல என்று கூக்குரலிட்டான். இதனால் சீரியாவின் வீரர்கள் யோசபாத்தைக் கொல்லாமல் அவனை விட்டு விலகிப் போனார்கள். (1இராஜா 22:29-33)

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 22 அதிகாரம்

"சாயங்காலத்திலே அவன் இறந்துபோனான்" - 1இராஜா 20:42; 1இராஜா 22:17,28 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

"அவரவர் தம்தம் பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது" - 1இராஜா 22:17 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

**(13) ஆகாபின் மரணம்** - *(22:19)*

1இராஜா 22:37 அப்படியே ராஜா இறந்த பின்பு, சமாரியாவுக்குக் கொண்டுவரப் பட்டான்; ராஜாவைச் சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள்.

1இராஜா 22:38 அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிறபோது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது.

1இராஜா 22:39 ஆகாபின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின தந்த அரமனையின் வரலாறும், அவன் கட்டின எல்லாப் பட்டணங்களின் வரலாறும் இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 22:40 ஆகாப் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய அகசியா அவன் ஸ்தலத்தில் ராஜாவானான்.

"நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது" - 1இராஜா 21:24 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

"ஆகாபின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 18-19)

## IX. யோசபாத்தின் ஆட்சி - (2நாளா 17:1-21:1)

**1. ஆட்சிக்காலம்**

1இராஜா 22:41 ஆசாவின் குமாரனாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் நாலாம் வருஷத்தில் யூதாவின் மேல் ராஜாவானான்.

1இராஜா 22:42 யோசபாத் ராஜாவாகிற போது முப்பத்தைந்து வயதாயிருந்து, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; சில்கியின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் அசுபாள்.

"யோசபாத் ராஜாவாகிறபோது முப்பத்தைந்து வயதாயிருந்து" - அவன் தன்னுடைய 60 ஆவது வயதில் மரித்தான்.

**2. நல்ல ராஜா** - (15:9; 2இராஜா 12:1)

1இராஜா 22:43 அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடந்தான்; அவன் அதை விட்டு விலகாமல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆகிலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தார்கள்.

1இராஜா 22:44 யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவோடே சமாதானமாயிருந்தான்.

1இராஜா 22:45 யோசபாத்தின் மற்ற வர்த்தமானங்களும், அவன் காட்டிய வல்லமையும், அவன் பண்ணின யுத்தமும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

1இராஜா 22:46 தன் தகப்பனாகிய ஆசாவின் நாட்களில் மீதியாய் விட்டிருந்த இலச்சையான புணர்ச்சிக்காரரையும் அவன் தேசத்திலிருந்து அற்றுப்போகப் பண்ணினான்.

# I இராஜாக்கள் – தொகுப்புரை

## 22 அதிகாரம்

1இராஜா 22:47 அப்பொழுது ஏதோமில் ராஜா இல்லை; பிரதிராஜா ஒருவன் இருந்தான்.

"அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடந்தான்" - இஸ்ரவேலின் 41 ராஜாக்களில் ஒன்பது ராஜாக்கள் மட்டுமே கர்த்தருக்குச் செம்மையான காரியங்களைச் செய்தார்கள். (1இராஜா 11:4,6)

"யோசபாத்தின் மற்ற வர்த்தமானங்கள்" - (2நாளா 17-20)

"இலச்சையான புணர்ச்சிக்காரரையும் அவன் தேசத்திலிருந்து அற்றுப்போகப்பண்ணினான்" - மோசேயின் பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் இலச்சையான புணர்ச்சிக்காரரை அகற்றினான். (1இராஜா 14:24)

"பிரதிராஜா ஒருவன் இருந்தான்" - யூதாவின் ராஜா இந்தப் பிரதிராஜாவை **(deputy)** நியமித்தான்.

**3. யூதாவின் இரண்டாவது கப்பற்படை** -(2நாளா 8:17; 20:35)

1இராஜா 22:48 பொன்னுக்காக ஒப்பீருக்குப் போகும்படி, யோசபாத் தர்ஷீஸ் கப்பல்களைச் செய்தான்; ஆனால் அவைகள் போகவில்லை; அவைகள் எசியோன்கேபேரிலே உடைந்து போயின.

1இராஜா 22:49 அப்பொழுது ஆகாபின் குமாரனாகிய அகசியா யோசபாத்தை நோக்கி: என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங் கூடக் கப்பல்களிலே போகட்டும் என்றான்; அதற்கு யோசபாத் சம்மதிக்கவில்லை.

"பொன்னுக்காக ஒப்பீருக்குப் போகும்படி, யோசபாத் தர்ஷீஸ் கப்பல்களைச் செய்தான்" - தர்ஷீசின் கப்பல்கள் பெரியவை. சமுத்திரத்தில் ஆற்றலோடு பிரயாணம் பண்ணக்கூடியவை. ஆனால் இந்தக் கப்பல்கள் பயன்படுத்தப் படுவதற்கு முன்பாகவே புயல்காற்றில் உடைந்து போயிற்று. கர்த்தரே இந்தக் கப்பல்கள் உடைவதற்குக் காரணமானார். யோசபாத் அகசியாவோடு உடன்படிக்கை பண்ணியிருந்தான். ஆகையினால் கர்த்தர் யோசபாத்தைத் தண்டித்தார். இதன் பின்பு, யோசபாத் அகசியாவைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. (1இராஜா 22:49; 2நாளா 20:35-37).

**4. யோசபாத்தின் மரணம்** - (2நாளா 21:1,2)

1இராஜா 22:50 யோசபாத் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களோடே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

**X. அகசியாவின் ஆட்சி** - (2இராஜா 1:1-18; 2நாளா 20:35)

1இராஜா 22:51 ஆகாபின் குமாரனாகிய அகசியா யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே சமாரியாவில் ராஜாவாகி, இஸ்ரவேலின்மேல் இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணி,

1இராஜா 22:52 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பன் வழியிலும், தன் தாயின் வழியிலும், இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரன் யெரொபெயாமின் வழியிலும் நடந்து,

1இராஜா 22:53 பாகாலைச் சேவித்து, அவனைப் பணிந்துகொண்டு, தன் தகப்பன் செய்த படியெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினான்.

# I இராஜாக்கள் - தொகுப்புரை

## 22 அதிகாரம்

"யோசபாத்தின் பதினேழாம் வருஷத்திலே" - இவன் மரணமடைவதற்கு எட்டு வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம். (1இராஜா 22:42,51). இந்த எட்டு வருஷங்களில் யோசபாத் அகசியாவோடு ஒப்பந்தம் பண்ணி கப்பல்களைக் கட்டினான். கப்பல்களைக் கர்த்தர் உடைத்துப் போட்ட பின்பு, யோசபாத் அகசியாவைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளவில்லை. (1இராஜா 22:48-49; 2நாளா 20:35-37). அகசியா இரண்டு வருஷங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தான்.

"தன் தகப்பன் வழியிலும், தன் தாயின் வழியிலும்" - அகசியாவின் முன்னோர்கள் எல்லோருமே கர்த்தருக்குப் பொல்லாப்பான வழிகளில் ஜீவித்தவர்கள். பாகாலைச் சேவித்தவர்கள். வடக்கு ராஜ்யத்தின் ராஜாக்கள் துன்மார்க்கமாய் ஜீவித்ததினால் கர்த்தர் ராஜாக்களையும், அவர்களுடைய குடும்பத்தாரையும், வடக்கு ராஜ்யத்தையும் அழித்துப்போட்டார். (2இராஜா 17).